# டி.கே.சி

பதிப்பாசிரியர்

கரு.அழ. குணசேகரன்
த. பூமிநாகநாதன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தமிழறிஞர் வரிசை - 2

# டி.கே.சி.

பதிப்பாசிரியர்

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
முனைவர் தா. பூமிநாகநாதன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை, சி.ஐ.டி. வளாகம்
தரமணி, சென்னை - 600 113.

# BIBLIOGRAPHICAL DATA

திங்கள் (தொடர்) ஆய்வுக் கருத்தரங்கம் - தமிழறிஞர் வரிசை - 2
டி.கே.சி. (கருத்தரங்க நாள் - 04.01.2005)


| | |
|---|---|
| Title of the Book | : டி.கே.சி. |
| Editors | : Dr. K.A. Gunasekaran<br>Director<br>International Institute of Tamil Studies<br>Taramani, Chennai - 600 113. |
| Publisher & © | : International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Taramani, Chennai - 600 113.<br>Ph: 22542992 |
| Publication No | : 592 |
| Language | : Tamil |
| Edition | : First Edition |
| Date of Publication | : 2008 |
| Paper Used | : 18.6 kg TNPL Map litho |
| Size of the Book | : 1/8 Demy |
| Printing type Used | : 10 points |
| No. of Pages | : x + 198 |
| No. of Copies | : 1200 |
| Price | : Rs. 60/- (Rupees Sixty Only) |
| Printing | : United Bind Graphics<br>189 Royapettah High Road<br>Mylapore, Chennai - 600 004. |
| Subject | : Biographical & Critical Studies on<br>ṭi. kē. citamparanāta mutaliyār |


கட்டுரையாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று.

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

# அணிந்துரை

காலந்தோறும் தமிழுக்குப் பல வழிகளில் தொண்டு செய்துவரும் தமிழ் வல்லுநர்கள் பலர்வழியே தமிழ் இன்றும் கன்னித் தமிழாக உள்ளது. அத்தகைய தமிழ் வல்லுநர்களில் ஒருவர் டி.கே.சி. அவர்கள்.

தமிழுக்கு டி.கே.சி. அவர்கள் எந்தெந்த வகையில் பணி செய்துள்ளார் என மொழிநடை, கடித இலக்கியம், பதிப்புப்பணி, இரசனைத் திறன், கலைக்கோட்பாடு, ஆய்வுத் தடங்கள், பிற ஆய்வுகள் எனும் பலநிலைகளில் அத்துறைசார் வல்லுநர்களின் ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய நூல் இது.

> கோபமோ, ஆத்திரமோ, சோகமோ, கருணையோ மனதில் உண்டானால் அதை அப்படியே வாய்திறந்து மனிதன் சொல்லி விடுகிறான். அவ்வாறு சொல்வதே (தமிழ்) வசனம். (ப. 32)

எனத் தமிழ் வசனம் பற்றிய டி.கே.சி. அவர்களின் கருத்து சிந்திக்கத் தக்கது.

தமிழிசை பற்றி டி.கே.சி. கீழ்க்காணுமாறு கூறியுள்ளார் :

> பக்தி உணர்ச்சியோடு கிளிக்கண்ணி, சித்தர் பாடல், காவடிச் சிந்து முதலியவைகளைப் பாடினாலும் பரவசம் அடையத்தான் செய்கிறேன். ஆனால் சங்கதி, சங்கதி என்ற சுரங்களைக் கொண்டு கீச்சுக் கீச்சுத் தாம்பளம் விளையாடுகிறதை ரொம்ப அனுபவித்துவிட முடியாது. (ப.32)

பாடலுக்கு முன்னுரை தந்து அதன் பின்னர்ப் பாடலின் சந்தக் குறிப்பைக் கொடுத்துப் பிறகு பாடலைப் பதிப்பித்துள்ளார்.

பாடலைச் சந்தத்திற்கேற்பப் பிரித்தும் அமைத்திருக்கிறார். பாடலின் பொருளைக் கருத்துரையாகவும் பொழிப்புரையாகவும் டி.கே.சி. வழங்குகின்றார். அடிக்குறிப்பில் கடினச் சொற்களுக்குப் பொருள் விளக்கங்களும் குறிப்புப் பகுதியில் திறனாய்வுக் குறிப்பும் தருகின்றார்.

> இலக்கியங்களைக் கற்பதிலும், சுவைப்பதிலும் அறிஞர்கள் பலருக்கும் ஈடுபாடுண்டு. அவர்களுள்ளும் டி.கே.சி.யின் இலக்கிய ஈடுபாடு மற்றவர்களைக் காட்டிலும் வேறுபட்டது. இலக்கியத்தைத் தான் இரசித்ததோடு நின்று விடாமல் பிறரையும் இரசிக்கத் தூண்டியவர். இலக்கியத்தை அனுபவிப்பதிலும் இவர் தனிப்பட்ட ஓர் அணுகுமுறையைக் கையாண்டார். இவர்தம் இலக்கிய அணுகுமுறையைப் பலரும் பல்வேறு விதங்களில் புகழ்ந்துள்ளனர். (ப. 41)

டி.கே.சி. அவர்களின் வாழ்க்கை வரலாறு தொடங்கி, தமிழறிஞர்கள் பார்வையில் டி.கே.சி, டி.கே.சியின் மொழிநடை, தமிழில் கடித இலக்கிய வளர்ச்சிக்கு அன்னார் ஆற்றிய தொண்டு, பதிப்புப் பணியில் கடைப்பிடித்த நுட்பங்கள், டி.கே.சி.க்கு அமைந்த தனித்தன்மையான இரசனைத்திறன், கலை பற்றிய அன்னாரின் கொள்கைகள், தமிழாய்வில் அவர் பதித்த தடம் இவ்வாறான பன்முகப் பரிமாணங்களை இந்நூலில் அமைந்துள்ள கட்டுரைகள் வெளிப்படுத்துகின்றன. இவற்றுடன் டி.கே.சி.யின் ஆய்வுகளின் அடங்கலும் இந்நூலின் இறுதியில் இடம்பெறுவது சிறப்பாகும்.

> ஒருவருக்கு மொழிப்பற்றும். கல்விப்பற்றும் கூடஅந்த மொழியை இரசிப்பதைவிட அந்த மொழியில் உள்ள கவியை இரசிப்பதில் கிடைக்கும் 'ரசனைச் சுகத்' தால் மட்டுமே மேலோங்கி நிற்கும் என்பதை உள் உணர்ந்து சொல்லி எதிரில் இருப்பவர்கட்கும் உள் உணர்வை ஏற்படுத்தும் ஆய்வுத்தடம் இவருக்கு உரியது. எல்லோரும் எளிதில் தம் ஆய்வைப்

> புரிந்து கொள்ளும் வகையில் எளிமையான முறையிலும் கதை சொல்கிற வடிவிலும் கட்டுரையை அமைத்துச் செல்கிறார். சொல் ஆராய்ச்சியில் ஈடுபாடு காட்டும் டி.கே.சி. மொழியியல் தொடர்பாக மட்டும் ஆய்வுத்தடத்தை அமைத்துக் கொள்வதில்லை. அந்தச் சொற்கள் எந்த உணர்ச்சியைத் தருமோ அதை வெளிப்படுத்தி அச் சொற்களின் பயன்பாட்டுவழித் தமிழ் மக்களின் பண்பாட்டு நிலையையும் விளக்கும் போக்கு இவருடைய ஆய்வுத் தடம். கவிதையில் சொல் தரும் அர்த்தத்தைவிட அச்சொல் தரும் ஓசை, அந்த ஓசை உண்டாக்கும் இதய பாவம் ஆகியவற்றின் மேல்தான் டி.கே.சி.க்கு அக்கறையும் ஈடுபாடும் இருந்தன. (பக். 170-171)

என இந்நூலின் இறுதியில் சுட்டிக் காட்டப்படுவது டி.கே.சி.க்குப் பொருந்துவதாகும்.

இக்கட்டுரைகளை எழுதியதன் மூலம் டி.கே.சி. அவர்களின் ஒட்டு மொத்த இலக்கியப் பணிகளைப் பதிவு செய்துள்ள இக் கட்டுரையாளர்களைப் பாராட்டுகின்றேன்.

இளம் ஆய்வாளர்களுக்கு இந்நூல் பல்வேறு துறைகளில் ஆய்வு செய்திட முன்னோடி நூலாக அமையும் என்பதில் ஐயமில்லை. பல்வேறு தலைப்புகளில் ஆய்வு செய்து கட்டுரைகளைத் தந்துள்ள அனைவருக்கும் எமது நன்றி.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழறிஞர்களின் அளப்பரிய தமிழ்ப் பணிகளைப் பாராட்டும் வகையில் ஏற்படுத்தப்பெற்று நடைபெற்ற திங்கள் தொடர் கருத்தரங்குகள் ஒன்றில் தமிழ் அறிஞர்களில் ஒருவரான டி.கே.சி. பற்றி வழங்கப்பெற்ற இக் கட்டுரைகள் அனைத்தும் தொகுக்கப்பெற்று, செம்மைசெய்யப் பெற்று, இப்போது நூலாக்கம் பெற்றுள்ளது.

இதற்குக் காரணமாக அமைந்த இந்நிறுவன மேனாள் இயக்குநர்களான முனைவர் சா.கிருட்டினமூர்த்தி அவர்களுக்கும், முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுக்கும்,

கட்டுரையாளர்களுக்கும், இக்கருத்தரங்கிற்கு ஒருங்கிணைப்பாளராக இருந்து கட்டுரைகளைத் தொகுத்த இந்நிறுவன ஆராய்ச்சி உதவியாளர் த. பூமிநாகநாதன் அவர்களுக்கும் பாராட்டுகள்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையையும் காட்டிவரும் **நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக்கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் **மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களுக்கும் நன்றி.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம், செய்தி மற்றும் விளம்பரத் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்களுக்கும், இந்நூலின் மெய்ப்புத்திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதனுக்கும், கணியச்சுச் செய்த திருமதி பி.கௌசல்யா மற்றும் இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கும் பாராட்டுகள்.

**இயக்குநர்**

## கட்டுரையாளர்

முனைவர் **கஸ்தூரி ராஜா**

அண்ணா ஆதர்ஷ் கல்லூரி

அண்ணா நகர், சென்னை.

முனைவர் **பி. பார்வதி**

பேராசிரியர், பராசக்தி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)

குற்றாலம்-627 811, நெல்லை மாவட்டம்.

முனைவர் **ச.வே. சுப்பிரமணியன்**

தமிழூர், அடைக்கலப் பட்டணம் அஞ்சல்

நெல்லை மாவட்டம்-627 806.

முனைவர் **எஸ். ஈஸ்வரன்**

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை

தேசியக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620 001.

திரு **ஸ்டாலின்**

முனைவர்பட்ட ஆய்வாளர்

தமிழியல்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம்

திருச்சி-620 024.

முனைவர் **வே. சசிகலா**

பேராசிரியை, பராசக்தி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)

குற்றலாம் - 627811, நெல்லை மாவட்டம்.

முனைவர் **க. இந்திரசித்து**

எண். 40, சிங்கப்பூர் நகர்

உடுமலைப் பேட்டை - 642 126.

முனைவர் **மா. நடராசன்**

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| வாழ்க்கை வரலாறு<br>- கஸ்தூரிராஜா | 1 |
| அறிஞர் பார்வையில் டி.கே.சி.<br>- பி. பார்வதி | 41 |
| மொழிநடை<br>- ச.வே. சுப்பிரமணியன் | 56 |
| கடித இலக்கியப்பணி<br>- எஸ். ஈஸ்வரன் | 77 |
| பதிப்புப் பணி<br>- ப. ஸ்டாலின் | 92 |
| இரசனைத் திறன்<br>- வே. சசிகலா | 107 |
| கலைக்கோட்பாடு<br>- க. இந்திரசித்து | 129 |
| ஆய்வுத்தடம்<br>- மா. நடராசன் | 141 |
| டி.கே.சி. ஆய்வடங்கல்<br>- எஸ். ஈஸ்வரன் | 172 |

# வாழ்க்கை வரலாறு

மகாகவி பாரதி பிறந்த அதே ஆண்டு (1882ஆம் ஆண்டு) ஆகஸ்டு மாதம் 7ஆம் தேதி பெரியாழ்வார், ஆண்டாள் போன்ற சான்றோர்கள், பிறந்த ஊராகிய ஸ்ரீ வில்லிபுத்தூரின் அருகே அமைந்த கிளாங்காடு என்ற சிற்றூரில் டி.கே.சி. தோன்றினார். அன்னையின் பெயர் மீனம்மாள் அண்ணி ; தந்தையின் பெயர் தீத்தாரப்ப முதலியார்.

## இளமையும் படிப்பும்

டி.கே.சி. இளமைப் பருவத்தில் தென்காசித் திண்ணைப்பள்ளியில் படித்தார். பள்ளியிலிருந்து வீட்டிற்குத் திரும்பியதிலிருந்து இரவு பத்து மணி வரை ஆசிரியர்கள் வீட்டிற்கு வந்து பாடம் சொல்லிக்கொடுத்தனர். ஆனால் டி.கே.சி. கதைகள் கேட்பதில் மட்டற்ற மகிழ்ச்சியுடையவராக விளங்கினார். மேலும் (திருமணங்களில்) பரத நாட்டியம் பார்ப்பதிலும் விருப்பம் அதிகம்.

## மனிதநேயம்

> பள்ளியிலிருந்து சிதம்பரத்தை வீட்டு வரைக்கும் சுமந்து செல்ல வேண்டும் என்று ஆசிரியர் மாணவர்களுக்குக் கட்டளையிடுவார். ஏறாவிட்டால் என்னை ஒரு கை பார்த்துவிடுவார். சுமக்காவிட்டால் பையன்களுக்கு முதுகுத்தோல் உறிந்துவிடும். டியூசனுக்கென்று என் தந்தையார் அதிகமாய்க் கொடுத்த பணம் என்னையே கொடுமைப்படுத்தியது. மனித வர்க்கத்தையே கொடுமைப்படுத்தியது[1]

என்கிறார் டி.கே.சி. இந்நிகழ்ச்சியின் மூலம் டி.கே.சி.யின் மனித நேயத்தை உணர முடிகிறது.

## பள்ளி–கல்லூரி

டி.கே.சி. திருச்சியில் உள்ள தேசியக்கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். எனினும் ஆங்கிலவழிக் கல்வி அவருக்கு

ஆமணக்குக் காயாக இருந்தது. அடுத்து 1905ஆம் ஆண்டு முதல் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் பயின்றார். அங்கு லாய் ஹெண்டர்சன், ஸிசின்னர் போன்ற ஆசிரியர்களின் உறவுகிட்டியது. டி.கே.சி. இளங்கலை முடித்த பிறகு சென்னை சட்டக் கல்லூரியில் சேர்ந்து பி.எல். படித்துப் பட்டம் பெற்றார்.

## தமிழும் அறிவியலும்

டி.கே.சி. அவர்கள் விஞ்ஞானிகள் பலரோடுங் கலந்து கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வார். திருக்குறள், பெரியபுராணம், காஞ்சிப்புராணம் போன்ற இலக்கிய நூல்களை விரும்பிப்படிப்பார். மேலும் "வெண்பா, விருத்தம், கட்டளைக்கலித்துறை, தாழிசை முதலிய பல பாவினங்களை அமைத்துத் தாமே இயற்றியுள்ளார்."[2]

## திருமணம்

ஸ்ரீ வில்லிபுத்தூர் தீத்தாரப்ப முதலியாரின் புதல்வி பிச்சம்மாள் அண்ணி என்பவரை டி.கே.சி. 1908ஆம் ஆண்டு மே மாதம் திருமணம் செய்து கொண்டார். அம்மையார் வந்த விருந்தினரை உபசரித்து, ஏழை எளியவரிடம் அன்பு பாராட்டி, கணவரையும், சுற்றத்தாரையும் பேணுகின்ற பெருந்தன்மை கொண்டவராய்த் திகழ்ந்தார். தமிழில் மனத்தைப் பறிகொடுத்த டி.கே.சி. அவர்களுக்குத் தமிழ் மொழியையும், தமிழ்ப் பண்பாட்டையும் அழித்து வரும் ஆங்கிலமோகத்தின் மீது வெறுப்பு ஏற்பட்டது. ஆங்கிலேயரின் நடையுடை பாவனையில் மயங்கிப் பயந்து கிடக்கும் இலட்சக்கணக்கான தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி அவர்களுடைய பெருமையை அவர்களுக்கு உணர்த்தி அவர்களைத் திடப்படுத்துவதற்குத் தகுதியானவர்கள் தமிழ் அன்னைக்குத் தேவைப் பட்டனர். அந்த நேரத்தில் டி.கே.சி. அவர்கள் தமிழையும் தமிழர்களையும் உயர்த்த முழு நேரம் பாடுபட்டார். அதன் வெளிப்பாடே வட்டத் தொட்டியாகும்.

## வட்டத் தொட்டி

இன்று எங்குப் பார்த்தாலும் கம்பன் கழகங்கள் தோன்றிக் கம்பராமாயணம் பற்றிய ஆய்வுரைகளை வழங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தச் சங்கங்கள் எல்லாம், திருநெல்வேலி, வண்ணாரப்பேட்டை வட்டத்தொட்டியின் கிளை ஸ்தாபனங்கள்

என்றால் மிகையாகா. டி.கே.சியின் வீட்டின் அகலமான கூடத்தின் மத்தியில் வானவெளியுள்ள வட்டவடிவமான ஒரு தொட்டிக்கட்டு உண்டு. வட்டத் தொட்டியின் குறுக்களவெல்லாம் சுமார் பதினைந்து இருபது அடிதான். 1938ஆம் ஆண்டு டி.கே.சி. அவர்களின் வருகையின் காரணமாகத் தியாகராயநகரில் ஒரு இலக்கியப் பண்ணை (நீலாவதி ராமசுப்ரமணியம்), கோகலே ஹாலில் ஒரு கம்பன் கழகம், காரைக்குடியில் கம்பன் கழகம் என்று பல கழகங்கள் தோன்றின.

## வட்டத்தொட்டியின் சிறப்பு

அரசியலில் மாறுபட்ட கொள்கையுடையவர்கள், வட்டத்தொட்டியின் அங்கத்தினர். இவர்கள் இலக்கிய ஆர்வத்தில் ஒன்று பட்டவர்கள். வட்டத் தொட்டியின் தலைவர் டி.கே.சி. அவர்கள் குற்றாலத்தில் உடல்நலம் மட்டுமல்ல உள்ளமே நலம்பெறும் வகையில் விருந்தோம்பலுடன் கூடிய இலக்கியச் சுவையை நல்குவார்கள்.

## தமிழ்ச்சங்கம்

டி.கே.சி. அவர்கள் 1924ஆம் ஆண்டு தம் இல்லத்தில் தமிழ்ச் சங்கத்தை எற்படுத்தினார். அந்த இலக்கியச் சங்கம் வாரம் ஒருமுறை கூடும்.

## தமிழுறவு

தமிழ்ச்சங்கத்தில் உயர்திரு வையாபுரிப் பிள்ளை, ரா.பி. சேதுப்பிள்ளை, ஜே. சக்ரபாணி நம்பியார், எஸ். சுப்பையா போன்ற தமிழறிஞர்கள் கூடி அளவளாவுவார்கள்.

> **உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்**
> **அனைத்தே புலவர் தொழில்** **(394)**

என்ற குறட்பாவிற்கு இலக்கணமாக இவர்கள் திகழ்ந்தனர். பிறதுறை அறிஞர்களான வெள்ளக்கால் ராவ்சாஹெப், திவான்பகதூர் பி. ஆவுடையப்பப் பிள்ளை, சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஏ.வி. முத்தையாபிள்ளை, ஆங்கிலப் பேராசிரியர் ஏ. ஸ்ரீனிவாசராகவன், வழக்கறிஞர் மகாபூஷணம் ஐயங்கார், டி.எம். பாஸ்கரத் தொண்டைமான், (ஐ.ஏ.எஸ். அதிகாரி) எம்.ஆர்.எம். சுந்தரம் (அகில இந்திய வானொலி நிலையம்)

சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார், கல்கி, கே.பி. பாலசுப்பிரமணிய ஐயர் போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த தமிழ் ஆர்வலர்கள் பலர் ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை சுமார் 5.00 மணி அளவில் சந்தித்து உரையாடுவர்.

### சங்கப்பாடல்கள்

ஒருமுறை பாரதம் பாடிய பெருந்தேவனார் இயற்றிய புறநானூற்றுக் காப்புச் செய்யுள் ஒன்றை மிக அற்புதமாக விளக்கினார். அப்பாடல், "கண்ணி கார் நறுங்கொன்றை. . . ." என்று தொடங்கும் பாடலாகும். சமயத்தில் உள்ள பண்பாட்டை எல்லாம் விளக்கி, இசையுடன் பாடிக் காட்டிப் பலருடைய போற்றுதலுக்கு ஆளானார். பலமுறை ஔவையின் பாடலை உற்சாகத்தோடு பாடி விளக்கம் தந்துள்ளார். "வெய்தாய் நறுவிதாய் வேளையும் தின்பதாய் . . . . . என்று தொடங்கும் பாடலை எடுத்துக்காட்டாகக் காட்டலாம்.

### தமிழ்த்தொண்டு

> தமிழும், தமிழ்ப்பண்பாடும் எத்தகைய பெருமையும் ஆனந்தமும் கொண்டவை. அவை எப்படித் தமிழ்மக்களின் வாழ்க்கையோடு வாழ்க்கையாய் வளர்ந்து வந்துள்ளன என்பதை ஆயுள் முழுவதும் தெளிவாக விளக்கி வந்தவர் டி.கே.சி.[3]

என்று வித்வான் வ. சண்முகசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டதை இங்கு எண்ணுவது பொருத்தமானதாகும். டி.கே.சி. அவர்கள் கம்பராமாயணத்தின் மீது மாளாத காதல் கொண்டவர். அதனால் அவர் திரும்பத்திரும்பக் கம்பரது பாடல்களைப் பாடியும் பிறருக்கு எடுத்துச் சொல்லியும் மகிழ்ந்தார்.

### கம்பராமாயணம்

> நல்ல கவிதையையே கேட்டும் படித்தும் அனுபவித்த டி.கே.சி.க்கு எந்த இடத்திலே தாளம் தவறுகிறது. சொற்கள் மாறி விழுகின்றன; கவி உருவமே குலைகிறது என்பது மிகவும் எளிதாகத் தெரிந்து விடக்கூடும். அப்படிப்பட்ட பாட்டுக்கள் அவர் காதில் விழுகின்றபோது அவர் முகம் சுழிக்கிறார். உள்ளத்தில் வேதனைப் படுகிறார். . . . அந்தப்பாட்டு

> வேறு உருவும் பெற்றுவிடச் செய்கிறார். எல்லாவற்றிற்கும் கவிதைக்கு முக்கியமான அம்சம் ஆகிய தாளலயம் (Rhythm) அமைந்துவிடுகிறது. "திருத்தப்பட்ட பாட்டைப்படிக்கும்போது நமது உள்ளத்தில் இல்லாத உணர்ச்சிகள் எல்லாம் உண்டாகிவிடுகிறது. கம்பன் இப்படித்தான் பாடியிருக்க வேண்டும் என்ற எண்ணம் படிப்பவருக்கு வந்துவிடும்.[4]

என்கிறார் தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான். எடுத்துக்காட்டாக ஒரு பாடலைப் பார்ப்போம்.

இராமனை நாடாள வேண்டும் என்று சொன்னபோதும் காட்டிற்குச் செல்லவேண்டும் என்று சொன்னபோதும் இராமனின் முகம் இருந்த நிலையைக் கம்பர் விளக்குகிறார்.

இப்பொழு தெம்மனோரால்
இயம்புதற் கெளிதே யாரும்
செப்பருங் குணத் திராமன்
திருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்புதே முன்பு பின்பு அவ்
வாசகம் உணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா
மரையினை வென்றதம்மா!

இந்தப் பாட்டினை இப்படித்தான் எழுதியிருக்க வேண்டும் என்ற நோக்கில் சின்னத் திருத்தங்கள் செய்கிறார். அப்பாடல் கீழ்வருமாறு:

இப்பொழு(து) எம்மனோரால்
இயம்புதற்(கு) எளிதோ யார்க்கும்
செப்பரும் குணத் திராமன்
திருமுகச் செவ்வி நோக்கி
ஒப்பதே முன்பு, மற்(று) அவ்
வாசகம் உணர்ந்த பின்னர்
அப்பொழு(து) அலர்ந்த செந்தா–
மரையினை வென்ற(து) அம்மா!

முன்பு, பின்பு என்பதற்கெல்லாம் ஒவ்வொருவர் பொருந்தாத பொருளைக் கூறுவர் சான்றோர். இந்தத் திருத்தம்

இராஜாஜி அவர்களுக்கே பிடித்திருந்தது என்பதனை அவர்தம் வாக்கால் அறியலாம்.

> அவருக்கு எது அழகாகத் தோன்றவில்லையோ, எது பூரண ஒளியின்றி மங்கி விளங்குகின்றதோ அதை அவர் கம்பர் எழுத்தல்ல என்று நீக்கி விடுகிறார் . . . அவரவர் தம தம தறி தறி வகை வகை என்று ஆழ்வார் பாடிய முறையில் பக்தியுடன் ஆராதிப்பவர் ஒருவரை யாரும் தாக்குதல் கூடாது [5] என்கிறார்.

## தமிழ்நாட்டின் ஸ்வைட்சர்

"சிரித்தமுகம், செந்தாமரை மலர் போன்ற அகன்ற விரிந்த கண்கள், கருணையும் அன்பும் கலந்து தோய்ந்த பார்வை, புன்முறுவல், அடர்த்தியான மீசை," அதற்கப்பாலும் அவர் முகத்தில் ஒளிவீசும் ஞானஒளி ஆகியவற்றின் 'மொத்த ஒழுங்கே' டி.கே.சி. என்ற தமிழ்மகனின் வடிவம் என்பர் சான்றோர்.

ஆல்பர்ட் ஸ்வைட்சர் என்ற புரட்சி மனிதர் டாக்டர், மதபோதகர் ஆப்ரிக்க நீக்ரோக்களிடம் மிகுந்த அன்புடையவர். வெள்ளையர்களின் ஆதிக்கத்தால் கருப்பர்கள் படும் துன்பத்தைக் கண்ட ஆப்ரிக்கர்களுக்குத் தொண்டு செய்ய முனைந்தவர். இவரை ஜெர்மன் பத்திரிகை உலகம் கீழ்வருமாறு புகழ்கிறது. "Distinguished Scholar, accomplished artist and revolutionary thinker" அப்படிப்பட்ட ஆல்பர்ட் ஸ்வைட்சர் படத்தை எடுத்துச்சென்று டி.கே.சி.யின் மனைவி மற்றும் அவர்தம் பேரப்பிள்ளைகள் ஆகியவர்களிடம் காட்ட அவர்கள் இது என் கணவரின் படம், என் தாத்தாவின் படம் என்று கூறியதாக ஒரு செவிவழிச் செய்தியும் உண்டு.

டி.கே.சி.யைப் போலவே உருவ அமைப்போடு முகக்கட்டோடு இருந்தவர் ஆல்பர்ட் ஸ்வைட்சர். உருவமும் உள்ளமும் ஒன்றாய் இருந்தன என்பதே இங்கு வியப்புக்குரியது.

## தமிழ்மகனின் வடிவம்

> டி.கே.சி.யைப் பார்த்த உடனேயே அவருடைய சத்திய நிலை அப்படியே முகத்தில் சாந்தியோடு பிரகாசிப்பதைப் பார்க்கலாம். டி.கே.சி.யின் பேச்சைக் கேட்கிற பொழுதும், எழுத்தைப் படிக்கிற பொழுதும்

> உண்மை ஆனந்தத்தோடு விஸ்வரூபம் எடுக்கிற அற்புதம் தெரிந்துவிடும். பழகப்பழக நாம் டி.கே.சி. என்ற மனிதரோடு பழகவில்லை, எங்கும் நிறைந்த ஆனந்தமயமான 'தரும தேவதையோடு' பழகுகிறோம் என்பது எளிதாய் விளங்கிவிடும்.
>
> அமெரிக்க நாட்டைச் சேர்ந்த பாதிரியார் ஒருவர் டி.கே.சி.யைச் சந்திக்க வரும்பொழுது அறுபதடி தூரத்திற்கு அப்பாலிருந்தே, 'இந்த மனிதர் பெரிய சத்திய சீலர் என்பதையும், கலைநயம் தோய்ந்த உண்மை 'ஞானி' என்பதையும் இவருடைய திருமுக ஒளியே எடுத்துக் காட்டுகிறது'

என்று நண்பரிடம் சொன்னார் என்று ல. சண்முகசுந்தரம் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.[6] மனத்துக்கண் மாசிலாத மாமனிதர் டி.கே.சி. அவர்களின் உள்ளமும் தூய பளிங்கு போன்றதாகும்.

**உள்ள வெளிப்பாடு**

டி.கே.சி. அவர்கள் நம்நாட்டுக் கல்வி முறையைப் பற்றியும், அதில் உள்ள குறைகளையும் பல்வேறு நிலைகளில் சுட்டியுள்ளார்.

**கல்வி**

கல்வி கண் போன்றது. அந்தக் கல்வி எவ்வாறு அமைய வேண்டும் என்பதனையும் அதனால் விளையும் பயன்களையும் விளக்குகிறார் டி.கே.சி.

> போதிக்கப்படவேண்டிய கல்வி உற்சாகத்தை எந்த வகையிலும் வளர்க்கக் கூடியதாக இருக்கவேண்டும். அத்தகைய கல்விச் சாலைகள் நாட்டில் ஏற்படுமானால் சமுதாயத்தில் உண்மையும், ஒழுங்கும், அனுபவமும், ஆனந்தமும் ஏற்படமுடியும்

என்பது டி.கே.சி. அவர்களின் கருத்தாகும்.[7] மேலும் அந்நிய மொழியின் ஆதிக்கத்தை அறவே வெறுத்தார் டி.கே.சி.

**அந்நிய மொழி**

"ஆயிரக்கணக்கான இளஞ்சிறார்களின் இதய வளர்ச்சியும், பண்பாட்டு வளமும் அந்நிய மொழியால் நசுக்குண்டு

வதங்கின" என்று ஆங்கில மொழியால் விளையும் தீமைகளைப் பள்ளியில் படிக்கும்போதே உணர்ந்து கூறியதை இங்கு எண்ணுவோம்.

## பாடத்திட்ட மாற்றம்

> அமெரிக்காவில் உள்ள மக்களின் வாழ்க்கையும், ஆஸ்திரேலியாவிலிருந்து ஏற்றுமதியாகும் ஆட்டு ரோமத்தின் மதிப்பும், அமேசான் நதியின் நீளமும், ஏசுநாதர் பிறப்பதற்கு முன்பு கிரேக்கர்களின் போர்ச் செயல்களும்.... அதுவும் யாருக்கும் புரியாத ஆங்கில மொழியில்[8]

என்று ஏளனமாக டி.கே.சி. கூறுவதிலிருந்து உயர்நிலைப் பள்ளியில், பாடத்திட்டம் மாற்றியமைக்கப் பார் உயரும் என்பது டி.கே.சி. அவர்களின் திண்மையான முடிவு எனலாம். குறுகிய கல்வி முறையிலே, தன்னல மிகுந்த கல்விப் பயிற்சியிலே டி.கே.சி. அவர்களுக்கு நம்பிக்கை இல்லை . . . . யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உலகப் பொதுமையை அவர்கள் போற்றினார்கள்.

> பழைய கல்வி முறை பகுத்தறிவை வளர்த்து, மனத்தைப் பண்படுத்தி அறிவையும் கூர்மை ஆக்கியது. . . . . குருகுலக் கல்வி கற்றவன் உடலுறுதியும், மதி நுட்பமும் தன்னம்பிக்கை மிக்கவனாக இருந்தான். . . . . தியாக வாழ்க்கையை அவன் நடத்தினான்.... பாடப்புத்தகங்கள் கல்வியைத் தருமெனில், டார்வின், எடிசன் போன்றவர்கள் பாடத்திட்டத்தில் உள்ள பாடங்களையா கற்றார்கள்[9]

என்று கூறுவதிலிருந்து தனக்கு என்ற சுயநலமற்று நாட்டுக்குப் பயன்தரும் கல்வியே கல்வி என்று டி.கே.சி. கூறுவது புலனாகிறது.

## புலவர் டி.கே.சி.

படிக்கின்ற காலத்திலேயே வெறும் ஏட்டுக் கல்வியோடு மட்டும் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளாது படைப்புத் திறனிலும் சிறந்து விளங்கியவர் டி.கே.சி. அவர்கள்.

டி.கே.சி. அவர்கள் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த காலம் முதற்கொண்டே பாடல்கள் பல பாடி இருக்கிறார். பல யாப்பு முறைகளைக் கையாண்டு தமிழ்ப் பண்பும் தாளப் பண்பும்

செறிந்த பல பாடல்கள் எழுதி இருக்கிறார். பாடல்கள் ஒவ்வொன்றும் இதய பாவத்தை உணர்ச்சிப் பூர்வமாக எடுத்து வெளியிடுகின்ற அற்புத சிருஷ்டிகளாகும். இதுபோக, யமகம், சிலேடை முதலிய சொற்சிலம்புகளாகிய கரடுமுரடான பல பாடல்களை அனாயாசமாக இயற்றி அக்காலப் புலவர்களைத் திணறடித்தவர் டி.கே.சி. வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார், கந்தசாமிக் கவிராயர், கோமதிநாயகம் போன்ற தமிழ்க் கவிராயர்கள் டி.கே.சி. பாடல்களைக் கேட்டு வியந்திருக்கிறார்கள்.

## டி.கே.சி.யின் பாடல்கள்

இதய ஒலி என்ற நூலில் 'நாம் கல்வி கற்ற முறை' (1927) என்ற கட்டுரையில் கல்வியின் தன்மையையும், கல்வி கற்றுத்தரும் முறையைப் பற்றியும் விளக்கியுள்ளார். நூலாசிரியர்களுக்குப் புத்தக வணிகர்கள் பாடும் விதத்தில்,

> **எழுதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்;**
> **இருக்கின்றார் மாணவர்கள் எண்ணில் பல்லோர்**
> **எடுத்தெடுத்து விலைகொடுக்கப் பெற்றோர் தாமும்**
> **இருக்கின்றார் இருக்கின்றார் இருக்கின்றாரே!**

என்று நகைச்சுவை ததும்பப் பாடுகின்றார். தேர்வு எழுதுவதும் எழுதிய மாணவர்களில் சிலர் தோல்வியுறுவதும் பல்கலைக் கழகத்திற்கு வரும் வருமானம் பற்றியும் கீழ்வருமாறு கூறுகிறார். இந்நிகழ்வைச் செயங்கொண்டார் பார்த்திருந்தால் இப்படிப் பாடியிருப்பார் என்று டி.கே.சி. பாடுகிறார்.

> **வீழ்க வீழ்க மாணவர்**
> **மடிந்து வீழ்க மாணவர்!**
> **வாழ்க வாழ்க பல்கலைக்**
> **கழகம் வாழ்க வாழ்கவே!**

இந்தப் பாடலின் மூலம் மாணவர்கள் படும் துன்பத்தினையும், அக்காலத்தில் பல்கலைக் கழகம் இயங்கிய முறையினையும் உணரமுடிகிறது.

ஸ்ரீலாலா லஜபதிராய் அமெரிக்கா சென்றபோது, அமெரிக்க மக்களின் அறிவைக் கண்டு எண்ணி வியந்தார். மேலும் அங்குள்ள பல்கலைக் கழகங்களின் செயற்பாடுகளையும் போற்றினார். தான் பெற்ற பி.ஏ., பி.எல். பட்டத்திற்கு நாணினார்

என்ற கூற்றினைக் கேட்ட டி.கே.சி. சிறந்ததோர் மணியான லாலா லஜபதிராயரின் பாடு இதுவென்றால் நம்முடைய நிலைமை எவ்வாறிருக்கும்? பல்கலைக் கழகத்தைத் "தாய்" என்று உபசரிப்பது மேல் நாட்டார் வழக்கு. அதற்கிணங்க, நமது பல்கலைக்கழகத் தாய்க்கு வாயார வாழ்த்த வேண்டிய புகழ் இதுதான்.

> பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாளே
> எற்றோமற் றெற்றோமற் றெற்று

என்கிறார் டி.கே.சி.[10] கல்வியில் சிறந்த மாற்றம் வேண்டுமெனவும், கல்வி நிறுவனங்களின் தொண்டு முழுமையாக மக்களுக்குக் கிட்ட வேண்டுமென்பதும் பேரவாவாக டி.கே.சி.யின் உள்ளத்தில் புதைந்திருந்தமையை உணர முடிகிறது. மேலும் கல்வியில் உயிரில்லை என்கிறார் டி.கே.சி. இதனை,

> கல்வி இலாகா பழமையைப் பற்றுவது போல் உடும்புக்கும் பற்ற இயலாது. இறந்தொழிந்து போன முறைகளைக் கையாண்டு கையாண்டு, கல்விப் பயிற்சியில் உயிர்த் தத்துவம் அணுவளவும் இல்லாமல் போயிற்று[11]

என்று அங்கதச் சுவையோடு எழுதுகிறார். எழுத்துக்கள் அனைத்தும் உயிராக விளங்குவதை அவர்தம் நடையில் காணமுடிகிறது.

### சமய, தத்துவ அறிவு

எவ்வளவோ சிக்கலான சமய, தத்துவங்களையெல்லாம் எளிதாகச் சொல்லும் ஆற்றல் உடையவர் டி.கே.சி. அவர்கள்.

> நாம் வாழும் இந்த உலகம், மண், தண்ணீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களால் ஆகியது. இந்த அகண்டமான பிரபஞ்சத்திலே முதலில் எங்கும் ஆகாயமே வியாபித்திருந்தது. அந்த ஆகாயத்திலிருந்து காற்றும், காற்றிலிருந்து தீயும், தீயிலிருந்து தண்ணீரும், தண்ணீரிலிருந்து நிலமும் தோன்றின என்று அறிவாளிகள் சொல்கிறார்கள். இப்படித் தோன்றிய பஞ்ச பூதங்களையும் பாகுபாடு செய்துகொண்டே போனால் பகுக்கப்பட முடியாத ஒருநிலை வரும். அந்த நிலையில் உள்ள

பொருளைத்தான் 'அணு' என்று குறிப்பிடுகிறோம். அந்த அணுவும்கூட எல்லாம் வல்ல இறைவன் கட்டளைப் படியேதான் இயங்குகிறது. அந்த அணுவின் உடம்பாகவும் உயிராகவும் உணர்ச்சியாகவும் நின்று தொழிற் படும் சக்தி ஒன்றிருக்கிறது. அணுவுக்கு உள்ளேயும், வெளியேயும் இருந்து இவ்வுலகக் காரியங்களையெல்லாம் நடத்திவைக்கிறது அந்தச் சக்திதான். அதையே பெரியார்கள் கடவுள் என்று சொல்லுவார்கள். இப்படியெல்லாம் கடவுள் தத்துவத்தை நல்ல பீடிகையோடு விளக்கிப் பின்னால்,

**வான்நின்(று) இழிந்து வரம்பிகந்த**
**மாபூதத்தின் வைப்(பு) எங்கும்**
**ஊனும் உயிரும் உணர்வும் போல்**
**உள்ளும் புறத்தும் உளன் என்ப;**

என்ற கம்பர் பாட்டைச் சொல்லுவார்.

**வான் கெட்டு மாருதம் மாய்ந்து**
**அனல் நீர் மண் கெடினும்**
**தான்கெட் டலின்றிச்**
**சலிப்பறியாத் தன்மையனுக்கு**
**ஊன்கெட்டு, உயிர்கெட்டு**
**உணர்வுகெட்டு என் உள்ளமும் போய்**
**நான் கெட்டவா பாடித்**
**தெள்ளேனம் கொட்டாமோ!**

என்ற திருவாசகத்தையும் மேற்கோளாகக் காட்டி மேலும் மேலும் விளக்குவார் விஷயத்தை. இவ்வளவுதானா? இல்லை. இன்னும்,

**சாணினும் உளன், ஓர் தன்மை**
**அணுவினைச் சத கூறிட்ட**
**கோணினும் உளன்**

என்றெல்லாம் மறுபடியும் கம்பரையே சான்று காட்டுவார். பகுக்க முடியாதது அணு என்றில்லை. அதையும் பகுத்து 'எலக்டிரான்ஸ்', 'புரோடான்ஸ்' என்றெல்லாம் நிர்ணயித்து அந்த அணுவிற்கும் அணுவாய் விளங்கும் 'கோணி'லும் இறைவன் இயங்கும்

தன்மையை எல்லாம் அவர் விளக்கினால் அந்த விஷயத்தைப் பற்றி முடிவான தீர்ப்பே சொல்வது போலத்தானிருக்கும். அவ்வளவு எளிதாகப் பெரிய விஷயத்தை எடுத்துச் சொல்லிவிடும் திறன் அவரிடம் உண்டு.

கடவுள் தத்துவத்தை விளக்கியபின் கடவுளுக்கும் நமக்கும் உள்ள சம்பந்தம் தெரிய வேண்டுமா? அதற்கும் ஒரு பாட்டு.

**விறகில் தீயினன்**
**பாலிற்படு நெய்போல்**
**மறைந்து நின்றுளன்**
**மாமணிச் சோதியன்**
**உறவுகோல் நட்(டு)**
**உணர்வுக் கயிற்றினால்**
**முருக வாங்கிக்**
**கடையுமுன் நிற்குமே**

என்ற பாட்டைப் பாடுவார். 'நாம் கடவுளுடனேயே ஒன்றியிருக்கிறோம். வேறாகத் தனித்து நிற்கவில்லை என்ற உண்மையைச் சதா மனசில் வைத்து ஆர்வத்தோடும் ஆனந்தத்தோடும் சிந்திப்போமானால் மறைந்து நின்றுள்ள மாமணிச் சோதியன் முன்னிற்கும்' என்றெல்லாம் விளக்கப்படும்.

"சமயத்தில் இரண்டு விஷயங்களைக் கவனிக்க வேண்டும். ஒன்று, தத்துவ உண்மை, அதாவது கடவுள், இறுதியில்லாத இடமெங்கும் பரவி நிற்கிறான். உயிர் உள்ளன, இல்லாதன, ஆகிய எல்லாப் பொருள்களிலும், நின்று ஆட்டுகிறான். இந்த உண்மையில் திளைத்து ஆனந்திப்பது ஒருபுறமிருக்க வழிபாட்டுக்குரிய உருவத்தில் ஈடுபட்டுப் பேரானந்தம் கொள்கிறது" சமயத்தின் மற்றைய முடிவான உண்மை[12] என்ற கருத்திலிருந்து சமயம் பற்றிய தத்துவத்தை மிக எளிமையாக விளக்கும் திறத்தையும் உணர முடிகிறது.

### பல்துறை அறிவு

சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் பழைய மாணவர் விழாவிற்கு (Old Students's day) டி.கே.சி. சென்றபோது ஒரு பாதிரியாரிடம் உரையாட நேர்ந்தது. "ஸ்காட்லேண்ட் தேசத்தவர்களாகிய எங்களுக்கு மரங்கள் என்றால் நிரம்பப்

பிரியம். இந்தியர்களாகிய உங்களுக்கு எப்படியோ?" (We love trees, Do you?), என்று கேட்டார் பாதிரியார். இதற்கு டி.கே.சி. சொன்ன பதில் இதுதான்.

> மரங்களிடத்தில் எங்களுக்குப் பிரியம் கிடையாது, பக்தியே செலுத்துகிறோம். (We do not love trees, but we worship them) என்பதுதான் இவர் சொன்னது. மேலும் சொன்னார் இங்கு 'எங்கள் தமிழ்நாட்டிலே ஒவ்வொரு கோயிலும் ஒரு மரத்தைச் சுற்றியே எழுந்திருக்கிறது. அதனையே நாங்கள் தலவிருக்ஷம் என்கிறோம். குற்றாலத்தில் ஒரு குறும்பலா, மதுரையிலே கடம்ப மரம், திருவானைக் காவிலே நாவல்மரம், திருப்பெருந்துறையிலே குருந்த மரம் என்றெல்லாம் வைத்து வளர்த்து அந்த மரங்களையே வணங்கி வந்திருக்கிறோம். எல்லாப் பொருள்களிலும் இறைவனைக் காணும் தமிழ் அறிஞர்கள் மரத்தையே இறைவனாகக் கண்டதில் வியப்பில்லைதானே. ஒருமரம் துளிர்ப்பதும், பூப்பதும், காய்ப்பதும் கனிவதும் கண்டு அதிசயித்திருக்கிறார்கள். ஒவ்வொரு மரத்துக்குள்ளே இருக்கும் ரஸாயன விந்தைகள், இஞ்சினீயரிங் ஜாலங்கள், சிற்ப மர்மங்கள் இவைகளைக் கண்டு அனுபவித்திருக்கிறார்கள். இந்தத் தாவர வர்க்கங்களுக்குள்ள அரிய ஞாபக சக்தியையும் உயிர்த் தத்துவத்தையும் கண்டு வியந்திருக்கிறார்கள். இவைகளையெல்லாம் தெரிந்து, மரத்திற்குள்ளிருந்து தொழிற்படும் இறைவனையே வணங்கியிருக்கிறார்கள்'

என்று விளக்கம் கூறினார் டி.கே.சி. இதையெல்லாம் கேட்ட ஸ்காட்லேண்ட் பாதிரியார் அரண்டே போனார்.[13] மேலும் அறிவியல் அறிஞர்களைப் பற்றிக் கீழ்வருமாறு சுட்டுகிறார்.

> தென் துருவத்தின் கோடியைப் பார்க்கப் போவதில் ஷாக்கில்டனுக்கு இருந்த ஆர்வந்தான் என்ன! எடிஸன் சக்திகளையும், சாதனங்களையும் கண்டுபிடிக்க இராப் பகலாய் ஆராய்ந்ததுதான் என்ன! மகாபாரத யுத்தம் துரியோதனனைப் பார்த்துத் துரோபதை சிரித்து அதனால் வந்த விளைவு தானே! ஹெலன் என்ற பெண்ணின்

> காரணமாக ஐரோப்பாக் கண்டமும் ஆசியக் கண்டமும் ஒன்றோடு ஒன்று மோதின என்று தோன்றும்படி பெரு நெடும் போர் விளைந்ததாம். அதைப் பாடினார் மேல்நாட்டு இதிகாச கர்த்தா ஹோமர்.

டெனிஸனின் வாழ்க்கை வரலாற்றையும் அவர் கவிதை எழுதியதற்குரிய காரணம் பற்றியும் கவிதையில் உள்ள விளக்கத்தையும் மிக அழகாக டி.கே.சி. விளக்கி உள்ளார். ஹெர்பர்ஸ் ஸ்பென்சர்ரன் நூலைப் பற்றியும், ஆங்கிலப் பேராசிரியரான தாமஸ் கார்னலைப் பற்றியும் 1940ஆம் ஆண்டு 'சங்கீதமும் சாகித்தியமும்' என்ற தலைப்பில் எழுதியுள்ளார். இசையைப் பற்றியும் கீழ்வருமாறு கூறுகிறார்:

> **கணக்கிலிருந்து பிறந்தது மேல்நாட்டுச் சங்கீதம்**
> **உணர்ச்சியிலிருந்து பிறந்தது நம்முடைய சங்கீதம்**

என்றும், இதனை ஜான்சன், பைரன், ரோஜர்ஸ்நளினம் ஆகியவர்களின் அனுபவங்களைக் காட்டி, தமிழிசை அனைவரும் விரும்பக் கூடியது என்று நிறுவுகிறார்.[14]

மேலே கூறிய எடுத்துக்காட்டுக்களின் வழி டி.கே.சி. அவர்களின் அறிவியல், இலக்கியம், வரலாறு ஆகியவற்றில் அவருக்கிருந்த பல்துறை அறிவினை உணர முடிகிறது.

**டி.கே.சி. நடை**

'இதய ஒலி' தமிழர்கள் அனைவரும் படிக்க வேண்டிய புத்தகம். இந்த ஒரு புத்தகத்தின் மூலமாக டி.கே.சி. அவர்களின் இதயத்தை நேரில் பார்க்கலாம். இதயத்திலே எழுகின்ற உணர்ச்சிகளைப் பிறர் அனுபவிக்கும்படி எடுத்துக் கூறுவது மிகச் சிலருக்கே வாய்த்த ஓர் ஆற்றல் ஆகும். இவ்வாற்றல் வெறும் சாமர்த்தியமன்று. ஆழ்ந்த உண்மை அனுபவத்தினாலும் அதன்வாயிலாகப் பிறக்கும் இதயக் கனிவினாலும் சிந்திப்பதாகும். இந்த ஆற்றல் வாய்ந்தவர்கள் நமது நாட்டிலே மிக அரியர். இவர்களுள் சிறப்பாகக் கூறத்தக்க பெரியார் டி.கே.சி. என்ற முன்னுரையுடன் புத்தகம் ஆரம்பமாகிறது.

இந்தப் புத்தகம் டி.கே.சி.யின் 'வசன நடைக்கும்' ஒரு எடுத்துக்காட்டு. தமிழ் வசனம் எப்படியிருக்க வேண்டும் என்றால்

இப்படித்தான் இருக்கவேண்டும் என்று இந்தப் புத்தகத்தைச் சுட்டிக் காட்டிவிடலாம். மேலும் அவர் எழுதும் உரைநடை தனிநடை; அதில் சிருஷ்டியூற்று இதயத்திலிருந்து பீறிட்டுக்கொண்டு வருகிறது. தமிழ் இலக்கிய நிறைவையும் ஆங்கில வசனத்தின் கதியையும் பெற்றுவிட்டது. அதில் இதயத்துடிப்பைக் காணலாம். கருத்தோ களங்கமற்றுத் தெள்ளத் தெளிந்த தெளிவுடன் தவழ்கிறது. எளிய சொற்கள் உண்மையையே பேசி, தங்கள் கடமையை நிறைவேற்றுகின்றன. சொல் தொடரில் ஹிருதய ரீங்காரமே கேட்கிறது. கருத்தை மூடி மூடி வைக்கும் நீண்ட வாக்கியங்கள் இந்நூலில் மருந்துக்குக்கூடக் கிடையாது. இதில் பண்டிதர்களின் இருண்ட பாசிநடை இல்லை. இயற்கையே எழுந்து நின்று பேசுவது போலத்தான் தொனிக்கிறது. அவருடைய வசன எழில், வசன லாவகம்

> "டி.கே.சி.யின் வசன நடை பேசும் நடை - இரு இதயங்களை உணர்ச்சிக் காந்தத்தால் இழுத்து இணைக்கும் நடைமொழிக்கு மொழி தித்திக்கும் நடை இதய ஒலி இதய ஒளி வீசுகிறது. சொற்கள் ஐம்புலன்களின் அனுபவங்களையும் வடித்து இலக்கியக் கோபுரம் எழுப்புகின்றன"

என்று செட்டிநாட்டு இலக்கிய இரசிகர் வி.ஆர்.எம். செட்டியார் மேற்கண்டவாறு கூறுகிறார்.

**வசன நடை**

சிறந்த அறிஞர்கள் பலர் தமிழ் வசனத்தின் அலங்கோலத்தைக் கண்டு வருந்தினார்கள். அருவருப்புற்றார்கள். மற்றும் பலர் கரடுமுரடான தன்மைதான் தமிழ் வசனத்தின் தன்மைபோலும் என்று ஒதுங்கியே விட்டார்கள். இந்த நிலையில் ரசிகமணி வந்து தித்திக்கும் செந்தமிழ்ச் சொற்களில் சரளமான வாக்கியங்களைத் துண்டு துண்டாக நின்று ஒலிக்கச் செய்யும் நயமான வசன இலக்கியத்தை உண்டாக்கித் தமிழை வளமைப்படுத்தினார்கள். தமிழ் வசனத்தின் நுட்பமான அரிய உண்மைகளை எடுத்தாள முடியாது என்று நினைத்திருந்தவர்கள், டி.கே.சி.யின் வசன நடையைப் பார்த்து மூக்கின் மேல் விரலை வைத்தார்கள். எவ்வளவு ஆழமான தத்துவ நுட்பங்களையும் தெளிவாய் எடுத்து விளக்குவதற்குத் தமிழ்தான் தகுதியான மொழி

என்று பலர் சொல்லிவிட்டார்கள். அது மட்டுமா? ரசிகமணியின் வசனப் படைப்பின் மூலம், உலகத்திலுள்ள நயமான, பதப்பட்ட (வசன) மொழிகளில் தமிழும் ஒன்று. தமிழே வேறு எந்த மொழியிலும் சாலச்சிறந்த குறியீடுகளும், வழக்கும், மரபும் கொண்ட மொழியாகும் என்று பல அறிஞர்கள் எடுத்துக்காட்டவும் ஏதுவாக இருந்தது.

டி.கே.சி. அவர்கள் எத்தகைய நுட்பமான ஆழ்ந்த தத்துவ உண்மைகளை எடுத்து எழுதினாலும் சிக்கலில்லாமல், நேருக்கு நேர் நின்று வாசகர்களிடம் சொல்லி விளக்குவது போன்றிருக்கும் என்று அவரோடு நெருங்கிப் பழகிய நண்பர்கள் கூறுவதிலிருந்து டி.கே.சி. அவர்களின் வசன நடைப் புலமையையும் தமிழறிவையும் நன்கு உணரமுடிகிறது.

இதய ஒலி, கம்பர் யார், டி.கே.சி. நினைவில் இலக்கிய ரசனைக் கட்டுரைகள் (கல்கியின் கள்வனின் காதலி முதற்பதிப்புக்காக எழுதிய டி.கே.சி. அவர்களின் அணிந்துரை) ஆகிய நூல்களின் மூலம் டி.கே.சி. அவர்களின் கட்டுரைத் திறத்தை உணரமுடிகிறது.

### கட்டுரையாளர்: அ) இதய ஒலி

மனத்தின் தன்மையைப் பற்றியும், கலைமகள் பற்றிய அவர்தம் விளக்கமும், பதி, ஞானம் - ஆகியவை பற்றியும் சரஸ்வதி அல்லது மனோதத்துவம் என்ற தலைப்பில் விளக்கியுள்ளார் (1932). பூவின் மேல் பிறந்த மோகம் என்ற தலைப்பில் பூவின் மேல் மக்கள், கவிஞர் கொண்ட ஆசையைக் கலிங்கத்துப்பரணியின் பாடல்களைக் கொண்டு விளக்குகிறார் (1932). மேல்நாட்டுப் பெண், நம்நாட்டுப் பெண் - இவர்களின் காரணமாக விளைந்த போரினை 'அழகு தூண்டிய வீரம்' (1935) என்ற கட்டுரையில் விளக்குகிறார். தாகூரின் தாய்மொழிப்பற்றினை, 'கால் மணி நேரம் தமிழுக்கு' (1935) என்ற கட்டுரையில் உணர்த்தி, தமிழர்கள் தமிழுக்கு முதன்மை தரவேண்டும் என அறிவுறுத்துகிறார். தியாகராசவிலாசம் அல்லது புலவர் தொழில் (1935) என்ற 5வது கட்டுரையில் தியாகராச விலாசம்/சங்கப் பாடல்கள் - விளக்கம் தருகிறார். இந்நூலுக்குப் பெயரான 'இதய ஒலி' (1936) என்ற கட்டுரையில் ஆங்கிலத்தில் பேச்சு வழக்கில் உணர்ச்சிச் சொற்களுக்கு ஈடான தமிழ்ச் சொற்களை இக்கட்டுரையில்

மொழிகிறார். (1927)ஆம் ஆண்டு எழுதிய 'நாம் கல்வி கற்ற முறை' என்ற தலைப்பில் லாலா லஜபதிராய் அவர்களின் அனுபவத்தின் மூலம், நம் பல்கலைக் கழகத்தின் நிலைமையை உணர்த்துகிறார். கருத்தும் கவியும் (ஆண்டு தரப்படவில்லை) என்ற தலைப்பில் ஹோமர், மகாகவி பாரதி, டென்னிஸன் - ஆகியோரின் உணர்வுகளை உணர்த்துகிறார். 'தமிழுக்கு வாய்த்த அரும்புதல்வன்' (1937) வெ.ப. சுப்பிரமணிய முதலியார் அவர்களைப் பற்றியும், 1938ஆம் ஆண்டு 'பெண்களின் ஆருடம்' என்ற பத்தாவது கட்டுரையில் குறவஞ்சி, முத்தொள்ளாயிரம் - பாடல்களை ஆய்ந்தும் நாமும் வள்ளுவரும் (1932) நாடகத்திற்கு வள்ளுவர் வந்து தான் அனுபவித்ததை, "கூத்தாட . . . தற்று" என்ற குறளை எழுதியதாகவும் தமக்கே உரிய முறையில் நிலையாமைத் தத்துவத்தை மிக எளிமையாக உணர்த்துகிறார். தமிழ் வளர்த்த மன்றங்கள் (1940) என்ற கட்டுரையில் தமிழால் முடியும் என்பதைக் கவிதைகள் மூலமாக எடுத்துக்காட்டியுள்ளார்.

'கண்ணாரக் காண ஒரு கவிஞர்' (1939) என்ற கட்டுரையில் கவிமணியின் பாடல்களை ஆய்ந்துள்ளார். 'பண்டைக்காலத்து மாமா ஒருவர்' (1932) என்ற கட்டுரையில் நாடகக் கம்பெனி நடத்திய 'நரசிம்ம ராவ்' கதையைக் கூறி நந்திக்கலம்பகப் பாடலையும் இணைத்துச் சுவைப்பட எழுதியுள்ளார். 'என் அத்தை' என்ற 15வது கட்டுரையில் (1937) பால சரஸ்வதி கிருஷ்ணமாச்சாரியார், வி.வி. ஸ்ரீனிவாச ஐயங்கார் - இருவரிடையே உள்ள கவிஉறவை வெளிப்படுத்தும் வகையில் எழுதியுள்ளார். பால சரஸ்வதி கிருஷ்ணமாச்சாரியார் என் அத்தை என்ற தமிழ்ப் பாடல்களைப் பாட அப்பாடல்களில் எளிமை, இசை ஆர்வம் மூன்றும் பிணைந்துள்ளமையையும் சுட்டியுள்ளார். 'குற்றாலக் குறவஞ்சியின்' (1937) - பாடல் நலத்தையும், சமயதீபம் (1940) என்ற கட்டுரையில் இறைவனின் பண்புகளை விளக்கியும், சங்கீதமும் சாகித்தியமும் (1940) என்ற 18வது கட்டுரையில் தமிழிசையின் மேன்மையையும், 'கவியும் உருவமும்' (1941) என்ற 19வது கட்டுரையில் தமிழிலக்கியத்தின் மூலம் அக்கால நிலையைக் காட்டியும், 'திருநெல்வேலிச் சீமையும் தமிழ்க்கவியும்' (1940) என்ற இறுதிக் கட்டுரையில் பாரதி, கவிமணி, கடிகை முத்துப் புலவர், பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், நம்மாழ்வார் - ஆகியோரின் பாடல்களை விளக்கியதோடு திருநெல்வேலியைச் சுற்றியுள்ள ஊர்களைப் பற்றியும் கூறியுள்ளார்.

டி.கே.சி. அவர்கள் 1927ஆம் ஆண்டு முதல் 1941ஆம் ஆண்டு வரை எழுதியுள்ள கட்டுரைகளின் தொகுப்பு இந்நூலாகும். இந்நூலின் மூலம், பல்வேறு புலவர்களின் புலமை நலம், மேனாட்டாரின் கவிநலம், சான்றோர்களின் வாழ்க்கை முறை, திருநெல்வேலியைச் சுற்றியுள்ள இடங்களின் மாண்பு, தமிழால் அனைத்தும் முடியும் என்ற ஆணித்தரமான உண்மை ஆகியவை நமக்குப் புலனாகின்றன.

### ஆ. கம்பர் யார்?

கம்பர் யார்? என்ற நூலின் முன்னுரையில், திருச்சி வானொலியில் டி.கே.சி. அவர்கள் பேசிய பேச்சுக்களும், ஆனந்தவிகடனில் வெளியான கட்டுரைகளும் இணைந்தது என்கிறார் டி.கே.சி. அவர்கள். இந்நூலில் ஒன்பது கட்டுரைகள் உள்ளன.

### கம்பரும் உலகக் காட்சிகளும்

"கவியென்றால் அப்படியே பயந்து ஓடிவிடுவார்கள் ஆங்கிலேயர்கள்" என்று Literary Taste by Arnold Benett அவர்கள் இலக்கியத்தில் உணர்ச்சி என்ற நூலில் வெளியிட்டிருக்கிறார் (ப.1).

ஆனால் கம்பருடைய கவிகள் எல்லாம் தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்த மக்களுக்கு அழியாச் செல்வமாகும்.

டாக்கா மஸ்லின் போன்ற நுண்துகிலை மலர் சூடிய கருங்குழலார் அணிந்திருந்தனர். இங்குச் சிறப்பு என்னவென்றால் சிலந்தி பின்னுகிற நுட்பமாகிய வலை என்பதே.

தசரதன் தன் மகன் இராமரிடம் முடிசூட்டப்போகும் செய்தியைச் சொல்ல அழைத்துவருமாறு கூறுகிறார். இராமன் வீதி வழியாகத் தேரில் வருகிறான். பெண்கள் பார்க்கிறார்கள். "அளந்தவாள் அரத்தவேல் வண்டொரு செண்டைகள் மயங்க" (ப. 7) என்கிறார்.

இந்தக் கட்டுரையில் கம்பரது சொல்லழகினையும்,, இசைத்திறத்தினையும் வெளிப்படுத்துகிறார்.

'கம்பரும் மக்கள் இயல்பும்' என்ற இரண்டாவது கட்டுரையில் ஷேக்ஸ்பியரைப் போலவே கம்பரும் வாழ்ந்த

நாட்டின் பண்பாட்டோடு, பெயர்களையும், மாந்தர்களின் பண்புகளையும் அமைத்துள்ளார்.

எடுத்துக்காட்டாக ஒன்றைக் குறிப்பிடலாம். "150 வருஷத்திற்கு முன் பிரான்ஸ் தேசத்தில் ஒரு பெண்மணி கல்வி கேள்விகளில் சிறந்திருந்ததால் அவளுடைய மாளிகைக்குச் சிறந்த புலவர்களும் ஆசிரியர்களும் ஒன்றுகூடி, சகல கலைகளையும் ஆய்ந்தனர். அந்த மாளிகை பாண்டியன் மதுரையில் நடத்திய சங்கத்தை ஒத்தது. அதுபோலவே மாடம் டிஸ்டீல் என்ற பெண்மணியை நினைவில் வைத்துக்கொண்டு எழுதியதுபோல அமைந்துள்ளது. "பெருந்தடங்கள் பிறைநுதலார்க்கெலாம்" என்று தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எடுத்துக்காட்டுகிறார் டி.கே.சி. (ப.17)

கும்பகர்ணனின் மனநிலையையும், இலக்குமணனின் மனநிலையையும் கம்பன்வழிக் காட்டுகிறார் டி.கே.சி. எடுத்துக்காட்டாக,

**வேதியர் தமைத்தொழும்**
**வேந்த ரைத்தொழும்**
**தாதியர் தமைத் தொழும்**
**தன்னையே தொழும்**
**ஏதும் ஒன் றறிகிலான்**
**இருக்கும் நிற்குமால்;**
**காதல்என் றீதுமோர்**
**கண்ணின் தோற்றிற்றே!**

என்ற இந்தப்பாடலைக் காட்டலாம். இராமனின் வருகைக்குக் காத்திருக்கும் பரதனின் மனநிலையையும், இராமன் வருகிறான் என்று கூறக்கேட்ட பரதனின் மகிழ்ச்சியும் மெய்ப்பாடுகளாக வெளிப்படுவதால் கம்பநாடகம் என்பது பொருத்தம்தானே! என்கிறார் டிகேசி.

கும்பகருணன், தாடகை, இராமர், இலக்குவன், சீதை போன்றவர்களின் உடல் வனப்பைக் கம்பர் வழி டிகேசி. அவர்கள் 'கம்பரும் உடல் வனப்பும்' என்ற 4வது கட்டுரையில் விளக்குகிறார்.

'கம்பரும் நீதி நெறியும்' என்ற 5வது கட்டுரையில் வரம் தந்த தசரதன் பட்ட துன்பத்தினை "ஆ கொடியாய். . . . .ளான்" என்ற பாடலின் மூலம் விளக்குகிறார். மேலும் இராமனின் அருள்

உணர்வினையும், விபீடணன் இராமரிடம் அடைக்கலமாகும் போது, மற்றவர்கள் கூற்றும், இராமனது உள்ள உணர்வும் எவ்வாறு அமைந்திருந்தன என்பதனை,

> ***இன்றுவந் தான் என்றுண்டோ***
> ***எந்தையை யாயைமுன்னைக்***
> ***கொன்றுவந்தான் என்றுண்டோ***
> ***புகாது கூறுகின்றான்***
> ***கொன்றுவந் தன்புபேணும்***
> ***துணைவனும் அவனே, பிள்ளைப்***
> ***பின்னும்என் றாலும்நம்பால்***
> ***புகழன்றிப் பிறிதும்உண்டோ?***

என்ற பாடல் வழி உணர்த்துகிறார். வசிட்டர் வழி இராமனின் சக்தியின் மேன்மையினையும், இராவணன் வினாவிற்கு அனுமனின் விடையினையும் எடுத்துக்காட்டி, 'கம்பரும் அவதாரத்தத்துவமும்' என்ற ஆறாவது கட்டுரையை டி.கே.சி. அவர்கள் படைத்துள்ளார். 'கம்பர் கவிக்கு வந்த வினை' என்ற 7வது கட்டுரையில் கம்பராமாயணத்தில், செருகு கவிகள் எவைஎவை என்பதனை எடுத்துக்காட்டி விளக்குகிறார். எடுத்துக்காட்டாக,

> ***சொல்லுடையார் என்போல்***
> ***இனியுளரோ தொல்வினையேன்***
> ***இல்லுடையாள் காண***
> ***விறகுடையாய், எண்ணிலாப்***
> ***பல்லுடையாய் உன்னைப்***
> ***படையுடையோன் கொன்ற***
> ***வில்லுடையேன் நின்றேன்***
> ***விறலுடையேன் அல்லேனோ?***

என்ற பாட்டைப் 'போலிப்பாட்டு' என்கிறார் டி.கே.சி. கழுகைப் பார்த்து 'எண்ணிலாப் பல்லுடையாய்' என்று சொல்வதில் பொருளில்லை என்கிறார் டி.கே.சி. (பக்.64-65) (சடாயுவிடம் உரையாடிய இராம இலக்குவர்கள்), 'பாட்டினால் வந்த தலைக்கிறக்கம்' என்ற கட்டுரையில் தமிழில் உள்ள பாடல்களே மேனாட்டுப் பாடல்களைவிட எளிமை என்று எடுத்துக்காட்டி விளக்குகிறார்.

'கம்பரும் தமிழரும்' என்ற இறுதிக் கட்டுரையில் (9வது கட்டுரை) ஆங்கில மொழி உலகம் முழுவதும் பேசப்படுவதால்,

படிப்பவர் எண்ணிக்கை அதிகம் என்கிறார். மேலும் மேனாட்டார் ஷேக்ஸ்பியரை நேசிப்பதால் நூலுக்கும் சக்தி ஏற்படுகிறது என்கிறார்.

கம்பரைப் பற்றியும் அவர் தம் வாழ்க்கை வரலாற்றிலும் கற்பனையைக் கலந்துள்ளனர் என்று டி.கே.சி. அவர்கள் குற்றம் சாட்டுகிறார். மேலும் அவர்தம் பாடல்களிலும் பாடபேதங்கள் நிறைய உள்ளன. தமிழர்கள் தமிழின் மீது அக்கறை கொண்டவர்களாக விளங்க வேண்டும் என்பதே கம்பர் யார்? என்ற நூலின் மூலம் உணர்த்தும் உண்மை எனலாம்.

## டி.கே.சி. நினைவில் இலக்கிய ரசனைக் கட்டுரைகள்

'டி.கே.சி. நினைவில் இலக்கிய ரசனைக் கட்டுரைகள்' என்ற நூலில் கல்கியின் கள்வனின் காதலி முதற் பதிப்புக்காக எழுதிய டி.கே.சி. அவர்களின் அணிந்துரை / முகவுரை எனலாம். இந்நூலில் பல்வேறு சான்றோர்கள் கட்டுரைகளை எழுதியுள்ளனர். இந்நூலை எஸ்.வி.எஸ். என்பவர் தொகுத்துள்ளார். டி.கே.சி. அவர்களின் முகவுரையே கட்டுரைபோல் அமைந்துள்ளது.

## ரசிகமணி கடிதங்கள்

ரசிகமணி கடிதங்கள் என்ற நூலைத் தொகுத்தவர் ஜஸ்டிஸ் எஸ். மகராசன் (தலைவர் டி.கே.சி. வட்டத்தொட்டி) அவர்கள்.

> என்னுடைய தமக்கையார் வேலம்மாளுக்கும் எனக்கும் எழுதிய கடிதங்களை நூலாக வெளியிட்டு, அவை நல்கும் அபூர்வமான இலக்கிய இன்பத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்."
> (ப. 1) (ரசிகமணி கடிதங்கள் தொ.ஆ. எஸ். மகராஜன்)

என்ற நூலில் குறிப்பிட்டுள்ளபடி கடிதங்கள் அனைத்தும் இலக்கியப் பலாச் சுளைகள் எனலாம்.

இந்நூலில் 23.7.1945ஆம் ஆண்டு முதல் 31.12.1953ஆம் ஆண்டு வரை எழுதியுள்ள டி.கே.சி.யின் 156 கடிதங்கள் அடங்கியுள்ளன. இந்தநூல் 1979ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வெளிவந்துள்ளது.

## கடிதங்கள் வழி அறியும் செய்திகள்

கடிதங்கள் வெறும் நலம் அறியும் காகிதங்களாக/ தாள்களாக அமையாது எதிரில் அமர்ந்து டி.கே.சி. அவர்கள் இலக்கியத் திறனாய்வு செய்வது போலவும், பிற சான்றோர்களின் திறமைகளை எடுத்துச்சொல்வது போலவும் அமைந்துள்ளன. 'டி.கே.சி.யின் கடிதங்களில் உள்ள ஒவ்வொரு சொல்லிலும் எழுத்திலுமே பொருள்கள் முட்டத் ததும்பிக் கொண்டிருக்கின்றன. அபாரமான தெளிவும் உணர்ச்சியும் ஒளியும் இருக்கின்றன. . ஆண்டுக் கணக்கிலே பேச்சுத் தமிழின் உயிர் நிலையை அறிந்து அதன் மர்ம ஸ்தானத்தை உணர்ந்து, அனுபவித்து, அந்த அனுபவத்தால் பெற்ற மொழியறிவைக் கலைப்பாங்கோடு கையாளக் கற்றுக்கொண்டதனால்தான் டி.கே.சி.யினுடைய எழுத்துத் தமிழுக்கு, பேச்சுத் தமிழின் இயல்பான சீலமும் வன்மையும் உயிர்த்துடிப்பும் கிட்டியிருக்கின்றன" (ரசிகமணி கடிதங்கள்)

என எஸ். மகராஜன் அவர்கள் கூறியிருப்பது இங்கு எண்ணுதற்குப் பொருத்தமானதாகும்.

திருக்குற்றாலம், தென்காசி, சென்னை, பம்பாய் போன்ற இடங்களிலிருந்து எழுதியுள்ளமையை ஒவ்வொரு கடிதத்தின் இடப்பக்கத்திலிருந்து அறிய முடிகிறது. கீழே தேதியும் மாதமும் ஆண்டும் குறித்துள்ளார். சில கடிதங்களில் கையொப்பம் இட்டுப் பின் தேதியும் மாதமும் ஆண்டும் குறித்துள்ளார். எடுத்துக் காட்டாக 85ஆம் கடிதத்தைச் சுட்டலாம். சங்க இலக்கியங்கள், திருக்குறள், பக்தி இலக்கியங்கள், கம்ப ராமாயணம் போன்ற இலக்கியங்களிலிருந்தும், மேனாட்டார் இலக்கியங்களில் தனக்குப்பிடித்த அடிகளையும், குறிப்பாக ஷேக்ஸ்பியரின் கருத்துக்களையும் ஆங்காங்கே கூறுகிறார்.

பாடல்களில் மனத்தைத் தொட்ட பாடல்களைக் குறிப்பதோடு மாறுபட்ட சொற்கள் பாடல்களில் வரின் அதனையும் குறிப்பது டி.கே.சி. அவர்களின் வழக்கமாக இருந்தது. எடுத்துக்காட்டாக,

> "மாசற்ற பெரு வெளியை மன வெளியில் அடைப்பாம் என்ற பாட்டை எத்தனை தடவை பாடினேனோ சொல்ல முடியது. 'அடைப்பாம்' என்ற

அடியைப் பாடும் போது ஏதோ வர்மம் கொண்டு திணித்த மாதிரி கடுமையுடன் ஒலிக்கிறது".

(ரசிகமணி கடிதங்கள், ப.184)

என்ற கடிதத்தைச் சுட்டலாம்.

வரதராஜ ஐயங்கார் ஜஸ்டிஸ் எஸ். மகராஜன் தூத்துக்குடியில் முன்சீப்பாக இருந்தபோது சப்-ஜட்ஜாக இருந்தவர். தமிழின் மீது பற்றுடையவர்.

பால்நாடார் தூத்துக்குடியில் புகழ்பெற்ற வழக்கறிஞர். கம்பராமாயணத்தில் தனி ஈடுபாடு கொண்டவர். தஞ்சை ஆப்ரகாம் பண்டிதரின் மருமகன் டி.கே.சி. அவர்களின் நண்பர்.

ஆர்.வி. சாஸ்திரி காந்திஜியின் ஆங்கில அரிஜன் பத்திரிக்கைக்கு ஆசிரியராக இருந்தவர். டி.கே.சியின் நெருங்கிய நண்பர். ராஜாஜிக்கும் நெருங்கிய நண்பராக இருந்தவர்.

ஆவுடையப்பப்பிள்ளை கிறித்தவக் கல்லூரியில் பயின்ற ஒருசாலை மாணாக்கர்.

சிதம்பரம் விநாயகம் பிள்ளை வழக்கறிஞர் சங்கத்தைக் கூட்டி டி.கே.சி. அவர்களைப் பேசவைத்துக் கேட்டு மகிழ்ந்தவர்.

வித்துவான் திருமலை ஐயங்கார் பாளையங் கோட்டையில் தமிழாசிரியராகப் பணி ஆற்றியவர். டி.கே.சி.யிடம் பக்தி உடையவர்.

அருணாசலம்பிள்ளை தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதியவர். டி.கே.சி. அவர்களை 'இதய ஒலி' என்ற கட்டுரைத் தொகுதியை எழுத வைத்தவர். டி.கே.சி.யின் இனிய நண்பர். (ஆ. முத்துசிவம் (பேராசிரியர்), டாக்டர் திருமூர்த்தி, திருப்புகழ் மணி டி.எம். கிருஷ்ணசாமி ஐயர் (உயர்நீதிமன்ற நீதிபதி), சோமுபிள்ளை (அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முன்னாள் துணைவேந்தர்), ஒய்.ஜி. துரைசாமி (சிறந்த கலைக்குடும்பத்தைச் சார்ந்தவர்), வெங்கட்ராமன், பி.எஸ். சுப்பிரமணியப்பிள்ளை (இருவரும் வழக்கறிஞர்கள்) போன்றவர்கள் டி.கே.சி. அவர்களுடன் தமிழால் உறவு கொண்டவர்கள்.

**பெண்கள்**

தமிழால் உறவான பெண்மக்கள் சிலரையும் இக்கடிதங்கள் மூலம் உணர முடிகிறது. ஜஸ்டிஸ் எஸ். மகராஜன்

அவர்களின் முதல் மனைவி கோமதி அம்மாள் அவர்களும், ஜஸ்டிஸ் எஸ். மகராஜன் அவர்களின் தமக்கையார் வேலம்மாள் அவர்களும் (ராஜாஜி அவர்களால் - She is the most cultured lady that I have come across in the South) என்று பாராட்டப்பட்ட புஷ்பம்மாள் அவர்களும், நீலாவதி ராமசுப்ரமணியம் அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். இரு மொழிகளிலும் மிகுந்த ஞானம் உடையவர் டி.கே.சி. அவர்கள் என்பதும் இக்கடிதங்கள் வாயிலாக உணரமுடிகிறது.

## பேச்சு வண்ணம்

டி.கே.சி. அவர்கள் எழுத்திலும், பேச்சிலும் புலமை மிக்கவர். 'ஆடுகிறார் . . . நால்வரே" என்ற கம்பராமாயணப் பாடலின் விளக்கத்தைக் கூறுகிறார் டி.கே.சி. அத்தனைப்பேரும் அயோத்தி நகருக்கே சென்று விடுகின்றனர். கம்பனைப் பற்றி, தமிழ்க் கவிதையைப் பற்றி டி.கே.சி. பேசும் போது டி.கே.சி. நா பேசும். டி.கே.சி. வாய் பேசும். அடர்ந்த நெற்றிப் புருவம் பேசும். செழித்த வளர்ந்துள்ள மீசை பேசும். எல்லாவற்றிற்கும் மேலாக அவருடைய உள்ளமே நம்முடைய உள்ளத்தோடு பேசும்.

7.5.1942ஆம் ஆண்டு திருநெல்வேலியில் உள்ள சங்கரன்கோவில் இலக்கியச் சங்கத்தில் 'கம்பனும் கவிதையும்' என்ற தலைப்பில் டி.கே.சி. பேசினார். முதலில் சங்கரன்கோவில் என்ற இடத்தின் பெருமையைப்பற்றி விளக்கினார். பின்னர் அந்த ஊரில் தோன்றிய இலக்கியங்களைப்பற்றி உணர்த்தி, பின் கம்பனையும், கம்பராமாயணத்தையும் விளக்கினார் டி.கே.சி. அவர்கள்.[15] அவர் பேச்சினைக் கேட்டவர்கள் சிலைகளென அமர்ந்திருந்தனர். காரணம் இலக்கியத்தை எளிமையாக, அறிவியலோடு பொருத்திப் பேசுவதில் வல்லவர் டி.கே.சி. அவர்கள்.

## அறிவியலும் தத்துவமும்

சயன்ஸ் காணுகிறது அனுமான முறையில்தான். நூறும் நூறும் இருநூறு என்றால் அனுமான முறையில்தான் உண்மையைக் காண்கிறோம். ஆனால் இரண்டும் இரண்டும் நாலு என்று சொல்லும்போது அனுமான முறையில் காண்கிற காரியம் அல்ல. நேருக்கு நேரே காண்கிறோம். ஆம். உண்மைத் தத்துவத்தைச் சயன்ஸ் காண்கிறது என்றால் அனுமான முறையில்தான். ஞானிகள் காண்பதோ நேருக்கு நேர் காண்கிற முறை. ஞானிகளுக்கு ஒரே ஏக்கம், ஒரே ஆசை, ஏகமாய், ஒரே

தத்துவமாய், ஆனந்தமாய் இறைவன் இருக்கிறான். நான் என்று வேறில்லை அவனுடைய மனசு விளையாட்டுகளில் இந்த நான் ஒன்று அவ்வளவு தான். நான் என்ற உணர்ச்சி அற்றுவிட்டால் மிச்சம் ஒரே வஸ்துத்தான். கடவுள் தான். இறைவனோடு ஒன்றாய் விட்டு நாமே இல்லாமல் போய்விடுவது தான் முக்தி நிலை. இந்த முக்தி நிலையைச் சதா தியானித்துக்கொண்டிருக்கிறார்கள் ஞானிகள். தியானத்தின் வேகத்தினால் முக்தி நிலையை அடைந்து விட்டதாகக் கனவுகூடக் காண்கிறார்கள். பிறகு தெரிகிறது கனவென்று.

தாயுமானவர் சொல்லுகிறார் - ஆணவ இருளுக்குள் இருக்கிற தன்னை மீட்பதற்காக இறைவன் கைகாட்டி அழைத்ததாக ஒரு கனவு காண்கிறார் தாயுமானவர்.

இந்தவிதமான கனவு பல ஞானிகளுக்கும் வருவதுண்டு என்கிறார் டி.கே.சி.[16]

## இரசித்த பாடல்கள்

நாடோடிப் பாடல்களையும் டி.கே.சி. இரசிப்பார்.

**சில்லென்று பூத்த**
**சிறுநெரிஞ்சி காட்டூடே**
**நில்லென்று சொல்லி**
**நிறுத்திவழி போனீரே!**

**ஊரான் ஊரான் தோட்டத்திலே – யாரோ**
**ஒருத்தன் போட்டானாம் வெள்ளரிக்காய் –**
**அதைக்**
**காசுக்கு ரெண்டு விற்கச் சொல்லிக்**
**காயுதம் போட்டாண்டி வெள்ளைக்காரன்.**

டி.கே.சியால் தமிழ் நாட்டில் பிரபலமடைந்த பாடல்கள் பல. அவற்றில் சில மேற்கண்ட பாடல்கள். அல்லி அரசாணிமாலை, அம்மானைப்பாடல், பள்ளுப் பாடல்கள் போன்ற எளிமையான பாடல்களும் அவரின் உள்ளங் கவர்ந்தவைகளே எனலாம்.

## பாராட்டு

**சைவம் தழைக்கத் தமிழ்தழைக்கப் பண்பாட்டின்**
**மெய்மை தழைத்து விரிந்தோங்கப்–பொய்மையெலாம்**
**தாம்அகல வந்தான் சடைமுடிமேல் திங்களான்**
**நாமம் டி.கே.சி. எனக் கொண்டு**

என்ற பாடலின்[17] மூலம் டி.கே.சி. அவர்களின் சமயப் பணியையும் அறிய முடிகிறது. அவரைப் பாராட்டிய சான்றோர்களின் வாழ்த்துரைகளை இனிப் பார்ப்போம்.

திருக்கோவிலூர் ஞானியார் சுவாமிகள் சமயக்கலையின் உன்னத நிலைகளை அறிந்த 'உத்தம ஒளி'யென்றும், 'கல்விக்கடல்' என்றும் பலரால் பாராட்டப்பட்டவர். 1926ஆம் ஆண்டு கன்னியாகுமரி சத்திரத்தில் தங்கியிருந்த போது நண்பர்களோடு தமிழ்ப்பாடல்களைப் பாடிக்கேட்ட அடுத்த அறையில் இருந்த சந்நியாசி டி.கே.சி.யிடம் வந்து தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டு கீழ்வருமாறு பாராட்டினார்.

> நீங்கள் ஐந்து நாட்களாக நண்பர்களிடம் எடுத்துச் சொன்ன கவிமணிகளையும், கவிகளைச் சமாதி நிலையில் இருந்து தன்னைமறந்த ஆனந்த தத்துவத்தோடு நீங்கள் அனுபவிப்பதையும், உங்கள்அனுபவ நிலைக்கு மற்றவர்களை அழைத்துப் போவதையும் கண்குளிரப் பார்த்தேன். காது குளிரக்கேட்டேன். . . இறையருளே எனக்குக் கிட்டி விட்டது. நீங்கள் ஞானபீடமாக இருந்து அன்பர்களுக்குத் தொடர்ந்து கவிகளின் மூலம் இந்தத் தெய்வத் திருப்பணியைத் தொடர்ந்து நடத்தி வரவேண்டும்.

என்று வாழ்த்தினார்.

1933ஆம் ஆண்டு ஸ்ரீராமகிருஷ்ணமடத்தில் (மயிலாப்பூர்) நிலையாமையைப் பற்றி டி.கே.சி. பேச, "இன்று தான் எனக்குச் சமய ஞானமும், ஆனந்தமும் கிட்டியது'' என்று சொல்லிக்கொண்டே சாமியார் தாரைதாரையாய்க் கண்ணீர் விட்டு அழுதார். இந்துமதத் தலைவர்களும் இஸ்லாமிய, கிறித்தவத் தலைவர்களும் இவர் பேச்சில் மயங்கினர். மேலும் நான்குநேரி வானமாமலை ஜீயர் சுவாமிகள், போன்றவர்கள் டி.கே.சி. அவர்களை மனமாரப் பாராட்டினர்.[18]

### தமிழைக் காத்தவர்கள்

பழைய காலத்தில் அதாவது நாற்பது ஐம்பது வருடங்களுக்கு முன் ஆங்கிலப் படிப்பு இவ்வளவு அதிகமாக

நம்முடைய நாட்டில் இல்லை. பட்டிதோறும், சிற்றூர் தோறும் ஆங்கிலப் பள்ளிகள் நிறுவப்பெறாத காலம் அது. ஆகவே கிராமங்கள் பூர்வீகமான பண்பை விடாமற் காத்துவர முடிந்தது. ஒவ்வொரு ஊரிலும் சாவடி ஒன்றிருக்கும். அதில் கம்பராமாயணம், திருவிளையாடற் புராணம் முதலிய தமிழ் நூல்களை மாதக்கணக்கில் மக்களுக்கு எடுத்துச் சொல்லிப் பௌராணிகர் விளக்குவார். கவிகளை இசையோடும், தாளக் கட்டோடும் பாடி, கவிகளுக்குரிய பொருளைக் கேட்போர் உள்ளத்தில் பதியுமாறு விளக்குவார். இனி, ஆரம்பப் பள்ளிகள்தான் அந்தக் காலத்தில் அதிகம். குழந்தைகள் கும்மி, கோலாட்டம் முதலிய கலைகளைப் பயின்று வந்தார்கள். மந்தை நாடகம் என்று ஊர்தோறும் நாடகம் நடைபெறுவதும் உண்டு. இப்படியாக இசையும், கூத்தும், கவிப்பாங்கும் தமிழ்நாட்டில் அழிந்து போகா வண்ணம் கிராமங்கள் தோறும் ஆங்கிலப் படிப்பிற்கு இரையாகாத மக்கள் காப்பாற்றி வந்தனர் என்று கிராம மக்களே தமிழைக் காப்பாற்றுகிறார்கள் என்று டி.கே.சி. அவர்கள் பாராட்டுகிறார். ஆனால் 1927 முதல் 1930 வரை மேல்சபை உறுப்பினராக இருந்த டி.கே.சி. சட்டசபையையே தமிழ்ச் சங்கமாக மாற்றிவிட்டார்கள் என்று சொல்லலாம் என்று சான்றோர்கள் டி.கே.சி.யைப் பாராட்டினர்.[19] தமிழால் அவருக்கும் டி.கே.சியால் தமிழுக்கும் என்றும் பெருமை உண்டு எனலாம்.

### டி.கே.சி.யின் பண்புகள் (அருள் உள்ளம்)

டி.கே.சி.யின் தமையனார் குமாரர் டி.கே.சி. பால் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். டி.கே.சி. நீதிபதியவர்களைப் பார்த்து, நான் வழக்குத் தொடர்ந்தவரிடமே என் சொத்துக்களைத் தந்து விடுகிறேன். தேவையானதை எடுத்துக்கொண்டு மீதத்தை எனக்குக் கொடுத்தால் போதும் என்றாராம். இருபதாம் நூற்றாண்டில் இப்படியும் ஒரு தருமசீலர் என்று வியந்தனராம்.

டி.கே.சி. அவர்களை ஒரு வாலிபர் ஏமாற்ற நினைத்து வீட்டிற்குள் நுழைந்தாராம். இவர் ஏமாற்ற வந்திருக்கிறார் என்று உணர்ந்தும் அவருக்கு 25 ரூபாய் தந்து இரயிலேற்றி விட்டாராம். அவரது காரியதரிசி கேட்டதற்குக் கீழ்வருமாறு டி.கே.சி. பதிலளித்தாராம்.

> "நான் இருபத்தைந்து ரூபாய் கொடுத்துவிட்டால் இப்பொழுதே ஆசாமி ரயிலேறி விடுவார். இல்லாவிட்டால் குற்றாலத்தில் உள்ள ஒவ்வொருவரையும் துன்பப்படுத்தி இருப்பாரே! என்றார்"[20]

இந்நிகழ்ச்சியின் மூலம் அன்னாரின் அருளுணர்வு புலப்படுகிறது.

## பெண்ணை மதிக்கும் பேராளர்

"இரும்புக்கும் பிச்சிப்பூவுக்கும் உள்ள வேறுபாட்டைவிட அதிகம் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள இதயப்பாங்கு" என்கிறார் டி.கே.சி.

### சமையல் கலை

உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போது திருச்சி மலைக்கோட்டையில் 'பாப்பம்மாள்' என்ற பெண் பட்ட துன்பங்களைக் கண்டு நெக்குருகி நின்றார். பாப்பம்மாளைப் பற்றி டி.கே.சி. "அற்புதமான ஒரு இதிகாச பாத்திரம் பாப்பம்மாள்" என்று கூறுவார்.[21]

### பரதக் கலை

பாலசரஸ்வதி அவர்களின் பரதக்கலையைக் கண்டுணர்ந்த டி.கே.சி. அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்.

> கலை என்றால் அது பெண்களுக்கு உரியது. அதை வளர்க்கக் கூடியவர்களும் பெண்களே. காரணம்: அவர்கள் உணர்ச்சிவயப்பட மாட்டார்கள். எதைச் சொன்னாலும் உணர்ச்சியோடு நோக்குகிறார்கள். . . அவர்களுக்குக் கவிதை, கலை முதலிய விஷயங்களைப் பற்றிச் சொல்வது எவ்வளவோ எளிதானதாயிருக்கிறது.[22]

என்ற வரிகளின் மூலம் பெண்களின் அறிவுத்திறமையைப் பாராட்டும் டி.கே.சி. அவர்களின் உயரிய பண்பு நலனை உணர முடிகிறது.

### தீமைக்குத் தீ

'டி.கே.சி. அவர்கள் சாமானியமான பாடல்களைக் கொஞ்சங்கூடத் தயை தாட்சண்யம் இல்லாமல் ஒதுக்கி

விடுவார்கள். ஏதாவது ஒரு நூல் "பயனற்றது கலை வளர்ச்சிக்குத் தீங்கு பயப்பது" என்று தோன்றினால் அசோகவனத்தில் அனுமார் கையாண்ட முறையை உபயோகிக்கத்தயங்க மாட்டார்கள் என்று இதய ஒலி என்ற நூலின் முன்னுரையில் சின்ன அண்ணாமலை அவர்கள் குறிப்பிடுவதை இங்கு நினைவுகூர்வோம்.

டி.கே.சி. அவர்கள் கவிநயஞ் சிறக்கப் பல பாடல்களைத் திருத்தி உள்ளார். எடுத்துக்காட்டாகக் கீழ்வரும் பாடலைச் சுட்டலாம். பழைய வடிவம் :

**எய்ய வந்த காமா! நீ இங்கு வரவேண்டாம் காண்**
**உய்ய வந்தா னோ(டு) உறவானேன் –பையவே**
**தேரைவிடு பூவைமுடி, தின்றுவிடு, வெண்கரும்பை**
**மீனையொரு காசாக வில்**

டி.கே.சி. அவர்களின் புதியவடிவம்:

**எய்யவந்த காமா! இனியுனக்கு வேலையிங்கென்?**
**உய்ய வந்தான் தன்னோடுற வானேன் – பையவே**
**தேரைவிட்டு, மென்கரும்பைத் தின்றுவிட்டுச் செய்யவந்த**
**போரைவிட்டுப் பூமுடித்துப் போ.**

என்று திருத்தம் செய்தார் டி.கே.சி. அவர்கள்.

### தமிழே உயிர்

ஆங்கிலம் கற்ற சிலர் 'சாயத்தைப் பற்றியும் பம்பைப் பற்றியும் ஆங்கிலத்தில் தான் பேசமுடியும்; தமிழில் பேச முடியாது என்று சொல்கிறார்கள். . . மோட்டார் வண்டிகளைப் பழுது பார்க்கும் பட்டறையில் புதிதாக வந்தவனுக்கு அனுபவம் வாய்ந்த ஒருவன் மிகத்திறமையாக அறிவியல் படிப்புப் படித்தவனைவிடத் தெளிவாக எடுத்துச் சொல்கிறான். பாட்டரி, மாக்னடோ, வால்வு என்றெல்லாம் இலத்தீன், கிரீக்கு, பிரெஞ்சு முதலிய பாஷையிலிருந்து கடன் வாங்கிக்கொண்டு விஷயத்தை விளக்குகிறான்.

1936ஆம் ஆண்டு 'இதய ஒலி' என்ற தலைப்பில் டி.கே.சி. அவர்கள் ஒரு கட்டுரை எழுதினார்.

ஒருவர் ஆங்கிலத்தில் பேசும்போது 'ஹியர், ஹியர்' என்று ஆரவாரிக்கிறோமே அந்த ஹியருக்குப் பதிலாகக் 'கேண்மின்'

'தாங்கியூ'வுக்குப் பதிலாக நன்றி, உற்சாகத்தைச் சொல்லும் ஆங்கில வார்த்தையான ஹிப் ஹிப்ஹீரே: என்ற கூச்சலுக்கு 'நாவலோ நாவல்' என்றும் வாழிய என்றும் டி.கே.சி. எடுத்துக் காட்டுகளுடன் விளக்கினார்.

"யானை மேல் நின்றுகொண்டு 'நாவலோ நாவல்' என்று வீரன் சொல்லுவான். சேரன் வீரர் அத்தனைப் பேரும் அதையொட்டி நாவலோ நாவல் என்று ஒலிப்பார்கள். இந்த விதமாக ஒலிப்பதற்கு நாவலித்தல் என்று பெயர். தொண்டரடிப் பொடியாழ்வார் கடவுள் அடியவர்களின் எக்களிப்பை,

**நாவலிட் டுழிதர் கின்றோம்**

**நமன்தமர் தலைகள் மீதே**

என்கிறார்.[23]

## தமிழ்ப்பற்று

'இரவீந்திர நாத் தாகூர் சென்னை வந்தபோது சில உண்மைகளைக் கீழ்வருமாறு தெரிவித்தார்.

> கவியை அனுபவித்து விடுவதற்காக எத்தனையோ பாஷைகளைக் கற்றேன். (பிரெஞ்சு, ஜெர்மன், இலத்தீன், கிரீக்கு) கவியின் இதயம் தெரிந்ததா? இல்லவே இல்லை. என் தாய்மொழி ஒன்றின் மூலமாகத்தான் எனக்கு அது தெரிய வந்தது. மேலும், "ஒரு தேசத்தாருடைய நாகரிகத்துக்கும் பாஷைக்கும் விரோதிகளாய் இருப்பவர் பொதுவாக அந்தத்தேசத்தை அழிக்கப் பார்க்கும் அக்கம் பக்கத்திலுள்ள தேசத்தார்தான். கொரியா தேசத்தாருக்குச் சொந்தமான நாகரிகமும், பாஷையும் உயர்தர நிலையிலேயே இருந்தன. ஜப்பான் கொரியாவைக் கைப்பற்றினவுடன் கொரியர்கள் ஜப்பானியர்களைப் போலவே எல்லாவிதத்திலும் இருக்க வேண்டும். முக்கியமாக ஜப்பானிய பாஷையைத்தான் கற்க வேண்டும் என்றெல்லாம் கொடுங்கோன்மை நடத்தினார்கள். ஆனால் தமிழ் பாஷைக்கும் தமிழ் நாகரிகத்துக்கும் உலைவைக்க அயல் தேசத்தார் படை எடுத்துவர வேண்டியது

> இல்லை. 'தமிழ்மக்களே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள்[24]

என்று அங்கதச் சுவையோடு விளக்குகிறார் டி.கே.சி.

தமிழர்கள், தமிழ் வாழ, தமிழரை வாழவைக்க முயற்சி செய்ய வில்லையே என்பது டி.கே.சியின் ஆதங்கம் என்பதனை மேற்கண்ட வரிகள் உணர்த்துகின்றன. மேலும் தமிழால் அனைத்தும் முடியும் என்பதும் பெறப்படுகிறது.

## மொழி வளம் பெற

> உலகப் பிரசித்தி பெற்ற கவிச் சக்கரவர்த்தியாகிய ரவீந்தர நாதரும் மக்கள் வழங்கி வரும் பாஷையைக் கையாண்டு வானம் அளந்த பொருள் அத்தனையையும் வங்காளிகள் வியந்து கூத்தாடும்படி எழுதி வருகிறார். . . . கன்னடம், தெலுங்கு, மலையாளம். . . . போன்ற மொழிகளும் மக்கள் வழங்கும் பாஷையில் நூலாசிரியர் எழுதுவதால் வெற்றி அடைகிறார்கள். ஆனால் தமிழில் எழுதுவதும், பேசுவதும் பிறருக்கு விஷயத்தை விளங்கச் செய்வதற்காகத்தான் என்ற நோக்கம் போய், தாங்கள் மனனம் பண்ணின அரும்பத அகராதியைப் புரட்டிப்புரட்டிக் காட்டுகிற பகட்டுத் தொழிலாக மாறிவிட்டது. கையையும் காலையும் முறித்துச் செய்யும் ஹடயோக சாதனந்தான் தமிழில் எழுதுவதும், பேசுவதும் என்று பலரும் அஞ்சி ஓடிப்போய் விடும்படி ஏற்பட்டுவிட்டது

என்று டி.கே.சி. மொழிவளம் பெற வழிவகையையும் உரைக்கிறார்.[25]

## தமிழால் முடியும்

எல்லாம் தமிழில் முடியும், தமிழில் சொல்ல முடியாத காரியம் ஒன்றுமே இருக்காது என்ற திடமான கொள்கையுடைய டி.கே.சி. ஒரு வழக்கில் ஆஜர் ஆனார். இவரும் அப்போது ஒரு கமிஷனர். ஆம்! இந்துமத தரும ஸ்தாபன பரிபாலன சபையின் கமிஷனர்தான். டி.கே.சி.க்கோ இந்தப் பிரச்சினை எளிதில் தீர்க்கக்கூடியதாய்ப் பட்டது. 'அறிவியற் கலைகளை அதாவது

சயன்சைத் தமிழர்களாகிய நாம் அறிய வேண்டும் என்பதுதான் முக்கியமே ஒழிய, தமிழ்ச் சங்கேதச் சொற்கள் மூலம்தான் சொல்லித்தெரிந்து கொள்ள வேண்டும் என்பதில்லை. இதற்காக, தமிழ்ச்சங்கேதச் சொற்களை உற்பத்தி செய்து வீண் காலம் போக்குவது அவசியமில்லை. விஷயத்தை நேர்முகமாய் விளக்க ஆங்கிலச் சொற்களையே உபயோகித்தல் குற்றமில்லை. விளக்கம் மட்டும்தான் தமிழில் இருக்க வேண்டும் என்ற எண்ணமுடையவர் டி.கே.சி. கமிஷன் அங்கத்தினர் ஒரு வெள்ளைக்காரருக்கும் டி.கே.சி. அவர்களுக்கும் நடந்த வாக்குவாதத்தின் மூலம் தமிழால் அனைத்தும் முடியும் என்பதனைச் சான்றுகளுடன் நிறுவிக்காட்டினார்.

### தமிழ் வசனம் பற்றி

> தமிழில் மொழி தோன்றிய நாளிலிருந்தே வசனம் உண்டென்று சொல்லவேண்டும். பாஷை என்றால் மக்கள் உள்ளத்தில் நிகழ்வதை வெளிப் படுத்துவதுதான். கோபமோ, ஆத்திரமோ, சோகமோ, கருணையோ மனதில் உண்டானால் அதை அப்படியே வாய்திறந்து மனிதன் சொல்லி விடுகிறான். அவ்வாறு சொல்வதே வசனம்[26]

என்கிறார் டிகே.சி.

### தமிழிசை பற்றி

> பதங்களை உயர்ந்த பாவ உருவத்துக்காக - தெய்வத் தன்மை வாய்ந்தது என்று அனுபவிக்கிறேன். பக்தி உணர்ச்சியோடு கிளிக்கண்ணி, சித்தர் பாடல், காவடிச் சிந்து முதலியவைகளைப் பாடினாலும் பரவசம் அடையத்தான் செய்கிறேன். ஆனால் சங்கதி, சங்கதி என்ற சுரங்களைக் கொண்டு கீச்சுக் கீச்சுத் தாம்பளம் விளையாடுகிறதை ரொம்ப அனுபவித்துவிட முடியாது.

என்று தமிழிசையைப் பற்றி விளக்குகிறார் டிகே.சி. [27]

### தமிழ்த்தொண்டு

சிலப்பதிகாரக் கானல்வரி, வேட்டுவவரி ஆகியவை வரிப் பாடல்கள். ஆனால் தெலுங்குப் பாடல்களே தமிழ்க் கச்சேரிகளில்

இடம்பெற்றுள்ளன. இதனைக் கண்டு நெஞ்சம் குமுறினார் டி.கே.சி. அவர்கள்.

> எனக்குச் சங்கீத ஞானம் கிடையாது என்று பாகவதர்கள் வேண்டுமானால் சொல்லிக் கொள்ளட்டும். நான் ஆடம்பரமான வெற்றொலியிலே மயங்கிவிட மாட்டேன். பாடுகின்ற பாட்டின் பொருள் பாடுகிறவர்களுக்கும் தெரிய வேண்டும். கேட்கிறவர்களுக்கும் தெரிய வேண்டும். அப்போது தான் பாட்டிலே வருகிற பாவம் தெரியும். பாட்டையும் கேட்பவர்கள் அனுபவிக்க முடியும்

என்கிறார். டி.கே.சி. அவர்களின் கருத்துக்கு ஆதரவாக ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் தமிழிசைக்குப் பதினாயிரக் கணக்கான பரிசுகளை வழங்கித் தமிழிசையை வளர்த்தார். 1941ஆம் ஆண்டு டி.கே.சி. தலைமையில் தேவக்கோட்டையில் தமிழிசை மாநாடு ஒன்று நடந்தது. அன்று செம்பை 'வைத்தியநாத பாகவதர்' தமிழிசை இயக்கத்தில் கலந்து கொண்டார். இன்று தமிழிசை உச்சக் கட்டத்தில் இருப்பதற்குக் காரணம் டி.கே.சி. அவர்களே என்றால் மிகையல்ல.

### பரதக்கலை

1928ஆம் ஆண்டு டி.கே.சி. சென்னையில் இந்துமதப் பரிபாலன போர்டின் கமிஷனராக இருந்த போது பாலசரஸ்வதியின் ஆட்டத்தைக் காணநேர்ந்தது. பாலசரஸ்வதியை மனமாரப் பாராட்டியதோடு மட்டுமில்லாமல் 1935ஆம் ஆண்டு திருநெல்வேலியில் நடந்த திருமணத்தில் அவர்களை நடனமாட வைத்தார். அன்று மாலையே 'வட்டத்தொட்டி' அங்கத்தினர்களை அழைத்து வந்து பாலசரஸ்வதியின் நடனத்தைக் கண்டு களிக்க ஏற்பாடு செய்ததோடு பல இடங்களிலும் பாலசரஸ்வதி அவர்கள் நடனமாடிப் பரதக்கலையை வளர்க்க ஏற்பாடுகளும் செய்துதந்தார்.[28]

### சமய அறிவு

சமயத்தை மக்களிடம் பரப்புவது மிகவும் கடினமான ஒன்றாகும். குறிப்பாக இறைவனின் பெருமைகளை விளக்குவது

அரிதான செயலாகும். சமய அறிவு மிகுந்த டி.கே.சி. அவர்களுக்குச் சமயப்பணி செய்யும் வாய்ப்பும் கிட்டியது.

## சமயப்பணி

1930ஆம் ஆண்டு முதல் 1935ஆம் ஆண்டு முடிய டி.கே.சி. அவர்கள் சென்னை மாகாண இந்து அறநிலையப் பாதுகாப்புக் கமிஷனர் பதவி வகித்து வந்தார்.

டி.கே.சி. அவர்கள் ஒவ்வொரு கோயிலுக்கும் (சுற்றுப்பயணம்) சென்று அங்குள்ள நிருவாக முறை, விழாக்கள் நடத்தும் முறை, மற்றும் பல முக்கிய நிகழ்வுகளை நேரில் கண்டு அவர்கள்தம் குறைகளையும் தீர்த்தார்.

டி.கே.சி. அவர்களுக்கு ஆங்காங்குப் பாராட்டு விழா நடைபெறும்போது, அவ்விழாவில் தமிழ், தமிழ் மொழியின் சிறப்பு, கலைகளின் சிறப்பு ஆகியவைகளை விளக்குவார்.

துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு, எளிமையாகத் தேர்வடத்தைப் பலமுறை இழுத்து ஆனந்தம் அடைந்தார். சமபந்தி உணவு பரிமாறும் முறையையும் முதன் முதலில் ஏற்படுத்தியவர் டி.கே.சி.யே.

> சமயத்தில் இரண்டு உண்மைகளைக் கவனிக்க வேண்டும். ஒன்று தத்துவ உண்மை. அதாவது கடவுள் இறுதி அல்லாத இடம் எங்கும் பரவி நிற்கிறான். உயிர் உள்ளன, உயிர் இல்லாதன ஆகிய எல்லாப் பொருள்களிலும் நின்று ஆட்டுகிறான். இந்த உண்மையில் திளைத்து ஆனந்திப்பது ஒருபுறம் இருக்க வழிபாட்டுக்குரிய உருவத்தில் ஈடுபட்டுப் பேரானந்தம் கொள்ளுகிறது சமயத்தின் மற்றைய முடிவான உண்மை

என்கிறார் டி.கே.சி.

## ஆன்மிகமும் அறிவியலும்

கம்பராமாயணம், முத்தொள்ளாயிரம் ஆகிய இலக்கியங்களில் வரும் கடவுள் தத்துவப் பாடல்களை டி.கே.சி. அறிவியல் பூர்வமாகவும் விளக்குவார். பேரா. ஐன்ஸ்டீனுடைய தத்துவங்களை நன்குணர்ந்த டி.கே.சி. தமிழ்ப் பாசுரங்களில்

அறிவியலையும் கலந்து விளக்குவார். திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் ஆதினங்களில் டி.கே.சி. அவர்கள் பலமுறை சமய, பண்பாடு குறித்துப் பேசியுள்ளார்.

## கலைப்பணி

டி.கே.சி. அவர்கள் இப்படியாகத் தமிழை, தமிழ்ப் பண்பாட்டை, கலைகளை, கவியை, கலைஞர்களைத் தாய்போல ஆதரித்துக் காப்பாற்றி, மக்கள் யாவரும் அநுபவிக்கச் செய்தார்கள். டி.கே.சி.யைக் கலைக்கோயில் என்றும், உண்மைக் கலைகள் அவ்வளவையும் எல்லாருக்கும் விளக்கிக் காட்டும் பல்கலைக் கழகம் என்றும் பெரிய பெரிய அறிஞர்கள் பாராட்டியது எவ்வளவு உண்மை.

டி.கே.சி.யாகிய பல்கலைக் கழகம் இருந்த இடத்தில் இருப்பதோடு இந்தியா முழுவதையும் இரயிலிலும், காரிலும், விமானத்திலும் சுற்றி வந்திருக்கிறது. அதாவது, டி.கே.சி. அடிக்கடிப் பிரயாணம் செய்துகொண்டிருப்பார்கள். அவர்கள் பிரயாணம் செய்யும் பொழுதும் சுற்றி உள்ள அன்பர்களிடம் கலைகளையும், பண்பாட்டையும் தமிழ்க் கவிகளிலிருந்து எடுத்து விளக்கிப் பாடிப் பாடி யாவரையும் அனுபவிக்கச் செய்வார்கள் என்று வித்வான் ல. சண்முகசுந்தரம் டி.கே.சி. அவர்களின் தமிழ்ப் பயணத்தைப் பற்றிச் சுட்டுகின்றார்.[29]

## இலக்கியப்பணி

கனம் இராஜாஜி வங்காள மாநிலக் கவர்னராக இருந்தபொழுதும், இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்தபொழுதும், டி.கே.சி.யை அரசாங்க விருந்தினராக வரவேற்றுப் பல நாட்கள் டி.கே.சி.யிடம் தமிழ்க் கவிகளைக் கேட்டு இன்புற்றார்கள்.

கடந்த இருபது வருடங்களாக இராஜாஜி அடிக்கடி குற்றாலம் வந்து டி.கே.சி.யுடன் அளவளாவி டி.கே.சி. சொல்கிற கவிகளையும், விளக்கங்களையும் கேட்டு மகிழ்ந்தார்கள். இப்படியாகப் பல பெரியோர்களை அரசியல் போன்ற வேறு வேறு துறைகளிலிருந்து தலைவர்களைத் தமிழை நுகர்ந்து திளைக்கும்படிச் செய்தவர்கள் டி.கே.சி. உயர்திரு ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள் சென்னை மாநில முதன்

மந்திரியாக இருந்த காலத்து அடிக்கடி டி.கே.சி. தங்கி இருக்கும் இடம் நாடி வந்து அன்போடு பாடல்கள் பாடச் சொல்லிக் கேட்டு அகமகிழ்வார்கள்.

குடத்து விளக்குப் போன்று அடக்கமாய் இருந்த தமிழ் உலகில் யாருமே அறியாத கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களை வெளிக்கொண்டு வந்து அவர்கள் பாடிய பாடல்களை எல்லோரும் அனுபவிக்கச் செய்தது டி.கே.சி. அல்லவா? எழுத்தாளர் ஆர். கிருஷ்ணமூர்த்தி, மீ.ப. சோமசுந்தரம், நடனமணி பாலசரஸ்வதி, இசைமணி எம்.எஸ். சுப்புலட்சுமி, பிருந்தா முதலிய எத்தனையோ பேர்களை எத்தனையோ காலமாக மக்களுக்கு அறிமுகப்படுத்தி, தமிழ் மக்கள் அவர்கள் பெருமையை உணர்ந்து அனுபவிக்கும்படிச் செய்த அற்புதம் முழுக்க முழுக்க டி.கே.சி.யைச் சார்ந்ததல்லவா.[30]

## கல்கி

> கல்கி அவர்கள் ஆனந்தவிகடனின் ஆசிரியரானார். கல்கி என்ற பெயரின் கீழ் என்ன கட்டுரை வந்தாலும், என்ன கதை வந்தாலும் யாரும் வாசியாமல் விடுவதில்லை. . . . அரசியல் விஷயமாகப் பத்திரிகை உலகத்தில் ஜாம்பவான்களே திணறும்படியாகவும், வியக்கும்படியாகவும் தலையங்கங்கள் வெளிவந்தன. . . . அரசியலோ, சமூக சீர்திருத்தமோ, சமயத்திருத்தமோ ஏதானாலும் சரி - உண்மைகளைப் பீரங்கிக் குண்டுகளைப்போல் வீசி எறிந்தன. அக்கினிச் சுவாலைகளைக் கக்கின. மக்கள் மனதில் இறுகிக் கிடந்த மூடநம்பிக்கைகளைத் தகர்த்து, இருளையும் ஓட்டிவிட ஆரம்பித்தன

என்று கல்கியின் எழுத்து வன்மையைப் பாராட்டுகிறார் டி.கே.சி. அவர்கள்.

## நாட்டுப்பணி

ஸ்ரீமான் ரெட்டியார் அவர்களும், டி.கே.சி.யும் 1927ஆம் ஆண்டு சென்னை மேல்சபை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அப்போதும் டி.கே.சி. அவர்கள் கம்பராமாயணப் பாடல்களைச் சொல்லி விளக்க அவரை

ஆந்திரத்தைச் சார்ந்த உறுப்பினர் "கங்கைக் கரையுடையான்" என்று இருகை கூப்பி வரவேற்பார்.[31]

வழக்கறிஞர் வி.வி. சீனிவாச ஐயங்கார் டி.கே.சி. அவர்களை வீட்டிற்கு வரவழைத்துக் கம்பராமாயணம் நடத்துமாறு வேண்டுகோள் விடுத்து அவர்தம் விளக்கத்தில் மெய்மறந்து போவார்.

> எந்தவிதத்திலும் வார்த்தைகளைக் கொண்டு புலப்படுத்த முடியாத உண்மைகளை உணர்ச்சி பாவங்களின் உன்னத நிலைகளை முதலியார் அவர்கள் எல்லோரும் அனுபவிக்க விளக்கி விடுகிறார். இத்தகைய மந்திரசக்தி முதலியாருக்கு எப்படிக் கிட்டியது என்பதை நினைக்க நினைக்க எனக்கு அதிசயமாக இருக்கிறது. அதுவே எனக்கு ஆனந்தமாகவும் இருக்கிறது.

என்று டி.கே.சி.யைச் சீனிவாச ஐயங்கார் பாராட்டினார்.[32] நாட்டுப் பணியுடனும் இலக்கியப் பணியை இணைத்துக் கொண்டவர் டி.கே.சி. என்றால் மிகையாகாது.

## பாரதியும் டி.கே.சியும்

சென்னையில் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தபோது மகாகவி பாரதியிடம் தொடர்பு ஏற்பட்டது. அடிக்கடிப் பாரதியார் டி.கே.சி. தங்கியிருக்கும் இடத்திற்கு வந்து தாம் எழுதிய பாடல்களைப் பாடிக் காட்டுவார். சில இடங்களில் புரியாத, ஒட்டாத, தாளத்தோடு முரண்படுகிற இடங்களை டி.கே.சி. சுட்டிக்காட்டப் பாரதியார் டி.கே.சி.யின் கவிதை ஞானத்தைப் புகழ்ந்துகொண்டே திருத்தம் செய்து கொள்வதுமுண்டு.[33]

## டி.கே.சி. மதிக்கும் கவிமணி

> கவி என்றால் இன்னது என்று சொல்வதற்கு இலக்கணம் கிடையாது. . . . தேசிக விநாயகம்பிள்ளை அவர்களின் பாடல்கள் தமிழ் மக்களுக்குக் கிடைத்த பெருஞ்செல்வம். அரிய செல்வம், தெவிட்டாத அமிர்தம். தமிழ் உலகம் பிள்ளையவர்களுக்கு ரொம்பவும் கடமைப் பட்டுள்ளது

என்று வசந்தத்தில் எழுதியுள்ளார் டி.கே.சி.[34]

## முடிவுரை

1. டிகே.சி. அவர்கள் மனித நேயம் மிக்கவர்; தமிழ்ப் பற்றாளர் என்பது பெறப்படுகிறது.

2. இலக்கியப்பணி, சமயப்பணி, நாட்டுப்பணி மூன்றையும் செவ்வனே ஆற்றியவர் என்பதும் அவர்தம் வாழ்க்கை வரலாற்றின் மூலம் உணர முடிகிறது.

3. தமிழ், ஆங்கிலம், இரண்டிலும் புலமையுடையவர் என்பதனையும், பல்துறையறிவுடையவர் (வரலாறு, இலக்கியம், சமயம், அறிவியல்) என்பதனையும் இக்கட்டுரை மூலம் அறியலாம்.

4. பாடல்களை விளக்கும்போது, சமயம், அறிவியல், மருத்துவம், வரலாறு, தாவரவியல், மனஇயல் போன்ற பல்வேறு துறைகளிலிருந்து ஒப்பிட்டுக் காட்டுவதால் இவரோர் சிறந்த ஒப்பியலறிஞர் எனலாம்.

5. டிகே.சி. அவர்கள் ஒரு கலைக்கோயில், பல்கலைக்கழகம்.

## அடிக்குறிப்புகள்

1. டிகே.சி. வரலாறு, வித்வான் ல. சண்முகசுந்தரம்; ப. 12.
2. மேலது; ப. 23.
3. மேலது; ப. 44.
4. ரசிகமணி டி.கே.சி., தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்; ப.47-51.
5. மேலது., தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் ; ப.53.
6. டிகே.சி. வரலாறு, வித்வான் ல. சண்முகசுந்தரம், ப. 81.
7. மேலது, ப. 9.
8. மேலது, பக்14-15.
9. ரசிகமணி டி.கே.சி. தொ.மு. பாஸ்கரத்தொண்டைமான், பக்71-73.

10. இதய ஒலி, டி.கே.சி., பக்.52, 54, 60.
11. மேலது, பக்.13-15, 61.
12. ரசிகமணி டி.கே.சி., தொ.மு. பாஸ்கரத்தொண்டைமான், பக்.110-112.
13. ரசிகமணி டி.கே.சி., தொ.மு. பாஸ்கரத்தொண்டைமான், பக்.148-149.
14. இதய ஒலி, டி.கே.சி., பக். 6, 17, 66-69, 80, 176.
15. ரசிகமணி டி.கே.சி., தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான், பக். 16-27.
16. மேலது, பக்.116-117.
17. டி.கே.சி. வரலாறு, வித்வான் ல. சண்முகசுந்தரம், ப.100.
18. மேலது, பக்.59-60.
19. மேலது, பக்.34, 52.
20. மேலது , பக்.82-83.
21. மேலது, ப. 20.
22. ரசிகமணி டி.கே.சி. தொ.மு. பாஸ்கரத்தொண்டைமான், பக். 107-108.
23. இதய ஒலி, டி.கே.சி., பக். 206-207, 38, 49.
24. மேலது, டி.கே.சி., பக். 24, 27.
25. டி.கே.சி. நினைவில் இலக்கிய ரசனைக் கட்டுரைகள் (தொகு. ஆ) எஸ்.வி.எஸ்., பக். 12, 15.
26. ரசிகமணி டி.கே.சி. தொ.மு. பாஸ்கரத்தொண்டைமான், பக். 86-92, 94.
27. டி.கே.சி. வரலாறு, வித்வான் ல. சண்முகசுந்தரம், பக். 69.
28. ரசிகமணி டி.கே.சி. தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், பக். 102-107.
29. டி.கே.சி. வரலாறு, வித்வான் ல. சண்முகசுந்தரம், பக். 57, 92.
30. மேலது, பக். 92-93.

31. **டி.கே.சி. நினைவில் இலக்கிய ரசனைக் கட்டுரைகள்,** (தொ.ஆ.) எஸ்.வி. எஸ், ப. 19.

32. **டி.கே.சி. வரலாறு,** வித்வான் ல. சண்முகசுந்தரம், ப. 53.

33. **ரசிகமணி டி.கே.சி.** தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், பக். 141-152.

34. **டி.கே.சி. வரலாறு,** வித்வான் ல. சண்முகசுந்தரம், பக். 27, 147.

# அறிஞர் பார்வையில் டி.கே.சி.

இலக்கியங்களைக் கற்பதிலும், சுவைப்பதிலும் அறிஞர்கள் பலருக்கும் ஈடுபாடுண்டு. அவர்களுள்ளும் டி.கே.சி.யின் இலக்கிய ஈடுபாடு மற்றவர்களைக் காட்டிலும் வேறுபட்டது. இலக்கியத்தைத் தான் இரசித்ததோடு நின்று விடாமல் பிறரையும் இரசிக்கத் தூண்டியவர். இலக்கியத்தை அனுபவிப்பதிலும் இவர் தனிப்பட்ட ஓர் அணுகுமுறையைக் கையாண்டார். இவர்தம் இலக்கிய அணுகுமுறையைப் பலரும் பல்வேறு விதங்களில் புகழ்ந்துள்ளனர். அவர்களது புகழ்ச்சி எந்த அளவிற்கு உண்மையானது என்பது, கம்பர் தரும் ராமாயணம் எனும் அவரது பதிப்பை ஆதாரமாகக் கொண்டு இக்கட்டுரையில் எடுத்துக்காட்டப்படுகிறது.

20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சங்க இலக்கியங்களும் காப்பியங்களும் பக்தி நூல்களும் சிற்றிலக்கியங்களும் ஏட்டுச் சுவடிகளிலிருந்து அச்சுக்குக் கொண்டுவரப்பட்டன. பலரும் பல்வேறு இலக்கியங்களைப் பதிப்பிக்க முன்வந்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் டி.கே.சி. ஓலைச்சுவடிகளிலிருந்து அச்சு முறைக்கு மாற்றிய அறிஞர்கள் பலரும் இலக்கியங்களைப் பாவகை மாறாமல் அப்படியே பதிப்பித்தனர். இதனால் பாடல்களைப் பிரித்து வாசிப்பதில் தமிழ் ஆர்வலர்களுக்குக் கடினமாக இருந்தது. மேலும் இந்நூல்களுக்குச் சான்றோர்கள் பலர் விளக்கவுரையும், பொருளும், இலக்கணக் குறிப்புகளும் தந்து நூல்களாக வெளியிட்டனர். இத்தகைய நூல்களுள் நூலைப் பதிப்பவருடைய நுண்மாண் நுழைபுலம் வெளிப்படுவதாகவே இருந்தது. கற்பவர்கள் மட்டுமே அறிந்து கொள்ளக்கூடிய நிலையில் இலக்கியங்களும் அவற்றின் விளக்கவுரைகளும் இருந்தன. எனவே தமிழ் இலக்கியங்கள் பாமர மக்களைச் சென்று அடையவில்லை. இந்நிலையைக் கண்ட அறிஞர் டி.கே.சி. தமிழ் இலக்கியங்கள் பாமரனுக்கும் புரியும் வகையில் இருக்க வேண்டும் எனக் கருதினார். அவருடைய இவ்வெண்ணத்தைக் கம்பர் தரும் ராமாயணம் வெளிப்படுத்துகிறது எனலாம்.

கல்கி வார இதழ் 1941 முதல் வெளிவந்தது. இவ்விதழின் முதல் வெளியீட்டில் தொடங்கி, சுமார் 10 ஆண்டுகள் "கம்பர் தரும் காட்சி" என்ற தலைப்பில் ரசிகமணி டி.கே.சி. அவர்கள் இராமாயணக் கட்டுரைகளை எழுதி வந்தார். இக்கட்டுரைகளைத் தொகுத்து நூல் வடிவம் தந்ததோடு அதற்குரிய வெளியீட்டு விழாவும் 1953 அக். 31 அன்று குற்றாலத்தில் கொண்டாடப் பட்டது. "கம்பர் தரும் காட்சி" என்ற கட்டுரையின் தலைப்பு நூலாக்கத்தில் கம்பர் தரும் ராமாயணம் என மாற்றப்பட்டது. இதன் முதல் பாகம் பால காண்டமும் அயோத்தியா காண்டமும் இணைந்ததாகும். இந்நூலின் சிறப்பினைஅமரர் கல்கி அவர்கள்,

> "கம்பர் தரும் ராமாயணம்" எனும் கலைப் பொக்கிஷம் கிடைத்தது. ஒரு நாள் பால காண்டமும், இன்னொரு நாள் அயோத்தியா காண்டமும் ஒரே மூச்சில் படித்து முடித்தேன். வாழ்நாளெல்லாம் திரும்பத் திரும்பப் படித்துக் கொண்டே இருக்கலாம். வாழ்க்கையை ஆனந்தமாய்க் கழிப்பதற்கு வேறு ஒன்றுமே தேவை இல்லை". (கம்பர் தரும் ராமாயணம் பதிப்புரை, ப.V)

எனப் பாராட்டி டிகே.சிக்குக் கடிதம் எழுதியுள்ளார். இதன்வழி இந்நூலின் சிறப்பினை அறிந்து கொள்ள முடிகிறது. இந்நூலின் புதிய பதிப்பு 14.5.2004 அன்று புதுவைக் கம்பன் விழாவில் வெளியிடப்பட்டது.

20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்த தமிழ்ச்சான்றோர்களுள் கம்பராமாயண வாசர்களின் பெருமதிப்பைப் பெற்றவர் ரசிகமணி டி.கே.சி. ஆவார். கம்பரது பாடல்களில் மனம் ஒன்றி, அப்பாடல்களின் தரத்தினைக் கணக்கிட்டு, கம்பரது பாடல்கள் என அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்களின் தொகுப்பே கம்பர் தரும் ராமாயணமாகும். இந்நூலையும், இதய ஒலி, அற்புதரசம், முத்தொள்ளாயிரம், நந்திக் கலம்பகம் போன்ற இவரது நூல்களையும் கற்ற சான்றோர்கள் டி.கே.சி.யைப் பலவாறாகப் பாராட்டியுள்ளனர். இப்பாராட்டுரைகள் 1.கம்பராமாயண ஆய்வும் சுவையும் மக்களைச் சென்றடையக் காரணமானவர், 2.கவிதாரசனையுள்ளவர், 3.அளவை நோக்கின்றி அனுபவநோக்கில் இலக்கியத்தை இரசித்தவர், 4.உருவவியல்

திறனாய்வாளர், 5. மாந்தருள் ஓர் அன்னப்பறவை எனும் ஐந்து தலைப்புகளில் இங்கே ஆராயப்படுகின்றன.

### 1. கம்பராமாயண ஆய்வும் சுவையும் மக்களைச் சென்றடையக் காரணமானவர்

**கம்பர் தரும் ராமாயணம்** என்ற இந்நூலின் அமைப்பும், பாடல்களை வரிசைப் படுத்தித் தருவதில் அவர் கையாளுகின்ற உத்தியும் கம்பராமாயணம் பாமரர்களுக்கும் பயனுள்ளதாக இருக்க வேண்டும் என்ற அவரின் எண்ணத்தைப் புலப்படுத்துகின்றன.

கம்பர் எழுதிய இராமாயணப் பாடல்களுக்கு உரை தந்தவர்கள் பலர். அவர்கள் கவிதையின் பொருளுக்கு முக்கியத்துவம் தந்து விளக்கிச் சென்றனர். இன்னும் சிலர் கம்பராமாயணப் பாடலில் இடம்பெற்றுள்ள பிற இலக்கியச் சாயல்களைக் கண்டறிந்து விளக்கினர். மேலும் சிலர் அப்பாடல்களில் காணப்படும் சொற்களுக்கு விளக்கமும் இலக்கணக் குறிப்பும் தந்துள்ளனர். சான்றாக, தமிழ்ப் பெரும் புலவர் முதுபெருங்கவி வெ.ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் "கம்பராமாயண சாரம்" என்ற நூலைத் தந்துள்ளார். இந்நூலில் ஒவ்வொரு பாடலுக்கும் தலைப்புக் கொடுத்து அதன்பின் பாடலைத் தந்து பின் "கொண்டு கூட்டு" என்ற தலைப்பில் பாடலை எவ்வாறு வாசித்துப் பொருள் கொள்ள வேண்டும் எனக் கூறுகிறார். அதன்பின் பொருள் என்ற தலைப்பில் அப்பாடலின் மொத்தக் கருத்தை விளக்கிய பின், சொற்களுக்குப் பொருள் தருகிறார். இறுதியில் அப்பாடலைப் பற்றிய தனது கருத்தைத் தந்துள்ளார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கம்பராமாயணத்திற்கு உரையெழுதும் பெருமுயற்சியை எடுத்தது. அதற்கென ஒரு பதிப்பாசிரியர் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவினர் தந்துள்ள இராமாயண நூலில் முதலில் ஓலைச்சுவடியில் இருப்பது போன்ற பா வகை சிதையா வண்ணம் பாடல் தரப்பட்டுள்ளது. அதன் பின் பொருள்படும் வகைகளில் சீர்கள் பிரிக்கப்பட்டுப் பாடலாகத் தரப்பட்டுள்ளது. பின் பாடலுக்குரிய விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அதனை அடுத்து ஆராய்ச்சியாளர்களின் ஆய்வுக் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. இலக்கணக் குறிப்பு, பிற இலக்கியச்சாயல், சமுதாயக் கருத்துக்கள் போன்றவை

தரப்பட்டுள்ளன.' இவ்விரு நூல்களும் கம்பராமாயணத்தை எவ்வாறு கற்க வேண்டும் என்பதைக் கல்வியாளர்களுக்கு எடுத்துரைத்தன. ஆனால் டி.கே.சி.யின் கம்பராமாயண நூல் பாமரர்களும் படித்துப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்குடனே அமைக்கப்பட்டு உள்ளது எனில் மிகையன்று. இதனை நூலின் அமைப்பைப் பார்ப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

## நூலின் அமைப்பு

இந்நூலில் பாலகாண்டம், அயோத்தியா காண்டங்களில் உள்ள அனைத்துப் பாடல்களும் இடம்பெறவில்லை. கம்பராமாயணத்தில் இரு காண்டங்களிலும் ஏறத்தாழ 2621 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. டி.கே.சி. அவர்கள் இதில் 718 பாடல்களை மட்டுமே கம்பரது பாடல்களாகத் தேர்வு செய்துள்ளார். இப்பாடல்களுக்குப் பொருள் தருவதிலும் வரிசைப் படுத்துவதிலும் மற்ற நூலாசிரியர்களினின்றும் வேறுபடுகிறார்.

டி.கே.சி.யால் தேர்வு செய்யப்பட்ட கம்பராமாயணப் பாடல்கள் கதைப்போக்கிற்கு ஏற்ப வரிசைப் படுத்தப்பட்டுள்ளன. கதைப்போக்கிற்குத் தேவையற்றவை எனச் சில பாடல்களும், படலங்களும் டி.கே.சி.யால் விடப்பட்டுள்ளன. சான்றாக, கம்பர் தனது இராமாயணத்தை "ஆற்றுப்படலத்" திலிருந்து தொடங்குகிறார். அதன்பின் நகர்ப்படலம் அமைந்துள்ளது. ஆனால் டி.கே.சி. ஆற்றுப் படலத்தை விட்டுவிட்டார். 31 பாடல்கள் உள்ள ஆற்றுப் படலப் பாடல்களுள் 23வது பாடலான சரயு நதியின் வளத்தைக் கூறிய பின் நாட்டு வளத்தைக் கூற முற்படுகிறார். பாலகாண்டத்தில் தாடகையை வதம் செய்தபின் வேள்விப்படலம் வைக்கப்பட்டுள்ளது. இதன்பின் அகலிகைப் படலம் அமைந்துள்ளது. டி.கே.சி.யின் "கம்பர் தரும் ராமாயணத்தில்" வேள்விப்படலத்தில் 16 பாடல்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளன. 59 பாடல்கள் உள்ள வேள்விப் படலத்தை இரண்டாகப் பிரித்து முதல் பகுதியில் "தடுத்தார் சுக்கிராச்சாரியார்" என்ற தலைப்பில் மகாபலி சக்கரவர்த்தியின் செயலையும் திருமால் மூன்றடியில் உலகத்தை அளந்ததையும் பாடல்களாகக் கூறிய பின் வேள்வி காத்த நிகழ்ச்சியைக் கதையாக மட்டுமே கூறியுள்ளார். இதன்பின் அகலிகைப் படலத்தைக் கதையாகத் தந்துள்ளார்.

பாடலுக்கு முன்னுரையாக அப்பாடல் எக்கருத்தைக் கூறுகிறது என்பதை எடுத்துரைக்கிறார். இதில் தனது அனுபவ இரசனையோடு முன்னால் இருப்பவர்கள் கேட்பது போன்ற பாவனையில் கூறுகின்ற உத்தியை டி.கே.சி. கையாண்டுள்ளார். சான்றாக வேள்விப்படலத்தில் குறுமுனியாக வந்த திருமால் மூன்றடி மண் கேட்க சுக்கிராச்சாரியார் கொடுக்க வேண்டாம் எனத் தடுத்துக் கூற அதனை மீறித் தானம் செய்ய முன்வந்தார் மாபலி சக்கரவர்த்தி. இதனை

**முடிய இம்மொழி எலாம்மொழிந்து, மந்திரி**
**கொடியன் என்று உரைத்த சொல் ஒன்று கொண்டிலன்**
**அடியோடு மூன்றும் நீ அளந்து கொள்கென**
**நெடியவன் குறியகை நீரில் நீட்டினான்** (பா. 72)

என்ற பாடல்வழிக் கம்பர் எடுத்துரைக்கிறார். இப்பாடலைக் கூறுவதற்கு முன் டி.கே.சி. "இப்படியாகக் கொடை கொடுப்பதினால் உண்டாகும் பயனை எடுத்துச் சொல்லி, தன் குரு சொன்ன வார்த்தையைத் தட்டிவிட்டு, "மூன்று அடி மண் விரும்பின் அளந்து எடுத்துக் கொள்" என்று சொல்லிவிட்டான். தத்தம் பண்ணுவதற்காகத் தண்ணீரும் எப்போதும் தயாராய் மகாபலி பக்கத்தில் இருந்தது" என்ற முகவுரையுடன் இப்பாடலைத் தந்துள்ளார். இது பாமர மக்களும் புரிந்து கொள்வதற்கு ஏற்பக் கதைப் போக்கில் இலக்கியத்தை நடத்தும் அவரது உத்திக்குச் சான்றாகும்.

ஒவ்வொரு பக்கத்திலும் அப்பக்கத்தில் இடம்பெறும் பாடலில் உள்ள, பாமர மக்களுக்குக் கடினமானதாக இருக்கும் என டி.கே.சி. எண்ணிய, சொற்களுக்குப் பொருள் தரப்பட்டுள்ளது. மேலும் ஆசிரியரின் விளக்கங்களும் அப்பகுதியில் இடம்பெற்றுள்ளன. சான்றாக வேள்விப் படலத்தில் இடம்பெற்றுள்ள

**மாய்ந்தவர் மாய்ந்தவர் அல்லர்கள்; மாயாது**
**ஏந்திய கைகொடு இரந்தவர், எந்தாய்!**
**வீந்தவர் என்பவர் வீந்தவ ரேனும்**
**ஈந்தவர் அல்லது இருந்தவர் யாரே** (பா. 71)

என்ற பாடலுக்கு அடியில் "மாய்ந்தவர் - இறந்தவர், இரந்தவர் - யாசித்தவர், எந்தாய் - என் குருவே, வீந்தவர் - இறந்தவர்" என்று

சொற்களுக்குப் பொருள் தந்ததோடு "குறிப்பு: விஷயத்தை அழுத்துகிற பாவம் செய்யுளில் ரொம்ப அருமையாக வந்துள்ளது" என்று அப்பாடலின் பாவத்தை எடுத்துரைக்கிறார். பாடலுக்கு முன்னுரை தருவதிலும், பாடலுக்குத் தன் கருத்தைக் கூறும் போதும் பாமர மக்களும் புரிந்து கொள்ளும் விதத்தில் எளிய மொழி நடையையே பயன்படுத்தியுள்ளார்.

## 2. கவிதாரசனையுள்ளவர்

ஓர் இலக்கியத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதைவிட எப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதைப் பார்ப்பதே அழகியல் முறையாகும். அழகை நுகரும் பொழுது உள்ளத்தில் மகிழ்ச்சி தோன்றும். கிரேக்க அறிஞர்களான பிளாட்டோ, அரிஸ்டாட்டில், மேனாட்டறிஞரான குரோசே போன்றோர் அழகியல் அணுகுமுறைகளை வளர்த்துள்ளனர். தமிழில் டி.கே.சி. அழகியல் திறனாய்வு முறையைப் பயன்படுத்திக் கம்பராமாயணத்தை ஆராய்ந்தார். இலக்கியத்தை அது ஏற்படுத்தும் உணர்வு அடிப்படையிலேயே சுவைக்க வேண்டும் என்பது டி.கே.சியின் கொள்கையாகும்.

தமிழில் கவிகள் பாவினங்களை அடிப்படையாகக் கொண்டே இலக்கியங்களை யாத்துள்ளனர். பழங்காலத்தில் கருத்துக்களை மனத்தில் இருத்திக் கொள்வதற்கு இலக்கியவாதிகள் கவிதைகளையே கையாண்டனர். சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் அதன் நோக்கமாகும். நீண்ட கதைப் பாடல்கள் பல்வேறு பாவகைகளில் தரப்பட்டன. கம்பரும் விருத்தங்களைப் பாடுவதில் வல்லவராகத் திகழ்ந்தார். கம்பரின் கவிதைகளில் மனத்தைப் பறிகொடுத்த டி.கே.சி. 35 வகையான சந்தங்களில் தான் தேர்ந்தெடுத்த பாடல்களைப் பாடிக் காட்டியுள்ளார். இதனை, "கம்பர் தரும் ராமாயணம்" எனும் கலைப் பொக்கிஷம் கிடைத்தது. . . படிக்கும் போது தாங்கள் எதிரில் அமர்ந்து பாடலைப் பாடிக் காட்டுவது போலவே தோன்றுகிறது. விளக்கம் நன்றாக உள்ளது (பதிப்புரை, ப.V) என்ற கல்கியின் கடித வாசகம் உறுதிப்படுத்துகிறது. பாடலைப் பாட வேண்டுமே ஒழிய, வசனத்தைப் போல வாசிக்கக் கூடாது என்கிறார் டி.கே.சி.

சந்தம் என்பது குறில், நெடில் முதலான எழுத்துக்களின் அளவு பற்றியும் வல்லினம், மெல்லினம் முதலான ஓசைகள்

பற்றியும், செய்யுளிடையே காணப்படும் வேறுபாடாகும். இவை தத்த, தய்ய, தந்த, தன்ன, முதலான அசைச் சொற்கள் வாயிலாகக் குறிக்கப் பெறுகின்றன. டி.கே.சி. தன், தன, தான, தன்ன, தனன, தனனா, தானன, தன்னன, தன்னான, தான்னன, தன்னனா என்ற தாளங்களைப் பயன்படுத்தித் தான் தேர்ந்தெடுத்த பாடல்களைப் பாடியுள்ளார். சான்றாக,

தான னன
தன்ன னன
தன்ன னன
தன் ன

என்ற சந்தத்தில்

**முன்உ லகு அளித்து முறை நின்ற உயிர் எல்லாம்**
**தன்உ ணவெ னக்க ருது தன்மை யவள்! மைந் த** –பா.42

என்ற பாடலைப் பாட வேண்டும் என்கிறார். மேலும்

தான தன்னன
தான்ன தானன
தா தன்

என்ற சந்தம்

**இருந்த மந்திரக் கிழவரது எண்ணமும் மகன் பால்**
**பரிந்த சிந்தை யம் மன்னவன் கருதிய பய னும்** –பா.189

என்ற பாடலுக்குரியது என்கிறார். மேலும்

"கம்பரைப் போல மற்றத் தமிழ்ப் புலவர்களும் இந்தச் சந்தத்தை ரொம்பவும் அனுபவித்துக் கையாளுவார்கள்" (ப.159) என்று அப்பாடலுக்கு அடிக்குறிப்பும் தந்துள்ளார். இதனை இவரது கவிதை ரசனைக்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

தானன தானன தன்
தானன தானன தன்

என்ற சந்தத்தில்

**தோள் கண்டார் தோளே கண்டார்**
**தொடு கழற் கமலம்அன் ன**
**தாள் கண்டார் தாளே கண்டார்**
**தடக்கைகண் டாரும்அஃ தே!** (ப. 143)

என்ற பாடலைப் பாடவேண்டும் எனக் கூறியவர் அக்கவிதையின் பொருளை அனுபவித்துக் கூறுகிறார்.

"இராமனுடைய பூரண சௌந்தர்யத்தை அபாரமாக அனுபவித்த காரணமாகவே ஒவ்வொரு உறுப்புக்களிலும் அவ்வளவு ஈடுபட்டு விட்டார்கள். காதல் உணர்ச்சி நிரம்ப இருந்ததால் தோள் மாத்திரம் முன் நின்றது. எது போல? எங்கும் நிறைந்த கடவுளிடத்தில் ஈடுபட்டவர்களுக்கே அந்தக் கடவுளின் அடையாள உருவங்களில் அபாரமான ஈடுபாடு உண்டாவது போல. ஒரு உருவ வழிபாட்டில், உடல் பொருள் ஆவியெல்லாம் தத்தம் பண்ணுவதென்றால், எங்கும் நிறைந்த கடவுளிடம் மிக்க ஈடுபாடு என்பதுதான் பொருள்" (ப. 117) என்ற இவரது கருத்து இப்பாடலை எந்த அளவிற்கு அவர் இரசித்திருப்பார் என்பதை எடுத்துரைக்கிறது.

கம்பரின் கவிதை ஒவ்வொன்றையும் இரசித்து ருசித்தவர் டி.கே.சி. மகாபலி சக்கரவர்த்தி "அடியொடு மூன்றும் நீ அளந்து கொள்" என வாமனனிடம் கூற அவன் விஸ்வரூபம் எடுத்த காட்சியைக் கம்பர்

> வியந்தவர் வெருக்கொள விசும்பின் ஓங்கினான்
> உயர்ந்தவர்க்கு உதவிய உதவி ஒப்பவே (பா. 73)

என்ற அடிகள் வழி எடுத்துரைக்கிறார். இதன் கடைசி வரியான "உயர்ந்தவர்க்கு . . . . . ஒப்பவே" என்பதற்கு விளக்கம் அளிக்க எண்ணிய டி.கே.சி. ஒரு கதையைப் பாமர மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையாகக் கூறுகிறார். "ஒருவர் பத்துப் பத்து ரூபாயாக நாலு பேருக்குத் தருமம் செய்கிறார் என்று வைத்துக் கொள்வோம். என்ன கொடுத்தார் அப்பா? என்று எதிரில் வந்தவன் நாலு பேரையுமே கேட்கிறான். முதலாவது பேர்வழி, "பத்துக்காசு என்னமோ கொடுத்தான்" என்றான். அடுத்தவன் "பத்து ரூபாய் கொடுத்தான்" என்றான். மூன்றாவது ஆசாமி, "இந்தப் பத்து ரூபாயும் எனக்கு நூறு ரூபாய்; புண்ணியவான் கொடுத்தான்" என்றான். நாலாவது மனுஷன் "உயர்ந்த பண்புடையவன், தாராளப்பிரபு! கொடுத்தது பத்தா, ஆயிரம் ஐயா!" என்று மிக்க உணர்ச்சியோடு பாராட்டிச் சொல்லுகிறான். ஆகவே உயர்ந்தவருக்குச் செய்த உதவி அப்படியே மதிப்பில் ரொம்ப உயர்ந்து போய் விடுகிறது. குறள்: "உதவி வரைத்து அன்று உதவி, உதவி செய்யப்பட்டார் சால்பின்

வரைத்து". திருக்குறளில் உள்ளீடாகக் கிடக்கும் உண்மையை எவ்வளவாக அனுபவித்திருக்கிறார் கம்பர்" என்ற டி.கே.சி.யின் கூற்று (ப.59) கம்பரை அவர் எவ்வாறு இரசித்திருக்கிறார் என்பதைப் புலப்படுத்துகிறது.

டி.கே.சி.யின் இலக்கியப் பிரசங்கத்தில் அவரது கூர்த்த மதியையும், நுட்பமான பொருள் விளக்கங்களையும் காண முடிகிறது. பாடலைப் பாடியே அவையோர்களின் மனத்தில் பதிந்து விடும் வகையில் கருத்தை விளக்கிவிடுபவர் டி.கே.சி. தாய்மார்களையும், பெரியோர்களையும் கம்பன் கவியில் தலைகிரங்கச் செய்தவர். கவிஞனிடம் உண்டாகும் பாவனையைக் கற்பவர் உள்ளத்தில் அழுந்தித் திளைக்கச் செய்வதே ரசிகமணியின் இலக்கியக் கொள்கையாகும். இக்கருத்து மேற்கூறிய சான்றுகளில் காணப்படுவதிலிருந்து அவரது கவிதைரசனை புலப்படுகிறது. "உண்மையான கவியின் தன்மை இன்னது என்பதை ஸ்ரீ டி.கே.சிதம்பரநாத முதலியாரிடம்தான் நான் அறிந்தேன். உண்மையான கவிதையை எப்படி அனுபவிக்கிறது என்பதையும் டி.கே.சி.யிடம்தான் கற்றேன்" என்ற மூதறிஞர் இராஜாஜியின் கூற்று (பதிப்புரை ப.iv) டி.கே.சியின் கவிதை இரசனையை எடுத்துரைக்கிறது.

### 3. அளவை நோக்கின்றி அனுபவ நோக்கில் இலக்கியத்தை இரசித்தவர்

திறனாய்வு என்பது இலக்கியத்தைப் புரிதலும் புரிய வைத்தலுமாகும். ஒரு நல்ல திறனாய்வாளன் பொறுப்புள்ள இலக்கியவாதியாகவும், பொறுப்புள்ள மனிதனாகவும் இருக்க வேண்டும். அழகியல் உணர்வு, கலை-இலக்கியத்தை இரசிக்கக் கூடிய - அனுபவிக்கக் கூடிய- மனவுணர்வு, அதனை முறையாக வெளிப்படுத்தக் கூடிய திறன் - இவை திறனாய்வாளனுக்குரிய அடிப்படையான பண்புகளாகும் (தி.சு. நடராசன், திறனாய்வுக்கலை ப. 6). இத்துடன் அவன் சிறந்த அறிஞனாகவும் இருந்தால் புதிய கருத்துக்களைத் தருபவனாக, புதிய பாதைகளைக் காட்டுபவனாக, புதிய மதிப்புகளை வாசகர்களுக்கு உணர்த்துபவனாகத் திகழ்வான். மேற்கூறிய திறனாய்வாளனுக்குரிய அனைத்துப் பண்புகளையும் ஒருங்கே பெற்றவர் டி.கே.சி. "நவீன திறனாய்வுப் பண்புகளைக் கொண்டு இலக்கியத்தை அணுகாமல் தனது சொந்த அனுபவத்தையும், ஆய்வறிவையும் கொண்டு அதனை நோக்கும் தன்மையை ரசனை

முறைத் திறனாய்வு எனலாம். தனிப் பாடலிலிருந்து காவியம் வரை அனைத்தையும் அளவை நோக்கில் பார்க்காமல் அனுபவ நோக்கில் பார்த்தவர் டி.கே.சி." என டி.கே.சி.யைப் புகழ்கிறார் சி.கனகசபாபதி.

டி.கே.சி. கவிதையின் உருவத்தில் ஈடுபாடு கொண்டார். கவிதை எவ்வாறு சொல்லப்பட்டு இருக்கிறது. எத்தகைய சந்த நயம் அதில் உள்ளது என்பதைக் கண்டறிந்தார். ஒவ்வொரு பாடலையும் அனுபவித்துப் பாடிப் பரவசப்பட்டார். தான் அடைந்த அம் மகிழ்ச்சியைப் பிறரும் அடைய வேண்டும் என எண்ணினார். எனவே கம்பரின் இலக்கிய நயம் மிக்க கவிதைகளைத் தேர்ந்தெடுத்து ஒரு கதையைக் கூறுவது போல் மக்களிடையே பரப்பி மக்களுக்குக் கம்பனின் கவிதைகளில் ஈடுபாடு ஏற்படச் செய்தார். கம்பர் கோசல நாட்டின் வளத்தை,

**வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்**
**திண்மை இல்லை நேர் செறுநர் இன்மையால்**
**உண்மை இல்லை பொய் உரை யிலாமையால்**
**ஒண்மை இல்லை பல் கேள்வி ஓங்கலால்**

என நாட்டுப் படலத்தில் ஓர் பாடலைத் தந்துள்ளார். இப்பாடலுக்கு முதுபெருங்கவி வெ.ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், "ஒருவருக்கும் அற்ப தரித்திரமும் இல்லாததனால் இரப்பார் இல்லை. இரப்பார் இல்லாததனால் கொடை இல்லை. எதிர்த்துப் போர் செய்யும் பகைவர் இல்லாததனால் வலிமை செலுத்துதற்கு இடம் இல்லை. ஒருவரும் பொய் கூறாமையால் எவரையும் இவர் உண்மை சிறந்ததெனச் சிறப்பித்துக் கூறுதற்குரிய உண்மை இல்லை. எல்லோருமே கல்வி கேள்வி அறிவு பொருந்தியிருத்தலினால் எவரிடத்தும் அறிவின்மை இல்லை" எனப் பொருள் தருகிறார் (கம்பராமாயண சாரம் ப. 26) அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள உரை, "ஒன்றிலும் வறுமையின்மையால் வழங்குகின்ற வள்ளன்மை அந்நாட்டில் இல்லை. எதிர்த்து நின்று பொருவோர் இல்லாமையால் வலிமையும் இல்லை. பொய் பேசுதலே இல்லாமையால் உண்மையும் இல்லை. பலவகை நூற்கேள்விகளும் நிரம்பியிருத்தலால் உள்ளீடு இல்லாத வெள்ளையறிவும் இல்லை" (பாலகாண்டம், ப. 111) என இப்பாடலுக்குப் பொருள் தருகிறது. இவ்விரு உரைகளும் கற்பவர்களுக்கு மட்டுமே புரியும் தன்மையில் அமைந்துள்ளன. டி.கே.சி. இப்பாடலுக்குப்பொருள் தராமல்

அப்பாடல் ஏன் அமைந்துள்ளது என்பதை விளக்கும் வகையில், வாசகரோடு உரையாடும் விதத்தில், பொருள் தருகிறார். "கஷ்டத்தைக் கண்டு கொடை கொடுக்கும் போதுதான் இதயம் உருகுகிறது. எதிரியோடு எதிர்த்துப் போர் செய்யும் போதுதான் உண்மையான வீரம் பிறக்கிறது. எல்லோரும் பொய்யே சொல்லாது இருந்து விட்டால் சத்தியவான் என்று ஒருவனைக் குறித்துச் சொல்வதில் பொருளில்லை. அப்படியே சகல கலைகளையும் எல்லோரும் கற்று நுட்பங்களை அறிந்து விட்டால் ஒருவரைப் பார்த்து இவர் மேதாவி என்று சொல்ல இடமிராது தானே" (ப. 12) என வாசகர்களுக்குக் கூறிய பின் இப்பாடலைத் தந்துள்ளார். இவ்வெளிய உரை அவரது புதிய விளக்கத்தை, சொந்த அனுபவ அறிவை எடுத்துரைக்கிறது எனலாம்.

சில பாடல்களுக்குப் பொருளே சொல்லாமல் வாசகர்களைப் புரிந்து கொள்ள வைக்கும் உத்தியையும் டி.கே.சி. கையாண்டுள்ளார் எனலாம். சான்றாக, தசரதன் அயோத்தி அரச பொறுப்பை இராமன் ஏற்க வேண்டும் என்ற கருத்தில்,

**அனைய தாதலின் 'அருந்துயர்ப் பெரும்பரம் அரசன்**
**வினைவயின் என்வயின் வைத்தனன்' எனக் கொள வேண்டா**
**புனையும் மாமுடி புனைந்திந்த நல்லறம் புரக்க**
**நினையல் வேண்டும்யான் நின்வயின் பெறுவதீது**
**என்றான் (பா. 206)**

என்ற பாடலை வைத்து அதன் பின், "தசரதன் சொன்ன விஷயத்தை ராமன் எப்படி ஏற்கிறான் என்று பார்ப்போம்" என வாசகர்களுக்குக் கூறியபின்

**தாதை அப்பரிசு உரைசெயத் தாமரைக் கண்ணன்**
**காதல் உற்றிலன் இகழ்ந்திலன், கடன் இதென்றும்**
**உணர்ந்தும்**
**யாது கொற்றவன் ஏவியது அது செயல் அன்றோ**
**நீதி எற்கு என நினைந்தும் அப்பணி தலை நின்றான்**
**(பா. 207)**

என்ற பாடலை வைத்துள்ளார். மேலும் இப்பாடலுக்கு

"ராஜ்ய பாரத்தில் துன்பம் உண்டென்று உணர்ந்தாலும் அது ஒரு கடமை. தான் அதை ஏற்றுக் கொள்ளாவிட்டால்

உலகம் கஷ்டப்பட்டு விடும் என்றெல்லாம் நினைத்து இராமன் ஆசைப்படவும் இல்லை, வெறுக்கவும் இல்லை. அப்பணியைத் தலை மேற்கொண்டான்" என விளக்கம் தருகிறார். (ப. 173) இச்சான்றுகள்வழி, சி. கனகசபாபதி கூறியது போல் டி.கே.சி. திறனாய்வை அளவை நோக்கின்றி அனுபவ நோக்கில் செய்துள்ளார் என்பது புலப்படுகிறது.

### 4. உருவவியல் திறனாய்வாளர்

ஒரு படைப்பினுடைய பல்வேறு உறுப்புக்களின் ஒன்றிணைந்த ஒரு முழுமையே உருவம் ஆகும். ஒரு கலையின் பல்வேறு உறுப்புக்கள் குறிப்பிட்ட ஒரு சீர்மைத் தன்மையுடன் ஒன்றிணையும் போது அவற்றின் ஒன்றிணைந்த செயற்பாடுகளிலும் பயன்களிலுமே கலையியல் பண்பு வெளிப்படுகின்றது. நடையியல் உத்திகளின் ஒட்டு மொத்த வடிவமும் உருவவியலில் அடங்கும். இவ்வுருவத்திலிருந்து இலக்கியம் வேறுபடுவதில்லை. "கலை பற்றிய அக்கறை கொள்கிற எந்த ஆராய்ச்சித் திட்டமும் கலையையும் கலையல்லாததையும் வேறுபடுத்துகின்ற சிறப்பியல் பண்புகளை உள்ளடக்கியதாகவே இருக்க வேண்டும்" என்கிறார் தின்யனொவ் என்ற உருவவியல் அறிஞர் (தி.சு. நடராசன், திறனாய்வுக் கலை, ப. 118).

குறிப்பிட்ட வித்தியாசமான ஒலிப்பின்னல்கள், குறிப்பிடும்படியான சொற்சேர்க்கைகள், சொல் வழக்குகள், உவமங்கள், உருவகங்கள், படிமங்கள், குறிப்புச் சொற்கள், ஒலி அல்லது சொல் திரும்ப வருதல், சொல்கின்ற முறை, தொடரமைப்பு போன்றவை உருவவியலின் சிறப்பான கூறுகளாகும். இக்கூறுகளை அடிப்படையாகக் கொண்டே டி.கே.சி. கம்பரது பாடல்களைத் தேர்வு செய்துள்ளார். "மகா கவியை அனுபவிப்பதற்குக் கவித்துவம் இருக்கவேண்டும் ஒருவருக்கு. கவித்துவம் இருப்பவர்தான், உயர்ந்த உண்மையான கவிகளை அனுபவிக்கக்கூடும்" என்ற டி.கே.சி.யின் கூற்று (முகவுரை, கம்பர் தரும் ராமாயணம், ப. XXXV) அவரது இரசனை உணர்வை வெளிப்படுத்துகிறது. கம்பரின் இராமாயணத்தில் டி.கே.சி.க்குப் பிடித்தது அவர் விஷயத்தைச் சொல்லுகின்ற முறைதான். விஷயத்தில் உள்ள உணர்ச்சி விம்மியே செய்யுளுக்குப் பாவ உருவம் கொடுக்கிறது என்கிறார். செய்யுளில் கையாளப்படுகிற சொற்கள், எதுகை, மோனை, தானம் இவைகளில்தான் உண்மையான பாவம் உருவம் பெறுகிறது என

டி.கே.சி. கருதுகிறார். மிதிலையில் இராமனைக் கண்டதும் காதல் கொண்ட சீதையின் மனத்தில் நீங்காது இடம்பெற்றது இராமனின் கம்பீரமான நடையே. இதனை

*படர்ந்து ஒளிபரந்து உயிர் பருகும் ஆகமும்,*
*தடம் தரு தாமரைத் தாளுமே அல;*
*கடம் தரு மாமதக் களி நல் யானை போல்*
*நடந்தது கிடந்தது என் உள்ளம் நண்ணியே (மிதிலை. 8)*

என்ற பாடல்வழிக் காட்டுகிறார் கம்பர். இதன் உருவத்தில் இலயித்த டி.கே.சி. "ராமனுடைய நடையின் அழகு, சீதையின் மனசை விட்டுப் போகவில்லை என்ற உண்மை இந்தக் கவியில் ஒரு அதிசயமான உருவத்தை அடைகிறது. தாமரை வித்துக்குள் இருக்கும் ஓர் உண்மை தாமரை மலராக அற்புதமாய் மலர்வது போலத்தான்" என விளக்கம் கொடுக்கிறார் (முகவுரை, ப. XXX) தாமரை வித்துக்குள் இருக்கும் சக்தி தாமரை மலராக ஆவது போல் அவளது காதல் உணர்வு அவனது நடையைக் கண்டு மலர்ந்ததாகக் கம்பர் கூறுகிறார். இதில் சொல்லப்படுகின்ற முறைதான் கவிதைக்கு உருவம் கொடுக்கிறது என்கிறார் டி.கே.சி.

கம்பரின் பாடல்களைச் சந்த நயத்தோடுதான் பாடவேண்டும் என்ற கொள்கையுடையவர் டி.கே.சி. அயோத்தியில் தசரத சக்கரவர்த்தியின் அரண்மனை வாயிலில் மன்னர்கள் குழுமி விட்டனர். மன்னவன் வரவில்லை. அந்த நேரத்தில் வசிஷ்டர் அங்கு வருகிறார். இதனைக் கம்பர்,

*உரை செய் பெருமை உயர் தவத்தின் ஓங்கல்*
*புரசை மதக் களிற்றான் பொற்கோயில் முன்னர்*
*முரசம் முழங்க முடி சூட்ட மொய்த் தாண்(டு)*
*அரசன் இனிதிருந்த நல்லவையன் ஆனான் (பா. 353)*

என்ற பாடல் வழிக் கூறுகிறார். டி.கே.சி. இப்பாடலை

*"தானான தன்னான*
*தன்னான தன்னான"*

என்ற சந்தத்தில் பாட வேண்டும் என்கிறார். இதனை "மேலே குறித்தபடி தாளத்தோடு பாடவேண்டும். தாளத்திற்கு இளக்கம் கொடுத்துப் பாடும் போது சீர் பிரித்த முறையில் பாடினால்

பாவத்தோடு ஒட்டி விடும்" (ப. 285) என்ற அவரது குறிப்பு வெளிப்படுத்துகிறது. மேலும்

**மின்னுடன் பிறந்த வாள் பரத வேந்தர்க்கு**
**மன்னுடன் பிறந்திலன் மண் கொண்டு ஆள்கின்ற**
**தன்னுடன் பிறந்திலன் தம்பி முன்னிலன்**
**என்னுடன் பிறந்த யான் வலியன் என்றியால் (பா. 462)**

என்ற பாடல் வழி, கம்பர் இலட்சுமணனின் கோபத்தைக் காட்டுகிறார். இப்பாடலைத் திறனாய்வு செய்த டி.கே.சி. "அபூர்வமான பாவமும் உருவமும் அமைந்த பாட்டு" (ப. 372) எனப் புகழ்கிறார். இதன் வழி உருவவியல் திறனாய்வு செய்தவர் டி.கே.சி. என்பது புலப்படுகிறது.

நயமான சொற்கள் இசைப் பண்புடன் தாளத்திற்கு இயைந்த வகையில் அமைவதே சிறந்த இலக்கியம் எனக் கொண்டவர் டி.கே.சி. இதனால் தான் அவரது திறனாய்வில் தாளம், பாவம், உருவம், உணர்ச்சி முதலிய சொற்கள் அடிக்கடிப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவர் அளவியல் கோட்பாட்டின் அடிப்படையில் கம்பராமாயணத்தை மக்களிடையே பரப்பினார். கவிதைகளில் காணப்படும் உணர்ச்சியைப் படிப்போர்க்கும் உண்டாக்க வேண்டும் என எண்ணினார். எனவேதான் "கவிதையின் பாவத்திலும் தாளத்திலும் எப்பொழுதும் கவனம் செலுத்தி வந்தவர் முதலியார்" என வையாபுரிப்பிள்ளை அவர்கள் டி.கே.சி.யைப் பாராட்டுகிறார். தமிழில் என்ன இருக்கிறது என்பதை அறியாமல் இருளில் மூழ்கிக் கிடந்த மத்திய தர வர்க்கத்தினரிடையே கம்பரைப் பற்றிய சிந்தனையைத் தூண்டி இலக்கிய விழிப்புணர்ச்சியை ஊட்டியவர் டி.கே.சி. இதற்கு அவரது உருவவியல் திறனாய்வு பெரிதும் உதவியது எனில் மிகையன்று.

### 5. மாந்தருள் ஓர் அன்னப்பறவை

அன்னப்பறவை மற்றப் பறவைகளிலிருந்து மாறுபட்டது. பாலில் தண்ணீரைக் கலந்து வைத்தாலும் அன்னப்பறவை பாலை மட்டும் பருகிவிட்டுத் தண்ணீரை நீக்கி விடும். தண்ணீரிலிருந்து பாலை மட்டும் பிரித்தெடுக்கும் ஆற்றல் அன்னப்பறவைக்கு மட்டுமே உண்டு. அது போலவே இடைச்செருகல்கள் நிறைந்த கம்பராமாயணத்திலிருந்து கம்பரது பாடல்களை மட்டும் தேர்ந்தெடுக்கும் திறமை டிகே.சி.க்கு மட்டுமே உண்டு எனலாம்.

கம்பரின் கவிதைகளில் மூழ்கித் திளைத்த டி.கே.சி. "கம்பருடைய கவிகளுக்குத் தனியான ஒரு சுவையுண்டு. இதய பாவத்தை உட்கொண்ட செய்யுள்கள் அடியெடுத்து வைக்கும் போது, தனியான கதிநயங்களைக் காண்கிறாம். அவைகளின் பாவமும் வேகமும் எங்கேயோ இருந்து வந்த மாதிரி, புத்தம் புதியவையாய் இருக்கும். ஒவ்வொரு செய்யுளிலும் ஒரு தனியான ரஸம். கவிக்கு ஏதோ நவரஸம் என்கிறார்கள். ஆனால் கம்பருடைய கவிகளைப் பார்க்கும் போது, ஆயிரக் கணக்கான ரஸங்கள் உண்டென்று சொல்ல வேண்டியிருக்கிறது" என்று "கம்பர் தரும் ராமாயண" முகவுரையில் கூறியுள்ளார். (ப.xvii) இக்கவிதைகளை இனம் கண்டு, மாற்றறிந்து, இதுதான் கம்பர் பாடல், இது இடைச்செருகல் எனத் துணிவோடு கூறினார். மேலும், "இந்தக் கம்பர் தரும் ராமாயணத்தில் அடங்கிய பாடல்களெல்லாம் கம்பரது உண்மையான பாடல்கள். ஏதோ கம்பர் பாடல்களிலிருந்து பொறுக்கின கோவை என்று கொள்ளலாகாது. இவை ஒழிந்த மற்றப் பாடல்கள் எல்லாம் செருகு கவிகள் என்றும், கட்டத்துக்கும் பாத்திரத்துக்கும் ஒவ்வாத கவிகள் என்றும், உயிர்நாடி பேசாத கவிகள் என்றும் கருதியே ஒதுக்கியிருக்கிறது" (முகவுரை ப.xxii) என்ற டி.கே.சி.யின் கூற்று அவர் ஓர் அன்னப்பறவை என்பதை நினைவூட்டுகிறது. எனவேதான் கி.ராசநாராயணன் இவரை "மாந்தருள் ஓர் அன்னப்பறவை" என்று பாராட்டுகிறார்.

## முடிவுரை

"கம்பர் கவி அழகை எடுத்துக் காட்டுவதற்கு டி.கே.சி.யை அடைந்திருப்பது நாம் செய்த பாக்கியம். கம்பர் தரும் ராமாயணம் தமிழ் மக்களின் உள்ளங்களில் எல்லாம் அரங்கேற வேண்டும் என்று கூறியுள்ளது எவ்வளவு பொருத்தம்" (வானதி திருநாவுக்கரசு பதிப்புரை, கம்பர் தரும் ராமாயணம், ப.v) என்று மூதறிஞர் இராஜாஜி இந்நூலைப் போற்றுகிறார். வரலாற்றுச் சிறப்புடைய இந்நூல் டி.கே.சி.யைப் பற்றிய அறிஞர்கள் கருத்திற்கு விளக்கம் தரும் வகையில் அமைந்து டி.கே.சி.யின் புகழைத் தமிழ் மண்ணிற்கும், உலகிற்கும் எடுத்துரைக்கிறது எனலாம்.

# மொழி நடை

## வாழ்க்கை வரலாறு

தமிழகத்தின் ரசிகமணி என்று அழைக்கப்பெறுகின்ற ஒரே ஒருவர் டி.கே.சி. அவர்கள்தான். கம்பனில் ஆழ்ந்த பற்றுடையவர். இலக்கியத்தைச் சுவைப்பதில் வல்லவர். 1881ஆம்ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18ம் தேதி (18-08-1881) டி.கே.சி. அவர்கள் தோன்றினார். டி.கே.சி.யின் தந்தையார் தீத்தாரப்ப முதலியார். தாயார் மீனம்மாள் அண்ணி. அவர் பிறந்தது ஸ்ரீவில்லிபுத்தூரில். தாய் வீடு ஸ்ரீவில்லிபுத்தூர். தந்தை வீடு தென்காசி. பெரும்பாலும் வாழ்ந்தது தென்காசியிலும் குற்றாலத்திலும். தந்தை பெயரின் முதல் எழுத்தாக 'டி' யையும் பூர்வீக ஊரான கிளாங்காடு என்பதில் முதல் எழுத்தாக, 'கே' என்பதையும் தன்பெயரான சிதம்பரநாத முதலியார் என்பதின் முதல் எழுத்தையும் சேர்த்து டி.கே.சி. எனச் சுருக்கமாக வைத்துக் கொண்டார்.

## கல்வி

டி.கே.சி. எட்டாம் வகுப்புவரை தென்காசியில் கற்றார். ஒன்பதாம் வகுப்பில் இருந்து திருச்சி தேசிய உயர்நிலைப்பள்ளியில் கற்றார். கல்லூரி வாழ்க்கை சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் அமைந்தது. அவர்களுடைய வகுப்புத் தோழர்களாக ஜஸ்டிஸ் கே.சந்திரசேகர ஐயர் (முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி), டாக்டர் ஜாண் மத்தாய் (முன்னாள் இந்திய அரசின் நிதி அமைச்சர்), டாக்டர் ஏ.இராமசாமி முதலியார் (முன்னாள் திருவாங்கூர்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்), டாக்டர் லெட்சுமணசாமி முதலியார் (முன்னாள் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்), திவான் பகதூர் ஆவுடையப்பபிள்ளை, (நெல்லையில் பிரபல வழக்கறிஞராக இருந்தவர்), கடையம் திரு சகரராயர் போன்ற பேரறிஞர்களுடன் கற்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது டி.கே.சி.க்கு சுப்பிரமணிய பாரதி அவர்களுடன் தொடர்பு ஏற்பட்டது. டி.கே.சி. படித்த காலத்தில் கிறிஸ்தவக் கல்லூரியில் பெரும்பாலும்

ஐரோப்பியர்களே ஆசிரியர்களாக இருந்தனர். அவர்களுள் டி.கே.சி. மிகுதியாக விரும்பிய பேராசிரியர்கள் லாய் ஹெண்டர்சன், ஸ்கின்னர் என்ற இருவர். ஸ்கின்னர் தாவர இயல் பேராசிரியர். அவர் இவருக்குத் தாவரங்களைப் பற்றியும் உயிரியல் தாவரவியல் பற்றியும் ஆர்வத்தை உண்டாக்கினார்.

டி.கே.சி. கிறிஸ்தவக் கல்லூரியின் தமிழ்ப் பேரவைத் தலைவராக இருந்தார். கல்லூரிப் படிப்பு முடிந்தவுடன் இங்கிலாந்து சென்று ஐ.சி.எஸ். படிக்க வேண்டும் அல்லது பாரட்-லா படிக்கவேண்டும் என்று நினைத்தார். அது நிறைவேறவில்லை. 1908ஆம் வருடம் டி.கே.சி.க்குத் திருமணம் நடந்தது. துணைவியார் பெயர் பிச்சம்மாள் அண்ணி. அந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் சென்னையில் சட்டக்கல்லூரியில் பி.எல் படிப்பதற்குச் சேர்ந்தார். சென்னைச் சட்டக்கல்லூரியில் அவர் தேர்வு பெறவில்லை. திருவனந்தபுரம் சட்டக்கல்லூரியில் சேர்ந்து தேர்வில் வெற்றி பெற்று வழக்கறிஞரானார். 1915ஆம் ஆண்டு முதல் திருநெல்வேலியில் ஒரு பகுதியாகிய வண்ணார் பேட்டையில் குடியிருந்தார். 1915 முதல் 1928 வரை டி.கே.சி. திருநெல்வேலியில் இருந்தாலும் மூன்று ஆண்டுகள்தான் வழக்கறிஞர் தொழிலைச் செய்தார். நீதிமன்றத்திற்குச் சென்ற நாட்கள் மிகக்குறைவு. அவருக்கு வந்த கொடிய விசக்காய்ச்சல் காரணமாக வழக்கறிஞர் தொழிலை விடும் நிலை ஏற்பட்டது. பின்பு தென்காசி, குற்றாலம், என அவருடைய வாழ்க்கை தொடர்ந்தது. வட்டத்தொட்டி என்று ஒன்றை அமைத்து நண்பர்களுடன் இலக்கியத்தைப் படித்து இரசித்து மகிழ்வதே தன்னுடைய வாழ்க்கையாகக் கொண்டார். கம்பன் மேல் உள்ள ஈடுபாடு காரணமாக அவர் கம்பர் தரும் ராமாயணம் என்று கம்பராமாயணப் பாடல்கள் பன்னிரண்டாயிரத்தில் மூவாயிரம் பாடல்களே அவர் பாடியவை என்றும் அதற்குக் காரண காரியங்களையும் கூறி அமைத்தார். இடைச்செறுகல்கள் மிகுதியாகி விட்டன என்பது அவருடைய எண்ணம். அவருக்கு வாழ்க்கையில் அமைந்த சிறந்த நண்பர்கள் இராஜாஜி, கல்கி, போன்றவர்கள். அதன் வாயிலாக இசைப்பேரரசு எம்.எஸ். சுப்புலட்சுமியின் தொடர்பும் கிடைத்தது. 16.2.1954இல் டி.கே.சி. இயற்கை எய்தினார்.

டி.கே.சி. அவர்கள் நெல்லை மாவட்ட வழக்குச் சொற்களைப் பயன்கொள்கிறார். பிறமொழிக் கலப்பைப் பற்றி

அவர் கவலைப் படுவதில்லை. அவருடைய முக்கிய நோக்கம் தான் கூறுகின்ற கருத்து பிறருக்குப் புரிய வேண்டும் என்பதுதான்.

சொல்லாட்சி

பள்ளிக்கூடம் விட்டு வீட்டுக்கு வரவேண்டியது. எனக்கு விளையாடுவதில் நோக்கம் இருக்கும். விளையாடுவதற்குச் சேக்காளிகள் இல்லை என்றால் ஏதாவது வேலை இருக்காதா என்று தினவெடுக்கும். ஆனால் சனியன் போல் டியூசன் வாத்தியார் வந்துவிடுவார். பண்டம் சாப்பிடக்கூட நேரம் இருக்காது. (ப. 18, வா.வ).

இங்கு, சேக்காளிகள் என்ற சொல் சேர்க்கை ஆளிகள்-கூட்டாளிகள், நண்பர்கள் என்று பொருள்படும். ஆளிகள் என்பது ஆளுமை உடையவர்கள் என்பது பொருள். டி.கே.சி. பள்ளிக்கல்வியை அறவே வெறுத்தார். பள்ளிக் கூடங்கள் தேவை இல்லை என்பது அவருடைய கருத்தாக இருந்தது. அவர் மகன், பேரன் இவர்களைப் பள்ளியில் சேர்த்துப் படிக்க வைக்க வில்லை. அதற்குச் சிறுவயதில் அவரைப் படி படி என்று வீட்டினர் மிகுதியாக வற்புறுத்தியது காரணமாக இருக்கலாம். அதனால்தான் சனியன் போல் டியூசன் வாத்தியார் என்று குறிப்பிடுகிறார்.

ஆனந்தம் என்ற சொல்லை மிகுதியாகப் பயன்படுத்துகிறார். விளையாட்டிலும் ஆனந்தம்; வேலையிலும் ஆனந்தம். என் தாயாரும் மற்றப் பெரியோர்களும் சொல்லுகிற சம்பவம், கதை, இவற்றைக் கேட்டு அனுபவிப்பதிலும் ஆனந்தம். ஆனால் பள்ளிக்கூடமும் பாடமும் எனக்கு ஒரே கசப்புத்தான். ஒருநாளாவது பள்ளிக்கூடத்திலோ படிப்பிலோ எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டதில்லை, ஏற்படவுமில்லை. என்னையும் என்போக்கையும் பார்த்துப் பார்த்து என் தாய்க்கு என்மேல் ஒரே ஆனந்தம் (ப.18 வா.வ.)

பாகவதர்கள் கதையை எடுத்தாள்கிற முறையும் கதையை விளக்குகிற நயமும் இடைஇடையே கதைக்கு உயிர் கொடுப்பதற்காகப் பாடுகிற பாடல்களும் பாடல்களை இசையோடும் அபிநயத்தோடும் பாடிக்காட்டுகிற பாங்கும் இழுத்த இழுப்பிற்கு எல்லாம் தமிழானது வளைந்து நெளிந்து வருகிற சுகமும் என்னைப் பரவசப்படுத்தின. எனக்கு அதுதான்

உண்மையான படிப்பாக இருந்தது. நல்ல படிப்பாக இருந்தது. விளங்குகிற படிப்பாகவும் இருந்தது (ப.20, வா.வ.)

(தம்பிடிக்கு மூன்று தீப்பெட்டிகள் வாங்கலாம் ப.21) தம்பிடி என்பது ஒரு சல்லியைக் குறிக்கும். மூன்று தம்பிடி கால் அணா, ஆறுதம்பிடி அரை அணா, பன்னிரெண்டு தம்பிடி ஒரு அணா. பதினாறு அணா ஒரு ரூபாய்.

தான் என்ற சொல்லை அழுத்தத்திற்காக மிகுதியாகப் பயன்படுத்துகிறார்.

நான் சிறுவனாக இருந்தபொழுது பணப்புழக்கம் குறைவு. ஆனால் வாழ்க்கைக்குத் தேவையானவற்றில் பற்றாக்குறை இல்லை. என்னுடைய வாத்தியாருக்கு மாதச் சம்பளம் நான்கு ரூபாய்தான். இந்த நான்கு ரூபாயில் அவருக்குக் கோட்டுத்தான். ஜரிகைத் தலைப்பாகைதான். நெய், பால், காய், கனியோடு நல்ல சாப்பாடுதான். கோவில்தான், குளந்தான், உற்றார் உறவினர்களுடன் உறவுதான், மகிழ்ச்சிதான். மொத்தத்தில் வாத்தியாருடைய வாழ்க்கையில் குறை ஒன்றும் இல்லை. அவரும் அவர் குடும்பமும் கலகலப்பாகவே இருந்தார்கள்.

## மொழிநடை பற்றிய டி.கே.சி. கருத்து

"அவ்வீட்டின் மாடத்தும்பர், ஓர் அறையின் கண்ணே இன்னிசைப் பாட்டும், மன்னிசைக் கல்வியும் வல்லாளாய், எழிலும் குணமுமியைந்த பூங்கொம்பராய் மிளிர்தரும் ஓர் இளம் பருவத்துப் பெண் தனது வார்குழல் கோதி முடித்துக் கொண்டு நின்றாள். அப்போழ்தத்து, கரிய மாலனைய காளையொருவன் அவட்குப்பின்புறம் போந்து, அவடன்விழிகளிரண்டையும் தன்னிருகையாலிறுகப் புதைத்துக் கொண்டு நின்றான். அன்னணம் ஒருவன் கண் புதைத்ததுணர்ந்த அந்த நங்கை நீ என்னைத் தொடற்பாலையல்லை என்றனள்".

இப்பேர்ப்பட்ட கரடு முரடான, விரைத்துப்போன பாஷையிலே நாடோடிச் சம்பவங்களைச் தமிழாசிரியர்கள் விஸ்தரித்து வந்தார்கள். பிரமாண்டமான சர்க்கஸ் யானை ஐம்பொறிகளையும் அடக்கி ஒருமுகப்படுத்திக் கீழே கிடக்கும் பட்டாணிக் கடலையை எடுப்பதில் முக்கி முனைந்து எப்படித் திக்கு முக்காடுமோ அப்படி அவஸ்தைப்பட்டார்கள் அந்தக் காலத்துத் தமிழ் எழுத்தாளர்கள். கருத்துக்கு ஒவ்வாத வார்த்தைப்

படாடோபமும், திருகு முறுகலும் சுவையற்ற கோணல் தமிழும் புலமை வேஷம் போட்டுக் கொண்டு நடமாடிய காலம் அது.

அந்தக் காலத்தில் பள்ளி மாணவனாக இருந்த ரசிகமணிக்கு இந்தக் கொடுங்கோன்மை எல்லாம் தாங்க முடியவில்லை. உரைநடை எப்படி இருக்க வேண்டும் என்ற ஆராய்ச்சியில் இறங்கி, சில முடிவுகளுக்கு வந்தார்கள். எடுத்துக் கொண்ட விஷயத்தை, உண்மையோடும், நேருக்கு நேரும் சொல்லக் கற்றுக்கொள்ள வேண்டும். கருத்தும் சொல்லும் சுகமாய்க் கலந்து கைகோத்து நடக்கவேண்டும். அடுப்பங்கரையில் பெண்கள் பேசுகின்ற தமிழிலே எவ்வளவு ஆற்றலும் உணர்ச்சியும் இருக்கின்றன! நாட்டுப்புறத்திலே பட்டிக்காட்டான் பேசுகிற தமிழிலே வகை வகையான சுவையிருக்கிறதே! விஷயத்தைக் குறி பார்த்து அடித்த மாதிரியல்லவா அவன் சொல்லி விடுகிறான். இதையெல்லாம் சிரத்தையோடு தமிழ்ப் புலவர்கள் ஆராய்ந்து, கொச்சையை அகற்றிவிட்டு, நாடோடித் தமிழிலுள்ள ரஸத்தைப் பிழிந்து தமிழ் வசனத்தில் பெய்துவிடவேண்டும். அப்போது தான் தமிழ் எழுத்துக்கு வல்லமையும், வளமும் ஏற்படும் என்று டி.கே.சி. வற்புறுத்தி வந்தார்கள்.

பேச்சுத் தமிழின் வளைவு, நெளிவுகளோடும் பம்மல் பாய்ச்சல்களோடும் பழகினால்தான் ஒரு எழுத்தாளனுடைய தனித்துவம் அவனுக்கே உரிய நடையில் வெளிப்படும். நடை என்றால் என்ன என்பதை அபூர்வமான தெளிவோடும் அதிகாரத்தோடும் ரசிகமணியின் கடிதம் கீழ்க்கண்டவாறு விளக்குகிறது:

ஆங்கில ஆசிரியர்கள் ஸ்டைலைப் பற்றி என்ன எல்லாமோ எழுதுகிறார்கள். எழுத்தில் முக்கியமான காரியம் அதுதான் என்று சொல்லுவார்கள். ஆனால், அது எளிதில் அமைகிறதில்லை என்றும் சொல்வார்கள். ஆங்கில ஆசிரியர்களது ஸ்டைல் இன்னது, இப்படி இருக்கிறது என்றும் நமக்கு எளிதில் தெரிகிறதில்லை. ஏதோ தெரிகிறது. இருட்டுக்குள் ஆளை இனங்காணுகிற கணக்கில் தான்.

ஆனால் தமிழுக்கு வந்தால் (பண்டித உலகத்தைவிட்டு வெளியேதான்) இன்னது ஸ்டைல் என்று லகுவாய்த் தெரிகிறது. ஏன், அன்னம்மாள், தங்கம்மாளுக்கு எழுதிய கடிதத்தில் அவளுடைய தனித்துவம் வெகு ஜோராய்த் துள்ளி ஓடுகிறது.

கருத்தும் சொல்லும் சுகமாய்க் கலந்து கைகோத்து நடக்கின்றன. பெண் குழந்தைகளைப் பார்த்து நாம் பயப்பட வேண்டியதாய்த் தான் இருக்கிறது. கவி என்பதற்கு வந்தால் கம்பரிடத்தில் தான் ஸ்டைல் என்று சொல்ல வேண்டியிருக்கிறது. தற்காலத்துக் கவியில் தேசிக விநாயகம் பிள்ளை அவர்களது கவியில் தான் ஸ்டைல் இருக்கிறது. கவியில் அவர்களது எளிய தூய உள்ளம் பளிங்கில் வைத்த மாதிரி தெரிகிறது. ஆனால் இந்த ஸ்டைலில் ஒரு சங்கடம் இருக்கிறது. அதாவது எழுதுகிறவருக்கு அது தெரியாது என்று சொல்லலாம். ஏனென்றால், அவருக்கே தெரியாமல் அநாயாசமாய் வருவது அது. நாம் தெருவிலோ ரோட்டிலோ நடந்து போகிறோம். (மிலிட்டரி மார்ச் அல்ல) இயல்பாக நடக்கிறோம். அந்த நடையில் நூற்றுக்கணக்கான அம்சங்கள் இருக்கின்றன. ஏன் இருக்காது! உச்சியிலிருந்து உள்ளங்கால் வரையும் எத்தனையோ எலும்புக் கட்டுகள், தசைகள், நரம்புகள் எல்லாம் சேர்ந்து ஒரு கணக்குப்படி ஒத்து வேலை செய்கின்றன. நாம் ஒன்றும் செய்யவில்லை என்று சொல்லலாம்.

ஆனால் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் நடையின் தனிப்பண்பை உடனே கண்டுகொள்கிறார்கள். ஆயிரம் பேர் நடந்துபோய்க் கொண்டிருக்கலாம். ஆனாலும் நம் முகத்தைப் பாராமலே நம்முடைய நடையை இனம் கண்டு கொள்கிறார்கள். நடையில் (உடம்பு சம்பந்தமாகத்தான்) எல்லாருக்கும் ஸ்டைல் வந்துவிடுகிறது. காரணம் என்ன? பாடமாக வைத்துப் பள்ளிக்கூடத்தில் நடையைக் கற்பிப்பதில்லை. ஆனால் எழுத்தில் ஸ்டைல் வரமாட்டேன் என்று சாதிக்கிறது. பள்ளிக்கூடத்துப் பயிற்சிதான் காரணம். மனுஷ தத்துவத்தை எடுத்துவிட்டு, எந்திர தத்துவத்தை மாணவர்களுக்குள் புகுத்திவிடுகிறது. இந்த எந்திர தத்துவத்தின் கோணல்கள், முத்தி, முத்திக் கடைசியில் பரிமேலழகர் நச்சினார்க்கினியர் பண்டிதமணிகளாக முடிகின்றன.

நடையில் ஸ்டைல் இருக்கவேண்டும் என்றால் (கால் இருந்தால் போதாது) உடலுக்குள் உயிர் இருக்க வேண்டும். அதுபோல, எழுத்தில் ஸ்டைல் இருக்க வேண்டும் என்றால் (வார்த்தைகள் இருந்தால் போதாது) உள்ளத்தில் உயிர் அதாவது உண்மை உணர்ச்சி இருக்கவேண்டும்.

ஏதோ டைம்ஸ் சப்ளிமெண்டுக்குக் கட்டுரை எழுதுவது போல எழுத்து நீண்டுவிட்டது. பிள்ளையார் இப்படி ஆயிற்று. இருக்கட்டும். தாங்கள் இருக்கும்போது, எந்தக் கஷ்டமான விஷயத்தையும் தைரியமாய் எழுதத் தோன்றுகிறது. பேசக்கூடத் தோன்றுமல்லவா? அப்படியே எழுதவும் தோன்றுகிறது (க. ப.XLI)

உண்மையான வசனம் மக்கள் பேசும் பேச்சில்தான் இருக்கிறது. சாதாரண மக்கள் இயல்பாகப் பேசுகிற பேச்சுத்தான் உண்மையான வசனம். உண்மையாக இருப்பதால் அது உணர்ச்சியாய் இருக்கிறது. எளிதாய் இருக்கிறது. ஆனால் பள்ளிக்கூடம் போய்வந்த பிறகு உண்மையோடு ஒத்துப்போக முடியாது. விஷயத்தை-உணர்ச்சியை விட்டுவிட்டு வார்த்தைகளை முறுக்கியும் திருக்கியும் வளைத்தும் நெளித்தும் போராடுவதிலேயே போய்விடும் புத்தி. பிறகு எளிமை எப்படி வரும்? அருமை எப்படி வரும்.

மனதில் உதிக்கிற உணர்ச்சியை வெளிப்படுத்தத் திக்குமுக்காடினால், போகப்போக மனது தூர்ந்து போய்விடத்தான் செய்யும்? யோசிக்கிற பழக்கத்தையே விட்டுவிடுகிறது மனம். சாதாரண மக்களுக்கு, பெண்டு பிள்ளைகளுக்கு இந்தத் தொல்லை இல்லை. அவர்கள் எப்பொழுதும் உணர்வோடு இருக்கிறார்கள். தன் உணர்வோடு இருக்கிறார்கள். அதனால் விஷயத்தைக் கண்ணால் பார்க்கிறார்கள். உணர்ச்சியோடு சொல்கிறார்கள். சொற்கள் இயல்பாய் உதித்து வருகின்றன அவர்களிடம். (ப.34, வா.வ.)

உணர்ச்சி சம்பந்தப்பட்ட மட்டில் பெண்கள் ஆடவர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்பதை டி.கே.சி.யின் கடிதங்கள் பல வற்புறுத்துகின்றன. ஒரு கடிதம் இதை வெகு அழகாக எடுத்துச் சொல்கிறது.

உணர்ச்சி அவர்களிடம் (பெண்களிடம்) அளவில்லாமல் இருக்கிறது. அந்த உணர்ச்சியின் அளவையும் வேகத்தையுமே ஆடவர் கண்டதில்லை.

கரும்பும் நாணலும் ஒன்றுதான். பாட்டாணி படி ஓர் இனந்தான். நாணலை என்ன பிழி பிழிஞ்சால் தான் என்ன? சாறு வந்துவிடுமா? வந்தாலும் எவ்வளவுதான் வந்துவிடும் காய்ச்சிச் சர்க்கரை எடுப்பதோ முடியவே முடியாது.

ஆனால் கரும்பு என்றால் வேறு விஷயம். ஒரு கரும்பை ஆலையில் கொடுத்துவிட்டால் ஆலை பிழிந்து கொடுக்கிற சாறு ஓர் உழக்கு. அதாவது கால் பக்காப்படி.

நாணலுக்கும் கரும்புக்கும் உள்ள சம்பந்தந்தான் ஆடவருக்கும் பெண்டிர்க்கும்-உணர்ச்சி சம்பந்தப்பட்ட மட்டில்.

பெண்ணியலை அறியாத பரிமேலழகரைத் தாக்குகிறது. ஒரு கடிதம்.

சான்றோன் எனக் கேட்ட தாய் என்பதற்குப் பரிமேலழகர் சொன்ன அதிகப் பிரசங்கம் தான் தெரியுமே. தாய் பெண்பாலானது பற்றிக் கல்வி கேள்வி அறிவு இவை இல்லை என்பதாயிற்று.

ஆகையால் கேட்டுத்தானே அறிய வேண்டும் சான்றாண்மையை என்பது பெறப்பட்டது என்றார் புத்திசாலி. பரிமேலழகர் ஆடவரே.

பள்ளிக்கூடத்துப் படிப்பினால் வந்த கேட்டையும் அந்தக் காலத்துப் பண்டித உலகத்தின் நிலைமையையும் பல கோணங்களில் விமரிசனம் செய்கின்றன டி.கே.சி.யின் கடிதங்கள். பள்ளிக்கூடங்களில் உண்மைகளை நேரடியாகப் பார்ப்பதில்லை. வெறும் புஸ்தகங்களை வைத்து மாரடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் பண்பாடு வளரவில்லை என்பது டி.கே.சி.யின் கருத்து.

**கவிச்செல்வம்**

கவிச் செல்வம் என்பது அரிய செல்வம். அதற்காக ஒரு இனத்தார் எதையும் ஈடாகக் கொடுத்து விடலாம் என்று தெள்ளத் தெளிந்த ஆசிரியர்கள் சொல்லுவார்கள்.

தமிழரது கவிச் செல்வம் இதர பாஷைகளைக் கவனிக்கும்போது, மிக வளமான செல்வம். ஆயுள் முழுதும் ஒருவர் திளைத்து அனுபவிக்கத்தக்க செல்வம்.

ஆனாலும் இழந்துபோன தமிழ்ச் செல்வத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால் எக்களிப்பைவிட ஏக்கந்தான் அதிகமாகிறது.

**கவி உருவம்**

எந்தக் கலையிலும் உணர்ச்சி பாவந்தான் முக்கியம். அது ஒன்றுதான் வேண்டும் என்றாலும் குற்றமில்லை. முத்தொள்ளாயிரச் செய்யுள் ஒவ்வொன்றிலும் வெகு அற்புதமான உணர்ச்சி பாவங்களைப் பார்க்கலாம். உணர்ச்சியானது அரிய தமிழ்ப் பண்போடும் தாளப் பண்போடும் உருவெடுக்கப் பார்க்கலாம். எவ்வளவுக் கெவ்வளவு உணர்ச்சி பாவத்தோடு நம்முடைய இதயம் ஒட்டுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு கவி உருவத்திலுள்ள அழகும் சுவையும் அற்புதமும் நமக்கு விளங்கும்.

கவி என்று சொல்லும்போது ஏதோ அதிலுள்ள விஷயம் ஒன்றைச் சொல்ல வந்தது என்று சாமான்ய ஜனங்கள் எண்ணலாம். வேறு சிலர், அதிலுள்ள உணர்ச்சியைத் தெரிந்து கொண்டால் போதும் என்று எண்ணலாம். ஆனால், கவியில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, உணர்ச்சியானது பாவ உருவத்தில் வந்து வெளிப்படுகிறதா என்பது தான். இந்த உருவத்தின் மூலமாகவே, கவிஞருடைய உள்ளத்தில் எழும் உணர்ச்சியைப் பார்க்கிறோம். அதோடு, அந்த உணர்ச்சியை வார்த்தை தாளங்களிலுள்ள நேரான, இயல்பான சம்பந்தத்தில் பார்க்கிறோம். அப்படிப் பார்க்கும்போது தான் கவிஞரது இதயத்திலுள்ள அற்புதமான சிருஷ்டி தத்துவம் நம்முடைய இதயத்துக்கும் வந்து சேருகிறது. கவிஞருடைய சிருஷ்டி தத்துவத்தால், கவிஞர் இதயத்தில் பெருகிய ஆனந்தம் அவ்வளவிலும் நாமும் பங்கு கொள்கிறோம். முத்தொள்ளாயிர ஆசிரியர் இரண்டாயிர வருஷத்துக்கு முன் அடைந்த ஆனந்தத்தை இன்று நம்முடைய இதயம்அடைகிறது. நமது பாக்கியம்தான் என்ன!

மலைப்பக்கத்து ஊர்களிலுள்ள மக்களுக்கு ஒரு அனுபவம் உண்டு. இரண்டு மூன்று மைலுக்கு அப்பால் தோன்றும் மலைச்சரிவு ஒன்றை வீட்டுத் திண்ணையிலிருந்து பகலெல்லாம் பார்த்தவண்ணமா யிருப்போம். நீல நிறமாகவும் கண்ணுக்குக் குளுமையாகவும் இருக்கும் மலைச்சரிவு.

சாயங்காலம் ஆகவும், பசுக்கள் மேய்ச்சல் புலங்களை விட்டுத் திரும்பி ஊருக்குள் புகுந்துவரும். மயங்குகிற நேரம். அப்போது திடீரென்று ஒளிவரும். ஒளி ஏது என்று பார்த்தோமானால், திண்ணையிலிருந்து பகலெல்லாம்

பார்த்துக்கொண்டிருந்தோமே, அந்த மலைச் சரிவிலிருந்தே ஒளி வரும். பெரிய நெருப்புப் படலம் அங்கே தோன்றும். நெருப்புப் படலத்தில் பல இடங்களில் சுவாலைவிட்டு எரிவதும் தோன்றும். ஊரார் எல்லாரும், நெருப்பைப் பற்றிப் பேச ஆரம்பிப்பார்கள். இதோடு, இன்னொரு விஷயத்தையும் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

தற்காலம், இரவில் வெளியே போக நேர்ந்தால், காற்றில் அணைந்து போகாதபடி கொண்டுபோவதற்கு விளக்கு வசதிகள் இருக்கின்றன. 'ஹரிக்கேன் லாம்ப்' இருக்கிறது. மின்சார 'டார்ச்' வேறு இருக்கிறது. பூர்வ காலத்தில் கை விளக்குத்தான். அதைக் காற்றடிக்கிற காலத்திலே வெளியே கொண்டுபோக வேண்டுமானால் குடத்துக்குள் வைத்து ஜாலக்காய்க் கொண்டு போவார்கள் பெண்கள். அந்தப் பெண்களுக்கு மாத்திரம் அந்தக் குடவிளக்கு வெளிச்சம் கொடுக்குமே யல்லாது மற்றவர்களுக்கு ஒளி இருப்பதாகவே தெரியாது. வெளியிலே வெளிச்சம் இல்லையென்றால், குடத்துக்குள் விளக்கு இல்லையென்று ஆகுமோ?

**குடத்து விளக்கேபோல்**
**கொம்பன்னார் காமம்**

பாண்டியன் மேல் வைத்த காதல்நோய் பெண்களிடம் சாதாரணமாய் வெளிப்படத் தெரியாது. ஆனால் இதயத்தில் மறைவாக இருந்துகொண்டேதான் இருக்கும். பாண்டியன் பவனி வருவதற்காக அரண்மனையிலிருந்து புறப்பட்டு வீதி வழியாக வந்து விட்டாலோ, அவர்களுடைய காதல் நோய் ஊராரது பேச்சுக்கிடமாய் வெளிப்பட்டுவிடும். நின்ற நிலையிலேயே நிற்பார்கள் அந்தப் பெண்கள். வெறித்துப் பார்ப்பார்கள். சோர்ந்து படுப்பார்கள். இதைவிட வெளிப்படையான காரியம் வேறு என்ன வேண்டும்?

**குடத்து விளக்கேபோல் கொம்பன்னார் காமம்**
**புறப்படா; பூந்தார் வழுதி புறப்படில்,**
**ஆபுகு மாலை அணிமலையில் தீயேபோல்,**
**நாடறி கௌவை தரும்.**

புறப்படா - வெளியாகத் தெரியாது.

கொம்பன்னார் காமம் புறப்படா-பாண்டியன் மேல் பெண்கள் வைத்த காதல் வெளியாகத் தெரியாது. பூந்தார் வழுதி

புறப்படில்-மாலை சூடிய பாண்டியன் பவனி வருதற்காகப் புறப்பட்டுவிட்டாலோ ஆபுகு மாலை-பசுக்கள் மேய்ச்சல் புலங்களிலிருந்து ஊருக்குள் புகும் மாலை நேரத்தில், அணிமலையில்-ஊருக்குப் பக்கத்திலேயுள்ள மலைச்சரிவில், நாடறி கௌவை தரும்-நாட்டார் எல்லாரும், அந்தப் பெண்களது காதல் நோயைத் தெரிந்து வம்பளப்பதற்கு ஏதுவாய்விடும்.

## தமிழுக்கு வாய்த்த அரும் புதல்வன்

இந்த உலகில் சிலர் முஷ்டி யுத்தத்துக்கென்றே பிறக்கிறார்கள். அப்படிப் பிறந்தவர்களில் ஒருவர் வெ.ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள். முஷ்டி யுத்தம் செய்யவேண்டிய அவசியம் இரண்டு கைகளிலும் உள்ள தசை நரம்பு எலும்புகளில் அமைந்து கிடக்கிறது. உடல், உறுப்புக்களில் கிடப்பது ஒருபுறம் இருக்க, ரொம்ப ஆழமாயும் அசைக்க முடியாதபடியும் பதிந்து கிடப்பது உள்ளத்தில்தான்.

கைகுத்துச் சண்டைக்குப் பயின்றிருந்தால், முதலியாரவர்கள் உலகப் பிரசித்தி பெற்ற வீரர்களை ஒரு கை பார்த்திருப்பார்கள். எஞ்சினீர்த் தொழிலில், பிரவேசித்திருந்தால், குறைந்த பக்ஷம் பொதிகை மலையையாவது ஒரு குடை குடைந்து, மலையாளத்து மழை வெள்ளத்தைக் குடைசல் வழியாக வடித்து, தமிழ்நாட்டை வளம்படுத்த முயன்றிருப்பார்கள். அவர்கள் கைக்குமுன் பாறைகள் எல்லாம் நொறுங்கிப் போயிருக்கும்.

எஞ்சினீர்த் தொழில் இல்லை என்றால் ஜாதகம் பொய்த்தா போய்விடும்? பாறைகளும் கருங்கல்லுகளும் தமிழில் இருக்கத்தானே செய்கின்றன.

பதினாறு வயதாய் இருக்கும்போதே தமிழிலுள்ள சிலேடை, திரிபு, யமகம் என்ற தமிழ்க் கற்பாறைகளை உடைக்க ஆரம்பித்து விட்டார்கள். இந்த வர்க்கத்துச் சித்திரக் கவிகள் எவ்வளவு வைரம் பாய்ந்திருந்தாலும் முதலியார் அவர்கள் கைக்கு வந்தால், தாமாகப் பிதிர்ந்து போய்விடும். தமிழ்ப் பாஷை இடம் கொடுக்கக் கூடிய சிலேடை வின்னியாசங்களை எல்லாம் ஒருவாறு அளந்து விட்டார்கள். அதனாலேயே, 'நெல்லைச் சிலேடை வெண்பா'வை (நூறு செய்யுள்) எளிதில் செய்துவிட முடிந்தது. அது அந்தக் காலத்து (ஐம்பது வருஷத்துக்கு முந்திய காலத்துப் புலவர்களுக்கும் கவிராயர்களுக்கும் பெரும்

வியப்பாகவே இருந்தது. சிலேடை யமகங்களிலுள்ள விசித்திரங்களை அனுபவித்துப் பழகியவர்களுக்குத் தான் நெல்லைச் சிலேடை வெண்பாவின் திறம் தெரியவரும்.

தமிழ் நூல்களை முறையாகப் படித்து முடித்தவர்கள் கூட, காஞ்சிப் புராணமும் தணிகைப் புராணமும் 'இருப்புக் கடலை' என்று சொல்லுவார்கள். அவற்றின் பாட்டுக்கள் ஒவ்வொன்றிலும் அநேகமாய்ப் பலமான முடிச்சு, ஒன்றோ இரண்டோ, போட்டு வைத்திருக்கும். ஆனால், முதலியாரவர்கள் எப்படியாவது முடிச்சுக்களை இழை இழையாக அவிழ்த்து, இழைகளைக் கையில் தூக்கி உதறிக் காட்டுகிற மாதிரி, அச்செய்யுட்களிலுள்ள பொருள்களை முறைப்படுத்திக் கருத்தை விளக்கிக் காட்டுவார்கள்.

மேலும், மில்டனுடைய 'சுவர்க்க நீக்கம்' பளுவான கருங்கல் பாறை என்று ஆங்கிலப் புலவர்கள் சொல்லுவார்கள். இதர பாஷைகளில் மொழிபெயர்க்க முடியாதபடி அவ்வளவு கஷ்டமாய் அமைந்தது. அதை ஒரு ஆசிரியர் பிரஞ்சு பாஷையில் மொழிபெயர்க்க ஆரம்பித்துத் திணறிப் போய் விட்டாராம். அப்பேர்ப்பட்ட இதிகாசத்தை இவர்கள் தமிழில் மொழி பெயர்க்கத் துணிந்து, முதற் காண்டத்தை, விருத்தப்பாவில் மொழி பெயர்த்து விட்டார்கள். மூலத்திலுள்ள ஒவ்வொரு விஷயமும் அதன் அடைகளுமே அப்படியே அப்படியே இவர்கள் விருத்தத்தில் அமைந்து கிடக்கும். மூலத்தையும் மொழிபெயர்ப்பையும் ஒத்துப் பார்த்தால், இது பகீரதச் செயலென்றே தோன்றும். ஜி.யு. போப் முதலான ஆசிரியர்கள் இம் மொழிபெயர்ப்பைப் பார்த்து, 'இது ஒரு அசாத்தியமான வேலை' என்று அதிசயித்திருக்கிறார்கள்.

மேலே சொன்னதெல்லாம் முஷ்டியுத்த சக்தி முதலியாரவர்களிடத்தில் அடங்கிக் கிடக்கிறது என்பதைக் காட்டுகின்றன. ஆனால் அந்தச் சக்தியை வெளிப்படையாக இன்றும், அதாவது அவர்களுடைய எண்பதாவது வயதிலும் காணலாம்.

ஏன், சென்ற அறுபது வருஷமாகவே முஷ்டி யுத்தம் சதா செய்துகொண்டே வந்திருக்கிறார்கள். சென்னை மில்லார் காலேஜில் அவர்கள் மாணவராய் இருந்தபோது ஆரம்பித்தது இன்னும் நடந்தே வருகிறது. இங்கிலீஷ் பாஷைதான் முக்கியமாக

வேண்டியது. தமிழ் தெரியவேண்டியதெல்லாம் அலங்காரத்துக்காகத்தான் என்று யாராவது முதலியாரவர்கள் முன்னிலையில் சொல்லிவிட வேண்டியது; அவ்வளவுதான் வீராவேசம் அப்படியே வந்துவிடும்; பொங்கிவிடும். அடங்கிக் கிடந்த முஷ்டியுத்த வீரன் வெளிக் கிளம்பி விடுவான். பக்கத்தில் நிற்க நேர்ந்தவர் பாடு ஆபத்துத்தான்.

ஆனால், இப்போது, தமிழ் மக்களுக்கு முக்கியமான பாஷை- இலக்கியச் சுவையை அனுபவிக்கக் கூடிய பாஷை- தமிழ்தான் என்று எல்லோருமே அங்கீகரித்து வார்த்தையாடுவதால் முதலியார் அவர்களுக்குக் கோபாவேசம் வருவதற்கு அவ்வளவாகச் சந்தர்ப்பமில்லை. இது அவர்களுடைய யோகம். தேசீய உணர்ச்சியோடு கலந்து வந்த தாய் மொழிப்பற்றும் உணர்ச்சியும் தமிழ் நாட்டுக்குப் புதிய யுகம் பிறந்துள்ளதென்று சொல்ல இடந்தருகின்றன. இந்த யுகத்தை வரவேற்பதற்கான ஆர்வமும் களிப்பும் முதலியாரவர்களிடத்தில் இருக்கிற அளவு வேறு யாரிடத்தில் தான் இருக்கக் கூடும்?

சென்ற நூறு நூற்றைம்பது ஆண்டுகளாக, மேல் நாட்டினர், முன்பு என்றும் இல்லாத அளவில், விஷயங்களைப் பகுத்து, உள்ளாகக் கிடக்கும் அமைப்புக்களைக் காணுவதும் கண்டனுபவிக்கிறதுமாய் இருக்கிறார்கள். இந்தப் பகுத்தறிவியலை ஸயன்ஸ் உணர்ச்சி என்று சொல்ல வேண்டும்.

மேல் நாட்டார் நம்முடைய பள்ளிக்கூடங்களில் இன்னும் ஸயன்ஸை நேர்முறையில் சொல்லிக் கொடுக்கிறார்கள் என்று சொல்ல இடமில்லை. ஆகவே, நம்மவர்களுக்கு 'ஸயன்ஸ் உணர்ச்சி' ஏற்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியாது. ஏதோ அங்கொருவர் இங்கொருவர் ஸயன்ஸில் நிபுணராயிருந்தால், அது ஏனையோருக்கு ஸயன்ஸ் உணர்ச்சி இல்லை என்பதை எடுத்துக்காட்டிச் சொன்னதேயாகும். ஆனால், முதலியாரவர்கள் ஸயன்ஸ் உணர்ச்சியை அபூர்வமாக வளர்த்தவர்கள். மேல் நாட்டு ஸயன்ஸ் சம்பந்தமான நூல்களை நெடுகிலும் படித்து, அவைகள் வெளிப்படுத்தும் உண்மைகளில் மோகம் கொண்டவர்கள். ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் வெளியிட்ட 'கல்வி விளக்கம்' என்ற நூலை அவர்கள் தமிழில் மொழிபெயர்த்ததிலிருந்து மேல் நாட்டு ஸயன்ஸ் முறைகளில் அவர்களுக்கு எவ்வளவு ஈடுபாடு என்பது தெரியவரும்.

குதிரை வைத்தியத்தையும் கால்நடை வைத்தியத்தையும் இவர்கள் கற்றபோது, ஏதோ வைத்தியத் தொழிலுக்கு உபயோகப்படும்படியாக மாத்திரம் கற்றார்களென்று கருதக்கூடாது. குதிரை, கால்நடை சம்பந்தமாகவும் அவைகளுக்கும் மனிதனுக்கும் ஏற்பட்டுள்ள தொடர்புகள் சம்பந்தமாகவும் எத்தனை எத்தனையோ நுட்பமான தத்துவங்கள் இருக்கின்றன. அவைகளை ஆராய்ந்து அனுபவிப்பதற்கு ஒருவர் ஆயுள் நாள் போதாது. அவைகளில், நோயுற்ற குதிரையோ காளையோ வந்தால், எப்படி அதனிடம் நெருங்குவது, எப்படி அதைக் கையாளுவது என்பது ஒரு விசித்திரமான கலை. அதைப்பற்றி முதலியாரவர்கள் அனுபவ ரஸத்தோடு பேசும்போது, நமக்கு ஒரு புது உலகத்துக்குள் புகுந்து அநேக அதிசயங்களைக் கண்டுகளிப்பதாகத் தோன்றும். இப்படி அனுபவ ரஸத்தோடு சொல்லுவதில்தான் உணர்வான ஸயன்ஸ் உணர்ச்சி இன்னது என்று தெரியவரும்.

உண்மைகளைக் கண்டதும் எழுதி வைத்ததும் வியக்கத்தக்க காரியந்தான். அதைவிட வியக்கத்தக்கது, அந்த உண்மைகளைப் பல நூற்றாண்டுகளாகப் போற்றி வந்தது தான்.

உண்மைகள் கண்ணால் காணக் கூடியவையல்ல; கையால் பற்றி எடுக்கக் கூடியவையல்ல; உள்ளத்தில் நிற்பன. ஆகவே, அவைகள் மறைந்து போய்விடுவதற்கும் காரணம் உண்டு; மறைந்தும் போய் விட்டன. பெரியார்கள் சொல்லிவைத்த விஷயங்களைப் புறக்கணித்து விட்டு, வெறும் வார்த்தைகளையே சொல்லி வந்தார்கள் பிற்காலத்தவர். பெரியார்கள் பாடிய பாடல்களை அப்படியே பாடிக் கொண்டிருந்தால் போதும் என்று ஏற்பட்டு விட்டது. திருவாசகத்துக்கு உரை சொல்லக் கூடாது என்று சொல்லுவார்கள். பாராயணம் போதும், பொருள் தெரிய வேண்டிய தில்லை என்று ஏற்பட்டு விட்டது. தெய்வப்பாடல் என்று சொல்லும் பாடல்களுக்குப் பின்னால், உண்மையனுபவமும் உணர்ச்சியும் இருக்கின்றன என்ற கொள்கை போய்விட்டது. உள்ளே யிருந்து என்றும் மங்காத பேரொளி வீசிக் கொண்டிருக்கிறது என்பதெல்லாம் கதையாய் முடிந்தது. விளக்கில்லை. வெளிச்சம் இல்ல. லாந்தல் கல்லும் சட்டமும் நிற்கிறது என்று ஆய்விட்டது.

இந்த நாஸ்திகத்தைப் பூர்த்திபண்ண ஆங்கிலக் கல்வியும் தமிழ்நாட்டுக்குள் புகுந்து விட்டது. சமய நூல்களில் ஒன்றுமே

யில்லை. வார்த்தைகளை இப்படியும் அப்படியுமாக, காரியந்தான் வைதிகர்கள் பேசுகிற காரிய மெல்லாம், என்று சொல்ல ஆரம்பித்து விட்டார்கள் ஆங்கிலம் கற்றவர்கள். அவர்கள் பண்டிதர்களைக் கேள்வி கேட்டால் பதில் வருவது காரணகாரிய விளக்கம் அல்ல; வசை நாமாவளிதான்.

ஆங்கிலம் கற்றவர்களைக் குற்றம் சொல்ல இடமில்லை. அவர்களுக்கு உண்மைகளை எடுத்து விளக்குபவர்கள் பள்ளிக்கூடங்களிலும் இல்லை. வைதிகக் குழாங்களிலும் இல்லை. எல்லோருமாக, அயலூர் வண்டிமாடு கட்டவும் கடையாணியைச் சாக்கில் சுற்றி வைக்கவுந்தான் ஏற்படுத்தியது கல்லும் சட்டமும் என்று தானம் வைத்துவிட்டார்கள். நம்பிக்கை பிறக்கமாட்டேன் என்று விட்டது கேட்டவர்களுக்கு.

தமிழுலகம் பொதுவாக இந்த நிலையில் இருந்தது. இருபது வருஷத்துக்குமுன் அப்படித்தான் இருந்தது திருநெல்வேலியும்.

சில நண்பர்கள் திருச்செந்தூருக்குப் போய்விட்டுத் திருநெல்வேலிக்குத் திரும்பி வந்தார்கள். வந்தவர்கள் வடக்கே இருந்து வந்த ஒரு சுவாமிகள் சமய சம்பந்தமாக ரொம்ப அருமையாயும் தெளிவாயும் பிரசங்கங்கள் செய்ததாகவும், தாங்கள் ரொம்ப அனுபவித்ததாகவும் சொன்னார்கள். சுவாமிகளுக்கு ஊர் திருப்பாதிரிப்புலியூர் என்றும் அவர்கள் ஒரு மடாலயத்துக்கு அதிபர் என்றும் சொன்னார்கள்.

சில நாள் கழித்து, திருநெல்வேலி ரயில்வே ஸ்டேஷனுக்கு அடுத்துள்ள தருமபுரம் மடத்தில் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் பரிவாரத்தோடு பல்லக்கில் வந்து இறங்கியிருக்கிறார்கள் என்று செய்தி வந்தது. மறு நாள் சாயங்காலம் நெல்லையப்பர் கோவில் வசந்த மண்டபத்தில் சுவாமிகள் பிரசங்கம் என்று துண்டுப் பத்திரிகையின் மூலம் விளம்பரமாயிற்று. சுவாமிகளைக் கேட்க நானூறு ஐந்நூறு பேர் கூடியிருந்தார்கள்.

சுவாமிகள் ஆசனத்தில் அமர்ந்திருந்தது தனியான காட்சியாய் இருந்தது. ருத்திராக்ஷ மாலையும், ஸ்வர்ணலிங்கம் தாங்கிய வடமும், திருநீற்றுப் பொலிவும், கண்ணுக்கும் மனசுக்கும் விருந்தளித்தன.

பிரசங்கம் ஆரம்பித்தது. வார்த்தையும், அக்ஷரமுமே ஒவ்வொன்றாக நின்று நின்று வெளிவந்து ஒலித்தன. வார்த்தைகள், வார்த்தைகளின் கதி, ஆழ்ந்த குரல் எல்லாம் சேர்ந்து, இதயமே பேசுகிறது என்பதைத் தெரிவித்தன. கேட்டவர்கள் செவிகொடுத்து இதயத்தையே கேட்டார்கள். ஆகவே, பொருளும் உணர்ச்சியும் கேட்டவர்கள் இதயத்துக்குள்ளே சென்று பதிந்து விட்டன.

நேரம் ஆக ஆக, உணர்ச்சியோடு கலந்து வேகம் கொண்டது விஷயம். ஆசிரியருக்கும் கேட்பவர்களுக்கும் தெரியாதபடி வார்த்தைகளும் அதிவேகமாகவே ஓடின. ஆனால், அழுத்தமாவது தெளிவாவது எவ்விதத்திலும் குறையவில்லை.

தமிழோ சாதாரணமான பேச்சில் வழங்குகிற பசுந்தமிழ். அந்தத் தமிழுக்குச் சக்தி இன்னது என்று தெரிய வந்தது; இதயத்தில் எழும் உணர்ச்சிகளை அப்படி அப்படியே பளிங்கில் வைத்துக் காட்டிய மாதிரி விளக்கிக் காட்டியது. சபையிலுள்ள ஒவ்வொருவருக்கும் தம்மோடுதான் நேர் நேராக சுவாமிகள் பேசினதாகத் தோன்றியது; பாஷை எல்லோரோடும் அவ்வளவு ஒட்டிய பாஷை.

விஷயம் கடவுள் தத்துவம். ஆனாலும், எத்தனையோ விஷயங்கள் வந்து வட்டமிட்டுச் சுழித்துப்போயின. நம்மவர் வாழ்க்கையில் உள்ள எத்தனையோ அம்சங்கள் வந்து தெளிவுபட்டு ஓடின. ஒவ்வொன்றும் உணர்ச்சி ததும்பியதாய் இருந்தன; வாழ்க்கையோடு ஒட்டிய உண்மையாகவே இருந்தது. நம்முடைய மனது அங்கங்கே திளைத்து நிற்கும்; அந்த விஷயம் முடிந்ததும், பெருக்கெடுத்துப் போகும் பெரிய விஷயத்தோடு இலகுவாகக் கலந்து கொள்ளும்.

கடவுளுக்கும் நமக்கும் உள்ள சம்பந்தத்தை எடுத்துச் சொல்லும்போது, சுவாமிகள்,

**விறகில் தீயினன்;**
**பாலிற்படு நெய்போல்**
**மறைந்து நின்றுளன்**
**மாமணிச் சோதியன்;**
**உறவு கோல்நட் (டு)**
**உணர்வு கயிற்றினால்**
**முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே**

. . . . . . . . . . . . . . . . . . . . . .

என்ற தனிக்குறுந்தொகைச் செய்யுளை எடுத்தாள நேர்ந்தது. பலர் இந்தச் செய்யுளை உணர்ச்சி யாதொன்றும் இல்லாமல் கையாண்ட காரணத்தால், சாமானியமாகவும் இலைத்ததாகவும் தோன்றியது செய்யுள். ஆனால், சுவாமிகள் அதன் உண்மையில் திளைத்து ஆர்வத்தோடு விளக்கிக் காட்டின மாத்திரத்தில், முன் காணாத உண்மைகளும் உணர்ச்சியும் பாடலில் பொதிந்து கிடப்பதாகப் புலப்பட்டது. நமக்கும் கடவுளுக்கும் உறவாவது, கடவுளுடனேயே ஒன்றியிருக்கிறோம் நாம், வேறாகத் தனித்து நிற்க வில்லை என்ற உண்மைதான். இந்த உண்மையைச் சதா மனசில் வைத்து ஆர்வத்தோடும் ஆனந்தத்தோடும் சிந்திப்போமானால் மறைந்து நின்றுள்ள மாமணிச் சோதியான் முன்னின்றுவிடும் என்று விஷயத்தைக் கூட்டி முடித்தபோது, சபையோருக்கு அந்த அற்புதத் தரிசனமே கிடைத்தது மாதிரியான ஒரு உணர்ச்சி உண்டாயிற்று. எல்லோரும் ஒரே ஆனந்தப் பரவசத்தில் மூழ்கினார்கள். 'ஆகா, இதையெல்லாம் கேட்டு அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லையே' என்று சபைக்கு வராதவர்களை எண்ணிப் பரிதவிக்க வேண்டியதாய் இருந்தது.

அதோடு, தமிழை ஆர்வத்தோடு கற்று வந்தவர்களுக்கு ஒரு வகையில் அவமானமும் வருத்தமும் ஏற்பட்டன என்று சொல்ல வேண்டும். ஏதோ தமிழறிஞர்களை யெல்லாம் தமிழுலகம் அறிந்திருக்கிறது; மதிக்கிறது என்று எண்ணிக் கொண்டிருந்தோமே, சுவாமிகளை இதுவரை அறிந்திராதது போகட்டும்; அவர்களைப் பற்றிக் கேள்விப் பட்டது கூடக் கிடையாதே என்ற அவமானந்தான். வருத்தந்தான்.

ஆம், தமிழனுடைய ஜாதகமே அப்படி நம்மிடம் உயர்ந்த பொருள்கள் எத்தனையோ இருக்கின்றன. அவற்றையெல்லாம் மதிக்கத் தெரியாமல், ஒன்றுமில்லாத படாடோபத்தை, முக்கியமாக, தனக்கு விளங்காத காரியத்தைக் கண்டு மோகித்த வண்ணமா யிருக்கிறானே என்றெல்லாம் நொந்து கொள்ள நேர்ந்தது.

ஆனாலும், கருவூலத்தைக் கண்டு விட்டோம் என்ற ஆனந்தத்துக்குக் குறைவில்லை. திருநெல்வேலிப் பிரசங்கம் முகூர்த்தத்தில் நடந்தது என்று சொல்ல வேண்டும்.

தொடர்ந்து பத்துநாளுக்கு மேலாகவே திருநெல்வேலியில் பிரசங்கம் நடந்தது. கேட்க வந்தவர்களின் தொகை

அதிகரித்ததால், வசந்த மண்டபத்தை விட்டு மேலப் பிராகாரத்தில் பிரசங்கத்தை நடத்த நேர்ந்தது.

ஓம்

டி.கே. சிதம்பரநாத முதலியார்
திருக்குற்றாலம்
தென்காசி
10.11.48

அருமைப் புதல்வி

வேலம்மாளுக்கு

உங்கள் அன்பான 3உக் கடிதம் இன்று தான் கைக்கு வந்தது. போஸ்ட் முகரைப் பார்த்தால் ஒன்றும் விளங்கவில்லை ஆனைகுளம் எங்கிருக்கிறதென்றே எனக்குத் தெரியவில்லை.

விலாசம் தெளிவாகத்தான் எழுதியிருக்கிறது. போஸ்டாபீஸ் கையெழுத்தில் கோழி கிண்டிய காரியமாக இல்லை. எப்படியோ பெரிய வட்டம் சுற்றி ஒரு வாரம் கழித்து வந்திருக்கிறது. என்ன ஆனாலும் கைக்கு வந்து விட்டதே. அது பற்றி மிக்க திருப்தி.

பதில் எழுதுவதில் தம்பி முந்திக் கொண்டார்கள் என்று எழுதியிருக்கிறீர்கள். ஆம் உடனே எழுதிவிட்டார்கள். வெகு அருமையாகவும், அழகாகவும் எழுதியிருக்கிறார்கள். படிக்கப் படிக்க ஆனந்தத்தைக் கொடுக்கிறது. அதற்குப் பதிலும் எழுதியிருக்கிறேன். வந்து சேர்ந்திருக்கும். அருமைப் படுத்துவதற்கு நீங்களும் தம்பியும் கிடைத்த பிறகு எனக்கு யாதொரு குறைவும் இல்லை. ஆனாலும் ஓர் ஆசை கொஞ்சம் அதிகமாகவே உள்ளத்தில் வந்து வந்து போகிறது. அதாவது ரொம்ப நாளாக ஆயுள் நீடிக்க வேண்டும் என்ற ஆசைதான்.

இவ்வளவு ஒத்த உள்ளத்தோடு கலையையும் தமிழையும் அனுபவிக்கச் சகாக்கள் இருக்கும்போது உலகம் ஆனந்தமயமாகத் தானே இருக்கும். அந்த உலகத்தில் சாவகாசமாகச் சப்பணம் போட்டு உட்காரலாம் என்று தான் தோன்றுகிறது. இப்படித் தோன்றுகிறதே அதைப் பற்றியே சந்தோஷந்தான்.

திருச்சினாப்பள்ளி, சீவைகுண்டம் அனுபவங்களைப் பற்றி எழுதியிருந்ததை ரொம்பவும் அனுபவித்திருக்கிறீர்கள். வாஸ்தவந்தான். நீங்கள்தான் என்னுடனேயே இருக்கிறீர்களே.

ஏதேனும் ரஸமான, உண்மையான விஷயத்தைப் பேச நேரும்போது நீங்கள் இல்லையே என்று மனசுக்குத் தோன்றும். பல சந்தர்ப்பங்களில் இப்போதெல்லாம் தோன்றிக் கொண்டிருக்கிறது. திருச்சி மாதர் சங்கத்திலும், சீவைகுண்டம் குமரகுருபரர் புஸ்தகாலயத் திறப்பு விழாவிலும் தெளிவாய்த் தோன்றியது. இது ஒரு சபலம்.

சீவைகுண்டத்தில் வைத்து "பாலால் கழிஇ" என்ற பாடல் ஞாபகத்துக்கு வந்திருக்கலாம். எனக்கு வரவில்லை. உங்களுக்கு வந்து விட்டது. பலே பேஷ்.

நீங்களும் தம்பியும் சதா என் உடல் நலத்தைப்பற்றி ஆத்திரப்பட்டுக் கொண்டே இருக்கிறீர்கள். ஆன்ம சக்தி என்று ஒன்று இருக்கலாம் என்றுதான் எண்ணுகிறேன். அந்தக் காரணத்தினால் தான் போலிருக்கிறது எனக்கு உடம்புதேறி வருகிறது. காலில் புண்ணும் குணமுகம் காட்டி வருகிறது. டாக்டர் புது வகையில் சிகிச்சையும் செய்து வருகிறார். மருந்து, டாக்டர், நீங்கள், கடவுள் எல்லோருமாகச் சேர்ந்துதானே காரியம் நடக்க வேண்டும்.

என் கடிதம் ஒருநாள் தாமதப்பட்டு வர நேர்ந்தால் உங்கள் உள்ளத்தில் சஞ்சலம் உண்டாய் விடுகிறது. உள்ளத்தை அப்படிப் படைத்து விட்டான் இறைவன். அதை நன்றாய் உணருகிறேன் நான். உணரத்தானே முடியும். வேறு என்ன செய்ய முடியும்?

வாஸ்தவந்தான். தம்பியும் எழுதியிருந்தார்கள். அ. சீனிவாசராகவன் என்னைப் பாராட்டி உங்கள் இருவரிடமும் பேசி இருக்கிறார். கடிதத்திலும் பாராட்டி எழுதியிருக்கிறார். நம்மோடு, தம்பி சொல்லுகிறது போலக் கலந்து கொள்ள முன் வருகிறார். மிக்க சந்தோஷம். "எத்தனை ஆசிரியப் பதவி வகித்த போதிலும் மனச்சாட்சி போய்விடவா செய்யும்" என்று வெகு அழகாய்ச் சொல்லுகிறீர்கள்.

அன்னம் எழுதிய கடிதம் எவ்வளவு அழகாய் இருந்தது. தங்கத்துக்கு ரொம்ப சந்தோஷம். பொதுவாக ஆங்கிலத்திலுள்ள உண்மையான இலக்கியங்கள் கடிதங்கள் எழுதி எழுதிப்

பழுத்தவைகள் என்று சொல்லுவார்கள். பள்ளிக்கூடத்து வகுப்பில் "காம்போஸிஷன்" எழுத, எழுத, எழுதுவது குட்டிச் சுவராய்த்தான் போய்விடும். பள்ளிக்கூடம் அனேகரை 50, 60, வயது ஆகியும் விட்டபாடாக இல்லை.

"தலைஎழுத்து" அவ்வளவு ஆழமாய்ப் பதிந்து விட்டது. அவர்கள் அப்பாவிகள் என்ன செய்வர்கள்!

ராஜபாளையத்திலிருக்கிற சிறிய தாயார் மகளுக்குத் தங்கம் 31ஆம் தேதி ஒரு கடிதம் எழுதியிருக்கிறாள். அதற்கு நகல் இத்துடன். வாக்கியங்களும் நொடிப்புகளும் எதேச்சையாக ஓடுகின்றன கடிதத்தில். அந்தக் காலத்தில் நான் பி.ஏ. வகுப்பில் படித்துக் கொண்டிருந்த போது இதுபோல எழுத வராது. வரவே வராது. அப்போதைய ஆசிரியர்கள் மேல் ஆணையிட்டுச் சொல்லுகிறேன்.

புஸ்தகத்தைத் தொடாமலே பேசிக் கொண்டும் கடிதம் எழுதிக் கொண்டும் ஒருத்தி இருந்து விட்டால் பேராசிரியை ஆகாமல் எப்படி இருக்க முடியும் என்று கேட்கிறேன்.

அன்னம் தங்கம் இருவர்களையும் பார்த்தால் பயமாகத்தான் இருக்கிறது. இருவர்களையும் என்றால் கடிதத்தைத் தான். முகத்தைப் பார்க்கத்தான் ஆசையாய் இருக்கிறதே. பால் வடிகிறதே.

இங்கே கர்னாடக ராகங்கள், பதங்கள், நந்தனார் கீர்த்தனங்கள் எல்லாம் அருவியோடு போட்டு போட்டுப் பொழிந்து கொண்டிருக்கின்றன. சாஸ்திரி அம்மாளைச் சங்கீத உலகம் அறியாது. பத்திரிகை உலகம் (ஒரு வக்கீல் நண்பர் குறிப்பிட்டது) எப்படியேனும் போகட்டும்; சங்கீத உலகம் தெரியாமல் இருக்கிறது. செவிடாய்த்தான் இருக்கிறது. எந்த இதயக் கல்லையும் கரைக்கக் கூடியதாக இருக்கிறது அவர்கள் பாடும்போது. பாகவதர்கள் பாடும் போது எந்த இளகிய இதயமும் கல்லாய்ப் போய்விடும். குண்டுக் கல்லுகள் தான். கவல் எடுக்கலாம்.

இங்கே எத்தனையோ அற்புதமான பாடல்களை முக்கியமாகக் கம்பரது பாடல்களைச் சாஸ்திரி அம்மாளும் நானுமாக அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். அனுபவிக்கும் போதெல்லாம் வேலம்மாளும் தம்பியும் இங்கில்லையே

அனுபவிக்க, என்று சொல்லிக் கொள்ளுவோம். கம்பர் அப்படி அநாதையாகத் தானே இருக்கிறார்.

குழந்தைகள் எல்லாருக்கும் என் அன்பு. இரண்டு திருமலைகளையும் விசாரித்ததாகச் சொல்ல வேண்டும். நீங்கள் எல்லோரும் எப்போது வருவீர்களோ.

அன்பன்
டி.கே. சிதம்பரநாதன்

## துணை நூல்கள்


1. ரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார், வித்வான் ல. சண்முகசுந்தரம், சாகித்திய அகதமி வெளியீடு.
2. ரசிகமணி டி.கே.சி. தமிழ்க் களஞ்சியம், இலக்கியக் கட்டுரைகள், ரசிகமணி டி.கே.சி. வெளியீடு, மகாகவி பாரதி அறநிலை, 62, ஜீ.வி. ரெசிடென்சி, சௌரிபாளையம், கோயமுத்தூர்-641 028, முதல் பதிப்பு, மார்ச், 2004.
3. ரசிகமணி டி.கே.சி. கட்டுரைகள், ரசிகமணி டி.கே.சி. பொதிகைமலைப் பதிப்பு-2, அனுமந்தபுரம் தெரு, தென்காசி-627 811, முதல் பதிப்பு, ஜுலை, 2000.
4. முத்தொள்ளாயிரம்- டி.கே.சிதம்பரநாத முதலியார் எழுதிய உரைக்குறிப்புக்களுடன் பொதிகைமலைப் பதிப்பு, திருக்குற்றாலம், தென்காசி, முதல்பதிப்பு, 1943, 1946, 1957.
5. இதய ஒலி, டி.கே.சிதம்பரநாத முதலியார், பொதிகைமலைப் பதிப்பு, திருக்குற்றாலம், தென்காசி, முதல்பதிப்பு, 1941, 1947, 1958.
6. ரசிகமணி கடிதங்கள் தொகுப்பு, எஸ். மகராஜன், டி.கே.சி. வட்டத்தொட்டி, 6, என் தெரு, கீழ்ப்பாக்கம் தோட்டம், சென்னை-600 010, முதல் பதிப்பு, செப்டம்பர், 1979.
7. கம்பர் தரும் ராமாயணம், டி.கே.சி. முதல் பாகம், 31-10-1951, இரண்டாம் பாகம்-1953, மூன்றாம் பாகம், 1955.

# கடித இலக்கியப்பணி

டி.கே.சி. தம்முடைய இலக்கிய நண்பர்கள் பலரோடும் உறவினரோடும் கடிதத் தொடர்பு வைத்திருந்தார். தனித்தனித் தொகுப்பு நூல்களாக வெளியிடும் அளவிற்கு இவர் எண்ணற்ற கடிதங்கள் எழுதினார். கடித இலக்கியக் கலையை வளர்த்தவர்களுள் டி.கே.சி.யும் ஒருவராவார். கடிதக் கலைப் படைப்பில் இவர்தம் பங்கு குறிப்பிடத்தக்கது. கடித இலக்கியத்திற்குப் பெரும்பணியாற்றிய இவருடைய கடிதங்கள் வாயிலாக இலக்கியம் பற்றிய இவர் கொள்கை, மொழி பற்றிய கண்ணோட்டம், இவர்தம் பண்பு நலன்கள், பிறர் இவர் மேல் வைத்த அன்பு, அக்காலச் சூழ்நிலை, இவரோடு அளவளாவிய அறிஞர் சிலர் பற்றிய செய்திகள் முதலானவற்றை இக்கட்டுரையில் நன்கு அறியலாம்.

### கடிதம் என்ற சொல்லின் விளக்கம்

"உள்ளத்திலிருந்து தானாக எழுகின்ற இலக்கியச் சார்பற்ற படைப்பாகித் தனி வாழ்வுக்குரிய அந்தரங்கத்திற்குரிய உரையாடலுக்கு மாற்றாக விளங்குவதே கடிதம் எனப்படுகிறது" என ஆங்கிலக் கலைக்களஞ்சியம் கடிதம் என்ற சொற்கு வரையறை தருகின்றது. இதனால் கடிதக்கலை, 'வாழ்க்கையுடன் இணைந்த கலை', 'மிகக் குறைந்த கலைச் சாயலுடைய கலை' என்னும் சிறப்புப் பெயர்களைப் பெறுகின்றது. எல்லோரும் எளிதில் கையாளக்கூடிய அருமையுடையது கடிதக் கலையாகும். இதற்கென்று வேறு எந்த விதிமுறைகளும் இல்லை.

The Encyclopaedia Britannica. p.660 (1953).

### கடிதம் கலையாகும் நிலை

உள்ளத்து உணர்வு மொழிவாயிலாகச் சீரிய வடிவம் பெறும்போது அஃது இலக்கியமாகிறது. பலராலும் நன்கு மதிக்கப்படுகிறது. கடிதக் கலையை ஆற்றலுடையதாக்கிய ஜேம்ஸ் ஜாய்ஸ் என்பார் ஒரு பொருளை அழகானதென்று கூறுவதற்கு மூன்று அம்சங்கள் வேண்டும் எனக் கூறுகிறார். 1. ஒருமைப்பாடு,

2, இனிமை, 3. தனித்தன்மை என்னும் இவை மூன்றும் கடிதக் கலைக்கு முற்றும் வேண்டப்படுவன. உலகில் வாழும் மக்களின் மனித இயல்புக்குப் பொருந்துமாறு கருத்துக்கள் கலைத்துறையில் கையாளப்படுதல் கலைத் தகுதியை உயர்த்துவதாகும்.

### கடித வகைகள்

உலக மொழிகளில் கடிதக் கலையும் அதன் வகைகளும் இன்றும் போற்றப்பெறுகின்றன. வரலாற்றின் புதிய எல்லைக்கற்களை ஊன்றிய புரட்சிகளின் முன்னும் பின்னும் உள்ள நிலைகள், ஆன்மீக விளக்கங்கள், ஒழுக்கக் கோட்பாடுகள், காதலின் பல்வேறு பரிமாணங்கள், தனிமனித அனுபவங்கள் முதலிய பலவற்றையும் காட்டும் கடித இலக்கியத்தை ஆங்கில ஆய்வாளர் மூன்று வகைகளாகப் பகுத்துள்ளனர். 1. தனி நபர் கடிதம் அல்லது அந்தரங்கக் கடிதம், 2. அலுவற் கடிதம், 3. திறந்த கடிதம் என்பன அவை.

### கடிதம் இலக்கிய வகையாதல்

இலக்கியங்களில் ஓர் உறுப்பாக இடம்பெற்றுவந்த கடிதம், இருபதாம் நூற்றாண்டில் ஓர் இலக்கிய வகையாக உருப்பெறத் தொடங்கிற்று. கவிதை வடிவில் இடம்பெற்ற கடிதங்கள், உரைநடை வடிவத்தைக் கொண்ட புதின இலக்கியம் ஓர் இலக்கிய உத்தியாகப் பயன்படலாயின. மறைமலையடிகளின் 'கோகிலாம்பாள் கடிதங்கள்' இதற்குச் சான்றாகச் சொல்லலாம். கடித இலக்கியம் என்பது, மனிதனுடைய உள்ளத்தில் உதிக்கும் எண்ணங்களையும் எழுச்சிமிக்க உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தும் ஒரு கருவியாக விளங்குகிறது.

ஆங்கிலத்திலும் பிற மேனாட்டு மொழிகளிலும் கடித இலக்கியம் பெருவளர்ச்சியடைந்த துறையாக விளங்குகிறது. அறிஞர் பலரின் கடித இலக்கியங்கள் இறவாப் புகழ் பெற்று விளங்குதலை அறிய முடிகிறது. ஆங்கிலத்தில் ஹரேஸ் வால்போல், செஸ்டர் ஃபீல்டு, கிரே, கூப்பர் ஆகியோரும், ஜெர்மனியில் ஷில்லரும், பிரெஞ்சில் மதாமெ-தே-செவிஞ் ஆகியோரும் இத்துறையில் குறிப்பிடத்தக்கவராவர்.

## தமிழில் கடித இலக்கியம்

'கோகிலாம்பாள் கடிதங்கள்' என மறைமலையடிகள் தாம் எழுதிய ஒரு புதினத்திற்குப் பெயரிட்டது இவ்வகையில் திருப்புமுனையாகும். சமுதாய அரசியல் விழிப்புணர்ச்சியை உருவாக்க அண்ணாதுரை இவ்விலக்கிய அமைப்பைப் பெரிதும் பயன்படுத்திக் கொண்டார். 'தம்பீ!' எனத் தொடங்கி அவர் எழுதிய கடிதங்கள் புகழ்பெற்றவை. அவரைத் தொடர்ந்து மு. கருணாநிதியும் தம் கட்சித் தொண்டர்களை, 'உடன்பிறப்பே' என விளித்துக் கடித வாயிலாகப் பல்வேறு கருத்துக்களையும், செய்தி விமர்சனங்களையும் அவர்களுக்குத் தெரிவித்து இவ்விலக்கிய வளர்ச்சிக்குக் காரணமாகிறார். மு. வரதராசனர், கற்பனைக் கடிதங்கள் (அன்னைக்கு, தம்பிக்கு, தங்கைக்கு, நண்பர்களுக்கு. . ) எழுதித் தமிழ் இலக்கியத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார்.

> கடிதம் காந்தம்போல் கவர்ச்சி மிக்கது. . . . எண்ண ஊர்தியான இதனை இலக்கிய வண்ண ஊர்தி ஆக்கியவர் சிலர். தமிழிலக்கியத்தில் கடித இலக்கியத்திற்குக் கால்கோள் செய்தவர் மு.வ. கட்டடம் எழுப்பியவர் அண்ணா, கைவண்ணம் காட்டுபவர் கலைஞர். - முத்துச்சண்முகன், மு.வ., கடித இலக்கியம் - கண்ணோட்டம், ப.viii)

என முத்துச்சண்முகன் கூறுவது இங்கு எண்ணத்தக்கது.

## தமிழ்க் கடித இலக்கியக் கர்த்தாக்கள்

தமிழ்த்தென்றல் திரு.வி.க., நாவலர் சோமசுந்தர பாரதியார், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், ந.மு. வேங்கடசாமி நாட்டார், பரிதிமாற் கலைஞர், உ.வே. சாமிநாதையர், வ.உ. சிதம்பரனார் முதலானோர் அண்மைக் காலத்தில் வாழ்ந்து கடித இலக்கியத் துறையை வளப்படுத்தியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.

## டி.கே.சி.யும் கடித இலக்கியமும்

தமிழ்க் கடித இலக்கியச் செழுமைக்குக் காரணமாக விளங்கியவர்களுள், டி.கே.சி.யும் ஒருவர். வாழ்க்கையின் பலதிறப்பட்ட துறைகளைப் பொருளாகக் கொண்டனவாய் இவர் எழுதிய கடிதங்கள் பல. தமிழறிஞர் பலர் கடிதங்களின் அமைப்பு, மொழிநடை ஆகியனவற்றிற்கும் இவர்தம் கடிதங்களின்

அமைப்பு, மொழிநடை ஆகியனவற்றிற்கும் இடையில் பெருத்த வேறுபாடுண்டு. டி.கே.சி.யின் கடிதங்கள் நேருக்கு நேர் பேசுவது போன்ற அமைப்பினைப் பெற்றுள்ளன. பேச்சு மொழியையே கடித இலக்கிய மொழியாகவும் இவர் கையாண்டுள்ளார். இதனால் இவர் கடிதங்களில் எளிமைத் தன்மையும், பிற கடிதங்களுக்கில்லாத தனித்ததொரு சுவையையும் காணலாம்.

வாழ்க்கையைப் பல்வேறு கோணங்களில் சுவைத்து, அச்சுவையனுபவங்களைப் பற்றி டி.கே.சி. தம்முடைய கடிதங்களில் பரக்க எழுதினாலும் பெரும்பாலும் இலக்கிய இரசனையைப் பற்றியே மிகவும் எழுதினார். இவர் தம் இலக்கிய நண்பர்களோடு பரிமாறிக்கொண்ட எண்ணங்கள் கடிதங்களாக எழுதப் பெற்றன. அக்கடிதங்கள் அனைத்தும் இவருடைய இலக்கிய நண்பர்களாலேயே நூல் வடிவாகத் தொகுக்கப் பெற்றன. அவை வட்டத்தொட்டிப் பதிப்பாகவும், பொதிகைமலைப் பதிப்பாகவும் வெளிவந்துள்ளன.

டி.கே.சி.க்கு இலக்கியத் துறையில் நண்பர்கள் பலர். சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார், திருப்புகழ் மணி, கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, திவான் பகதூர் ஆவுடையப்ப பிள்ளை, கல்கி, இசையுலக மேதை எம்.எஸ். சுப்புலட்சுமி, சதாசிவம், பால் நாடார், பாஸ்கரத் தொண்டைமான், ஜஸ்டிஸ் மகாராஜன், கி. சந்திரசேகரன், மீ.ப. சோமு, ராஜேஸ்வரி நடராஜன், ஜி.சி. பட்டாபிராம் போன்றோர் இவர்தம் இலக்கிய நண்பர்களுள் முக்கியமான சிலராவர். இவர்கள் அனைவர்க்கும் டி.கே.சி. கடிதங்கள் எழுதியிருப்பினும், பாஸ்கரத் தொண்டைமான், எஸ். மகாராஜன், வேலம்மாள் (எஸ். மகாராஜன் தமக்கையார்), நீலாவதி அம்மையார், ராஜேஸ்வரி, நடராஜன், ஜி.சி. பட்டாபிராம் ஆகியோருக்கு இவரெழுதிய கடிதங்களே தொகுக்கப்பெற்று நூல் வடிவு பெற்றுள்ளன. இவர்களோடு ராஜாஜி, திருப்புகழ் மணி, தேசிக விநாயகம் பிள்ளை, டாக்டர் திருமூர்த்தி, பால் நாடார், சிவஞானம் பிள்ளை ஆகியோருக்கு எழுதப்பட்ட கடிதங்களும் தொகுக்கப்பட்டுள்ளன. கல்கிப் பத்திரிக்கையின் ஆசிரியராக மீ.ப. சோமு திகழ்ந்த காலத்தில் 'டி.கே.சி. கடிதங்கள்' என்ற தலைப்பில், சில கடிதப் பகுதிகள் கல்கியில் வெளிவந்தன. எனினும், ஒவ்வொரு கடிதமும், யார் யாருக்கு எழுதப்பட்டது என்ற குறிப்பு அதில் கொடுக்கப்படவில்லை.

## வெளியான கடித நூல்களின் பெயர்கள்

ஜி.சி. பட்டாபிராமுக்கு டி.கே.சி. எழுதிய கடிதங்கள், 'ரசனையின் ஒலி' ஒன்ற பெயரில் பீக்காக் பப்ளிகேஷன்ஸ் வெளியீடாக வந்துள்ளன. ராஜேஸ்வரி நடராஜனுக்கு இவர் எழுதிய கடிதங்கள், 'பேசும் கடிதங்கள்' என்ற பெயரில் தொகுக்கப்பட்டு நூலாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. இவை டி.கே.சி. வட்டத்தொட்டிப் பதிப்பாக வெளிவந்தவை. 'ரசிகமணி கடிதங்கள்' என்ற பெயரில் நீதிபதி எஸ். மகாராஜன் தொகுத்தவை, டி.கே.சி. வட்டத்தொட்டி வெளியீடாக வெளிவந்துள்ளன. இத்தொகுப்பில் எஸ். மகாராஜனுக்கும் இவருடைய தமக்கையார் வேலம்மாளுக்கும் எழுதப்பட்ட கடிதங்கள் இடம்பெற்றுள்ளன. 'ரசிகமணி டி.கே.சியின் கடிதங்கள்' என்ற பெயரில் தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் தொகுத்தவை பொதிகைமலைப் பதிப்பாக வெளிவந்தன. இத்தொகுப்பில் இராஜாஜி, திருப்புகழ்மணி, தேசிக விநாயகம் பிள்ளை, டாக்டர் திருமூர்த்தி, பால் நாடார், சிவஞானம் பிள்ளை ஆகியோருக்கு டி.கே.சி. எழுதிய கடிதங்கள் இடம் பெற்றுள்ளன. டி.கே.சி. எழுதிய எண்ணற்ற கடிதங்களில் இவையே நூல் வடிவம் பெற்றனவாய்த் தெரிய வருகின்றன. டி.கே.சியின் கடிதங்களை எல்லாம் தொகுத்து வெளியிடுவதற்குத் தமக்கு உண்டான ஆர்வம் குறித்துத் தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் பின்வருமாறு கூறுகிறார்.

> 1946ஆம் வருஷம், பதினைந்து வருஷங்களுக்கு முன் நான், 'ரசிகமணி டி.கே.சி.' என்று ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டேன். அப்புத்தகத்தில் பழைய நினைவுகள் என்ற தலைப்பில் டி.கே.சி. எனக்கு எழுதிய கடிதங்களின் பகுதிகளை வெளியிட்டிருந்தேன். அதனைப் பார்த்த அன்பர்கள் எல்லாரும், டி.கே.சி.யின் கடிதங்களை எல்லாம் தொகுத்து வெளியிட்டால் அதுவே ஒரு பெரிய இலக்கியப் பொக்கிஷமாக இருக்குமே என்று எழுதினார்கள். இப்படி நண்பர் பலர் காட்டிய ஆர்வம் காரணமாகக் கிட்டத்தட்ட இருபத்தைந்து நண்பர்களிடமிருந்து கடிதங்களைச் சேகரித்து வகைப்படுத்தி அச்சிட்டேன். இந்தத் தொகுப்பு 1948ஆம் வருஷமே அச்சிடப்பட்டு முடிந்துவிட்டாலும் சில தவிர்க்க முடியாத காரணங்களால் உடனே வெளியிட

> முடியவில்லை. அப்போது எனக்கிருந்த ஆர்வத்தைக் குலைத்து விட்டதின் காரணமாக இந்நாள்வரை இந்த அச்சுப் பிரதிகள் கவனிப்பாரற்று ஒரு மூலையில் கிடந்தன. இந்த வருஷம் (1961) நடக்கும் டி.கே.சி. நினைவு விழா மிகச் சிறப்புடையது. அதனால் பழைய சோர்வுகள் நீங்கி, இப்புத்தகத்தை வெளிக்கொணர விரும்பினேன். நண்பர் திரு. எஸ். மகாராஜன் அவர்களும், பொதிகைமலைப் பதிப்பகத்தின் நிர்வாகி தீப. நடராஜனும் புத்தகம் வெளிவருவதில் மிக்க ஆர்வம் காட்டினார்கள். அவர்களது ஆர்வமே இப்புத்தகம் இன்று வெளிவருவதற்கு முக்கியக் காரணம்.
>
> (பாஸ்கரத் தொண்டைமான் (தொ.ஆ)
> டி.கே.சியின் கடிதங்கள், முன்னுரை, ப.iii)

## கடிதம் எழுதுதல் பற்றிய டி.கே.சியின் கொள்கை

சாதாரணமாக நூல்கள் எழுதுதலைக் காட்டிலும், தம்முடைய் கருத்துக்களைப் பிறரிடம் பரிமாறிக் கொள்வதற்கு உதவி செய்யும் கடிதங்கள் வரைவதில் டி.கே.சி. பேரார்வம் காட்டினார். இது பற்றி எஸ். மகாராஜன் குறிப்பிடுகையில்,

> டி.கே.சி.க்குத் தம்மிடம் ஒத்த உள்ளம் படைத்த அன்பர்களிடம் கவிதையையும் சமயத்தையும் பற்றிப் பேசுவதிலே எவ்வளவு ஆனந்தம் இருந்ததோ அவ்வளவு ஆனந்தம் அவர்களுக்குக் கடிதம் எழுதுவதிலேயும் இருந்தது.
>
> (மகாராஜன், எஸ்., (தொ.ஆ)
> ரசிகமணி கடிதங்கள், முன்னுரை, ப.iii)

எனக் குறிப்பிடுவார். இவர் தமிழில் எழுதி வெளியிட்ட நூல்களினும், வரைந்த கடிதங்களே பெரும்புகழ் பெற்றவையாகத் திகழ்கின்றன. கவிதையின் உயிர்நிலை அதன் எளிமையில்தான் உள்ளது என இவர் கருதியது போன்று, கடிதத்தின் உயிர்நிலையும் அதன் எளிமையிலேயே அடங்கியுள்ளது என எண்ணினார். இதனை மிக எளிய தமிழில் காணப்படும் இவர் தம் கடிதங்களே மெய்ப்பிக்கும். பேச்சுத் தமிழையே கடிதங்கள் எழுதுவதற்கும் பயன்படுத்த வேண்டும் என்பது இவர்தம் கடிதம் பற்றிய

கொள்கையாகும். அப்போதுதான் யாருக்கு எழுதுகிறோமோ அவரையே முன்னிறுத்தி அவரிடம் நேருக்கு நேர் பேசுவது போன்ற உணர்ச்சியைப் பெறமுடியும் என நினைத்தார். இவருடைய எல்லாக் கடிதங்களும் இக்கொள்கையின் அடிப்படையிலேயே உருவானவை. இது பற்றி ராஜேஸ்வரிக்கு இவர் எழுதிய கடிதம் ஒன்றில் தாமே குறிப்பிட்டுள்ளார். அக்கடிதப் பகுதி பின்வருமாறு:

> பிச்சம்மாளுக்கு எழுதிய கடிதத்திலிருந்து நல்ல முறையில் கடிதம் எழுதுவதற்கு யுக்தி இன்னதென்று தெரிந்துகொண்டேன். யாருக்கு எழுதுகிறோமோ அந்த ஆசாமியைக் கண்முன் நன்றாய் இருத்திக் கொள்ளவேண்டும். பிச்சம்மாளை அப்படி நீ இருத்திக் கொண்டாய். கடிதம் அற்புதமாய் வந்துவிடுகிறது.
>
> (ராஜேஸ்பரி நடராஜன் (தொ.ஆ), பேசும் கடிதங்கள், ப.15)

இதனாலேயே இவர் கடிதங்கள், தமிழில் இதுவரை எழுதப்பட்ட கடிதங்களினும் தனிவகைக் கடிதங்களாகப் போற்றப்படுகின்றன.

### டி.கே.சி. கடிதங்கள் பற்றிப் பிறர் கருத்து

டி.கே.சி., ஜி.சி. பட்டாபிராமோடு கலை, இலக்கியம், சிற்பம், பரதம், சங்கீதம் ஆகியனவற்றுள் தமக்குண்டான அனுபவங்களைப் பற்றிக் கடிதத் தொடர்பு கொண்டார். அக்கடிதங்களில் எல்லாம் தாம் எளிமையையும் தெளிவையுமே கண்டதாகப் பட்டாபிராம் எழுதியுள்ளார். 'எவ்வளவு தெளிவாகத் தம் அபிப்ராயத்தை எழுதுகிறார். இதற்குமேல் தெளிவாக யாராலும் எழுத முடியாது' என்பது அவரது பாராட்டுரை.

டி.கே.சி. ஜி.சி. பட்டாபிராமுக்கு எழுதிய கடிதங்களின் தொகுப்பை அறிமுகப்படுத்தும்போது டி.கே.சி.யின் பெயரன் தீப. நடராஜன் பின்வருமாறு எழுதுகிறார்:

> ரசிகமணி அவர்களின் கடிதங்களோ, அவர்களின் ஆளுமையின் பல கோணங்களையும் காட்டிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கடிதமும் டி.கே.சி. அவர்களின் கொள்கைகளையும், வாழ்க்கை நோக்கங்களையும் எடுத்துக்காட்டும் சாட்சியங்களாக

நிற்கின்றன. கவிதை, கலை, பண்பாடு, கல்வி, சமயம், வாழ்க்கை இப்படிப் பல துறைகளையும் ரசிகமணி அவர்கள் உள்ளுணர்வோடு பார்த்து வந்தவர்கள். ரசிகமணி அவர்களின் கடிதங்களில் அந்த உண்மைகள் ஒளிவீசிக் கொண்டிருக்கும். உற்ற நண்பர்களுக்குக் கடிதம் எழுதும்போது டி.கே.சி. அவர்களின் அநுபவங்களும் உண்மை விளக்கங்களும் உணர்ச்சியோடு கொப்பளித்த வண்ணம் வெளிப்படும். நண்பர்கள் டி.கே.சி. அவர்களுக்குக் கடிதம் எழுதும்போது ஒரு சந்தேகத்தையோ அல்லது தாம் அனுபவித்து ரஸித்த ஒரு விஷயத்தையோ எழுதிவிடுவார்கள். சில சமயம் அந்தக் கடிதத்துக்கு பதில் டி.கே.சி. அவர்களிடமிருந்து வரும்போது அதில் பல அரிய உண்மைகளுக்கு விளக்கமும் டி.கே.சி. அவர்களின் தனித்த பார்வை தரும் ஒளியும் பிரகாசித்துக் கொண்டிருக்கும். அந்தக் கடிதங்கள் எல்லாம் இன்று சாகாவரம் பெற்ற இலக்கியங்களாகத் திகழ்கின்றன. அவைகள், டி.கே.சி. யார்? என்று தமிழ்ச் சமுதாயத்திற்குச் சொல்லிக் கொண்டிருக்கின்றன.

(பட்டாபிராம், ஜி.சி., (ப.ஆ.)
ரசனையின் ஒலி, அறிமுகவுரை, பக்.4-5)

வே. ஜெயபால் டி.கே.சி. கடிதச் சிறப்புப் பற்றிச் சொல்லும்போது,

மானிட வாழ்வின் ஜீவ நாடி அன்பு. அவருடைய கடித இலக்கியத்தில் தம்முடைய இருதயத்தையே நண்பர்களுக்குப் பிய்த்து எடுத்துக் கொடுப்பதைப் பூரணமாக உணரமுடியும். இதை உணரமுடியுமே யொழிய, தமிழிலேயே கூட நம் சொந்த வார்த்தைகளால் இன்னொருவரிடம் எடுத்துச் சொல்ல முடியாது. வேறு பாஷையில் ஓரளவு உணர்ச்சியுடனாவது மொழிபெயர்த்து விடலாம் என்பது முடியாத காரியம்.

(சண்முகசுந்தரம், ல., (சி.ஆ) உலக இதய ஒலி,
டி.கே.சி. நூற்றாண்டு விழா மலர், ப.100)

எனச் சொல்லுகிறார்.

ஏ.என். மகரபூஷணம், 'கடிதங்களிலும் கட்டுரைகளிலும் அவர்கள், 'முகன் அமர்ந்து' நேருக்கு நேர் நின்று பேசுவது போன்ற பிரமை ஏற்படும்' என எழுதுவார்.

(சண்முகசுந்தரம், ல., (சி.ஆ) உலக இதய ஒலி,
டி.கே.சி. நூற்றாண்டு விழா மலர், ப.47)

என டி.கே. தீத்தாரப்பன் டி.கே.சி. கடிதம் பற்றித் தம்முடைய கருத்துக்களை எழுதுகிறார்.

ரசிகமணி கடிதங்களைத் தொகுத்த எஸ்.மகாராஜன் டி.கே.சி. கடிதங்களின் தனித்தன்மைகளைப் பின்வருமாறு பாராட்டி உரைக்கிறார்.

> டி.கே.சி. கடிதங்களோ கலை அந்தஸ்து பெற்றவை. ஒரே ஹாஸ்யமும் உல்லாசமும் உணர்ச்சியுமாயிருக்கும். படிக்கப் படிக்கத் தெவிட்டாத இலக்கிய ரத்தினங்கள் அவை. டி.கே.சி. கடிதம் எழுதுவதைக் கைக்கொண்டபின்தான் கடித இலக்கியம் என்ற ஒன்று தமிழ்நாட்டில் பிறந்தது. ரஸிகமணியின் கடிதங்களில் உள்ள எளிமையும், நுணுக்கமும், உல்லாசமும், நகைச்சுவையும், கலைப்பாங்கும், தத்துவ ஆழமும், ஆனந்தமும் நான் பிரெஞ்சு அல்லது ஆங்கிலக் கடிதங்களில் கண்டதில்லை. ரசிகமணி கடிதங்கள் ஒவ்வொன்றும் நேருக்கு நேர் நின்று பேசும். யாருக்கு எழுதுகிறார்களோ அந்த ஆளைத் தம் கண்முன் நன்றாய் இருத்தி வைத்துக்கொண்டு ரசிகமணி அவரோடு இயல்பாக உரையாடுவார்கள். ஆகவே அவருடைய கடிதங்கள் அற்புதமாக அமைந்து விட்டன. டி.கே.சி. கடிதங்களில் உள்ள ஒவ்வொரு சொல்லிலும் எழுத்திலுமே பொருள் முட்டித் ததும்பிக்கொண்டு நிற்கிறது. அபாரமான தெளிவும் உணர்ச்சியும் ஒளியும் இருக்கின்றன.

(மகாராஜன், எஸ்., (தொ.ஆ)
ரசிகமணி கடிதங்கள், முன்னுரை, ப.i, ii. iii)

டி.கே.சி. கடிதங்கள் குறித்து பி.ஸ்ரீ கீழ்க்கண்டவாறு தெரிவிக்கிறார்.

> டி.கே.சி. கடிதங்கள் எல்லாம் உணர்ச்சியுடன் உல்லாசமாய்ப் பேசுகின்றன. நகைச்சுவையும் இவரது 'காப்பி' அடிக்க முடியாத தனித்தன்மையும், இக்கடிதங்களைப் படிக்கப் படிக்க இவை வெறும் கடிதங்கள் அல்ல, நேர் நின்று பேசும் டி.கே.சி.யின் திருமுகமேதான் என்பதை உறுதிப்படுத்தி விடுகின்றன.
>
> *(ஆச்சார்யா, பி.ஸ்ரீ., நான் அறிந்த தமிழ்மணிகள்-ii, ப.370)*

இக்கருத்துக்களினால் எளிமை, தெளிவு, நேரடியாகப் பேசுவதுபோல் எழுதுதல், நகைச்சுவை ஆகியவை டி.கே.சி. கடிதங்களின் இயல்புகளாக உள்ளமையை அறியலாம்.

## மொழிப்பற்று

டி.கே.சி. தம் மொழிப்பற்றை மிகவும் ஆத்திரத்துடனும், ஆணித்தரமாகவும் கீழ்க்கண்ட கடிதத்தில் வெளிப்படுத்தியுள்ளார்.

> சையன்ஸ் புத்தகத்திலே இருக்கிறது என்ற மூடபக்தி ஒழிந்தால் ஒழிய நம்முடைய கல்வி- முக்கியமாகத் தமிழ் உருப்படப்போவது கிடையாது. கல்யாணம் பண்ண விரும்புகிற ஒருவனுக்குப் பெண் பாடசாலை ஒன்றின் ஆஜர் அட்டவணையைக் கொடுத்துப் புரட்டிப்பார் என்று சொன்ன கணக்குத்தான். தமிழில் என்ன சார் இருக்கிறது என்று எளிதில் கேட்டுவிடுவார்கள். சையன்ஸ் இருக்கிறதா என்று கேட்டார்களாம். ஆனால் சையன்ஸ் இங்கிலீஷிலா இருக்கிறது? இல்லை அஸ்ட்ரானமி வானத்தில் இருக்கிறது. ஜியாலஜி பூமிக்குள் இருக்கிறது. பாட்டனி காட்டில் இருக்கிறது. பிஸியாலஜி நம் தேகத்தில் இருக்கிறது. ஸைக்காலஜி நம் உள்ளத்தில் இருக்கிறது. இங்கிலீஸ் பாஷையில் எப்படி இருக்கும் என்ற அந்த படாடோபிகளைக் கேளுங்கள்
>
> *(மகாராஜன், எஸ்., (தொ.ஆ), ரசிகமணி கடிதங்கள், ப.47)*

என்கிறார்.

## உவமைச் சிறப்பு

தாம் உணர்ந்தவற்றை உணர்ந்தவாறு படிப்போர்க்கு உணர்த்தும் திறத்தால் கடித இலக்கியப் படைப்பாளிகள்

சிறக்கின்றனர் எனலாம். வெறுமனே எழுதப்படும் கடிதங்களைக் காட்டிலும் உணர்ச்சியுடனும், நயத்துடனும் எழுதப் பெற்றவையே நிலைத்து நிற்கின்றன. உரைநடையிலே இக்கடிதங்கள் அமைந்திருப்பினும் உவமைகளை அமைத்துத் தம் கருத்தை - எண்ணத்தைச் சிறப்பாகப் புலப்படுத்துகின்றனர் கடித இலக்கியப் படைப்பாளிகள்.

ரஸிகமணி டி.கே.சி. அவர்களின் கடிதங்களில் இத்தகைய உவமைகள் பல இடம்பெற்று விளங்குகின்றன. எடுத்துக் காட்டாக, அவருக்கு உடல் நலமில்லாத போது பிறர் உண்பதைத் தன்னால் உண்ண முடியவில்லை என்பதை ஒரு கடிதத்தில் பின்வருமாறு தெரிவிக்கிறார்.

> "மற்றவர்கள் என்னத்தைச் சாப்பிட்டால் நமக்கு என்ன? சாம்பார், ரஸம், மோர்க்குழம்பு, மாம்பழம், பலாப்பழம் எல்லாவற்றையும் சாப்பிட்டால் சாப்பிடட்டும். அது நம்மைப் பாதிப்பானேன்? எருமை கோரையை லவக்கு லவக்கு என்று தின்று குதிக்கிறது. அதைப்பார்த்து, ஐயோ கோரையைத் தின்ன முடியவில்லையே என்று ஒப்பாரி வைப்பார் உண்டோ?"

(மகாராஜன், எஸ்., (தொ.ஆ.)
ரசிகமணி கடிதங்கள், ப.xi)

**சுவைத்தல்**

யாவற்றையும் கண்டு உணர வேண்டும். வியக்க வேண்டும். அவற்றை இரசித்துப் பிறர்க்கும் உணர்த்த வேண்டும் என்பார் டி.கே.சி. சுவைக்கும் முறையில் சுவைத்துப் பார்த்தால் தமிழ்க் கவியின் இதயம் இன்னதென்று தெரிந்து கொள்ளலாம் என்பார் அவர்.

> நம்மவர்களுக்குத் தாம்பூலம் கொடுக்கும்போது தாம்பாளத்துக்குப் பதில் பூர்ண சந்திரனையே கொண்டுவந்து அதில் தாம்பூலத்தை வைத்துக் கொடுங்கள், தாம்பூலத்தைக் கையில் எடுத்துக் கொண்டு அப்படியே போய்விடுவார்கள். அடே, பூரண சந்திரனில் அல்லவா வைத்துக்

கொடுத்தார்கள் என்று வியக்கமாட்டார்கள் நம்மவர்கள் என்கிறார் டி.கே.சி."

ராஜு (வெ.ஆ) நீலாவதி இராமசுப்பிரமணியம் வாழ்க்கை வரலாறு, (டி.கே.சி. கடிதங்கள்) ப.137.

## இலக்கிய இன்பம்

தாம் படித்து இன்புற்ற கவிதையினைக் கடிதத்தில் எழுதிப் பிறரையும் அனுபவிக்கத் தூண்டும் டி.கே.சி.யின் எண்ணத்தினைக் கீழ்க்கண்ட கடிதம் மூலம் பெறலாம்.

> எத்தனையோ ரஸமான விஷயங்கள் இருக்கின்றன. அவைகளைப் பரிமாறிக் கொள்ளலாம். என்ன செய்வது. பண்டிதர்களுக்கு இட்டலியைப் பற்றிப் பேசிவிடவே கூடாது. தின்னத்தான் செய்யலாம் என்று படுகிறது. ஆனாலும் பெண்டுகளுக்கு இட்டலியைப் பற்றி ரஸமாய்ப் பேசலாம் என்றுபடுகிறது. கீரையைப் பற்றிப் பேச விடுவாரா பண்டிதர்! ஔவையார் அப்படிப் பாடி இருக்கிறார் என்று தெரிந்தால் ஔவையார் பாடு என்னாகுமோ. கீரையோடு ஹாஸ்யத்தையும் கலந்து விட்டால் போச்சு காரியம்.
>
> **வெய்தாய் நறுவிதாய் வேணளவும் தின்பதாய்**<br>**நெய்தான் அளாவி நிறம் பசந்தும்- பொய்தான்**<br>**அடகென்று சொல்லி அமுதத்தை இட்டார்**<br>**கடகம் செறிந்தகை யார்**
>
> (அடகு, கீரை, இட்டார், இட்டாள், பெண்களைக் குறிக்கும்போது உபசாரப் பன்மை அவர்களுக்குக் கொடுப்பது பழைய வழக்கு).
>
> இந்தக் கீரைப் பாட்டு அரிய பாடல்களில் ஒன்று. ஆயுள்நாள் முழுதும் பாடிக்கொண்டே இருக்கலாம் நமக்கு - சாப்பாட்டு ராமன்களுக்கு அல்ல.
>
> (மகாராஜன், எஸ்., (தொ.ஆ.) ரசிகமணி கடிதங்கள், ப.30-31)

எனக் கடிதத்தில் எழுதியிருப்பதிலிருந்து டி.கே.சி.யின் இரசிக விமர்சனப் போக்கினையும் எண்ணலாம்.

## தமிழிலேயே போதிக்க வேண்டும்

எல்லாப் பாடங்களையும் தமிழ் மொழியிலேயே தமிழ் மக்களுக்குக் கற்பிக்க வேண்டும் என்று வற்புறுத்துபவர் டி.கே.சி. ஆங்கிலக் கவிதைகளைப் படித்துக் காண்பித்து அவற்றிற்குத் தமிழிலேயே விளக்கம் கூறவேண்டும் என்பது டி.கே.சி.யின் கருத்து. ஆங்கில அறிஞர்கள் இலத்தீன், கிரேக்கக் கவிதைகளை ஆங்கில விளக்கத்துடனேயே படித்ததுபோல, ஆங்கிலக் கவிதைகளைத் தமிழ் விளக்கத்துடன் நம்மால் படிக்க முடியும். தமிழில் படித்தால்தான் எளிதில் விளங்கிக் கொள்ளச் சாத்தியமாக இருக்கும் என்பர் டி.கே.சி. இந்த உணர்ச்சியை, இந்தப் பாவத்துடன் தமிழில்தான் தெரிவிக்க முடியும். கவிதைக்கு உயர்ந்த பாஷை தமிழ், தமிழ் செய்கிற காரியம் அது, என்றெல்லாம் தாம் எழுதியுள்ள கட்டுரைகள், கடிதங்களில் குறிப்பிடுவார் டி.கே.சி.

## மொழிநடை

டி.கே.சி.யின் மொழி நடை பற்றி அறிவதற்கு இவர்தம் கடிதங்கள் பெரிதும் உதவி செய்கின்றன. போதிய இலக்கணப் புலமையும், இலக்கியப் பயிற்சியும் இன்மையாலும், எளிமையையே கருத்தில் கொண்டதாலும் இவர் எழுத்துக்களில் பிழையற்றதும், செம்மையானதுமான மொழிநடையைக் காணவியலாது. தமிழைப் பேசுவது போன்று எழுத வேண்டும் என்ற கொள்கை காரணமாக, இவர் நடையில் கொச்சைச் சொற்களும், கிராமிய வழக்குகளும் பிறமொழிச் சொற்களும் மலிந்து கிடத்தலைக் காணலாம். நல்ல தமிழில் பிழையின்றி அமையும் மொழிநடையை இவர் எள்ளி நகையாடுகின்றார். இலக்கணம் வகுத்த விதிகளை இவர், தம் எழுத்தில் பின்பற்றுவதில்லை. இலக்கணத்தில் இவர்க்குள்ள வெறுப்பினால் விதிகளை வேண்டுமென்றே மீறுகின்றார் என்று கூறுமளவு இவருடைய மொழி நடை உள்ளது.

செம்மையான மொழிநடையைக் குறித்தும், அம் மொழி நடையைப் பின்பற்றுவோரைப் பற்றியும் டி.கே.சி. ஒரு கடிதத்தில் பின்வருமாறு எள்ளி நகையாடுகின்றார்.

> "இலக்கணமும் சமயமும் நாம் ஏதோ வேண்டாம் என்று சொல்வதாக அங்கே பிரசாரம் செய்கிறார்கள். உண்மையில் நாம்தான் இலக்கணம் வேண்டும்

என்கிறோம். தமிழ்ப் பண்டிதர்கள் இலக்கணம் வேண்டாம் என்கின்றார்கள். தமிழ்ப் பாஷை மற்ற பாஷைகளையெல்லாம் போலத் தமிழ் மக்கள் நாவில் உருண்டோடிக் கொண்டிருக்கிற அழகான வஸ்து. நிமிஷந்தோறும் மாறுதல் ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. முன்னமே வடமொழி, தெலுங்கு முதலிய பாஷைகள் வந்து சில சில மாறுதல்கள் உண்டு பண்ணின. இப்போது பார்த்தால் ஜப்பான் முதல் சூரியன் கடைசியாக அஸ்தமிக்கும் கலிபோர்னியா வரை நாடுகள் எல்லாம் சேர்ந்து தமிழ்ப் பாஷையில் மாறுதல்களை உண்டுபண்ணி விடுகின்றன. பண்டிதர்கள் எல்லாரும் சேர்ந்து எத்தனைக் குட்டிக்கரணம் போட்டாலும் மாறுதலைத் தடுக்க முடியாது.

பண்டிதர்கள் எல்லோரும் இலக்கணத்தைப் படித்திருக்கிறார்கள். மனப்பாடம் பண்ணியிருக்கிறார்கள். 'வழக்கு' என்று ஒரு விஷயம் இலக்கணத்தில் இருக்கத்தானே செய்கிறது. 'பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையினானே' என்ற சூத்திரத்தையும் படித்துக் கொண்டாடியிருக்கிறார்கள்.

இருந்தாலும் அவைகளுக்கு மாறாய் இருக்கிற வகைகளைத்தாமே பாராட்டுகிறார்கள். வழக்கு என்றால் செத்துப் போனவன் ஒரு காலத்தில் பேசி வந்ததுதானா? உயிரோடிருக்கிறவன் பேசினால் வழக்கன்று என்று சொல்லுவது எப்படிப் பொருந்தும்? கால் தள்ளாடுகிறது கொஞ்சம் கை கொடுங்கள் என்று சொல்லுவதற்குப் பதிலாக, 'காறள்ளாட்டின் கைகோடலை விழைவோம்' என்று பண்டிதர் சொன்னாரானால் அவர்பாடு அதோகதிதானே'. பண்டிதர்கள் தாம் இலக்கணத்தில் சொல்லப்படுகிற இலக்கணம் அதாவது 'வழக்கு' வேண்டாம் என்கிறார்கள். நாமோ வழக்குத்தான் வேண்டும், அதாவது இலக்கணந்தான் வேண்டும் என்கிறோம்.

(பாஸ்கரத் தொண்டைமான், தொ.மு.)
ரசிகமணி டி.கே.சி., ப156-158)

இப்பகுதியினின்று, எப்படிப் பேசுகின்றோமோ அப்படி எழுத வேண்டும் என்ற கொள்கையில் டி.கே.சி. கொண்ட பிடிப்பு நன்கு விளங்கும்.

> நடையில் ஸ்டைல் இருக்க வேண்டும் என்றால் (கால் இருந்தால் போதாது) உடலுக்குள் உயிர் இருக்க வேண்டும். அதுபோல எழுத்தில் ஸ்டையில் இருக்க வேண்டும் என்றால் (வார்த்தைகள் இருந்தால் போதா) உள்ளத்தில் உயிர் அதாவது உண்மை உணர்ச்சி இருக்க வேண்டும்.
>
> (மகாராஜன், எஸ்., (தொ.ஆ.) ரசிகமணி கடிதங்கள், ப.109)

இவ்வாறு மொழி நடைக்கு டி.கே.சி. இலக்கணம் வரையறுக்கிறார்.

## முடிவுகள்

1. கடித இலக்கியக் கலையை டி.கே.சி.யும் வளர்த்தார். (கடித இலக்கியச் செழுமைக்கு டி.கே.சி.யும் ஒரு காரணம்).
2. வாழ்க்கையின் பலதிறப்பட்ட துறைகளைப் பொருளாகக் கொண்டு இவர் கடிதங்கள் அமைந்து உள்ளன.
3. டி.கே.சி.யின் கடிதங்கள் நேருக்கு நேர் நின்று பேசுவது போலவும், யாருக்குக் கடிதம் எழுதுகிறாரோ அவரைக் கண்முன் வைத்து உரையாடுவது போலவும் காணப்படுவன.
4. பிறருடைய கடிதங்கள் பொதுவாகக் கற்பனை நயம்படச் செய்திகளை வெளிப்படுத்துகின்றன. டி.கே.சி. கடிதங்களோ (நண்பர்கட்கு எழுதியவை) தனிப்பட்ட வகையில் அவர்க்கே உரிய இயல்புகளைப் புலப்படுத்துவனவாக உள்ளன.
5. டி.கே.சி.க்குக் கவிதையை இரசித்துப் பிறரிடம் உரைப்பது போன்ற ஆர்வம் கடிதம் எழுதுவதிலேயும் இருந்தது என்பதை அவர் கடிதங்கள் புலப்படுத்துகின்றன.
6. இரசனை உணர்வே இவருடைய கடித இலக்கியப் பணிக்கும் அடிப்படை
7. மொழி, இலக்கியம், இசை பற்றிய டி.கே.சி.யின் கொள்கைகள் கடிதங்கள் வாயிலாக மிகுதியும் புலப்படுகின்றன.

# பதிப்புப்பணி

டி.கே.சி. கவிதை, இசை, நாட்டியம் முதலிய துறைகளில் பேரார்வம் காட்டிய தமிழறிஞர். "ரசிகமணி" எனச் சிறப்புடன் குறிக்கப்பட்டார். எளிமைத்தன்மையின் அடியாகத் தோன்றிய கவிதைகளை மட்டும் தேர்ந்தெடுத்து அவற்றைத் திரட்டி டி.கே.சி. பதிப்பித்தார். இதனால் இவருடைய பதிப்புப்பணி ஏனையோரின் பதிப்புப் பணிகளிலிருந்து முற்றிலும் வேறுபடுகிறது. அவ்வேறுபாட்டை எடுத்துக்காட்டுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

## டி.கே.சி.யின் நூல்கள்

கம்பர் தரும் ராமாயணம், முத்தொள்ளாயிரம் (விளக்கம்), இதய ஒலி, அற்புத ரசம் என்பன இவர்தம் நூல்கள். இவர் பலருக்கும் எழுதிய கடிதங்கள் இருநூல்களாக வெளிவந்துள்ளன.

## பதிப்பித்த நூல்

1. கம்பர் தரும் ராமாயணம்
2. முத்தொள்ளாயிரம்

## பதிப்புப்பணிக்கு முன்னோடிகள்

தமிழ் நூல் பதிப்புப் பணியில் ஈடுபட்டுக் கடுமையாக உழைத்தவர்கள் பலர் ஆவர். ஆறுமுகநாவலர், உ.வே.சா., சி.வை. தாமோதரனார், வ.உ.சி., வையாபுரிப்பிள்ளை, பவானந்தம் பிள்ளை, காவேரிப்பாக்கம் நமச்சிவாய முதலியார், வேதநாயகம் பிள்ளை, வெ.ப.சு. முதலியார், ராகவையங்கார், வை.மு. சடகோப ராமானுஜர், வை.மு. கோ, திரு.வி.க. ஆகியோர் பதிப்புப் பணிக்கு முன்னோடிகளாகக் கருதப்பெறுவர்.

## பதிப்புப் பணியில் டி.கே.சி.யின் பங்கு

தமிழ்ப் பதிப்புப் பணி என்பது ஆரம்பக் காலக்கட்டத்தில் இலக்கண இலக்கியங்களில் தேர்ச்சி பெற்றவர் மட்டுமே

பயன்படும் வண்ணம் அமைந்தது. பழைய தமிழ் நூல்கள் அனைத்தும் கற்றவரையே மனத்தில் கொண்டு பதிப்பிக்கப்பட்டன. அந்நூல், பதிப்புகள் எளிமை நடை இல்லாமல் கடுமையான நடையில் விளங்கியமையால் ஆழ்ந்த கல்வியறிவு இல்லாத மிக எளிய நடுத்தர மக்களுக்கு அவற்றால் பயன் அமைந்திருக்க வில்லை. இந்நிலையை மாற்றிப் பதிப்புக்கலை எளிய மக்களையும் சென்றடையும் வண்ணம் அதனை எளிமைப்படுத்திய பெருமை டி.கே.சி.யைச் சாரும். இவர், தாம் பதிப்பிக்க எடுத்த நூல்களை மிக எளிய நடுத்தர மக்களைக் கருத்தில் கொண்டு எளிய முறையில் பதிப்பிப்பதில் ஆர்வம் காட்டினார். கம்பராமாயணமும் முத்தொள்ளாயிரமும் தமிழர்கள் படித்து அனுபவிப்பதற்காகப் பிரசுரிக்கப்பட்டவை. ஆராய்ச்சி செய்யவாவது அல்லது விமரிசனம் செய்யவாவது பிரசுரிக்கப் படவில்லை (**பாஸ்கரத் தொண்டைமான், (தொ.மு.) ரசிகமணி, டி.கே.சி. ப. 123**) என்று இவரது பதிப்பில் உள்ள எளிமைத் தன்மையைப் பின்னுள்ளோரும் பின்பற்றினர்.

## டி.கே.சி.யின் பதிப்புப்பணி ஈடுபாட்டுக்கான காரணங்கள்

உயர்ச்சியும் பாவமும் எளிமையும் நிறைந்த உண்மையான கவிதைகளை இனம்காட்டி, அவற்றை எளிய மக்களும் புரிந்து கொள்ளும் அளவுக்கு டி.கே.சி. பதிப்புப் பணியை மேற்கொள்வதற்கான முதன்மைக் காரணமாக அறியப்படுகின்றது. இதற்காக எளிமைத் தன்மை மிக்க இடைக்கால நூல்களும் பிற்கால நூல்களுமே இவர் பதிப்பிற்குரியவையாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டன. உண்மையான கவிகளை இனங்காண வேண்டுமெனில், கவிதைக்கென்று வரையறுக்கப்பட்ட இலக்கணங்கள் இல்லாத வெறும் பெயரளவில் மட்டும் கவி என்று சொல்லப்படுவனவற்றையும் இனங்காண வேண்டும். பிற ஒதுக்கப்படவேண்டும். இல்லையெனில் உண்மைக் கவிகள் எது என அறியமுடியாது. கவி இலக்கணம் இல்லாதவை டி.கே.சி.யின் பார்வையில் "செருகு கவி" என்ற பெயரைப் பெறுகின்றன. இச் செருகு கவிகளை அறவே களைந்து ஆசிரியர் இயற்றிய மூல நூலின் உண்மை உருவைத் தெளித்துக் காட்டுதற்கும் இவரால் பதிப்புப் பணி முக்கியமாக மேற்கொள்ளப்பட்டது. இவருடைய பதிப்புகளில் செருகு கவிகள் எனத் தெரியப்பட்டவை முற்றிலும் நீக்கப்பட்டன. அவை அடிப்படையில் நல்ல கவிதைகளைத் தேர்வு செய்யும் இரசனைமுறைத் திறனாய்வின் வழி டி.கே.சி.

உண்மையான கவிதைகளை இனங்கண்டார். மூலபாடத் திறனாய்வின் வழிச் செருகு கவிகள் என உணரப்பட்டவற்றை இனங்கண்டார். ஆக இவர்தம் பதிப்புப் பணியில் இருவகைத் திறனாய்வு முறைகளும் இடம்பெற்றமையால் அவற்றிக்கேற்பப் பதிப்புகளின் தரமும் முன்னையோர் பதிப்புகளின்றும் வேறுபட்டதாக அமைந்தது.

## பதிப்புப் பணியில் ஈடுபடக் காரணம்

கம்பர் கவியின் தராதரத்தைப் பிரித்துணர்வதில் இவர் மேனாட்டு அறிஞர்களுக்கு ஒப்பாகக் கருதப்பட்டார். இளமையில் இவருக்கு வந்த மலேரியாக் காய்ச்சல் கம்பராமாயணத்தின் பால் இவர் எண்ணம் திரும்பக் காரணமாயிற்று. பழைய கம்பராமாயணப் பதிப்பை இவர் வாசித்தபோது சில இடங்கள் நன்றாகவும், பல இடங்கள் சுவையற்றும் விளங்குதலை உணர்ந்து, சுவைமிக்க இடங்களே கம்பரது கைவண்ணத்தைத் தெரிவிப்பனவாய் இவர்க்குப் புலப்பட, அவற்றையே கம்பரின் உண்மையான கவிதைகளாக இவர் கொண்டார். இப்போக்கில் முப்பது ஆண்டுகள் கம்பராமாயண அனுபவத்திலேயே தம் காலத்தைச் செலவிட்டார். முப்பதாண்டு அனுபவத்தின் மூலம் இவர் அறிந்தது கம்பராமாயணத்தில் செருகு கவிகள் மிகுதி என்பது. தம் அனுபவவாயிலாகத் தாம் கண்டறிந்ததைப் பின்னரே அனைவரிடமும் வெளிப்படையாகக் கூறினார். இவ்வாறு கம்பரது உண்மையான பாடல்களைத் தேர்வு செய்து ஒரு பதிப்பாக வெளியிட வேண்டும் என்ற ஆர்வத்தை இம்முதல் நிகழ்ச்சி இவரைத் தூண்டிற்று. உள்ளுணர்வும் அடைந்த அனுபவங்களும் பதிப்பிற்குரிய ஆதாரங்களாக ஆயின. மனம் போனபோக்கில் இவர் கம்பராமாயணத்தில் இடைச்செருகல் மிகுதி எனக் கூறியவரல்லர். இதற்கு இவர் முப்பது ஆண்டுகள் எடுத்துக் கொண்டார்.

படைப்பாளர் மேல் இவர் வைத்த நம்பிக்கையே இவ்வாறு பலரும் எதிர்ப்பதற்கு ஏதுவாக ஒரு செயலை இவர் மேற்கொள்ளும்படி ஆனது. கம்பரது கவியில் சிறிதும் குற்றம் இருக்க முடியாது என்றும் பெருநம்பிக்கையும் ஆழமான உறுதியும் இவருடைய கம்பராமாயணத் திறனாய்வில் காணப்படுவதால், நூலாசிரியர்பால் குற்றங்காண இயலாத பழைய உரையாசிரியர் தம் மனப்போக்கை இவரிடத்து உணர

முடிகிறது. கம்பராமாயணச் செய்யுள்களில் உள்ள பல சொற்களையும் சில தொடர்களையும் துணிவாகத் திருத்த முனைந்ததும் மேற்சொன்ன அடிப்படையில் அமைந்த காரணம் ஆகும். ஆயிரத்திற்கும் மேலான பாடல்களைக் களைந்தும், திருத்தங்கள் பல செய்தும் இவர் வெளியிட்ட கம்பர் தரும் ராமாயணம் குறித்துப் பல எதிர்ப்புகள் பெரிதளவில் கிளம்பின.

கம்பராமாயணம் மட்டுமின்றி "முத்தொள்ளாயிரம்" என்ற பழைய நூல் இலக்கிய உலகினுள் செல்வாக்குப் பெறுவதற்கு டி.கே.சி. காரணகர்த்தாவாகத் திகழ்ந்தார்.

## டி.கே.சி.யின் கம்பராமாயணப் பதிப்பு

1953இல் கம்பர் தரும் ராமாயணத்தின் முதல் பகுதியை வெளியிட்டார். மொத்தம் மூன்று பாகங்களாக, (1. பால அயோத்யா காண்டங்கள் 2. ஆரண்ய, கிட்கிந்தா காண்டங்கள், 3. சுந்தர, யுத்த காண்டங்கள்) கம்பர் தரும் ராமாயணம் பதிப்பிக்கப்படடது.

1. கம்பன் கழகப் பதிப்பின்படி, கம்பராமாயணப் பாடல்கள் 10, 368.
2. அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பின்படி 10,533.
3. டி.கே.சி.யின் பதிப்பிலோ 1,515 பாடல்களே உள்ளன.

ஏறத்தாழ ஒன்பதினாயிரப் பாடல்கள் கம்பர் பாடியவை அல்ல எனக் கருதப்பட்டு நீக்கம் செய்யப்பட்டன. இவற்றுள், 597 பாடல்கள் டி.கே.சி.யால் திருத்தப்பட்டன. இந்த 1,515 பாடல்களையும் டி.கே.சி. யாவரும் எளிதில் படித்து அனுபவிக்கக் கூடிய முறையில் எளிய நடையில் அடிக்குறிப்பு விளக்கத்தோடு பதிப்பித்தார்.

பக்கங்களை (ஏடுகளை) ஒப்பு நோக்கிப் பதிப்பிக்காமல் 1. கனகசுந்தரம் பிள்ளை பதிப்பு 2. கவர்மெண்ட் பிரஸ் பதிப்பு 3. க.ரா. ரெத்தினம் அய்யர் பதிப்பு 4. வை.மு.கோ. பதிப்பு ஆகியவற்றோடு வெ.ப. சுப்பிரமணிய முதலியாரின் "கம்பராமாயணசாரம்" என்னும் பதிப்போடு ஒப்பிட்டுத் தம் பதிப்பினை வெளியிட்டார். ஏனைய காண்டங்களை இவர் எந்தெந்தப் பதிப்புக்களோடு ஒப்பிட்டு நோக்கினார் என்ற குறிப்பு தெரியவில்லை" (பால்முருகன், ந., டி.கே.சி.யின் திறனாய்வுப்

திறனாய்வுப் போக்கு, ப.133) டி.கே.சி. தம் பதிப்பில் பல படலங்களை முழுமையாக நீக்கினார். ஒன்றுக்கு மேற்பட்ட படலங்களை ஒன்றாக இணைத்தார். சில படலங்களின் பாடல்களைப் பெருமளவு நீக்கியுள்ளார். கம்பன் கழகப் பதிப்பில் காணப்படும் பல படலங்கள், டி.கே.சி.யின் கம்பர் தரும் ராமாயணப் பதிப்பில் முற்றும் இடம்பெறவில்லை.

அவ்வாறு இடம்பெறாத படலங்கள் :

I. **பால கண்டம்:** 1. திருவவதாரப் படலம் 2. சந்திர சயிலப் படலம் 3. வரைக்காட்சிப் படலம் 4. பூக்கொய்படலம் 5. நீர் விளையாட்டுப் படலம் 6. உண்டாட்டுப் படலம் 7. எதிர்கொள் படலம் 8. வேள்விப் படலத்தின் ஒரு பகுதி 9. அகலிகைப் படலம் 10. பரசுராமப் படலம்.

II. **அயோத்தியா காண்டம்:** 1. வனம்புகு படலம் ஒன்று மட்டும்.

III. **ஆரண்ய காண்டம்:** 1. அயோமுகிப் படலம் 2. கவந்தன் படலம் 3. சபரி பிறப்பு நீங்கு படலம் ஆகியன:

IV. **கிட்கிந்தா காண்டம்:** 1. மராமரப் படலம் 2. துந்துபிப் படலம் 3. கலன் காண் படலம் 4. அரசியற் படலம் 5. கார்காலப் படலம் 6. கிட்கிந்தாப் படலம் 7. தானை காண் படலம் 8. நாடுவிட்ட படலம் 9. பிலம்புக்கு நீங்கு படலம் 10. ஆறு செல் படலம் 11. சம்பாதிப் படலம் 12. மாயேந்திரப் படலம் ஆகியன.

V. **சுந்தர காண்டம்:** 1. கடற்றாவு படலம் 2. பொழி லிறுத்த படலம் 3. கிங்கரர் வதைப் படலம் 4. பஞ்சசேனாபதிகள் வதைப் படலம் 5. அக்க குமாரன் வதைப் படலம் 6. பாசப் படலம் 7. இலங்கை எரியூட்டும் படலம் ஆகியன.

VI. **யுத்த காண்டம்:** 1.கடல் காண் படலம் 2. வருணனை வழிவேண்டு படலம் 3.ஒன்றுக் கேள்விப் படலம் 4.இலங்கை காண் படலம் 5.இராவணன் வானரத்தானைகாண் படலம் 6.மகுடபங்கப் படலம் 7.அணிவகுப்புப் படலம் 8.மாயாசனகப் படலம் 9படைத்தலைவர் வதைப் படலம் 10.மகரக் கண்ணன் வதைப் படலம் 11. பிரம்மாத்திர படலம் 12. சீதை களம் காண் படலம்

13.களியாட்டுப் படலம் 14.மாயா சீதைப் படலம் 15. நிகும்பலை யாகப் படலம் 16.படைக் காட்சிப் படலம் 17. மூலவதைப் படலம் 18.வேலேற்றப் படலம் 19. வானரர் களம் காண் படலம் 20.இராவணன் களம் காண் படலம் 21. இராவணன் தேரேறு படலம் 22.இராமன் தேரேறு படலம் 23. இராவணன் வதைப்படலம் 24. திருவடி சூட்டுப் படலம் 25. விடை கொடுத்த படலம் ஆகிய 58 படலங்கள் நீக்கப்பட்டன.

## படலம் இணைப்பு

பால காண்டத்தில் ஆற்றுப் படலத்திலிருந்து ஒரு பாடலையும், நாட்டுப் படலத்திலிருந்து ஏழு பாடல்களையும் இணைத்து அவற்றை ஒரு படலமாக்கி அதற்குக் "கோசல நாட்டின் வளம்" எனத் தலைப்புக் கொடுத்துள்ளார். உலாவியற் படலத்தினின்று எட்டுப் பாடல்களும் கோலங்காண் படலத்தினின்று பதினொரு பாடல்களும் எழுச்சிப் படலத்தினுள் சேர்க்கப்பட்டன. கம்பன் கழகப் பதிப்பில் பரசுராமப் படலத்தினுள் காணப்படும் முதற் பாடல் டி.கே.சி.யின் பதிப்பில் கடிமணப் படலத்துக் காணப்படுகிறது. அயோத்யா காண்டத்துள் கங்கை காண் படலம், திருவடி சூட்டுப் படலம் ஆகிய இரு படலங்களும் இணைக்கப்பட்டு அவற்றிற்கு ஒரு சேரக் "கிளை கண்டு நீங்கும் படலம்" எனப் பெயர் தரப்பட்டுள்ளது.

ஆரண்ய காண்டத்தைத் தொடங்குவதற்கு முன்பாகக் "கடவுள் தத்துவம்" என்னும் புதிய தலைப்பில் டி.கே.சி. எழுதும் பகுதியில் விராதன் வதைப் படலத்தினின்று இரு பாடல்களும், சரபங்கர் பிறப்பு நீங்கு படலத்தினின்று மூன்று பாடல்களும் எடுத்துக்கொள்ளப்பட்டன. விராதன் வதை, சரபங்கன் வரலாறு ஆகியவை பின்னிணைப்புக்களாக உரைநடையில் எழுதப்பட்டுள்ளன.

சூர்ப்பணகை சூழ்ச்சிப் படலம் மாரீசன் வதைப் படலத்தோடு சேர்க்கப்பட்டுள்ளது. அப்படலத்தினின்று முப்பத்தெட்டுப் பாடல்கள் எடுக்கப்பட்டு மாரீசன் வதைப் படலத்தின்கீழ்க் கொடுக்கப்பட்டுள்ளன என இராவணன் சூழ்ச்சிப் படலத்துள் நாற்பத்திரண்டு பாடல்கள் சடாயு உயிர் நீத்த படலத்தோடு சேர்க்கப்பட்டுள்ளன.

கிட்கிந்தா காண்டத்துள் அனுமப் படலத்திலிருந்து பதினெட்டுப் பாடல்களும், நட்புகோட் படலத்திலிருந்து பதிமூன்று பாடல்களும் மராமரப் படலத்தின் கீழ்க் காணப்படுகின்றன. முந்தைய பதிப்புகளில் உள்ள மராமரப் படலத்தின் எந்தவொரு பாடலும் டி.கே.சி. பதிப்பின் மராமரப் படலத்துள் காணப்படவில்லை.

சுந்தர காண்டம், யுத்த காண்டம் ஆகியவற்றுள் படல இணைப்பு நடைபெறவில்லை. பின்னரும், பாலகாண்டத்துள் ஒரு பாடலும் அயோத்யா காண்டத்துள் மூன்று பாடல்களும் ஆரண்ய காண்டத்துள் இரண்டு பாடல்களும் வரிசை மாற்றிப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு படலங்களையும் பாடல்களையும் பெருவாரியாக டி.கே.சி. நீக்கியதைக் குறித்துப் பால முருகன் குறிப்பிடுகிறார்:

> டி.கே.சி. நீக்கியுள்ள பகுதிகளில் வருணனைப் பகுதிகள் மிகுதியாக இடம்பெற்றிருப்பது ஆராயத்தக்கது. காப்பிய நிகழ்ச்சிகளுக்கு நேரடியான தொடர்பில்லாத வருணனைப் பகுதிகளை அவர் ஒதுக்குகிறார் என்பதை அவர் ஒதுக்கியுள்ள படலங்களிலிருந்து உணர முடிகிறது. "தமிழில் நாட்டு வருணனை, மலை வருணனை என்றெல்லாம் வருணனைகள் உண்டு. இவற்றுக்குள் ஒருவர் சிக்கிக் கொண்டால் பெரிய ஆபத்துதான்" என அவர் கூறுவது இக்கருத்தை உறுதி செய்கிறது. இவை தவிர அவர் பின்பற்றிய, அழகியார் கோட்பாடும், உருவவியல் அணுகுமுறையும், ரசனையும் பாடல்களை நீக்கக் காரணங்களாக அமைந்தன என்றும் கொள்ள இடமுண்டு. தம் இரசனை அனுபவத்திற்குப் பொருந்தாத பாடல்களையும் அவர் நீக்கியுள்ளார் எனக் கருத இடமுண்டு.
>
> (பாலமுருகன், ந.,
> டி.கே.சி.யின் திறனாய்வுப் போக்கு, ப.140)

என்று குறிப்பிடுகின்றார்.

## பதிப்பு முறையும் பதிப்பு அமைப்பும்

கம்பர் தரும் ராமாயணத்தில் கவிதையையும், கம்பரையும் பற்றி 45 பக்கங்கள் கொண்ட விரிவான டி.கே.சி.யின் முகவுரை உள்ளது. ஒவ்வொரு பாட்டுக்கும் முன்னுரையும் பொருள் விளக்கமும் இருக்கின்றன. "சீரும் சந்தமும்" என்ற முதல் அனுபந்தத்தில் பாட்டை எவ்விதம் படிக்க வேண்டும் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இரண்டாவது அனுபந்தத்தில் டி.கே.சி.யின் திருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அட்டவணை காணப்படுகிறது. அத்திருத்தங்களை வேறு கம்பராமாயணப் பதிப்புகளோடு ஒப்பிட்டு அவற்றின் இன்றியமையாமையைத் தெரிந்து கொள்ளலாம். மூன்றாவது அனுபந்தம், பாடல்கள் முதற் குறிப்பு அட்டவணை ஆகும். இது பிற முதற்குறிப்பு அட்டவணைகளினின்றும் வேறுபட்டது. பிற பதிப்புகளின் முதற் குறிப்பு அட்டவணை, பாடல்களின் முதலெழுத்துக்களைக் கொண்டு அகர வரிசைப்படி அமையும். ஆயின் டி.கே.சி. பதிப்பில் எதுகை அகராதியாக அமைகிறது. அதாவது இரண்டாவது எழுத்து ஒன்றாக வருமாறு அட்டவணை காணப்படும் (உ.ம்.) "க்" என்பதன் கீழ் நான்கைந்து பாடல்கள் காட்டப்படும். அந்த ஐந்து பாடல்களிலும் எதுகை "க்" என்ற எழுத்தின் மேல் நிற்கும் ஒரு பாடலில் எந்த அடி நினைவுக்கு வந்தாலும் அதை வைத்து இந்த அட்டவணையிலிருந்து பார்த்து எடுக்கலாம். முதலடியிலுள்ள முதல் மொழியை மட்டும் காட்டாமல் நான்கடிகளுக்கும் பொதுவாக உள்ள எழுத்தைக் கொண்டு இந்த அட்டவணை அமைக்கப்பட்டதால் பாடலை மிக எளிமையாகக் கண்டுபிடித்து விடலாம். இஃது இந்தப் பதிப்பின் சிறப்பாகும்.

டி.கே.சியின் "கம்பர் தரும் ராமாயணம்" முதலிரண்டு பாகங்களில் முகவுரை உள்ளது. முதல் பாகத்தில் காணப்படும் முகவுரையில் கம்பராமாயணம் பற்றிய திறனாய்வினை அறியமுடிகிறது. செருகுகவிகள் பற்றி டி.கே.சி. கொண்ட எண்ணங்கள் இடம்பெறுகின்றன. கம்பர் இராமாயணத்தை அரங்கேற்றிய காலம் பற்றிய செய்தியும் உள்ளது.

பாடலுக்கு முன்னுரை தந்து அதன் பின்னர்ப் பாடலின் சந்தக் குறிப்பைக் கொடுத்துப் பிறகு பாடலைப் பதிப்பித்துள்ளார். பாடலைச் சந்தத்திற் கேற்பப் பிரித்தும் அமைத்திருக்கிறார் டி.கே.சி. பாடலின் பொருளைக் கருத்துரையாகவும், பொழிப்புரையாகவும் வழங்குகின்றார். அடிக்குறிப்பில் கடினச்

சொற்களுக்குப் பொருள் விளக்கங்களும், குறிப்புப் பகுதியில் திறனாய்வுக் குறிப்பும் தருகின்றார். படலங்களுக்குச் சிறு சிறு தலைப்புக்களும் தந்துள்ளார். "கம்பர் தரும் காட்சி" என்ற பெயரில் கல்கியில் வெளிவந்த கட்டுரைகளே பின்னர்க் "கம்பர் தரும் ராமாயணம்" என்ற நூல் வடிவம் பெற்றதால் கட்டுரைகளில் காணப்படும் தலைப்புக்கள் நூற்கண் இடம்பெற்றுள்ளன.

பதிப்பில் உள்ள அச்சுப் பிழைகளுக்குரிய பிழை திருத்தங்களும் பின்னிணைப்பினுள் தரப்பட்டுள்ளன. இவ்வாறு டி.கே.சி.யின் கம்பராமாயணப் பதிப்பு முறையும் பதிப்பு அமைப்பும் அறியப்படுகின்றன.

''பாடல்களை நீக்கியும், திருத்தங்கள் செய்தும் வெளியிட்ட டி.கே.சி.யின் "கம்பர் தரும் ராமாயணப் பதிப்பைத்" "தெரிவு திருத்தப் பதிப்பு" எனப் பெயர் சூட்டி அழைக்கின்றார் வையாபுரிப்பிள்ளை (வையாபுரிப் பிள்ளை, எஸ்., கம்பன் காவியம், ப.108).

**சான்று : தாடகை வதம்**

> இனிமேல் இவளை (தாடகையை) லகுவாக விட்டுவிடக் கூடாது என்று தெரிந்து கொண்டான் ராமன். வெகுவேகமாகச் செல்லக்கூடிய அம்பு ஒன்றை எடுத்தான்; ஒரு சக்கரவர்த்தியின் ஆணையானது ராஜ்யத்தின் கடைக்கோடி வரைக்கும் ஒரு நொடியில் போய்க் காரியத்தைச் சாதிக்கும் அல்லவா! இந்த ஆணை போன்ற அம்புதான். அது எப்படிச் சென்றது என்பதை

**சொலொக்கும் கடிய வேகச்**
**சுடுசரம் ஒன்றைச் செம்மல்**
**அல்லொக்கும் நிறுத்தினாள் மேல்**
**விடுதலும், வயிரக் குன்றக்**
**கல்லொக்கும் நெஞ்சில் தங்கா (த)**
**அப்புறம் கழன்று கல்லாப்**
**புல்லர்க்கும் நல்லோன் சொன்ன**
**பொருள் எனப்போயிற் றென்றே**

[செம்மல்: ராமன்: அல்: இருள்; கல்லாப் புல்லர்: விஷயந் தெரிய மாட்டாத அறிவிலிகள்; நல்லோர்: அறிவாளிகள்; அறிவிலிகள்:

முற்றிலும் கெட்டொழிந்தால் ஒழிய யார் சொன்ன வார்த்தையையும் கேட்டு நடக்கமாட்டார்கள் என்பது சாமானிய அனுபவம்]

> அம்பானது மார்பூடு உருவிப்போகவும் மலை விழுந்த அரக்கி கீழே விழுந்தாள். இரத்தம் ஒரே பெருக்காய்த் தரையெங்கும் ஓடிப்பரவியது. ஆக,

1. பாடலைத் தொடங்கும் முன்பு கேட்போரை உளப்படுத்தத் தக்க முன்னுரை அமைத்தல்.
2. கடினச் சொற்களுக்குப் பொருள் தரல்.
3. பேசுவது போன்ற மொழி நடையைக் கையாளுதல்.
4. பாடல்களில் உள்ளடக்கம், உணர்ச்சி, பாவம், சந்தம் திறனாய்வுக் குறிப்புக்களைக் கையாளுதல்.
5. தலைப்பு இடல்.

இவ்வாறு டி.கே.சி.யின் "கம்பர் தரும் ராமாயணப்" பதிப்பில் காணப்படுகின்றது.

### டி.கே.சி.யின் முத்தொள்ளாயிரப் பதிப்பு

டி.கே.சி. முதன்முதல் பதிப்பித்தது முத்தொள்ளாயிர மாகும். பிறகே கம்பராமாயணத்தைப் பதிப்பித்தார். 1943இல் முத்தொள்ளாயிரத்தை டி.கே.சி. தமக்கே உரிய சுவை முறை அடிப்படையில் எழுதிய உரையோடு பதிப்பித்தார். முத்தொள்ளாயிரப் பதிப்பில் டி.கே.சி.யின் மேலான இரசனை அனுபவத்தைக் கண்டுணரலாம். கம்பராமாயணத்தைவிட, முத்தொள்ளாயிரத்தையே வெகுவாக விரும்பி இரசித்தார் என்பது இரண்டிற்கும் இவர் எழுதிய முகவுரைகளின்று காணமுடிகின்றது. முத்தொள்ளாயிர நூல் பற்றிய செய்திகளாக டி.கே.சி. கூறுவனவற்றை, "சேரன், சோழன், பாண்டியன் இவர்கள் மீது பாடிய மூன்று தொள்ளாயிரங்களும் சேர்ந்து ஒரு நூலாகி "முத்தொள்ளாயிரம்" என்ற பெயரோடு வழங்கி வந்தது. ஆசிரியர் பெயர் தெரியாது. ஊர் தெரியாது. காலமும் தெரியாது. ஆனாலும் பாடல்களைப் பார்க்கும் போது ஏதோ இரண்டாயிர வருஷங்களுக்கு முன்னுள்ளன என்று அறிய முடிகின்றது.

> ஏதோ சிலர் அவைகளைப் பாராட்டியும் இருக்கிறார்கள். சமீப காலம் வரை அதாவது நானூறு

ஐந்நூறு வருஷங்களுக்கு முன் வரையில் முத்தொள்ளாயிரத்தைச் சிலர் போற்றி வந்திருக்கிறார்கள். அவர்கள் கையில் முத்தொள்ளாயிர ஏடு இருந்தது என்பது தெரியவருகிறது. பிறகு ஏட்டைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. கடைசியாகப் புறத்திரட்டு என்னும் நூலை யாரோ ஒருவர் தொகுக்க நேர்ந்தது. நாலடியார், திருக்குறள் முதலிய நூல்களில் பாகுபாடு செய்தது மாதிரி, கடவுள் வாழ்த்து அவையடக்கம், நீத்தார் பெருமை, பொறையுடைமை, அரண் நகர் கைக்கிளை என்று வகுத்துக்கொண்டு அந்த அந்த அதிகாரங்களுக்கு ஒத்த செய்யுட்களைக் கண்ட கண்ட நூல்களில் இருந்தெல்லாம் எடுத்து வைத்தார். ஏதோ நம்முடைய புண்ணிய வசத்தால் முத்தொள்ளாயிரம் ஏடு அவர் கையில் இருக்க நேர்ந்தது. அந்த ஏட்டிலிருந்த சில பாடல்களைப் புறத் திரட்டில் ஆங்காங்கும் எடுத்து வைத்தார். நமக்குக் கிடைத்துள்ள முத்தொள்ளாயிரப் பாடல்களெல்லாம் புறத்திரட்டில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

அப்படிக் கிடைத்துள்ளவை எந்த விதத்திலும் நூற்றெட்டுக்கு மேலில்லை. ஆகவே 2700-108=2592 பாடல்கள் ஒழிந்தே போய்விட்டன. அத்தனை அற்புதமான மணிகளை இழந்து நிற்கிறது தமிழுலகம். இரண்டாயிரத்து எழுநூறு பாடல்களும் கிடைத்திருந்தால், ஆயுள் நாள் முழுவதும் அவைகளைப் பாடிப்பாடி ஆனந்தத்தில் தளைத்துக் கொண்டிருக்கலாம் நாம். நம்மோடு மட்டுமன்று இன்னும் ஆயிரக்கணக்கான வருடங்கள் நம்முடைய சந்ததியாரும் அனுபவித்துக் கொண்டிருக்கலாம். இந்த அனுபவத்திலிருந்து எத்தனையோ அரிய நாவல்களை எழுதித் தமிழையும் வளப்படுத்தலாம். இந்த விதமாக நம்முடைய நஷ்டத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால் நம்மைவிடத் துர்ப்பாக்கியர்கள் வேறு யாருமில்லை என்றே சொல்லலாம். எந்தக் கலையிலும் உணர்ச்சி இலக்கியம் அது ஒன்றுதான்

வேண்டும் என்றாலும் குற்றமில்லை முத்தொள்ளாயிரச் செய்யுள் ஒவ்வொன்றிலும் வெகு அற்புதமான உணச்சிகளைப் பார்க்கலாம் (முத்தொள்ளாயிரம் முகவுரை - டி.கே.சி.)

## பதிப்பு முறையும் பதிப்பு அமைப்பும்

டி.கே.சி.யின் முத்தொள்ளாயிரப் பதிப்பில் 99 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. 'விடப்பட்ட பாடல்கள்' என்ற பின்னிணைப்புப் பகுதியில் 9 பாடல்கள் காணப்படுகின்றன. எனவே மொத்தம் 108 பாடல்கள் டி.கே.சி.யின் பதிப்பில் அமைகின்றன. முத்தொள்ளாயிரத்தைப் பதிப்பிக்க டி.கே.சி.க்கு ஆதாரங்களாக விளங்கியவை ரா. ராகவையங்கார், மதுரைத் தமிழ்ச் சங்கம் மூலம் 1905ஆம் ஆண்டு பதிப்பித்த முத்தொள்ளாயிரம் முதற்பதிப்பும், 1935இல் பதிப்பித்த இரண்டாம் பதிப்புமாகும்.

கம்பர் தரும் ராமாயணப் பதிப்பைப் போன்று முத்தொள்ளாயிரம் பதிப்பிலும் முகவுரை உள்ளது. அதனுள் முத்தொள்ளாயிரம் பற்றிய திறனாய்வும் நூலின் காலம் பற்றிய குறிப்பும் காணப்படுகின்றன. பாடலுக்கு முன்பாக விரிவான முன்னுரையும் பின்னர்ப் பாடலும் பதிப்பிக்கப்பட்டுள்ளன. அடிக்குறிப்பில் கடினச் சொற்களுக்குப் பொருள் விளக்கமும் குறிப்புப் பகுதியில் திறனாய்வுக் குறிப்பும் காணப்படுகின்றன. ஐந்தைந்து பாடல்களைக் கொண்ட இருபது பகுதிகளாக நூல் பிரித்து அமைக்கப்பட்டுள்ளது.

ந. சேதுரகுநாதன் பதிப்பித்த முத்தொள்ளாயிரப் பதிப்பில் மொத்தம் 130 பாடல்கள் காணப்படுகின்றன. பழைய உரைகளிடையே 22 பாடல்கள் கிடைத்தனவாகக் குறிப்பிட்டு அவர்அவற்றைத் தம் பதிப்பில் சேர்த்துள்ளார் (சேது ரகுநாதன் முத்தொள்ளாயிரம் பதிப்பு).

இப்பதிப்பில் அனுபந்தங்களும் இறுதியில் காணப்படுகின்றன. முதலாவது அனுபந்தம் முத்தொள்ளாயிரப் பதிப்புகள் பற்றி எடுத்துக் கூறுவதாகவும், இரண்டாவது அனுபந்தம் விட்ட பாடல்கள் முறையே தருவதாகவும் மூன்றாவது அனுபந்தம் வெண்பா இலக்கணத்தை விரித்துரைப்பதாகவும் நான்காவது அனுபந்தம் திருத்தம் பற்றியதாகவும் அமைகின்றன.

இப்பதிப்பின் மற்றொரு சிறப்பு ஒவ்வொரு முத்தொள்ளாயிரக் காட்சிக்கும் ஒவ்வோர் ஓவியம் வரைந்து இணைத்திருப்பதாகும். இது சிறிய பதிப்பானாலும் செம்மையான பதிப்பாக எண்ணத்தக்கது. எடுத்துக்காட்டாக,

**போரகத்துப் பாயுமா பாயாது ஒருபடியா**
**ஊரகத்து மெல்ல நடவாயோ! - பார**
**மதவெங் களியானை மாறன்தன் மார்பம்**
**கதவங் கொண்டு யாமும் தொழ.**

இந்தக் கவி பெண்ணின் கூற்று என்பது மறைவாய்க் கிடக்கிறது. மார்பன் தொழக் கதவங் கொண்டு என்னும் சொற்களை வைத்துத்தான் காதலுற்ற பெண் பேசுகிறதாகப் புலப்படுகிறது. இப்படி விஷயத்தை மறைவில் வைத்துச் சொல்லுவதில் ஒரு நாணபாவம் இருக்கிறது. அது தெளிவாகிறது கடைசி அடியை இரகசியமாய்ப் பாடும்போது.

மேற்கண்ட பகுதியில் பாடலின் பொருளை விளக்கி உரைக்கும் போக்கோ பாடலின் குணம், குறை, இரண்டையும் காட்டும் போக்கோ இல்லையெனினும் பாடலின் பாவம் என்ன? அஃது எதனால் சிறப்பாகிறது என்று சில குறிப்பு வடிவில் கூறும் திறனாய்வுப் போக்கைக் காணமுடிகிறது.

**கம்பர் தரும் ராமாயணம்-முத்தொள்ளாயிரம்-பதிப்புகளில் உள்ள வேறுபாடுகள்**

1. டி.கே.சி. கம்பர் பாடல்களுக்கு முன் கொடுத்துள்ளது போன்று முத்தொள்ளாயிரப் பாடல்களுக்குச் சந்தக் குறிப்பை முன் தரவில்லை. முத்தொள்ளாயிரப் பாடல்கள் வெண்பா யாப்பில் அமைந்தவை. ஒரே சந்தம் உடையவை. எனவே "வெண்பா இலக்கணம்" என்ற பின்னிணைப்புப் பகுதியில் வெண்பாவின் சந்தத்தைக் குறிப்பிட்டுப் பாடல்களுக்கு முன் சந்தக் குறிப்பைக் கொடுக்காமல் விட்டுள்ளார். கம்பனின் விருத்தங்கள் பல்வேறு சந்தம் உடையவை. எனவே சந்தக் குறிப்பைப் பாடல்களுக்கு முன் அமைத்துள்ளார்.

2. கம்பர் தரும் ராமாயணத்தில் கம்பன் பாடல்கள் பலவற்றை டி.கே.சி. திருத்தி வெளியிட்டுள்ளார். அத்திருத்தங்கள் பின்னிணைப்பில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

முத்தொள்ளாயிரப் பதிப்பில் பாடல்களை டி.கே.சி. திருத்தாமையின் திருத்தம் பற்றிய பின்னிணைப்புப் பகுதி இடம்பெறவில்லை.

3. “கம்பர் தரும் ராமாயணத்தில் எதுகையையொட்டிப் பாட்டு முதற் குறிப்பகராதி அமைந்திருக்க முத்தொள்ளாயிரப் பதிப்பில் முதலெழுத்தை ஒட்டிப் பாட்டு முதற் குறிப்பகராதி தரப்பட்டுள்ளது.

## மூலபாடத் திறனாய்வில் அழகியல் கோட்பாடு

டி.கே.சி. இலக்கியத் திறனாய்வில் அழகியல் கோட்பாட்டைப் பின்பற்றுகிறார். அவர் மூலபாடத் திறனாய்வையும் இலக்கியத் திறனாய்வையும் தம் பதிப்புகளில் ஒன்றாக இணைக்கிறார். பாடல்களைப் பதிப்பிக்கும்போது இலக்கியத் திறனாய்வும் செய்வதால் சிறப்பற்ற பாடல்கள் எனத்தாம் கருதுவனவற்றை நீக்கிப் பதிப்பித்துள்ளார். பாடல்களைத் தெரிவு செய்ய அழகியல் கோட்பாட்டின் அடிப்படையே அவருக்குத் துணைபுரிந்துள்ளது.

டி.கே.சி.யின் கம்பர் தரும் ராமாயணம் இலக்கியத் திறனாய்வாகவும், புதிய பதிப்பு முயற்சியாகவும் காணப்படுகிறது. இலக்கியத் திறனாய்வு மூலபாடத் திறனாய்வு ஆகிய இரண்டையும் இணைக்கும்போது இலக்கியத் திறனாய்வுக்கே முதன்மை தந்துள்ளார். மூல பாடத் திறனாய்வுக்கு முதன்மை தந்திருப்பின் அவர் ஏடுகளின் அல்லது பிற பதிப்புகளின் சான்று கொண்டே பாடல்களைப் பதிப்பித்திருப்பார். பாடல்களைத் தாமாகத் திருத்தியிருக்க மாட்டார். பாடல்களைத் திருத்தக் கவியுருவம் பற்றிய உருவவியல் அணுகுமுறையும் அவருக்கு ஒரு காரணமாக அமைந்தது.

கம்பன் கழகத்தினர் பாட வேறுபாடுகளில் ஒன்றினைத் தேர்ந்தெடுக்க, தம் மனதுக்குப் பொருத்தமான ஒரு பாடத்தைத் தேர்ந்தெடுப்பது ஓர் அணுகுமுறை எனக் குறிப்பிட்டுள்ளனர். டி.கே.சி. இவ்வணுகுமுறையைப் பின்பற்றியதோடு தன் மனத்துக்குப் பொருத்தமான பாடங்களைத் தானே உருவாக்கியும் கையாளுகிறார்.

மூலபாடத் திறனாய்வு பாடல்களுக்குப் பொருள்கோள் விளக்கம் தருவதன்று. உண்மையான மூலபாடத்தைத் தருவது எனக் கவிதையியல் பேரகராதி கூறுகிறது. டி.கே.சி.யோ

பாடல்களுக்குப் பொருள்கோள் விளக்கமே தருகிறார். இஃது அவர் இலக்கியத் திறனாய்வை மூலபாடத் திறனாய்வோடு இணைப்பதால் நிகழ்ந்துள்ளது என்கிறார் பாலமுருகன். (பாலமுருகன், ந., டி.கே.சி.யின் திறனாய்வுப் போக்கு பக். 146-147).

எனவே டி.கே.சி. கம்பராமாயணத்தையும் முத்தொள்ளாயிரத்தையும் தனக்கே உரிய தனித்தத் திறனாய்வு முறையில் பதிப்பித்துப் பதிப்புலகில் தனக்கென்று ஓர் இடம்பெற்றுத் திகழ்கிறார் என்பதனை நன்கு அறியலாம்.

## முடிவுகள்

பதிப்புக்கலையை எளிமை வடிவம் கொண்டு மக்களைச் சென்றடைய வழிவகை செய்தவர் டி.கே.சி. ஆவார்.

தம்முடைய உள்ளுணர்வையும், தாம் அடைந்த அனுபவத்தையுமே தம் பதிப்பிற்குரிய ஆதாரங்களாகக் கம்பராமாயணத்தையும் முத்தொள்ளாயிரத்தையும் பதிப்பித்தார். தம் மனம் போன வழி மூலநூலைத் திருத்துவதற்கு உரையாசிரியர்கள் பெரிதும் அஞ்சினார்கள். வேறு பாடங்கள் காணப்படின் அவற்றைச் சுட்டி மட்டும் சென்றனர். ஆனால் அப்பாடங்களில் திருத்தம் செய்வதற்கும் அஞ்சினர். ஆனால் டி.கே.சி.யின் போக்கு இதற்கு எதிர்மாறானது.

கம்பர் தரும் ராமாயணத்தில் கம்பன் பாடல்கள் பலவற்றினை டி.கே.சி. திருத்தி நீக்கி வெளியிட்டார். ஆனால் முத்தொள்ளாயிரப் பதிப்பில் பாடல்களை டி.கே.சி. திருத்தவில்லை.

மூலபாடத் திறனாய்வையும் இலக்கியத் திறனாய்வையும் தம் பதிப்புக்களில் டி.கே.சி. இணைக்கிறார். தம் ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் தராமல் தம் அனுபவத்திற்கு முதன்மை தந்ததால் பல பாடங்களை நீக்கிப் பதிப்பிக்கும் துணிவு இவர்க்கு வந்தது எனலாம். எனவே தமது நோக்கத்தை நிறைவு செய்து கொள்ளுகிறார் டி.கே.சி.

## துணை நூல்கள்

1. சிதம்பரநாத முதலியார், டி.கே. கம்பர் தரும் ராமாயணம் 3ஆம் பாகம்.

2. சிதம்பரநாத முதலியார், டி.கே. முத்தொள்ளாயிரம்.

# இரசனைத்திறன்

கவிதை இரசிகர்; கம்பனைக் கரைத்துக் குடித்தவர்; கவிதையை எப்படிச் சுவைப்பது என்று கற்றுக் கொண்டவர்; மற்றவர்க்கும் கற்றுக் கொடுத்தவர்; கம்பனில் மூழ்கி முத்தெடுத்தவர்; முத்தொள்ளாயிரம் என்ற தமிழ்ச் சொல்லோவியத்தைக் கண்டெடுத்துப் பதிப்பித்து உலகுக்கு வழங்கியவர்; "இதயஒலி", "கம்பர் யார்", "அற்புதரஸம்", "தமிழ்க்களஞ்சியம்", "கம்பர் தரும் ராமாயணம்", "ரசனையின் ஒலி" போன்ற நூல்கள் உருவாகக் காரணமானவர்; தமிழிசை இயக்கத்தைத் துணிச்சலுடன் தோற்றுவித்து நடத்தியவர்; இராஜாஜி, ஏ.வி. சுப்பிரமணிய ஐயர், கல்கி, பாஸ்கரத் தொண்டைமான், பேராசிரியர் சீனிவாசராகவன், நீதிபதி மகாராசன், சுந்தரம், சோமு, துறைவன் போன்ற எண்ணற்ற தமிழ் ஆர்வலர்களைத் தமிழின் பால் ஈர்த்தவர்; வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார், திவான் பகதூர் பி. ஆவுடையப்பபிள்ளை, பி.ஸ்ரீ. ஆச்சார்யா, கே. சக்கரபாணி நம்பியார், ஆண்டியப்பபிள்ளை, ஏ.வி. முத்தையா பிள்ளை, ஏ.என். மகரபூஷணம் அய்யங்கார், வித்வான் பி.கே. அருணாசலக் கவுண்டர், ஆ.முத்துசிவன், எஸ். சங்கரலிங்கம் பிள்ளை போன்ற பல தமிழ் அறிஞர் பெருமக்களை ஈர்த்து "வட்டத்தொட்டியை" வளர்த்தவர்; இசை, பரதம் போன்ற கலைகளில் மட்டுமன்றி வில்லுப்பாட்டு, மந்தை நாடகம் போன்ற கிராமப் புறக் கலைகளிலும் ஈடுபாடு கொண்டவர்; 1941ஆம் ஆண்டிலேயே தமிழ் நாட்டில் முதல் தமிழிசை மாநாட்டினைத் தலைமைப் பொறுப்பேற்று நடத்தியவர்; மிகச் சிறந்த பாடகர் டிகேசி.

"டிகேசி. பாட்டை எடுக்கிற எடுப்பும், பாடிக் காட்டுகிற முறையும், அதை முடிக்கிற முடிப்பும், ஓர் அமைதியான முறையாகவே இருக்கும்"[1] என்ற பாராட்டைப் பெற்றவர். பண்டைய மன்னர்கள் சங்கம் நிறுவித் தமிழைச் சுவைத்தது போல டிகேசியும் "வட்டத் தொட்டி" என்ற இலக்கிய அமைப்பை உருவாக்கித் தமிழ் இலக்கியங்களைத் தாமும் அனுபவித்துப் பிறரையும் இரசிக்கத் தூண்டியவர். அதனாலேயே "ரசிகமணி"

என்ற பட்டத்தையும் பெற்றவர். அவரது இரசனைத் திறன் வியந்து பாராட்டற்குரியது.

தமிழ்மொழி அறியாரையும் தன் இரசனைத் திறத்தால், இரசிக்கவைக்கும் திறமையால் தமிழை உணரச் செய்தவர். தமிழ் படியாத வினோபாஜிக்குத் தமிழ்க் கவிதையைப் புரியவைத்து உணர வைத்தார் அவர். வினோபாஜியும் உடனே மகிழ்ந்து, "வெளி அலங்காரத்தையெல்லாம் ஒதுக்கித் தள்ளி விட்டுக் கவிதையின் இதயத்துடிப்பை எல்லாம் எடுத்துக் கூறக்கூடிய "மர்மக் ஓ ரஸிகர்" அவர்; அவரைப் போன்ற பாடகரைக் காண்பது அரிதினும் அரிது"[2] என்று பாராட்டினார். இதையொத்தே அயல் தேசத்தவரான டாக்டர் அருண்டேலும் ரசிகமணியிடம் திருக்குற்றாலக் குறவஞ்சியைக் கேட்டறிந்தபின், "தமிழ்மொழி எனக்குத் தெரியாது. அதனால் ஒன்றும் கெட்டுப் போய்விடவில்லை. நீங்கள் தமிழ்ப்பாடல்களைப் பாடும்போது உங்களுடைய இதயம் என்னுடைய இதயத்தோடு ஒட்டி எனக்குப் பொருளை விளக்கிவிடுகிறது. உங்கள் குரல் மூலமும் முகப் பொலிவின் மூலமும் கவிதையின் உட்பொருளை நான் கண்டு கொண்டேன்"[3] என்று மனம் திறந்து பாராட்டுவதைக் காண முடிகிறது.

எப்போதும் தன்னைச் சுற்றி ஒரு தமிழ்ப் பற்றாளர் கூட்டத்தை இருத்தி வைத்துக் கொண்டு தமிழ் இலக்கியங்களைப் பற்றி அளவளாவியே வாழ்நாட்களைக் கழித்த ரசிகமணி டி.கே.சி. தமிழ்த் திறனாய்வுலகத்திலும் தனி முத்திரை பதித்துள்ளார். ரசிகமணி இரசித்தவை, இரசனையின் விளைவுகள் ஆகியவற்றை இக்கட்டுரை தொகுத்தளிக்கிறது.

### ரசிகமணி இரசித்தவை

ரசிகமணி உள்ளுணர்வுடன் இலக்கியத்தை நெருங்கியவர். அதனால் அவருடைய இரசிப்புத் தன்மை தனி வகையாகத் திகழ்கிறது. திறனாய்வு வகைகளில் தனிப்போக்கினை வகுக்கிறது. ரசிகமணி ஒரு படைப்பாளி என்பதை விடப் "படிப்பாளி" என்ற நிலையில் தான் தனிச்சிறப்பும் தனி இடமும் பெறுகிறார். தமிழ்க் கவிகளைப் படித்துப் படித்தே அவற்றைப் புதிதாகப் பதிப்பித்துள்ளார் என்பது மட்டுமன்றித் தான் இரசித்தவற்றையே நூல்களாகவும் ஆக்கியுள்ளார் என்பது அவருக்கிருக்கும் தனித்தன்மைகளாகும்.

ரசிகமணி கம்பனை நேசித்ததையும் கம்பர் பாடல்களில் தோய்ந்ததையும் பலரும் எண்ணி எண்ணி வியக்கின்றனர். இதனை "டி.கே.சி. கம்பனை அனுபவிக்கிறார். ஆராய்ச்சி செய்யவில்லை. மற்றவர்களை அனுபவிக்கும்படி தூண்டுகிறார்"[4] என்று குறிப்பிடுகிறார் தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான். "டி.கே.சி. அவர்கள் கம்பனுடைய உள்ளத்தில் புகுந்து அதன் அந்தரங்கத்தை அறிந்து கம்பன் பாடல்களைப் பாடிக் கவிவானம் உண்டாக்கி அமுத மழை பொழியச் செய்வார்"[5] என்கிறார் கல்கி. "பாடலைக் கேட்டுக் கொண்டிருக்கும் நம்மையும் அந்த அத்வைத நிலையில் இருத்தி வைக்கும் வல்லமையும் அவர்களிடம் இருந்தது"[6] என்பது நீதிபதி மகாராசனின் கூற்று.

ரசிகமணிக்குக் கம்பன் காவியம் மட்டுமின்றி, திருக்குறள், முத்தொள்ளாயிரம், திருவாசகம் போன்ற தமிழ் இலக்கியங்களிலும் ஈடுபாடு இருந்தது. தான் இரசித்தவற்றை இரசித்தவாறு எழுதி வெளியிடும் ஆற்றலும் அவரிடம் இருந்தது. 1941ஆம் ஆண்டில் "கம்பர் யார்", "இதய ஒலி" ஆகிய அவரது நூல்கள் வெளிவந்தன. அதே ஆண்டிலேயே "கல்கி" இதழில் "கம்பர் தருங் காட்சி" என்ற கட்டுரைத் தொடர் வெளிவரத் தொடங்கியது. கல்கி இதழில் வெளிவந்த தொடரைப் பற்றி முன்னாள் தமிழக முதல்வர் மறைந்த எம்.ஜி.ஆர். அவர்கள், "ரசிகமணி டி.கே.சி. கல்கி இதழில் பல ஆண்டுகள் கம்பராமாயணத்தின் அழகுகளை எடுத்துச் சொல்லாமல் இருந்திருந்தால் கம்பராமாயணம் இருந்த இடம் தெரியாமல் போயிருக்கும்"[7] என்று பாராட்டுகிறார்.

1942ஆம் ஆண்டில் கம்பராமாயணத்தின் பாலகாண்டம், அயோத்தியா காண்டம் ஆகியனவற்றை அவர் வெளியிட்டார். 1943இல் முத்தொள்ளாயிரப் பதிப்பு வெளிவந்தது. 1944இல் "அற்புதரஸம்" நூல் வெளிவந்தது. 1952, 1953 ஆகிய ஆண்டுகளில் முறையே "தமிழ்க்களஞ்சியம் கட்டுரைத் தொடரும், கம்பர் தரும் ராமாயணம்" முதற் பாகமும் வெளிவந்தன. ரசிகமணியின் வாழ்நாட்களில் வெளிவந்த அவருடைய நூல்கள் அவர் அவற்றை இரசித்தார் என்பதற்குச் சாட்சிகளாக விளங்குகின்றன.

ரசிகமணியைச் சங்க காலத்துப் பழமை வாய்ந்த பாடல்கள் பெரிதும் கவரவில்லை என்பது ஆய்வாளர்களின் கணிப்பு. அவர் தன் இரசனையிலும் ஒரு வரையறை

வைத்திருந்தார் என்றும் கருதப்படுகிறது. ஆனால் அவருடைய நண்பர்கள் சங்க இலக்கியங்களை அவர் பெரிதும் தன் இரசனையின் போது தெரிவு செய்யவில்லையே தவிர ஒரோவழி அவற்றைப் பற்றியும் விளக்கம் கூறிப் பாராட்டுவது உண்டென்று கூறுகின்றனர். இதற்குச் சான்றாகப் புறநானூற்றுப் பாடலுக்கு ஒருமுறை அவர் விளக்கம் தந்ததையும் எடுத்துக் காட்டுகின்றனர். ஆக, சங்க இலக்கியங்கள் அவரைப் பெரிதும் கவரவில்லை என்பதும், தன் உள்ளம் தோய்ந்த கவிதைகளும் இலக்கியங்களுமே சாலச் சிறந்தவை என்பதும் அவர் உள்ளக் கருத்துகள் என்பது புலனாகிறது. இரசிகமணி இரசித்தவற்றுள் இலக்கியங்களும், கலைகளும் அடங்கும்.

## இலக்கியங்கள்

### 1. கம்பர்

கவிதையை அனுபவிப்பதற்குப் படிப்புத் தேவையில்லை. உள்ளுணர்வு வேண்டும் என்பது ரசிகமணியின் கருத்து. இலக்கியத்தைக் கலையாகக் கருதிய ரசிகமணி, கலைக்குத் தரும் விளக்கம் இங்குக் கருதத் தக்கது. "உணர்ச்சித் தத்துவத்தில் போய்க் கலந்து நம்மை வேறு வஸ்து ஆக்கிவிடவேண்டும். அதனால் நமக்கு வேறு பிறப்பு ஒன்று கிட்டுகிறது. அதுதான் கலை" என்று அவர் கலைக்கு விளக்கம் தருகிறார். ரசிகமணியின் இந்த உணர்வுப் பூர்வ மனநிலை அவருடைய இரசிப்புத் தன்மையில் வெளித் தெரிகிறது. சான்றாக அவர் இரசித்த கம்பர் பாடல்கள் சிலவற்றைக் குறிப்பிடலாம். "கோவியில் தருமம் உங்கள்" என்று தொடங்கும் கம்பர் பாடலில், "ஓவியத்து எழுதவொண்ணா உருவத்தாய்" என்று ஒரு வரி இடம் பெறுகிறது. இதற்கு விளக்கம் கூறும் ரசிகமணி :

"பொதுவாக ஒருவர் முகத்திலும் உடல் அமைப்பிலும் அழகின் அம்சங்கள் ஆங்காங்குச் சிதறிக் கிடக்கும். சாமான்யமாகப் பார்ப்பவர்களுக்கு அவைதென்படாமல் போய்விடலாம். ஆனால் சித்திரக்காரன் என்ன செய்கிறான்? அந்த அம்சங்களை மாத்திரம் எடுத்து அவைகளுக்கு அழுத்தம் கொடுத்துவிடுகிறான். இந்தத் தெளித்தல் காரணமாக இயற்கையில் உள்ள அழகை விடச் சித்திரத்தில் அழகு அதிகமாகி விடுகிறது. ஆனால் இராமனிடத்திலோ எல்லா அம்சங்களும்

அழகுடன் நிற்கின்றன. தெளிப்பதற்கு இடமில்லை. சித்திரக் கலை தெளிப்பதனாலேயே குறைபட்டு விடுகிறது. இராமனது இயற்கையழகு அவ்வளவு பூரணமாக இருக்கிறது என்று பொருள். ஆகவேதான் "ஓவியத்தெழுதவொண்ணா உருவத்தாய்" என்று கம்பர் இராமனுடைய அழகை வருணிக்கிறார்"[9] என்று விளக்கம் தருகிறார். இது பொருள் அளவில் ரசிகமணி இரசித்து விளக்கம் கூறிய ஒரு பாடல் எனின் தாளம், ஒலி நயம் இவற்றின் அடிப்படையில் டி.கே.சி. இரசித்து அனுபவித்த கம்பன் கவிகளும் ஏராளம்.

கானான நிலமகளைக்
கைவிட்டுப் போனவளைக் காத்துப் பின்பு
போனானும் ஒரு தம்பி,
போனவர்கள் வரும் அவதி போயிற்றென்னா
ஆனாத உயிர் விட என்று
அமைவானும் ஒருதம்பி அயலே நாணாது
யானாம் இவ் அரசாள்வென்
என்னே இவ் அரசாட்சி இனிதே அம்மா

என்ற பாடலை டி.கே.சி. அடிக்கடி எடுத்துக்கூறி அனுபவிப்பதுண்டாம். இப்பாடலில் "எதுகையாலும், மோனையாலும் சொற்கட்டுகளாலும் ஏற்படும் "ரிதம்" அல்லது தாளம் கவிதைக்கு உயிராக அமைந்திருக்கிறது" என்பது அவர் கூற்றாகும். தாளம் தப்பினால் கவிக்கூளமே மிஞ்சும் என்பது அவரது வாதம். "மறைகளை மறைந்து போய் வனத்துள் வைகுவான்" என்ற கம்பராமாயண வரிகளுக்கு ரசிகமணி அளித்துள்ள விளக்கம் தனியானது. அயோத்திக்கு வரவேண்டும் என்று சுமந்திரன் கூறிய வேளையில் அதனை மறுத்த இராமனை மேற்கண்ட வரிகளைக் கொண்டு குறிப்பிடுகிறார் கம்பர். "கடவுளைக் காணுவதற்கு ஆணவம் நம்மை விட்டு நீங்க வேண்டும். நாட்டுக்குள்ளும் நகரத்துக்குள்ளும் நாம் இருக்கும்போது நான் இந்தக் கட்டடத்தைக் கட்டினேன். எங்கள் தாத்தா அந்த வயலைத் திருத்தினார்" என்றுதான் சொல்லத் தோன்றும். காரணம், வீடு, வயல் எல்லாம் மனுஷனுடைய செயலால் விளைவன. வனத்துக்குள் போய்விட்டாலோ ஓங்கி உயர்ந்த மரங்களைப் பார்க்கிறோம். பச்சையிலேயே 200 விதமான பச்சைகள்.. மனிதச் செயல் என்று சொல்லக்கூடிய பொருள்

ஒன்றுமில்லை வனத்திலே. எல்லாம் இறைவனுடைய செயல் என்ற எண்ணம் வனத்திலே நமக்கு ஏற்படுகிறது. நம்முடைய ஆணவச் செயல் பம்முகிறது. இதையே கம்பர் "மறைகளை மறைந்து போய் வனத்துள் வைகுவான்"[10] என்று கம்பர் பாடலுக்கு ரசிகமணி விளக்கம் தருகிறார். "காண்டற் கொத்த காலமும் ஈதே" என்ற பாடலுக்கு ரசிகமணி தரும் விளக்கம் சிறப்பானதாயுள்ளது. இதில் "தெறுகாவல்", "தூண்டற்கொத்த சிந்தையினாரோ துயில் கில்லார்" என்ற வரிக்கு அவர் விளக்கம் தர முன் வருகிறார். "தெறுகாவல்" என்றால் "காளிகோயில் முன்பு வாசலில் இரண்டு பயங்கரமான பெருத்த உருவங்கள் செய்து வைத்திருக்கும்; கையில் பெரிய வாள் ஒன்றை ஓங்கிய வண்ணமே இருக்கும். இவைகள்தான் காவலுக்கு அதிதேவதைகளின் சிலை உருவங்கள்; மீறிச் செல்பவர்களை வாள் கொண்டு வெட்டிவிடும்; தெறும் என்பது குறிப்பு. அத்தகைய காவல் தெய்வத்தைத் தூண்டற் கொத்த சிந்தையினரோ தூண்டி ஜாக்கிரதை பண்ணக்கூடிய அரக்கிகளோ துயில்கில்லார், தூங்கவேமாட்டார்" என்று அவர் விளக்கம் தந்தார்.

சொல், இசை, கட்டுக்கோப்பு இவைகளுடன் ஒத்த உருவத்தில் உணர்ச்சிகள் வெளிப்பட்டு விட்டால் அதுவே கவிதை என்று கவிதைக்கு விளக்கம் கொடுத்தார் ரசிகமணி.[11] இந்தக் கட்டுக்கோப்புக்குள் அடங்குவனவற்றை மட்டும் அவர் கவிதைகளாகக் கருதினார். எனவேதான் ஏற்கெனவே பழைய பதிப்புக்களிலிருந்தவற்றில் ஏராளமான கவிதைகளைச் செருகு கவிகள் என்ற பெயரில் அவர் ஒதுக்கிவிட்டு 1515 பாடல்களை மட்டும் கம்பன் கவிகளாக ஏற்றுக் கொண்டார். அவற்றிலும் 597 பாடல்களைத் திருத்தியும் எழுதினார்.

## 2. முத்தொள்ளாயிரம்

முத்தொள்ளாயிரத்தைப் பெரிதும் இரசித்த ரசிகமணி அதில் காணப்பட்ட அளபெடைக்குத் தரும் விளக்கம் குறிப்பிடத்தக்கது. "எலாஅ மடப்பிடியே" என்று தொடங்கும் பாடலில், "எலாஅ, புலாஅல், உலாஅங்கால் என்பனவற்றில் காணப்படும் அளபெடைகள், பெண்யானை சாவகசமாகப் போக வேண்டும் என்ற உள்ளக் கிடக்கையினைத் தொனிக்கச் செய்கின்றன" என்று குறிப்பிடுகின்றார்.[12] முத்தொள்ளாயிரத்தின் எளிமையும், இனிமையும் அவரைப் பெரிதும் ஈர்த்தன.

### 3. திருக்குறள்

திருக்குறளை நயம் பாராட்டும் ரசிகமணி "வேறு எந்தச் சக்தியோடும் ஒப்பிட்டுச் சொல்ல முடியாத சக்தி சொல்வன்மை என்பது குறளாசிரியர் அனுபவம்"[13] என்கிறார். திருக்குறள் திருவள்ளுவரின் வாழ்க்கை அனுபவம் அவரது கருத்து. சொல்வன்மை என்னும் அதிகாரத்தில் இருகுறட்பாக்களை எடுத்து விளக்கும் ரசிகமணி வள்ளுவரின் காலத்தில் சொல்வன்மை ஆதிக்கம் செலுத்தியது என்ற புதிய கருத்தையும் மொழிகிறார். இதற்குச் சான்றாக அவர் "விரைந்து தொழில் கேட்கும் ஞாலம்" என்னும் குறள் தொடரைக் குறிப்பிடுகிறார்.

### 4. நான்மணிக்கடிகை

நான்மணிக்கடிகையில் "கண்ணில் சிறந்த உறுப்பு இல்லை" என்ற பாடலுக்கு விளக்கம் தர முனையும் ரசிகமணி "கண்ணிற் சிறந்த உறுப்பில்லை" என்ற தொடருக்கும் "கொண்டானில் துன்னிய கேளிர் பிறரில்லை" என்ற தொடருக்கும் சிறந்த விளக்கங்களைத் தருகிறார். "கண்ணுக்கு எட்டாத தூரமே இல்லை. கோடிக்கணக்கான மைலுக்கு அப்பாலுள்ள நட்சத்திர உலகத்தைப் பார்த்து விடுகிறோம். தூரதிருஷ்டியை உபயோகப்படுத்தினால் ஆயிரம் கோடி மைலுக்கும் எட்டி விடுகிறது நமது கண்"[14] என்பது அவர் கூறும் விளக்கம்.

### 5. திருவாசகம்

"அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்கும்" என்னும் பாடலுக்கு விளக்கம் கூறப்புகும் ரசிகமணி "ஏளனமும் எக்களிப்பும் தமிழ்ச் செய்யுளின் அங்கங்களோடு கலந்து ஒரே கும்மாளி போடுகின்றன. ஏற்பட்ட ஓசை இயல்களோடு பாடப்பாடப் பாவம் தெளிவாக வந்து முன் நிற்கும்"[15] என்று குறிப்பிடுகிறார்.

### 6. ஆழ்வார் பாடல்கள்

திருமழிசை ஆழ்வாரின் "நின்றதெந்தை" என்ற பாசுரத்திற்கு ரசிகமணி மிகச் சிறந்த விளக்கம் தந்ததுடன் மிக அற்புதமான பக்திப் பாடல் என்று விமரிசிக்கவும் செய்கிறார். "நான் பிறக்காதபோது பெருமாள் ஊரகம், பாடகம், திருவெஃகானை ஆகிய ஊர்க்கோவில்களில் முறையே நின்றும்,

இருந்தும், கிடந்தும் காட்சி தந்தார். ஆனால் நான் பிறந்த பின் அவர் என் உள்ளத்துக்குள்ளேயே வந்துவிட்டார்" என்று ஆழ்வாரின் பக்திப் பெருமையை ரசிகமணி தன் தனிப்பாணியில் புலப்படுத்துகிறார்.

பெரியாழ்வாரின் "கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்" என்ற பாசுரத்தை விளக்கும் ரசிகமணி, பிள்ளைத் தமிழ் பாடுவது அரிது என்று கூறுவதுடன், எல்லாமே பிள்ளைத் தமிழ் ஆகா என்றும் உரைக்கிறார். ஆயின் பெரியாழ்வார் பாசுரத்தை எடுத்துரைத்து, "இது பிள்ளைத் தமிழ்த் தாயின் கண்ணோடு பார்த்து நாமும் அனுபவிக்கிறோம். கவியை, பெரியாழ்வார் தாயோடு தாயாக நின்று பாடிவிட்டார்"[16] என்று பாராட்டுகிறார்.

## 7. தேவாரம்

தேவாரப் பதிகங்களிலிருந்து " பறக்கும் எம் கிள்ளைகள்", "குருகு பாயக்கொழுங்கரும்புகள்" என்று தொடங்கும் இரண்டனைத் தெரிவு செய்து விளக்கும் ரசிகமணி "பக்தியும் காதலும் தமிழோடு கலந்து புரண்டு உருளுவது வெகு அழகாய் இருக்கிறது" என்று விளக்கமும் தருவதைக் காண முடிகிறது. "வெள்ளநீர்ச்சடையனார்" என்ற அப்பர் தேவாரத்தில் இறைவனின் திருக்கோலத்தைக் கனவில் கண்டுரைத்த தன்மைக்கு ரசிகமணி மிகச் செறிவாகவும், நாடக நயத்துடனும் விளக்கம் தந்துள்ளார்.

ரசிகமணியின் இலக்கிய விளக்கங்கள் பலவும் வரிக்குவரி படித்துப் பொருள் விளக்கம் அறியவல்லன. அவற்றைத் தொகுத்துச் சொல்லும் போதும்கூட உண்மை நயம் குறைந்து விட வாய்ப்புள்ளது.

## 8. நாடோடிப் பாடல்கள்

ரசிகமணி பேரிலக்கியங்களை மட்டுமின்றி நாடோடிப் பாடல்களையும் இரசித்து மகிழ்ந்தார். "கில்லென்று பூத்த சிறுநெருஞ்சிக் காட்டினிலே", "ஊரான் ஊரான் தோட்டத்திலே" போன்ற பாடல்கள் அவர் விரும்பி இரசித்தவற்றுள் சில.

## கலைகள்

### 1. இசை

மொழியறிந்து இசையை இரசிக்க வேண்டும் என்ற தீராத வேகம் கொண்டவரே ரசிகமணி. தமிழகத்தில் தமிழிசை வளரவேண்டும் என்று விரும்பி உழைத்தவர் அவர். இது தமிழின் பால் ஏற்பட்ட வெறியினால் அன்று. இசையை இதயத்திலே உணர்ந்து அனுபவிக்க வேண்டும் என்ற ஆசையினால் விளைந்தது. அக்காலத்தில் தெலுங்குக் கீர்த்தனைகளே மேடைகளில் பாடப்பட்டு வந்தன. மொழி அறியாமல் இசையை முழுமையாக இரசிக்க முடியாது என்று கருதிய ரசிகமணி தமிழிசை இயக்கத்தை ஆதரிக்கத் தொடங்கினார். ஆர்.கே. சண்முகம் செட்டியார், ராஜாஜி, கல்கி, நாமக்கல் கவிஞர், பாரதிதாசன், அண்ணாதுரை போன்றோரும் தமிழிசை மீது பற்றுக் கொண்டிருந்தனர்.

டி.கே.சி.யுடன் இணைந்து கல்கியும் தமிழிசைக்காகப் பல முயற்சிகளை மேற்கொண்டார். தாய்மொழியில் இசையை மக்கள் சுவைக்க வேண்டும் என்பது மட்டுமன்றி அதில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும் என்ற ஆசையும் ரசிகமணிக்குப் பெரிதும் இருந்தது. மொழி தெரிந்தால் உணர்ச்சியோடு பாடமுடியும் என்பது மட்டுமின்றி அனுபவித்துப் பாட முடியும் என்று அவர் உறுதியாக நம்பினார். தாய்மொழியில் இசையை உருசிக்க, இரசிக்கத் துடித்த அவர் தமிழிசை இயக்கத்தை ஆதரித்தது மட்டுமின்றி அது தொடர்பான மாநாடுகளில் கலந்து கொண்டு தலைமைப் பொறுப்பேற்று அதனை விளக்கினார்.

சென்னையில் நடைபெற்ற தமிழிசை மாநாட்டுக்குத் தலைமையேற்ற அவர் இசை என்பது இதயத்துடன் ஊடாடி நிற்பது என்றார். இசை என்பது மூளையுடன் சம்பந்தப்பட்டதல்ல. இதயத்துடன் சம்பந்தப் பட்டது என்ற கருத்துக் கொண்ட ரசிகமணி, "பாடிக்கேட்க வேண்டும், ரசிக்க வேண்டும்" என்று விரும்பினார். தமது மகன் தீத்தாரப்பனின் திருமணத்தில் சரஸ்வதிபாய் அம்மையின் "நந்தனார் சரித்திரக் கீர்த்தனை" நிகழ்ச்சியை நடத்தித் தானே தமிழிசை இயக்கத்திற்கு முன் மாதிரியாக நின்றார். அவரவர் தாய்மொழியில் அமைந்த பாடல்களில் தான் நுட்பமான உணர்ச்சி பாவங்களை

உணரமுடியும் என்பது ரசிகமணியின் கருத்து. மொழி மட்டும் எல்லாம் ஆகிவிடாது என்பதில் உறுதியான நம்பிக்கை கெண்டவர் ரசிகமணி. இதுவே அவருடைய இரசனைத்திறனுக்குத் தக்க சான்று. அதுவே அவருடைய தனித்தன்மை. ரசிகமணி தமிழிசை இயக்கத்தை ஆதரித்தமை பற்றியும், அதன் பால் கொண்ட ஈடுபாடு பற்றியும் அவருடைய கடிதங்கள் புலப்படுத்துகின்றன. "இரசனையின் ஒலி" என்ற பெயரில் வெளிவந்திருக்கும் அக்கடிதங்கள் ரசிகமணியின் இசை இரசனையைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. அவை இசையைப் பற்றி அவர் கொண்டிருந்த கருத்துக்களைத் தெளிவு படுத்துகின்றன.

இலக்கியங்களுடன் இணைத்தே இசையைப் பார்க்கும் போக்கும் ரசிகமணியின் தனிச்சிறப்பாகும். "பக்தி உணர்ச்சியோடு சீனிக் கண்ணி, சித்தர் பாடல், காவடிச்சிந்து முதலியவைகளைப் பாடினால் பரவசம் அடையத்தான் செய்கிறேன். ஆனால் "சங்கதி" - "சங்கதி" என்று சுரங்களைக் கொண்டு கீச்சு கீச்சுத் தாம்பாளம் விளையாடுகிறதை ரொம்ப அனுபவித்து விட முடியாது. அதோடு அபசுரமும், சுருதியின்மையும் சேர்ந்து விட்டால் கேட்கவா வேண்டும். அமிர்தாஞ்சனத்துக்கு ஆர்டர் பண்ண வேண்டியதுதான்"[18] என்று அவர் நகைச்சுவையுடன் குறிப்பிடும் இடத்திலும் இசையில் அவருக்கிருந்த ஈடுபாடு தெளிவாகத் தெரிகிறது. இசை என்பது ஒரு கடல். அதுவும் தமிழிசை ஒவ்வொரு உணர்ச்சிக்கும் ஒரு தனி உருவத்தைக் கொடுக்கக் கூடியது. நமது இசையின் வலிமை இது என்று ரசிகமணி கூறும்போது இசையை அவர் அனுபவிக்கும் பாங்கு தெளிவாகிறது.

தாமே கம்பன் கவிகளைப் பாடி மகிழ்ந்து பிறரையும் மகிழ்ச்சிப் படுத்திய ரசிகமணியின் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சி பல சந்தர்ப்பங்களில் சுட்டிக் காட்டப்படுவதுண்டு. திருநெல்வேலியில் ரசிகமணி வசித்து வந்தபோது மதிய உணவு அருந்தும் போது வழக்கம் போல இன்னும் நாலைந்து பேர் அமர்ந்து உண்டு கொண்டிருந்தனர். ஏறக்குறைய எல்லோரும் சாப்பிட்டு முடியும் தறுவாயில் ரசிகமணி தமிழ்ப்பாட்டு ஒன்றைப் பாடத் தொடங்க, உடனிருந்தோர் அதனை அனுபவித்து இரசிக்கத் தொடங்கினர். நேரம் போவதே தெரியாமல் ரசிகமணி

பாடிப்பாடி அப்பாட்டை விளக்க அனைவரும் சாப்பிட்ட கையைக் கழுவவும் மறந்து அமர்ந்திருக்க மாலையும் நெருங்க, "சரி அப்படியே டிபனுக்கு இலை போட்டு விடலாமா" என்று அவரது துணைவியார் திருமதி பிச்சம்மாள் அண்ணி கேட்டார்களாம். இசையை ஆதரித்ததன்றித் தாமே இசை பாடவல்லவர் என்பதாலேயே அவர் சிறந்த இசை இரசிகராகிறார்.

மொழி தெரிந்தால் இசையை இரசிக்க முடியும் என்பதைத் தீவிரமாக உணர்த்தி வந்தார் ரசிகமணி. தன் அருமை நண்பர் பட்டாபிக்கு அவர் எழுதிய கடிதத்தில், "தாங்கள் எத்தனையோ பாஷைகளைக் கற்று வைத்திருக்கிறீர்கள். அதனால் "புருஹி முகிர்தேதி" என்ற பாட்டை அனுபவித்து விட்டீர்கள். எனக்கு ஒன்றும் விளங்காதே! என்ன செய்கிறது?" "காலைத் தூக்கி நின்றாடும்" பாட்டைக் கேட்டிருக்கலாம். அதைக் கேட்டால் என்ன தெரியவரும். எதுகுல காம்போதியும் தாளமும் பாட்டிலுள்ள பக்திப் பெருக்கைக் காட்டுவதற்காக அவதரித்தவை என்று சொல்லத் தோன்றும். (கவியில் சீர் மோனை எதுகை எப்படியோ அப்படித்தான்) இந்த டெஸ்ட்டுக்குச் சரி வந்தால்தான் ஆர்ட்"[19] என்று இசையை விளக்குகிறார் அவர். இதிலிருந்து அவரது ஆழ்ந்த இசை ஞானம், குறையாத இசை ஆர்வம், இரசிக்கும் மனநிலை யாவும் தெளிவாகப் புலப்படுகின்றன. இசையுடன் இணைத்தே இலக்கியங்களை அவர் தெரிவு செய்து இரசித்தார் என்பதும் வெள்ளிடைமலை.

## 2. பரதம்

பரதம் என்பது பண்பாடுடன் கூடி வளர்ந்த நடனக் கலையாகும். இதன்பால் பெரிதும் ஆர்வம் கொண்ட ரசிகமணி, இந்த நாட்டியக் கலையின் பெருமையை உள்ளபடி உணர்ந்து இரசித்தார். "தினம் காலை தோறும் குழந்தைகளிடம் பரத நாட்டியத்தைக் கற்று வருகின்றேன். ஆடுவதற்காக அல்ல. அதன் அற்புதமான தத்துவங்களையும் சக்திகளையும் அறிந்து கொள்வதற்காகத்தான் பார்த்து வருகின்றேன். நம்முடைய நடனம் போல் உண்மைக்கு விளக்கம் கொடுக்கக் கூடிய நடனம் உலகத்திலே இல்லை. வேறு கலையே இல்லையோ என்று கூட சொல்லத் தோன்றும். அநேகமாக உண்மையும் அதுதான்"[20] என்கிறார் அவர்.

கவிதை அவர் இதயத்திற்கு நெருக்கமாக இருந்ததைப் போலவே நடனமும் இருந்ததை அறிய முடிகிறது. திருமதி பாலசரஸ்வதி, பந்தநல்லூர் ஜெயலட்சுமி முதலான பரதக் கலைஞர்கள் புகழ், பொருள் பெறக் காரணமாக இருந்தது மட்டுமின்றி, தங்கள் நாட்டியங்களின்வழிப் பரதக் கலையைப் புத்துயிர் பெறச் செய்வதற்கும் வழி வகுத்தவர் ரசிகமணியே ஆவார். தனிப்பட்ட முறையிலும் பரதக் கலைக்கு ரசிகமணி பேராதரவு தந்தார். அவருடைய ஆதரவால் வட்டத் தொட்டியிலும், திருமண இல்லங்களிலும் பரத நிகழ்ச்சிகளைப் பாலசரஸ்வதி நிகழ்த்தினார். தன் கடிதங்களில் பரதத்தை வியந்து பாராட்டும் ரசிகமணி, பரதக் கலைஞர்களுக்கு உச்சியில் இருந்து உள்ளங்கால் வரை ஒவ்வொரு அங்கமும் அல்லவா பேசுகிறது என்று வியக்கிறார். மேலும் அவர் எழுதும் போது "எம்.எஸ்.சங்கீதம், ராதாவின் நடனம், பாலசரஸ்வதியின் அபிநயம் இந்த மூன்றும் அழகு வாய்ந்தவை" என்று குறிப்பிடுவதுடன், தமிழர்கள் உயர்ந்த பண்பாட்டினை எடுத்துக் காட்டுவதாகவும் குறிப்பிடுகிறார். மேலும் ருக்மிணி அருண்டேல் தம்பதியர் குற்றாலத்திற்குச் சென்ற போது நாட்கணக்கில் ரசிகமணியிடம், குற்றாலக் குறவஞ்சியைப் பாடக் கேட்டு அறிந்த நிலையில் அதனை நாட்டிய நாடகமாக்கவும் ஆர்வம் கொண்டார் எனத் தெரிகிறது.

ரசிகமணி இந்து சமய அறநிலைய ஆணையராக இருந்தமையும் பரதக் கலையை வளர்ப்பதில் அவருக்குப் பேருதவியாக இருந்தது. நாட்டியக் கலைஞர்கள் அறிமுகமானதும் அவ்வாறே. சமுதாயத்தில் தாழ்நிலையை எட்டியிருந்த பரதம் மீண்டும் புத்துயிர் பெற்றுத் தழைத்ததற்குக் காரணமே ரசிகமணிதான் என்று போற்றுவார் உண்டு. "நடனத்திற்கு அந்தஸ்துக் கொடுத்து விட்டார்கள். தமிழ் நாட்டிற்கு அது பெரிய வருவாய்" என்று அவரே கூறுகிறார்.[21] பரதத்தில் பாவம் இருந்ததை ரசிகமணி இரசித்தார். உடல் உறுப்புக்களில் கண்ணில், உதட்டில், புருவத்தில் கலை தோன்றுவதால் இன்ப அனுபவத்தைப் பெற்றார் ரசிகமணி. பரதம் அழகு நிரம்பிய கலை. அதன் மூலம் புதுப்புதுக் கற்பனைகள் உருவாகும். அது ஒரு தனி உலகை உருவாக்கும் என்றெல்லாம் இரசிகமணி பரதக் கலையை வியந்து போற்றி இரசித்து ஊக்கப்படுத்தி வளர்த்தார்.

### 3. வில்லிசை

கிராமியக் கலையான வில்லுப்பாட்டை ரசிகமணி மிகவும் இரசித்தார். சாதாரணமாகக் கிராமப்புறத்துக் கோவில்களில் நடைபெறும் வில்லிசைக் கச்சேரிகளில் காணப்படும் இசை ரசிகமணியை ஈர்த்தது. வில்லிசை அனைவராலும் அறியப்படவேண்டியது மட்டுமின்றி இரசிக்கப்படவேண்டியது என்றும் கருதினார் அவர். சிறந்த வில்லிசைக் கலைஞர்களை ஊக்கப்படுத்தியதுடன் பலரும் வில்லிசையினைக் கேட்டு இரசிக்க வேண்டும் என முனைந்தார். தன்னை அவர் மிகவும் ஊக்கப்படுத்தியதாகத் திரு. பிச்சைக்குட்டி குறிப்பிடுகிறார். வில்லுப்பாட்டில் உள்ள இசையை விளக்கும் ரசிகமணி "பலவிதத் தாளக் கருவிகளுக்கிடையே எழுந்து வரும் கவி நிமிர்ந்து கொண்டே வரும். கடைசியில் முத்தாய்ப்புடன் ஒரு நடனம் ஆடிநிறுத்தும். இதை லகுவாய்ச் சாதித்து விடுகிறது வில்லுப்பாட்டு" என்று குறிக்கிறார்.

### 4. சிற்பக்கலை

தமிழகத்துத் திருக்கோவில்களில் காணும் சிற்பங்களைக் கண்டு இரசித்தவர் ரசிகமணியாவார். தென்காசிக் கோவில் கல்வெட்டில் உள்ள தகவல்களை ரசிகமணி வெளிப்படுத்தினார். சிற்பத்தை உயிரற்றதாகப் பார்க்கவில்லை ரசிகமணி. உணர்ச்சி இல்லாமல் பார்த்தால் ஒன்றும் இல்லை. உணர்ச்சியோடு பார்த்தால் எல்லாம் தென்காசியில் இருக்கின்றன என்பது அவர் கருத்து. செங்கல்லும், சுண்ணாம்புமே சிற்பம் ஆகிவிடாது. இதயப் பூர்வ ரசனையுடன் சிற்பத்தைக் கண்டு அனுபவிக்கும் போதே இன்பம் பிறக்கும் என்று ரசிகமணி உணர்த்தினார். அதனால்தான் அகோபிலம் கோயில் சிற்பங்களும், குற்றாலம் சித்திரசபை முகப்பிலுள்ள சிற்பங்களும் ரசிகமணியால் புத்துயிர் பெற்றன. ரசிகமணியைப் பொறுத்த மட்டில் கல்லும் அவர் முன் கவிபாடிற்று.

## இரசனையின் விளைவுகள்

### 1. திறனாய்வாளர் உருவாக்கம்

"இலக்கியத் திறனாய்வு என்பது இலக்கியத்தை மதிப்பிடும் கலை. இலக்கியம் எந்த அளவுக்கு என்னென்ன காரணங்களால்

சிறந்ததாக அல்லது மோசமானதாக உள்ளது எனக்காணும் முயற்சி" என்று இலக்கியத் திறனாய்வு விளக்கம் பெறுகிறது.[22]

அ.ச. ஞானசம்பந்தன் திறனாய்வு மிகக் கடினமான மிகப்பெரிய பணி என்று கருதுகிறார்.

> நூலுள் மறைந்தும், குறிப்பாகவும் காணப்பெறும் தன்மைகளை நன்கு எடுத்துக் காட்டுவதும் திறனாய்வுப் பணிகளுள் ஒன்று

என்று அவர் குறிப்பிடுகிறார்.[23] ஆக இவ்வறிஞர்களின் கூற்றுக்களிலிருந்து இலக்கியத் திறனாய்வு என்பது ஒரு நூலை மதிப்பிடும் பணி என்பதையும், இலக்கியத்தை முழுவதும் அறிய உதவும் ஒரு வழி என்றும் உணரலாம். பிரிட்டானிகா கலைக்களஞ்சியம் "இலக்கியத்தில் அல்லது நுண்கலைகளில் உள்ள அழகியல் கூறுபாடுகளின் பண்பையும் மதிப்பையும் பற்றித் தீர்மானிப்பதே திறனாய்வு"[24] என்று விளக்கம் தருகிறது. எனவே ஒரு திறனாய்வாளனின் பொறுப்புக்கள் பலவாகின்றன. இலக்கியத்தின் தரம், தரமின்மை ஆகியவற்றை எடுத்துக் காட்டுவதில் திறனாய்வுக்குத் தனி இடம் உள்ளது. ஆகவே ஒரு திறனாய்வாளன் பல்வேறு தகுதிப்பாடுகள் உடையவனாகவே இருக்க வேண்டிய அவசியம் நேர்கிறது. விரிந்து பரந்த நூலறிவு, பன்மொழிப்புலமை, திறனாயும் துறை பற்றிய அறிவு, இலக்கியத் தெளிவு, இலக்கியத் தேர்ச்சி, மூல நூலாரின் உட்கிடக்கை அறிதல், படைப்பாளியிடம் காணப்படும் தாக்கம், நூலின் நிலைத்த வாழ்வு, படைப்பு இரகசியங்கள், படைப்பாளரின் பண்பு, வரலாற்றுப் பின்னணி, சமூகப் பின்னணி, நேர்மை, பாரபட்சமின்மை, துணிவு, வாழ்க்கை அனுபவம், இலக்கிய அனுபவம் போன்ற எண்ணிலடங்காப் பண்புகள் திறனாய்வாளருக்குத் தேவைப்படுகின்றன. இன்றைய காலக் கட்டத்தில் திறனாய்வு உலகம் தழைத்துச் செழித்து வளர்ந்து வருகிறது. அதன் பயனாகத் திறனாய்வு வகைகளும் பரவலாக்கப்பட்டு விளக்கம் பெறுகின்றன.

ரசிகமணி ஒரு திறனாய்வாளருக்குரிய தகுதிகள் பலவற்றைப் பெற்றிருக்கிறார். அவருடைய இரசனைத் திறன் அவரை ஒரு திறனாய்வாளராக உயர்த்தி விட்டது என்பதில் ஐயமில்லை. ரசிகமணி பெரும்பாலும் கவிதைகளைத் திறனாய்வு

செய்துள்ளார். கவிதைகளைத் திறனாய்வு செய்து கருத்துக்கள் கூறும் நிலையிலேயே அவர் விரும்பும் அல்லது ஏற்கும் கவிதைக் கொள்கையும் புலப்பட்டு விடும். ரசிகமணி இலக்கியங்களை அவற்றின் முருகியல் தன்மையை அடிப்படையாகக் கொண்டு திறனாய்கிறார் அல்லது விமரிசிக்கிறார். எனவே "அழகியல் வாதத் திறனாய்வு" என்ற வகையினதாக ரசிகமணியின் திறனாய்வு முறை அமைகிறது என்பது ஆய்வாளர்கள் கருத்து. இலக்கியத்தின் அழகு முதன்மை தரும் போக்கு அவரிடம் இருந்தது. தன் வாழ்நாள் முழுவதும் அவர் இலக்கிய அழகை இரசித்தார். தான் இரசித்ததைப் பிறரும் இரசிக்கும்படிச் செய்தார். இதனாலேயே "ரசிகமணி" என்ற பட்டமும் பெற்றார். ரசிகமணியின் இலக்கிய வாசிப்பு வித்தியாசமானது. இதனைக் குறிப்பிட முனையும், பாஸ்கரத் தொண்டைமான்,

> "கம்பனைப் பற்றி டி.கே.சி. பேசும் போது டி.கே.சி.யின் நா பேசும், வாய் பேசும், அடர்ந்த நெற்றிப் புருவம் பேசும், செழித்து வளர்ந்துள்ள மீசை பேசும். எல்லாவற்றிற்கும் மேலாக அவருடைய உள்ளமே நம்முடைய உள்ளத்தோடு பேசும்"[25]

என்று குறிப்பிடுகிறார். அவர் மேலும் குறிப்பிடுகையில்

> "ஒலியினைச் சுவைத்துச் சுவைத்து அதன் சுவையை நிர்ணயித்துவிடும் பிரெஞ்சு அறிஞரைப் போலத் தமிழ்க் கவிதையைச் சுவைத்துச் சுவைத்து அதன் ருசியை நிர்ணயித்து விடுபவர் டி.கே.சி."[26]

என்றும் கூறுகிறார். இந்தச் சுவை இன்பமே தமிழ் இலக்கண நூல்களில் "மெய்ப்பாடு" என்று குறிக்கப் பெறுகிறது. இதனை வடமொழியாளர் ரஸம், பாவம் என்று குறிப்பர். இரசனை என்பது தனி மனித அனுபவம் ஆகும். அது ஓர் இலக்கியத்தை வாசிப்பதால் தோன்றுவது. ரசிகமணிக்கும் சில தமிழ் இலக்கியங்களைப் படிக்கும் போது இத்தகைய உணர்வு உண்டானது.

ரசிகமணிக்கு முன்பாகத் தமிழ் இலக்கிய உலகில் இத்தகைய உணர்வுகளுக்கு ஆட்பட்டவர் வ.வே.சு.ஐயர் என்று கருதப்படுகிறது. ஏறக்குறைய அரை நூற்றாண்டுக் கால வளர்ச்சியையும், வரலாற்றையும் பெற்றுள்ள தமிழ்த்

திறனாய்வுலகில், திறனாய்வுத் துறையின் முதன் முயற்சியாளர் என்றும் அவர் கருதப்படுகிறார். "தமிழ்ச் சிறுகதை உலகின் தந்தை" என்பது மட்டுமல்ல "தமிழ்த் திறனாய்வுலகின் தந்தை" என்றும் கூட அவர் கருதப்படுகிறார். ஏனெனில் இலக்கியம் இரசனை மிக்கதாக இருத்தல் வேண்டும் என்பதை முதலில் கூறியவர் வ.வே.சு.ஐயர். பல மேலை நாட்டு இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்த அவர் ஒப்பாய்வு நோக்கிலேயே "கம்பராமாயண ரசனை" என்ற நூலை எழுத முற்பட்டார் எனினும், அதில் முன்நிற்பது இரசனையே என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. இதனை இரசனை என்பதற்கு அவர் தரும் விளக்கத்தின் வழி அறியலாம். "கதையின் ஓட்டத்தையும் சம்பாஷணைகளின் அமைப்பையும் ரசிகன் இருதயத்திற்குத் திருப்தி அளிக்கும்படிப் பொருத்தமாகச் சேர்த்து வைத்து எழுதுவதே ரசனை"[27] என்பது அவர் கருத்து. இரசனைச் சுகம் கம்பராமாயணத்தில் அதிகம் காணப்படுகிறது ("என்பது எனது கதி என்றும்"[28]) என்றும் அவர் கூறுகிறார். இதனைத் தமிழ்த் திறனாய்வு பற்றிய ஆய்வினை நிகழ்த்தியுள்ள பிறரும் ஏற்கின்றனர். ''ஆனந்தம், துக்கம் இத்யாதி, உணர்ச்சிகளைத் தாங்களும் அனுபவித்து நம்மையும் அனுபவிக்கும்படி செய்கிறார்கள் கவிகள்'' என்ற அவரது கூற்றினைச் சுட்டிக் காட்டி, சி.கனகசபாபதியும் "அனுபவம்" என்பதை வ.வே.சு. ஐயர் முன்னிறுத்துவதாக உரைக்கிறார்.[29] வ.வே.சு.ஐயரைப் பற்றிக் குறிப்பிடுகையில் சி.சு. செல்லப்பாவும், "அழகியல் அடிப்படையில் ரசனா பூர்வமான விமரிசனத்தை அவர் வளர்த்தார்"[30] என்று குறிப்பிடுகிறார். எனவே வ.வே.சு. ஐயர் கண்டறிந்த அழகியல் முறைத் திறனாய்வு அல்லது இரசனை முறைத் திறனாய்வு வழிமுறையினை ரசிகமணி தொடர்ந்தார் எனலாம்.

ரசிகமணியின் இரசனைத்திறனே அவரைத் தமிழ் இலக்கியத் திறனாய்வுக்குள் இடம்பெறச் செய்திருக்கிறது. இரசனைத் திறனாய்வினை விளக்க முற்படும் இலக்கிய விமரிசகர் சி. கனகசபாபதி, கவிதையின் அனுபவத்தை வாங்கி வாசகருக்கு அல்லது கேட்போருக்கு எடுத்துக் கூறி அவர்களின் கண்களின் முன் அதைக் களிநடம் புரியச் செய்வதே இரசனைமுறைத் திறனாய்வு என்கிறார். இத்தகைய முறையை ரசிகமணியிடம் காண்பதாகப் பலரும் உரைக்கின்றனர். "விமரிசனம் என்பதே ரசிகமணியின் பார்வையில்தான் பிறக்கிறது என்று

குறிப்பிடுகிறார் க.நா. சுப்பிரமணியம்."[31] விமரிசனம் என்பதை விளக்க முன்வரும் சி.சு.செல்லப்பா, இலக்கிய விமரிசனமே ஓர் இலக்கியப் படைப்புக்கும், படிப்புக்கும் ஏற்படுகிற தொடர்பின் விளைவு என்கிறார். படைப்பின் கலைத்தன்மைக்கும், இரசனைக்கும் உண்டாகும் ஒட்டுதலின் பயன் என்று அதனை மேலும் விளக்கும் அவர் இத்தகைய விமரிசனத்தால் படைப்பின் மதிப்பும், படிப்பின் உணர்வும் ஒன்றுபடுவதையும் குறிப்பிடுகிறார்.[32] இதனை உறுதி செய்வதாகவே திரு அ. அ. மணவாளனும் படைப்புக்கும் படிப்பாளர்களுக்கும் இடையில் நல்ல தூதுவராகத் திறனாய்வாளரின் பணியை டி.கே.சி. செய்திருப்பதாகக் குறிப்பிடுகிறார்.[33]

## 2. கவிதை புதுவிளக்கம்

ரசிகமணி தன் இரசனைத் தன்மையினால் கவிதையையே புதுமையாகப் பார்த்தார். கவிதைக்குப் புதுமையான விளக்கத்தை அளித்தார். அவருடைய "இதயஒலி", "கம்பர் யார்" போன்ற நூல்களிலும் அவருடைய கடிதங்களிலும் கவிதைக்குரிய விளக்கங்களை ரசிகமணி பலப்பட எடுத்துரைத்திருக்கிறார். கவிதை என்பது பொருள், எதுகை, மோனை, உணர்ச்சி இவற்றுள் எதிலும் தனியாக இல்லை. இவை எல்லாம் சேர்ந்து ஒத்தியைந்து வருவதுதான் கவிதை. ரசிகமணியைப் பொறுத்தவரை கவிதையின் தலையாய பண்பு எளிமையே. இதனாலேயே அவர் சங்க இலக்கியங்களைப் புறந்தள்ளினாரோ என்று கருதத் தோன்றுகிறது. அவர் "கவிதை" என்பது "அற்புத சிருஷ்டி" என்கிறார். இதனை மேலும் விளக்கப்புகும் அவர் "கவிக்கு விஷயம் அல்ல. உருவமே பிரதானம்" என்கிறார். உருவம் என்பது கருத்து, உணர்ச்சி, சொல், தாளம் எல்லாம் சேர்ந்து பிறக்கிற ஓர் அற்புதத் தத்துவம் என்பது அவர் கருத்து.[34] அவர் கவிதையின் முக்கியப் பண்பாக இசையைக் கருதினார். "கவிகள் என்பவை, தாளங்களால் அனுபவிக்கப்படுபவை"[35] என்று அவர் குறிப்பிடுகிறார்.

கவிதைகளின் வகைகள் வேறு. இவற்றை எளிமையாகக் குறிப்பிட்டுவிடலாம். ஆனால் இது "கவி" என்று குறிப்பிட்டுச் சொல்வது வேறு என்று ரசிகமணி கருதுகிறார். உண்மையான ஆர்வத்துடன் நெடுநாள் கவிதையுடன் பழகினால் உண்மையான கவியை உணரலாம் என்று தீவிரமாகக் கருதும் அவர் விருப்பங்களையும், விருப்பமின்மைகளையும் "ரசங்கள்" என்று

கருதுகிறார். சீர், எதுகை, மோனை என்பன கவியின் அலங்காரங்கள் அல்ல. ஆயின் அவை கவியின் அங்கங்கள் என்பது அவர் கருத்து. பரதக்கலையின் அபிநயங்களுடன் கவியின் யாப்பலங்காரங்களை ஒப்பிடும் ரசிகமணி கவியின் உணர்ச்சியைப் புலப்படுத்துவதாகவே யாப்பலங்காரம் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். யாப்பலங்காரங்கள் கவியின் உணர்ச்சியைப் புலப்படுத்தவேண்டும் என்பது அவர் கருத்து. கவிதைக்குக் கருத்துத் தேவை. எனினும் அதுமட்டுமே முக்கியமல்ல. அது எப்படிச் சொல்லப்படுகின்றது என்பதுதான் கவிக்கு அழகு தரமுடியும். ஏனெனில் சொல்லப்படுகிற முறையில்தான் கவி சிறக்க முடியும்.

ரசிகமணி தன் கவிதையின் புது விளக்கத்தால் உண்மைக் கவியை அடையாளம் காணலாம் என்று உறுதியாகக் கருதினார். உண்மையான கவிதையை இனம் காணுவது எவ்வாறு என்பதையும் அவர் விளக்கினார். இந்தச் சிந்தனையின் விளைவாக, அதாவது உருவம், உணர்ச்சி, ரசனை, பாவம், தாளம், தொனி, ஓசை முதலியவற்றின் அடிப்படையில் அமைவதே கவி என்பதன் அடிப்படையில் தமிழ் இலக்கியங்களில் பல கவிதைகளை அவர் புறந்தள்ளுகிறார்.

சில வரையறைகளை வகுத்து அவற்றின் அடிப்படையில் கவிகளை வரையறை செய்யலாம் என்ற முடிவுக்கு வந்த ரசிகமணி ஒரு கவிஞரையும் அவருடைய கவியையும் அறிந்து கொள்ளலாம் என்ற புதுமை நிலையைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் தோற்றுவித்தார். இதன் விளைவாகக் கம்பரது இராமாயணத்தில் பல கவிதைகளைச் "செருகு கவிகள்" என்று கருதுகிறார். அதற்கான காரணத்தையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை.

"முதலில் ஏதோ ஒரு படலத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினேன். சில பாகங்கள் மிக மட்டமாயிருந்தன. சில பாகங்கள் பிரமாதமாய் இருந்தன. ஏன் இப்படிப் பெருத்த வித்தியாசம் இருக்கிறது என்று ஓர் எண்ணம் உண்டாயிற்று. துணிச்சலாய் ஒரு யுக்தி செய்தேன். தள்ள வேண்டியதையெல்லாம் தள்ளி நல்ல பாகங்களை மாத்திரம் வைத்துக் கொண்டு ஒரு படலம் பூராவையும் முறையாய்ப் படித்தேன். கதையின் கட்டுக்கோப்பு, பாட்டுகளின் ஒழுங்கான கதி, பாவம்

இவையெல்லாம் மேலே மேலே ஆகாயத்தை நோக்கி ஏறுவது மாதிரி இருந்தது. கம்பரது அற்புதமான கவிதாசக்தி மனதில் பட்டுவிட்டது"[35] என்பது ரசிகமணியின் கூற்று. ஏறக்குறைய முப்பதாண்டுகள் கம்பனை மீளவும் மீளவும் படித்து அறிந்த பின்னரே செருகுகவிகள் என்று தாம் உறுதியாகக் கருதியதாக அவர் குறிப்பிடுகிறார்.

தன்னுடைய கம்பராமாயண முகவுரையில் அவர், கம்பர் கவிகளில், "பாவமும் வேகமும் எங்கேயோ இருந்து வந்த மாதிரி புத்தம் புதியனவாய் இருக்கும். ஒவ்வொரு செய்யுளிலும் ஒரு தனியான ரசம். கவிக்கு ஏதோ நவரசம் என்கிறார்கள். ஆனால் கம்பருடைய கவிகளைப் பார்க்கும் போது ஆயிரக் கணக்கான ரசங்கள் உண்டென்று சொல்ல வேண்டியிருக்கிறது. "இப்படித் தனித்த ரசம் வாய்ந்த உயிர்த்தத்துவம் வாய்ந்த கவிகளாய் இருப்பதாலேயே கம்பருடைய கவிகளை இனம்கண்டு கொள்ள முடிகிறது"[36] என்று தன்னிலை விளக்கம் தருகிறார். கம்பராமாயணத்தில்தான் செருகு கவிகள் மிகுதி என்றும், கம்பர் கவிதைகளைப் பாடிப்பாடியே பலர் போலிக் கவிகள் எழுதினர் என்பதும் அவர் கற்பிக்கும் காரணங்களாகும்.

ரசிகமணியின் இரசிப்புத் தன்மையின் உச்சக் கட்டம் இதுவே எனலாம். கம்பரை மீள மீள மிகுதியாக இரசித்து அதனால் அவர் கவிகளை இனம் காணமுடியும் என்ற உறுதி கொண்டு கம்பராமாயணப் பாடல்களில் செருகு கவிகள் என்று பிரித்தெடுத்துத் திருத்தி, மறுபதிப்புச் செய்து வெளியிடவும் செய்தார். இது ரசிகமணியின் இரசனைத் திறனால் நேர்ந்த பெரிய விளைவாகும்.

### 3. எதிர்ப்புகள்

ரசிகமணி தீவிரமாகக் கடைப்பிடித்துப் பரப்பி வந்த கவிதைக் கொள்கைகளை ஆர்வத்துடன் பலர் பாராட்டி வந்த போதிலும் அவரை எதிர்த்தவர்களும் மிகப் பலர் உண்டு. குறிப்பாகக் கம்பராமாயணத் திருத்தத்தைப் பண்டிதர்கள் பலர் கடுமையாகச் சாடினர். ரசிகமணியைக் குறை கூறினர். இதுவும் அவரது இரசிப்புத் தன்மையின் விளைவாக நேர்ந்ததுவே. இன்றளவும் அவரது திருத்தத்தைத் தமிழுலகம் ஏற்றுக் கொண்டுள்ளதா என்பது கேள்விக் குறியே. இதையொத்த அவரது

தமிழிசை இயக்கத்திற்கும் பல கண்டனக் குரல்கள் எழுந்தன. இதனையும் அவர்தன் கடிதங்களில் பதிவு செய்யத் தவறவில்லை. எனினும் இன்றைய சூழலில் தமிழிசைவழித் தமிழ் முதன்மை பெறுதல் என்ற கருத்துப் பெரிதும் பரவியுள்ளது மட்டுமின்றி ஏற்கப்பட்டுள்ளது என்றும் காண்கின்றோம்.

முடிவுகள்

1. தமிழ் இலக்கிய உலகில் ரசிகமணிதான் இலக்கியங்களை அனுபவித்த முறையாலேயே தனித்தன்மை பெற்று விளங்குகிறார்.
2. ரசிகமணி தமிழ் இலக்கியங்களைப் புதிய முறையில் அணுகினார்.
3. தமிழ்க் கவிதைக்கு அவர் புது விளக்கம் தந்து ஒரு மரபைத் தோற்றுவித்தார்.
4. ரசிகமணி தமிழ் இலக்கியங்களை மட்டுமின்றி இசை, நடனம், சிற்பம் போன்ற நுண்கலைகளிலும் சிறந்த ஈடுபாடு கொண்டு அவற்றை இரசித்தார்.
5. எதிர்ப்புகளுக்கிடையிலும் தன் கவிதைக் கொள்கையின் அடிப்படையில் கவிதைகளை அணுகித் தெரிவு செய்து விளக்கினார்.
6. ரசிகமணியின் இரசனையின் விளைவாகக் கம்பராமாயணம் புதிதாகப் பதிப்பிக்கப்பட்டது.
7. தமிழ்த்திறனாய்வு உலகில் ரசிகமணியின் இரசனையுணர்வு அவருக்கு ஒரு தனி இடத்தைப் பெற்றுத் தந்துள்ளது.

## அடிக்குறிப்புகள்

1. தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், ரஸிகமணி.
2. டி.கே.சி. ப. 18.
3. டாக்டர் ஜஸ்டிஸ் மகாராஜன், ரஸஞ்ஞானி டி.கே.சி. ப. 26.
4. மேலது, ப. 31.
5. கல்கி, கம்பர் தரும் ராமாயணம், முன்னுரை.
6. டாக்டர் ஜஸ்டிஸ் மகாராஜன், ரஸஞ்ஞானி டி.கே.சி. ப. 10.
7. எம்.ஜி.ஆர். டி.கே.சி. நூற்றாண்டு விழா உரை.
8. டாக்டர் ஜஸ்டிஸ் மகாராஜன், ரஸஞ்ஞானி டி.கே.சி. ப. 81.
9. மேலது, ப. 92.
10. மேலது, ப. 78.
11. டி.கே.சி. இதய ஒலி, ப. 96.
12. டி.கே.சி. முத்தொள்ளாயிரம், ப. 74.
13. ரசிகமணி டி.கே.சி. தமிழ்க் களஞ்சியம், ப.112.
14. மேலது, ப. 42.
15. மேலது, ப. 48.
16. மேலது, ப. 69.
17. மேலது, ப. 73.
18. ரசிகமணி டி.கே.சியின் கடிதங்கள், இரசனையின் ஒலி, ப. 22.
19. மேலது, ப. 20.
20. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், மேலது, ப. 68.
21. ரசிகமணி டி.கே.சியின் கடிதங்கள், மேலது, ப. 28.
22. Casselts Encyclopaedia of Literature, Vol. I, p. 124.
23. அ.ச. ஞானசம்பந்தம், இலக்கியக் கலை, ப. 46.
24. Encyclopaedia of Britannica, Reprint, 1962.

25. தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், மேலது, ப. 20.
26. மேலது, ப.6.
27. மணி, பெ.சு. (தொ.ஆ.) வ.வே.சு. ஐயர் கட்டுரைகள், ப. 58.
28. மேலது.
29. சி. கனகசபாபதி, தமிழ் இலக்கிய விமரிசகர்கள், ப.48.
30. க. பஞ்சாங்கம், (மேற்), தமிழிலக்கியத் திறனாய்வு வரலாறு, ப.84.
31. க.நா.சு. இலக்கியத்துக்கு ஓர் இலக்கியம் ப.62.
32. சி.சு. செல்லப்பா, தமிழில் இலக்கிய விமரிசனம், ப.79.
33. அ.அ. மணவாளன், தினமணிசுடர், தமிழ் மணி, 19.8.89. ப.3.
34. டி.கே.சி. இதய ஒலி, ப.97.
35. தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், ப.31.
36. மேலது, (மேற்) பக்.32-33.

# கலைக்கோட்பாடு

தமிழ் அறிஞர் டி.கே.சி. அவர்கள் இலக்கியத் திறனாய்வு, கடிதப் பணி, பதிப்புத்துறை போன்ற பல நிலைகளில் தன்னுடைய பங்களிப்பைத் தமிழ் இலக்கியத் துறைக்கு வழங்கியுள்ளார். 'இரசனை முறைத் திறனாய்வு' என்னும் அழகியல் திறனாய்வு முறையில் தன்னுடைய ஆளுமையைத் தடம் பதித்துச் சென்றுள்ளார். படைப்பிலுள்ள கருத்து, பொருள் ஆகியவைகளை விட இசை, வடிவம், உணர்ச்சி போன்றவையே முதன்மையானவை என்றும் இவை இருந்தால் மட்டுமே உண்மையான படைப்பு என்று பாராட்ட முடியும் என்றும் டி.கே.சி. வற்புறுத்திக் கூறியுள்ளார். இவ்வகையில் இவர் ஓர் அழகியல்வாதியாகத் தன்னை இனம் காட்டிக் கொண்டார். டி.கே.சி. இலக்கியத்தைப் போன்றே இசை, நாட்டியம், சிற்பம் போன்ற நுண்கலைகளிலும் தன்னுடைய திறனாய்வுப் பார்வையைச் செலுத்தினார். டி.கே.சி. கலைத்துறைக்கு ஆற்றிய தொண்டு குறித்தும் அவருடைய கலைக்கோட்பாடு குறித்தும் இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

### கலைகள் – வரையறையும் வகைகளும்

மனிதனுடைய தொடக்கக் காலத்தில் 'கலை' என்பது தனியே தோன்றியிருக்கவில்லை. இனக்குழு வாழ்க்கையில் உணவு தேடுவதற்கே அவனுக்கு நேரம் போதாமல் இருந்தது. மிகுதியான உணவு கிடைத்து, அவைகளைச் சேமித்து வைத்து, பிறகு குகைகளில் ஓய்வாகத் தங்கினான். அப்போது குகைச் சுவர்களில் தான் பார்த்த விலங்குகளின் உருவத்தை எழுதினான். வேட்டையாடும் போது நிகழ்ந்த சம்பவங்களை இணைத்து ஒலியெழுப்பி ஆடினான்; பாடினான். பின்னர்ச் சமயச் சடங்குகளின் தொடர்புடைய நிகழ்ச்சிகளாகக் கலைகள் வளரத் தொடங்கின. மனிதனுடைய பெரும்பாலான கலைகள் அவனுடைய சமுதாய வாழ்க்கைக்கும், கருவிகளின் வளர்ச்சிக்கும் தொடர்பு இருப்பதாக மானிடவியலார் கூறுகின்றனர். "உள்ளதை உணர்ந்தவாறு உணர்த்துவது கலை. இஃது உணர்ச்சியும்

கற்பனையும் கொண்டு வளர்வது. ஒரு முறை உணர்ந்ததையே திரும்பத் திரும்ப உணர்ந்து இன்புறுமாறு தூண்டுவதும் உணர உணர இன்பம் பெருகச் செய்வதும் கலை எனப்படும். கலை உணர்ச்சியால் பெறும் அனுபவம் மனிதனின் உணர்வு முழுமைக்கும் விருந்தாகிறது. ஆயினும் அதன் புதுமைத் தன்மை என்றும் ஒரு படித்தாக இருக்கும்"[1] என்று கலை என்பதற்குரிய விளக்கத்தை அறிஞர்கள் வரையறுத்துக் கூறியுள்ளனர். கலைகளை, நுண்கலைகள் என்றும் பயன் கலைகள் என்றும் இரண்டாகப் பிரித்துக் கூறுவர். சமையல் கலை, தையல் கலை, அச்சுக்கலை போன்றவை பயன் கலைகளாகும். இசை, நாட்டியம், சிற்பம், போன்றவை நுண்கலைகளாகும். கற்பனை, உணர்ச்சி இன்பம் ஆகியவைகளைத் தருவது நுண்கலைகளின் இயல்புகளாகும். கலையின் பாகுபாடு குறித்துக் "காலம் என்னும் அளவு இல்லாத ஓவியம், சிற்பம் ஆகிய கலைகளை நிலைக் கலைகள் என்பர். காலம் என்னும் அளவுடைய இசை முதலிய கலைகளை இயங்கு கலைகள் என்பர். ஓவியம், சிற்பம், நாடகம் ஆகியவை ஒன்றனைப் போல் செய்யப்படுவதால் இவைகளை ஒப்புமைக் கலை என்பர்."[2] எனவே கலைகளின் அடிப்படை உணர்ச்சியாக விளங்குகிறது. தமிழ் இலக்கியங்கள், ஆய கலைகள் அறுபத்து நான்கைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

> நகையே அழுகை இளிவரல் மருட்கை
> அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
> அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப
>
> (தொல்–பொருள்.மெய்.3)

என்னும் தொல்காப்பிய நூற்பா கூறும் எட்டு வகை மெய்ப்பாடும் கலைகளுக்கு அடிப்படையாய் விளங்குகின்றன. கலை மனிதனைப் பண்படுத்தும் அளவுகோலாக அமைந்துள்ளது. 'மனிதனது உள்ளத்தைத் தன்வயமாக்கி நிரம்பி அவ்வளவோடு இல்லாமல் வெளிப்படும் ஆற்றலே கலை' என்று மா. இராசமாணிக்கனார் குறிப்பிடுகின்றார்.[3] அறுபத்து நான்கு கலைகளைப் பற்றிப் பண்டைத் தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன.[4]

1.எழுத்திலக்கணம் 2. எழுத்துப் பயிற்சி 3. கணக்கு 4. வேதம் 5. புராணம் 6. இலக்கணம் 7. நீதிநூல் 8. சோதிட நூல் 9. அற நூல் 10. யோகம் 11. மந்திரம் 12. சகுனம் 13. மருத்துவம் 14. சிற்பம் 15. உருவ நூல் 16. இதிகாசம் 17. காவியம் 8.அணி நூல் 19. நாவன்மை

20.நாடகம் 21.நடனம் 22. சப்தப் பிரமம் 23.வீணை 24.குழல் 25. மிருதங்கம் 26. தாளம் 27. அம்புப் பயிற்சி 28. பொன்னை மதிப்பிடல் 29. தேர்ப் பயிற்சி 30. யானைப் பயிற்சி 31. குதிரைப் பயிற்சி 32. இரத்தினத் தேர்வு 33. நிலத் தேர்வு 34. படைப் பயிற்சி 35. மற்போர் 36. மயக்கி அழைக்கும் வித்தை 37. சாடனம் 38. வித்து வேடணம் 39. காம நூல் 40. மோகனம் 41. வசீகரணம் 42. இரசவாதம் 43. கந்தருவ வதம் 44. நட்டம் 45. முட்டி 46. பைவீல வாதம் 47. கவுத்துவ வாதம் 48. நாடியறிவு 49. காரூடம் 50. காற்றில் கலந்து மறைதல் 51. காற்றில் நடத்தல் 52. கூடு விட்டுக் கூடு பாய்தல் 53. பிறர் கண்ணில் படாமல் திரிந்து வருதல் 54. இந்திர ஜாலம் 55. மகேந்திர ஜாலம் 56. நெருப்பில் இருத்தல் 57. நீரில் இருத்தல் 58. மூச்சை அடக்கி இருத்தல் 59. விழித்த கண் இமையாது இருத்தல் 60. பேச்சை அடக்கி இருத்தல் 61. வீரியத்தை அடக்குதல் 62. மறைக்கப்பட்ட பொருட்களைக் கண்டறியும் முயற்சியைத் தடுத்தல் 63. பகைவன் ஆயுதத்தைப் பயனற்றுப் போகச் செய்தல் 64. ஐவகை அவத்தைகளால் வேண்டியவாறு உயிரை நிறுத்தல்.

## இசையின் சிறப்பு

இயல், இசை, நடத்தோடு சிற்பம், கட்டடம் இரண்டையும் சேர்த்துத் தமிழை 'ஐந்தமிழ்' என்று திரு.வை. கணபதி ஸ்தபதி குறிப்பிடுகின்றார். மேலும் தாளம் கொண்டு சிற்பத்தையும் கட்டடத்தையும் உருவாக்குவது தமிழகச் சிற்பக்கலை மரபு என்றும் கூறுகின்றனர்.[5] டி.கே.சி. அவர்கள் கலைகளை ஈடுபாட்டோடும் உணர்ச்சியோடும் உள்ளம் ஒன்றி இரசிக்கும் குணம் கொண்டவர். இசை, நாட்டியம், சிற்பம் என்னும் இக்கலைகளுக்கு அவர் செய்துள்ள தொண்டினையும் இக்கலைகளைத் திறனாய்வு செய்வதில் அவர் கொண்டிருந்த கோட்பாட்டையும் ஆராய்வது அவசியமானதாகும்.

## இசைக்கலை

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழின் இடையில் நின்று மற்றுள்ள இரண்டையும் இயக்குவதும் தலைநிலையில் இருப்பதும் இசைக்கலையே ஆகும். பண்டைத் தமிழ் மக்கள், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் பாலை என்னும் ஐவகை நிலங்களுக்கும் ஏற்ற இசைப் பண்களை வகுத்திருந்தனர். குரல்,

துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பவை பண்டைக் காலத்தில் விளங்கிய ஏழிசைகளாகும். இசையின் சிறப்பு மற்றும் அதன் ஆற்றல் வருமாறு:

> இசை என்னும் சொல் இசைவிப்பது - தன் வயப்படுத்துவது எனப் பொருள்படும். இசை கல் மனத்தையும் கரைந்துருகச் செய்யும் பெற்றி வாய்ந்தது. கற்றோரும் மற்றோரும் இசையின் வயப்பட்டே நிற்பர். அன்பைப் பெருக்கி ஆருயிரை வளர்ப்பது இசை. இசையைக் கேட்டு இன்புறாத உயிர்கள் இல்லை என்றே கூறலாம். விலங்குகள், பறவைகள், செடிகள், பாம்பு, முதலிய உயிர்கள் இசையில் இன்பம் அடைகின்றன. பால் வேண்டி அழும் பசுங் குழவியும் இசை வயப்பட்டுப் பாலையும் பசியையும் மறந்து கண்கள் செருக மகிழ்ச்சி அடைகின்றது. இசையின் வயப்படாதார் அன்பின் வயப்படாதார் என்றே கூறுதல் அமையும். இசை வாழ்க்கையில் இன்பத்தை அளிக்கும். இசையின் அருமையையும் பெருமையையும் ஓர்ந்தே தமிழர் இசைத்தமிழை முத்தமிழுள் நடுநாயகமாக வைத்துள்ளனர். தமிழ் இலக்கிய நூல்கள் இசைத் தமிழிலேயே இருக்கின்றன.[6]

தமிழகத்தில் தெலுங்கு இசையே கோலோச்சியது. தமிழிசை பின்னுக்குத் தள்ளப்பட்டு, அதன் பெருமையும் உயர்வும் கீழ்நிலையை அடைந்தன. பொருள் புரியாத தெலுங்குக் கீர்த்தனைகளும் சமஸ்கிருத பாடல்களுமே இசை என்ற பெயரில் தமிழ்நாட்டு மேடைகளில் அரங்கேறி வந்தன. அண்ணாமலையரசரும் ஆர்.கே.சண்முகம் அவர்களும் தோற்றுவித்த தமிழிசை இயக்கத்தில் டி.கே.சி. அவர்கள் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு உழைத்தார். பொருள் தெரிந்து உணர்ச்சியோடு பாடினால் மட்டுமே இசையை அனுபவிக்க முடியும். உணர்ச்சியும் பொருளும் இல்லாது சங்கீதமே இல்லை என்று டி.கே.சி. கருதினார். தேவகோட்டையில் நடைபெற்ற தமிழ் இசை மாநாட்டிற்கு டி.கே.சி. தலைமை தாங்கினார். 1943ஆம் ஆண்டு அண்ணாமலையரசர், ஆர்.கே. சண்முகம் ஆகியோர்கள் துணையோடு தமிழிசைச் சங்கத்தைத்

தோற்றுவித்தார். இச்சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற முதல் மாநாட்டில் தலைமைப் பொறுப்பை டி.கே.சி. வகித்தார். இம்மாநாட்டில் தமிழிசையின் சிறப்புக்களைப் பின்வருமாறு டி.கே.சி. எடுத்துரைத்தார்.

> தமிழ்நாட்டிலேதான் மேளம், இசை, பரதநாட்டியம் முதலியவை இருக்கின்றன. பிற மொழிகளில் கிடையா. தமிழ் நாகரிகம் உலகம் முழுவதும் பரவியிருப்பதற்குப் பல சான்றுகள் உள. தெலுங்கைக் காட்டிலும் தமிழில் உயர்ந்த கலை இருப்பதாக டாக்டர் சி.ஆர். ரெட்டி சொன்னார். டாக்டர் இரவீந்திரநாத தாகூர் தமிழ்நாட்டை இசை மிக்க நாடு என்று அழைத்தார். இசையில் பயன்படுத்தப் பெறும் மொழி புரியவில்லை என்றும், ஆகவே தாங்கள் அதை நுகர முடியவில்லை என்றும் மக்கள் சொன்னால் அவர்களை எப்படிக் குறைசொல்ல முடியும். தெலுங்கு நாட்டில் தமிழ்ச் சாகித்தியம் உண்டா? கன்னட நாட்டில்தான் தமிழ்ச் சாகித்தியம் உண்டா? கிடையாது. பிறமொழிச் சாகித்தியத்திற்குத் தமிழ்நாடுதான் இடம் கொடுத்தது. காவிரி நதி ஜலத்தைக் குடித்துத் தமிழ்க் காற்றையே சுவாசித்து வந்த தியாகராச சாமிகள் தமிழிலுள்ள சாகித்தியங்களின் மேன்மையை உணர்ந்தும் தம் சாகித்தியங்களைத் தம் தாய் மொழிலேயே செய்தார். தங்களுக்குத் தெரியாத பாஷையில் உள்ள சங்கீதத்தில் அன்பு செலுத்துவதாகச் சொல்லும் வழக்கம் தமிழ்நாட்டில் தவிர வேறெங்கும் கிடையாது. தாய்மொழியல்லாத பிறமொழி வாயிலாகப் பாநயம் அறிய முயலுதல் தன் காதலியின் புன்முறுவலைப் பெறுவதற்கு வக்கீல் வைப்பது போலாகும்.

என்று டாக்டர் தாகூர் கூறினார்".[7]

தமிழிசை இயக்கத்தைத் தொடங்கி வலுவான அடிப்படை அமைத்து அது வளர்ந்த நிலையில் திறப்பு விழாவும் நடத்தியவர் டிகேசி. என்று கல்கி குறிப்பிடுகின்றார்.[8] தமிழிசை இயக்கத்தை டிகேசி. ஆதரித்தாலும் அவ்வியக்கத்தை, அதன் முழு பரிமாணத்தை நோக்கி நகர்த்திச் செல்லவில்லை என்றே கூறலாம்.

'தமிழிசை இயக்கத்தார் மனோபாவம் மிகவும் பிற்போக்கானது என்றும், மண்டியிட்டுச் சரணடைந்து பிச்சை கேட்பதை விட மோசமாக இருக்கிறது' என்றும் அக்காலத்தின் விமர்சனம் எழுந்தது.[9] 'இசை தமிழில் இருக்க வேண்டும் என்று கருதினார்களே தவிர, அதில் உள்ள கருத்துக்கள் தமிழ் மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்குப் பயன்பட வேண்டும் என்று கருதவில்லை. அதனால் தான் உண்மையான தமிழிசை, பின்வரும் உள்ளடக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்று ஆய்வாளர்கள் கூறினர்.[10]

1. தமிழ்ப்பாட்டுகள் என்றால் அவை முழுக்க முழுக்கத் தமிழ் மொழியில் அமைந்தவையாகவே இருக்கவேண்டுமேயொழிய 100க்கு 99 வடமொழி வார்த்தைகளைக் கொண்ட தமிழ்ப் பாட்டாயிருத்தல் கூடாது.

2. தமிழில் இசை என்று கூறிக்கொண்டு வடவர் நாட்டுப் புராணக் கருத்துக்களையும் மூடப்பழக்க வழக்கங்களையும் புகுத்தும் எண்ணங்களையும் கொண்ட பாட்டுகளாயிருத்தல் கூடாது.

3. நல்ல தமிழில் இயற்கை எழில்களையும், தமிழரின் வீரத்தையும், அன்பையும், மானமிக்க சமத்துவ வாழ்வினையும், வரலாற்றினையும், நேர்மையையும், நீதி நெறிகளையும், தமிழ்நாட்டுப் பற்றையும், மொழியியல் ஆர்வத்தையும், ஒற்றுமையையும், கட்டுப்பாட்டையும் எடுத்துக்காட்டும் பாட்டுகளையே பாடுமாறு செய்தல் வேண்டும்.

4. தமிழர்களை அடிமைப்படுத்தும் சதிச்செயல்களையும், சூழ்ச்சிகளையும், சமய வெறிகளையும், மூடப்பழக்க வழக்கங்களையும், ஆரியரால் புகுத்தப்பட்ட இன்னும் பல அநாசாரங்களையும் வாழ்க்கை முறையில் இருக்கும் கேடுகளையும் அகற்றுமாறு அறிவூட்டும் பாட்டுகளையே பாடுமாறு செய்தல் வேண்டும்.

**பரத நாட்டியக்கலை**

பரத நாட்டியம் என்பது தொன்றுதொட்டுத் தமிழரின் கூத்துக்கலைகளில் இருந்து தோன்றிய ஒன்றாகும். இதனைச் 'சதிர்'

என்றும் 'சின்னமேளம்' என்றும் அழைத்து வந்தனர். 'பரத நாட்டியம்' என்பதில் உள்ள பரத என்பது பரதநாட்டிய நூலை முதன்முதலில் எழுதிய பரத முனிவரைக் குறிக்கின்றது. இக்கலையின் மூன்று அம்சங்களான பாவம், ராகம், தாளம் என்பவற்றை ப-ர-த என்ற மூன்று எழுத்துக்களும் குறிக்கின்றன என்று வே. இராகவன் கூறுகின்றார். இரண்டாயிரம் ஆண்டுகளாகப் பரத நாட்டியக்கலை தமிழ்நாட்டில் இருந்து வருகிறது. இந்திய நடனங்களிலேயே தலைசிறந்தது பரத நாட்டியமே என்று பயூபியன் பவுசர்ஸ் (Faubian Bowers) என்ற அமெரிக்க ஆராய்ச்சியாளர் கூறுகின்றார்.[11] பரத நாட்டியக் கலையைப் பற்றி வடமொழியிலும் தமிழிலும் மிகுதியான நூல்கள் உள்ளன. இக்கலையைப் பற்றி, வடமொழியில் நூல்கள் எழுதப்பட்டு இருப்பதினாலேயே இது வடநாட்டுக்கலை என்றோ, வடநாட்டவருக்குரியதென்றோ கருதலாகாது. தமிழ்நாட்டிலே தமிழர்களால் தொன்றுதொட்டு வளர்க்கப்பட்டு வருகின்றது இந்தப் பரதநாட்டியக் கலை என்று பரதக்கலை தமிழர்களுக்கே உரிய திறத்தை மயிலை சீனி வேங்கடசாமி சுட்டிக்காட்டுகின்றார்.[12]

பரத நாட்டியம் எங்கே நடந்தாலும் சென்று இரசித்துப் பாராட்டும் பண்பு டி.கே.சி. யிடம் இருந்தது. பரதநாட்டியம் குறித்து அஞ்சாமல் விமர்சனம் செய்யும் தன்மை டி.கே.சி.யிடம் உண்டு. சி.கே. விஜயராகவன் அவர்களுடைய மகனின் நடனத்தைப் பார்த்து இரசித்துப் பாராட்டியுள்ளார். அவரே இதுகுறித்து,

> சி.கே. விஜயராகவன் (இப்பொழுது நமது மாகாணத்தின் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருப்பவர்) அவரின் குழந்தையின் நடனத்தைப் பார்க்கப் போயிருந்தோம். உபசாரத்துக்குப் போன ஹோதாவில் தான் போனோம். ஆனால் அந்தக் குழந்தை, நடனத்தின் உண்மைத் தத்துவத்தை உணர்ந்தே ஆடியது. அழகாய் இருந்தது. ஒன்றரை மணி நேரம் அனுபவித்துக் கொண்டே இருந்தோம். ரொம்பத் திருப்தியாகவே இருந்தது. கடைசியில் தந்தை, தாயார்களையும், பெண்ணையும் நேரில் போய் பாராட்டினேன். அவர்கள் உண்மையில் பாராட்டுக்குரியவர்கள் தான்.[13]

என்று எழுதியுள்ளார். நாட்டியத்தில் பாடலின் பொருளுக்கு ஏற்ற முகபாவத்துக்கும் இசையில் பாடப்படும் பாடலின் அர்த்த பாவத்துக்கும் முக்கியத்துவம் அளித்தார் டி.கே.சி. என்று கூறப்படுவதில் உண்மை இருப்பினும் அப்பாடலில் என்ன வகையான 'அர்த்தம்' உள்ளது என்பது குறித்தோ அல்லது என்ன வகையான அர்த்தம் இருக்க வேண்டும் என்பது குறித்தோ டி.கே.சி. யிடம் தெளிவான திறனாய்வுப் பார்வை இல்லை என்றே கூறலாம். சிதைவுறும் நிலையில் இருந்த பரத நாட்டியத்தைப் டி.கே.சி. புத்துயிர் பெறும்படிச் செய்தார் என்பதில் ஓரளவு உண்மை உண்டு. நாட்டியக்கலை மேதையாகிய திருமதி பாலசரஸ்வதியின் நடனத்தைத் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தினார். இதனை, "இளமை முதலே பரதநாட்டியத்தைப் பார்த்து அனுபவித்து அதிலுள்ள தெய்வீகத் தன்மையை அறிந்த டி.கே.சி. சிதைவுறும் நிலையிலும் சிலர்பால் சிக்குண்டு கிடந்த நிலையிலும் இடருற்ற பரதநாட்டியக் கலையைத் தமிழ்நாட்டில் புத்துயிர் பெறுமாறு கொண்டு சென்றார். நடனத்துக்குரிய பதங்களைப் பாடுபவர்களிடம் கேட்டுச் சேகரிக்கவும் செய்துள்ளார். நாட்டியக் கலையின் இணையில்லாத மேதையாகிய திருமதி பாலசரஸ்வதியைத் தமிழ்நாட்டிற்கு அறிமுகப்படுத்தி, பாலசரஸ்வதி மூலம் நடனத்தின் தெய்வீகத் தன்மையினையும் பக்திப் பரவசத்தினையும் மக்கள் அனுபவிக்கும்படி செய்தார் டி.கே.சி"[14] என்று ச. பாஸ்கரன் எடுத்துக் கூறுகின்றார். ஆனந்தி ராதா, ருக்மணி அருண்டேல் ஆகியோரின் நடனகலையைப் பெரிதும் டி.கே.சி. போற்றிப் பாராட்டினார். 'டி.கே.சி.யின் அரும்பெரும் சேவையால் புனிதமான தியாகத்தால், இன்று பரத நாட்டியம் வானுற ஓங்கி வளர்ந்திருக்கிறது. எல்லோரும் பரத நாட்டியத்தை உண்மையான கலை என்று அங்கீகரித்து விட்டார்கள்' என்று வித்வான் ல. சண்முகசுந்தரம் கூறுகின்றார்.[15]

பரதநாட்டியத்தில் கைக்குறியீடுகளை முத்திரை என்பர். ஒற்றைக் கை முத்திரை இணையா வினைக்கை, இணைக்கை என இரு வகைப்படும். கீழ்க்கண்ட முப்பத்து மூன்று ஒற்றைக்கை முத்திரைகள் உள்ளன.[16]

1. பதாகை 2. திரிபதாகை 3. கத்ரிகை 4. தூபம் 5. அராளம் 6. இளம்பிறை 7. சகதுண்டம் 8. முட்டி 9. கடகம் 10. சூசி 11. பதுமகோசிகம் 12. காங்கூலம் 13. கபித்தம் 14. விற்பிடி

15. குடங்கை 16. அலாபத்திரம் 17. பிரமரம் 18. தாம்பிரசூடம் 19. பிசாசம் 20. முகுளம் 21. பிண்டி 22. தெரிநிலை 23. மெய்ந்நிலை 24. உன்னம் 25. மண்டலம் 26. சதுரம் 27. மான்தலை 28. சங்கு 29. வண்டு 30. லதை 31. கபோதம் 32. மகரமுகம் 33. வலம்புரி

கீழ்க்கண்ட பதினைந்து இரட்டைக்கை முத்திரைகள் உள்ளன.[17]

1. அஞ்சலி 2. புட்பாஞ்சலி 3. பதுமாஞ்சலி 4. கபோதம் 5. கற்கடம் 6. சுவத்தீகம் 7. கடகாவருத்தம் 8. நிடதம் 9. தோரம் 10. உற்சங்கம் 11. புட்பபுடம் 12. மகரம் 13. சயந்தம் 14. அபயவந்தம் 15. வருத்தமானம்

பரதநாட்டியத்தில் கீழ்க்கண்ட முகக்குறிப்பு வகைகள் உள்ளன.[8]

1.அஞ்சிதம் 2.அதோமுகம் 3. ஆகம்பிதம் 4. பிரகம்பிதம் 5. ஆலோவிதம் 6. உலோவிதம் 7. உத்துவாசிதம் 8. சமம் 9. சௌந்தரம் 10. துதம் 11. விதுதம் 12. பராவிருத்தம் 13. பரிவாகிதம் 14. திரச்சீனம்

டிகே.சி. பரத நாட்டியத்தில் உள்ள கை முத்திரைகளையும் முக பாவத்தையும் பார்த்து இரசித்து விமர்சனம் செய்வதில் தனித்திறன் பெற்றிருந்தார்.

### சிற்பக்கலை

மண், மரம், செங்கல், கல், உலோகம், தந்தம், மெழுகு, அரக்கு முதலியவற்றைக் கொண்டு உருவங்களை அமைக்கும் கலை 'சிற்பக்கலை' என்று மா. இராசமாணிக்கனார் கூறுகின்றார்.[19] சிற்பங்களில் காணப்படும் வகைகளைப் பற்றி, "சிற்ப உருவங்களை முழு உருவங்கள் என்றும் புடைப்புச் சிற்பங்கள் என்றும் இரண்டு விதமாகப் பிரிக்கலாம். முழு உருவச் சிற்பம் என்பது பொருள்களில் முன்புறம், பின்புறம் முதலிய முழு உருவமும் தெரிய அமைக்கப்படுவது. புடைப்புச் சிற்பம் என்பது பொருள்களின் ஒரு புறம் மட்டும் தெரியும்படி சுவர்களிலும் பலகைகளிலும் அமைக்கப்படுவது"[20] என்று மயிலை சீனி வேங்கடசாமி விளக்கிக் கூறுகின்றார். உலோகம் மற்றும் கற்களால் அமைக்கப்படும் சிற்பங்களைக் கீழ்க்கண்ட வகைளாகப் பிரித்துக் கூறுவர்.

1. தெய்வ உருவங்கள்
2. இயற்கை உருவங்கள்
3. கற்பனை உருவங்கள்

சிற்பக்கலையை வளர்ப்பதிலும் பார்த்துச் சுவைப்பதிலும் டி.கே.சி. பெரிதும் ஈடுபட்டு வந்துள்ளார். டி.கே.சி. சிற்பங்களைக் கண்டு இரசித்த விதம் குறித்து கி.ராஜநாராயணன் பின்வருமாறு எடுத்துக் கூறுகின்றார்.[21]

> சிற்பங்களைப் பார்க்கிறபோது, சிற்பியின் அபார வேலைப்பாடுகளைப் பார்த்து மட்டுமே பாராட்டுகிறது என்பது ஒரு சாமானியனின் காரியம். 'கரும்பின் தோகையை எப்படிக் கல்லில் கொண்டு வந்திருக்கிறான் பாருங்கள். கல்லில் சங்கிலி வளையங்களைச் செய்து விட்டானே. இப்படியெல்லாம் சொல்லிப் பராட்டுகிறார்கள். ஆனால் இது அல்ல விஷயம். "அந்தக் கல் சிலையின் முகத்தில் பாவத்தைக் கொண்டு வந்திருக்கிறானா சிற்பி? அது இன்றி மற்ற சங்கதிகள் எல்லாம் இருந்து என்னத்துக்கு. நான் பார்த்த வரையில் தென்காசிக் கோயிலில் உள்ள சிற்பங்களில் இந்த பாவம் மிக அற்புதமாக வந்திருக்கிறது. முக்கியமாக அந்த நடன மாதர் இருவரில் சிலைகள் அதிவிசேஷமானவை."

"தென்காசிக் கோவில் மகாமண்டபத்தில் பத்துத் தூண்களில் வடித்துள்ள சிற்பங்களை டி.கே.சி. உலகறியச் செய்தார்" என்று ச. ஈஸ்வரன் குறிப்பிடுகின்றார்.[22]

இசை, நாட்டியம், சிற்பம் போன்ற கலைகளைப் பற்றி டி.கே.சி. மேம்போக்கான கருத்துக்களையே கொண்டிருந்தார். இரசித்தல்-துய்த்தல்-பாராட்டுதல் என்ற அளவிலேயே அவரின் கலைக் கோட்பாடு நின்றுவிட்டது. கலையின் வடிவம் மட்டுமே அவருக்கு முதன்மையானதாகும். உருவத்திற்கும், உத்திகளுக்கும் மட்டுமே அவர் அளவு கடந்த முக்கியத்துவம் அளித்தார். 'அழகியல்', 'உருவவாதம்' ஆகியவை அவரின் கலைக் கோட்பாடுகளாக அமைந்திருந்தன. கலைகள் அழகுணர்ச்சியைத் தந்தால் போதுமானது. அவை கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதினார். கலைகள் சமூக

மாற்றத்தைக் கொண்டு வரவேண்டியதில்லை; ஆளும் வர்க்கத்தாரின் கருத்துக்களைப் பிரதிபலித்தால் மட்டுமே போதுமானது. விளிம்பு நிலை மக்களின் வாழ்நிலையையும் சூழ்நிலையையும் காட்ட வேண்டிய அவசியம் இல்லை என்பதே அவரின் கலைக் கண்ணோட்டமாகும். 'கலை கலைக்காகவே' என்பதே டி.கே.சி.யின் கலைக் கோட்பாடாகும். இவ்வியக்கம் இமானுவேல் காண்ட் (Immanuel Kant) என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது ஆகும். கலை மக்களுக்கு எந்தக் கடமையும் பட்டிருக்கவில்லை; சமுதாயத்திற்கும் அதற்கும் எந்தத் தொடர்பும் கற்பிக்க முடியாது; அது சுதந்திரமானது என்று வாதாடுவதின் மூலம் கலையைத் தீவிரத் தனிநபர் வாத நிலைக்குக் கொண்டு சென்றுவிடுகின்றன என்று ந. பிச்சமுத்து கூறுகின்றார். எனவே கலைக்கு இருக்க வேண்டிய சமூகப் பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் கோட்பாடே 'கலை கலைக்காக என்ற கோட்பாடாகும்'. இக்கோட்பாடு அழகியல் வாதத்தோடு தொடர்புடையதாகும். இது கருத்து முதல்வாதக் கண்ணோட்டமாகும். கலை தூய்மையானது என்றும், தெய்வீகமானது என்றும் இன்பம் மட்டுமே தருவது என்றும் இவர்கள் கூறுகின்றனர். எனவே 'கலை கலைக்காகவே' என்பதே இசை, நாட்டியம், சிற்பம் ஆகிய கலைகள் குறித்து டி.கே.சி. கொண்டிருந்த கலைக்கோட்பாடாகும்.

## அடிக்குறிப்புகள்

1. ச. ஈஸ்வரன், **டி.கே. சிதம்பரநாத முதலியாரின் கலை இலக்கியப்பணி**-ஓர் ஆய்வு, பக். 193-194.
2. மேற்படி, ப. 197.
3. மா. இராசமாணிக்கனார், **தமிழகக் கலைகள்**, ப. 1.
4. மேற்படி, பக். 5-6.
5. வை. கணபதி ஸ்தபதி, 'தமிழ்க் கலாசாரமே இந்தியக்கலாசாரம்', **தினமணி தீபாவளி** மலர், ப. 173, 2004.
6. மா. இராசமாணிக்கனார், மு.நூ, ப. 56.
7. இரா. இளங்குமரன், **தமிழிசை இயக்கம்**, ப. 103.
8. ச. ஈஸ்வரன், மு.நூ., ப. 209.

9. இரா. இளங்குமரன், மு.நூ., ப. 147.
10. மேற்படி., ப. 148.
11. Faubian Bowers, **The Dance In India**, p.19.
12. மயிலை சீனி வேங்கடசாமி, **தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்**, ப. 134.
13. டி.கே.சி., **ரசனையின் ஒலி**, ப. 28.
14. ச. ஈஸ்வரன், மு.நூ., ப. 231.
15. ல. சண்முகசுந்தரம், **ரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார்**, ப. 168.
16. மயிலை சீனி. வேங்கடசாமி, மு.நூ., ப. 135.
17. மேற்படி, ப. 136.
18. மேற்படி, ப. 136.
19. மா. இராசமாணிக்கனார், மு.நூ., ப. 28.
20. மயிலை சீனி. வேங்கடசாமி, மு.நூ., பக். 48-49.
21. கி. இராஜநாராயணன், **இராஜநாராயணன் கட்டுரைகள்**, ப. 366.
22. ச. ஈஸ்வரன், மு.நூ., ப. 246.

# ஆய்வுத் தடம்

டி.கே.சி.யின் குடும்பம் தொன்மையான பண்பாடு நிறைந்த குடும்பம். அங்குப் பொருட்செல்வம் மிகுந்திருந்ததால் கல்விச் செல்வமும் பெருகி இருந்தது. டி.கே.சி.யின் தாயார் பாரதம் போன்ற வசன நூல்களை ஒவ்வொரு நாளும் வாசிப்பார்கள். டி.கே.சி.யும் பக்கத்து வீட்டுப் பெண்களும் அதைக் கேட்டு ஆனந்தம் அடைவார்கள். டி.கே.சி.யும் பரதநாட்டியம் பார்ப்பதிலும், கதைகள் கேட்பதிலும் மட்டற்ற ஆசை கொண்டவர். கல்யாண வீட்டுக் கச்சேரிகளில் பாகவதர்கள் கதைகளை எடுத்தாள்கிற வனப்பும் இடை இடையே கதையோடு தொடர்புடைய பாடல்களைப் பாடி விளக்குகிற முறையும் தமிழ்மொழி வளைந்து நெளிந்து சுகமாகப் பேசுகிற தன்மையும் டி.கே.சி.க்கு மிகப் பிடித்துவிட்டன.

> "இன்னமும் நான் உயர்நிலைப் பள்ளியில் பயின்ற பல விஷயங்கள் எனக்கு விளங்கவில்லை. அப்படி இருக்க என்னுடைய பள்ளி வாழ்க்கையில் படிப்பின் மூலம் ஆனந்தம் அடைந்தேன் என்று சொல்வது பொருந்துமா?"

என்று அடிக்கடி தம் படிப்பைப் பற்றிச் சொல்வதாக டி.கே.சி. வரலாறு என்ற நூலில் வித்வான் ல. சண்முகசுந்தரம் கூறுகிறார்.

டி.கே.சி.க்கு ஆங்கிலம் நன்றாக வந்தது; விஞ்ஞானம், தாவரவியல், தேகதத்துவம் முதலிய துறைகளில் டி.கே.சி.க்கு அளவு கடந்த ஆசை. விஞ்ஞானிகள் பலரோடும் கலந்து தம் கருத்துகளைத் தெரிவித்து, அவர்கள் கூறும் கருத்துகளையும் சேர்த்து அனுபவித்து வந்தார்கள். விஞ்ஞானிகளின் சொற்பொழிவைக் கேட்பதிலும் அவர்களுடைய கட்டுரைகள், நூல்கள் முதலியவற்றைப் படித்து அனுபவிப்பதிலும் அளவற்ற ஆசை கொண்டவர்.

> "தமிழிலும், தமிழ்க் கவிகளிடத்திலும் டி.கே.சி. க்கு உண்டாகிய மோகம் இவ்வளவு என்று அறுதியிட்டுச்

> சொல்ல முடியாது. அது அவர்களுடைய கல்லூரிப் படிப்பிற்கு முன்பிருந்தே அவர்களிடம் ஏற்பட்டுவிட்டது. திருக்குறள், பெரியபுராணம், காஞ்சிப்புராணம், திருவிளையாடற்புராணம், கலிங்கத்துப்பரணி, சிறு பிரபந்தங்கள், தனிப்பாடல்கள், முதலியவற்றில் டி.கே.சி.க்கு நல்ல அனுபவம் இருந்தது. தாம் படித்து அனுபவித்த கவிகளை நண்பர்களிடமும் சக மாணவர்களிடமும் நன்றாக விளக்கிப் பாட்டைச் சுவைத்துச் சுவைத்துப் பாடுவார்கள். டி.கே.சி. விளக்குகிற முறையிலும், பாட்டின் கருத்தை விளக்கியபின் பாடலைப் பாடி அனுபவிக்கிற பாணியிலும் கேட்பவர்கள் மனத்தில் பாடலும் கருத்தும் பசுமரத்தாணி போல் பதிந்துவிடும்".

என்று வித்துவான் ல. சண்முகசுந்தரம் கூறுகிறார்.

வாழ்க்கைக்குப் பொருள் தேட வேண்டும். அதற்காக உழைத்தே ஆக வேண்டும் என்ற தேவை எழவில்லை. இருக்கும் வரை இருப்பதை அனுபவித்து வாழ்வதே நோக்கமாக டி.கே.சி.க்கு வாய்த்தது. அதனால் படித்த வக்கீல் படிப்பும் வக்கீல் பணியும் பொருளீட்டவோ வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளைப் பெருக்கவோ தேவையில்லாமல் போய்விட்டன.

ஆனால் உணர்ச்சிப்பூர்வமாகத் தமிழ்ப் பண்பாட்டையும் மேன்மையையும் வளத்தையும் விட்டுக் கொடுக்க இயலவில்லை. அதனால் "தமிழில் எல்லாம் இருக்கிறது. எதையும் தமிழில் சொல்ல முடியும். தமிழில்தான் எளிமையாகவும் தெளிவாகவும் சொல்ல முடியும்" என்று டி.கே.சி. நம்பியதாக வரலாறு கூறுகிறது.

இந்தப் பின்னணியும் மனநிலையுமே தமிழ் இலக்கியத்தின் மேல் டி.கே.சி.க்குப் பற்றும், படிப்பும் அதன்வழி ஆய்வும், அனுபவமும் வித்தியாசமாக அமையக் காரணமாயின. ஆகவே அவருடைய இலக்கிய வாசகப் பணியும், எடுத்துச் சொல்லும் அனுபவ உணர்ச்சியும் நல்ல திறனாய்வுத் தடத்தினை உருவாக்கித் தந்துள்ளன. அதுதான் இரசனை முறைத் திறனாய்வு. இக்கட்டுரை, அந்த இரசனை முறைத் திறனாய்வில் அமைந்துள்ள கூறுகளை அடையாளம் கண்டு மதிப்பீடு செய்கிறது.

இதற்கு ஆதாரமாக இருந்த நூல்கள் டி.கே.சி.யின் இதய ஒலி, முத்தொள்ளாயிரம், கம்பர் யார், கம்பர் தரும் ராமாயணம், டி.கே.சி.யின் கடித இலக்கியம் ஆகியவை ஆகும்.

இதய ஒலி என்ற நூலில் டி.கே.சி. 1932 முதல் 1940 வரை எழுதிய 20 கட்டுரைகள் உள்ளன. டி.கே.சி. நல்ல கவிதைகள் என்று படித்து, அனுபவித்து, அதனால் தமக்குள் ஒவ்வொரு கவிதையும், அந்தக் கவிதையின் பாடுபொருளும், பாடு பொருளின் விளக்கமும், அந்தப் பாடுபொருளைக் கவித்துவப் படுத்திய நேர்த்தியும் தந்த உணர்ச்சியின் வடிவச் சித்திரமே இதய ஒலியிலுள்ள அனைத்துக் கட்டுரைகளும் எனப் புரிந்து கொள்ள முடியும்.

## கவிதைச் சொல் உச்சரிப்பு

டி.கே.சி. கவிதையில் மட்டுமல்லாது உரையில்கூடச் சொற்களை உச்சரிப்பதில் ஒரு தனித்தன்மையைக் கொண்டிருந்தார். ஒரு சொல்லுக்கும் அதைத் தொடர்ந்து வரும் சொல்லுக்கும் இடையில் ஓர் அழுத்தம், ஒரு நிறுத்தம் கொடுத்துச் சொல்லுவதாக (உச்சரிப்பதாக)க் காணமுடியும். தமிழ் இலக்கணப்படி ஒற்று மிகக்கூடாது அல்லது மிகவேண்டியது இல்லை என்ற இடத்தில் கூட அந்த விதியை மீறுகிறார். அதற்குக் காரணம், சொல்லுக்கு அர்த்தமும், தான் சொல்லும் பொருளுக்கு வலுவும் அழகும் சேர்ந்து கூடுதல் ஆகி, அந்த வலுவும் அழகும், தன்னிடம் கேட்பவருக்கும், அப்படியே மனதுக்குள் ஒரு சித்திரத்தை வரைய வேண்டும் என்ற ஒரு தாகம்தான் என்பதாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

"பூவின்மேல் பிறந்த மோகம்", என்ற கட்டுரை 1932இல் எழுதப்பட்டது. கலிங்கத்துப்பரணியில் உள்ள,

முருகில் சிவந்த கழுநீ ரும்
முதிரா இளைஞர் ஆருயிரும்
திருகிச் செருகும் குழல்மட வீர்
செம்பொற் கபாடம் திறமி னோ

என்ற பாடலில் அவர் கண்ட இரசனை-அனுபவம்-தான் அக்கட்டுரை. இப்பாடல் கடைதிறப்பு என்ற துறையைச் சார்ந்தது.

### கவிதைக்குள் கரைந்துவிடச் செய்தல்

பாடலை முதலில் பாடிவிடுகிறார். அவருடைய இரசனையின் வெளிப்பாடே 'பாவம்'தான். அந்தப் பாவத்தை, வாய்விட்டு அழுத்தமாக, தேவையான நிறுத்தங்களோடு பாடுவதன் மூலமே, தன்னிடம் கேட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு, தன் இரசனையில் இரண்டறக் கலந்து கொள்பவர்களுக்குப் புரியவைக்கிறார். புரிய வைப்பது மட்டுமல்ல அவர் நோக்கம். தான் எப்படி அந்தப் பாடலின் உள்ளே சென்று அதற்குள் உள்ள சொற்களுக்கு உரிய உருவத்தையும், உருவங்களையும், காட்சியையும், காட்சிகளையும், கட்டுமானங்களையும் மனம் என்ற வெளியில், மனம் என்ற வடிவுக்குள் உருவாக்கிக் கொண்டு அதற்குள், அவற்றிற்குள் புகுந்தும், தோய்ந்தும், இருந்தும், இரண்டறக் கலந்தும், அமர்ந்தும், பறந்தும் ஆன்மா அளவில் மட்டுமல்லாது உடல் ரீதியாகவும் இரண்டற்று விடுகிறாரோ அதுபோல எதிரில் உள்ளவரையும் ஆக்குவதும், ஆக மாற்றுவதும், ஆக இழுப்பதும் ஆகிய பணியைச் செய்கிறார். அதை ஒரு கிரியா ஊக்கி என்ற அளவில்மட்டும் நிறுத்திக் கொள்ளமுடியாது. அவர் அவர் உருவாக்கும் தனிப் பிரபஞ்சப் படைப்பு என்றுதான் சொல்லவேண்டும்.

கருப்பட்டியைத் தண்ணீரில் போட்டால் அது கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து இல்லாமல் போய்த் தண்ணீரில் புதிய சுவையை-இல்லாத சுவையை-உண்டாக்குமே, அதைப்போல, டி.கே.சி. படைத்த பிரபஞ்சம் அல்லது உலகம் அல்லது கற்பனை உருவம் என்ற இரசனை வெளிப்பாட்டுக்குள், கேட்பவரை அல்லது அவர் எழுதியதை வாசிப்பவரைக் கரைந்து கரைந்து போகச் செய்துவிடுவார்.

### கட்டுரையின் நோக்கம் சொல்லும் முறை

"முருகில் சிவந்த" எனத் தொடங்கும் பாடலைப் படித்த டி.கே.சி. பூவின் மேல், ஆண் பெண் இருபாலருக்கும், ஆதியில் எப்படி ஆசை தோன்றியது என்பதைப் பற்றி ஆராய முற்பட்டதாகக் கட்டுரையின் இறுதியில் சொல்கிறார்.

### தான் சொல்வதனை நிறுவுதல்

புஷ்பங்களில் மனிதர்கட்கு எவ்வளவோ ஆசை; உவமை சொல்லும் போதெல்லாம் (பெண்களின் அவயவங்களுக்கு

ஆகட்டும், கடவுளர்களுக்கு ஆசனம் ஆகட்டும்) பூவையே குறிப்பிடுவர். பூவில் தேன் இருப்பதால், அது இனிப்புச் சுவை என்பதால் மனிதர்கட்குப் பூவின் மேல் ஆசையா? என்று ஒரு வினாவை எழுப்பிக் கொண்டு பேசுகிறார்.

வண்டுகட்குப் பூவின் மேல் பிரியம் இருக்கலாம். அதற்குக் காரணம் அவை தேனை ஆகாரமாய்ப் பருகுகின்றன என்று ஒரு தர்க்கத்தை வைத்து, மனிதனுக்கு அப்படியெல்லாம் ஆகாரம் என்று கருதியோ அல்லது ஒரு பயன் கருதியோ பிரியம் ஏற்படுவதில்லை என்று சொல்லுகிறார்.

மனிதர்கள் தேனைப் பருகும் போது, அது பூவிலிருந்து வந்தது என்ற ஞாபகம், சாதாரணமாய் வருவதில்லை. பட்டணவாசிகள் பலருக்கு, அது என்ன என்றே கூடத் தெரிவதில்லை. ஆனாலும் அவர்கள், பூவை நேசிக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல பூவுக்கும் நமக்கும் நடுவே, வண்டு வந்து இரச்சல் போடுகிறதிலிருந்தும், கொடுக்கினால் கொட்டுகிறதிலிருந்தும் தேன் சம்பந்தமாக வண்டுதான் நினைவுக்கு வருகிறதே யன்றிப் பூ வருகிறதில்லை. ஆகையினால், மக்களுக்குப் பூவினிடத்தில் உள்ள மோகம் தேனிலிருந்து வந்த தல்ல என்று முடிவு கட்டிவிடலாம் என்று தன் வாதத்தைத் தர்க்க ரீதியாக, அதையும் கற்பனையின் விகசிப்போடு நிறுவுகிறார்.

## ஆன்ம அனுபவத்தைச் சொற்களின் வடிவத்தில் கொண்டு வருதல்

உள்ளக்கலை வல்லார்கள் (மனோதத்துவ நிபுணர்) முதற்கொண்டு யார்யாரோ, மனிதர்கள் பூவின் மேல் கொள்ளும் மோகத்திற்குச் சொல்லும் காரணங்களை மறந்துவிடலாம் என்று கூறிவிட்டுக் கவிஞராகிய தொல்லாசிரியர் ஒருவர் குறிப்பிடுகின்றதில் ஏதேனும் ஆதாரம் இருக்கிறதா எனப் பார்க்கலாம் என்று கூறித்தான், தான் எடுத்துக் கொண்ட கவிதைக்கு வருகிறார். அந்தக் கவிதை என்ன? யார் எழுதியது என்றெல்லாம் குறிப்பிடுவதில்லை. அந்தக் கவிதையை முதலில் நன்றாகப் பல முறை படித்திருக்க வேண்டும். கவிதையைப் படித்துப் படித்து, அதைப்படைத்த கவிஞன், அதைப்படைக்கும் போது வெறும் சாதாரண மனிதனாக இருந்திருக்க முடியாது. அவனும் சாதாரணமாக ஒரு காட்சியை மட்டும் ஓர் இடத்தில்

மட்டும் பார்த்து, அதைக் கவிதையாக எழுதியிருக்க முடியாது. அவன், ஒரு கவிதையை எழுதுவதற்குத் தொடங்கும் போதே, ஒரு வகையான பிரமையான-கற்பனையை உண்மையாக்கித் தன் ஆன்மாவை அதற்குள் நடமாட விட்டு, அந்த ஆன்மா அனுபவிக்கும் அனுபவத்தைத்தான் சொற்களின் வடிவத்தில் கொண்டு வந்திருக்க முடியும். அந்தக் "கொண்டு வந்திருக்க முடியு"மாகிய பிரமையை டி.கே.சி. தன் அனுபவம், தான் காண்பது, காண ஆசைப்படுவது என்ற பல பிரமைகளை-கற்பனையை உண்மையாக்கிக் கொள்கிறார்.

மேலும், இக்கட்டுரையில் டி.கே.சி.யின் நோக்கம், மக்களுக்குப் பூவினிடத்தில் உள்ள மோகம், தேனிலிருந்து வந்ததல்ல என்று தீர்மானிப்பது, அதற்கு "முருகில் சிவந்த" என்ற பாடலை ஆதாரமாக்க, முயல்கிறார். அந்த முயற்சிதான், திறனாய்வாளர்களால் "கவிதைத் திறனாய்வு" என்று சொல்லப்படுகிறது. அதுவே "இரசனை முறைத் திறனாய்வு" என்றும் அழைக்கப்படுகிறது.

### கவிதையியற்றப்படக் காரணக் காட்சியைப் படைத்தல்

டி.கே.சி. பாடலுக்குப் பொருள் சொல்லுமுகத்தான், கவிஞர் (கலிங்கத்துப் பரணி ஆசிரியர்) நம்மைச் சிங்காரப் பூந்தோட்டம் ஒன்றை உற்று நோக்கச் செய்கிறார், என்று நேரடியாக வார்த்தைக்கு வார்த்தை பொருள் சொல்லாமல், கவிஞருடைய மனநிலை, கவிஞர் அப்பாடலைப் பாடும்போது கற்பனையில் அல்லது நேரில் கண்ட காட்சியாகச் சிலவற்றைச் சொல்கிறார். ஒரு சித்திரம் அல்லது ஓர் ஓவியம் வரைகிறார். அதாவது இப்பாடலுக்குத் தொடர்புபடுத்த வேண்டியகாட்சி அல்ல என்றாலும் (மேம்போக்காகப் பார்க்கும்போது) சிங்காரப் பூந்தோட்டம் ஒன்று இருப்பதாகவும், அங்கு ஓடை நெளிந்து நெளிந்து ஓடிக்கொண்டிருப்பதாகவும் கூறுகிறார். அந்த ஓடையில் தாமரை, ஆம்பல் முதலான நீர்ப்பூ இனங்கள் இருப்பதாகவும் வருணிக்கிறார். அந்த வருணனையில், தற்குறிப்பேற்ற செய்தியைச் சொல்கிறார். ("இந்தா ஒரு முத்தம்" என்று சொல்லிக் குவிவன போல). அங்கு இளைஞன் ஒருவன் வருவதாகச் சொல்லி, அவன் அந்த மலர்களை இரசித்துக் கொண்டு, அதன் அழகில் மயங்கி நிற்கும்போது ஒரு பெண் அங்கு வருவதாகச் சொல்கிறார்.

வந்தவள் தன் மெல்லிய விரலால் செங்கழுநீர்ப் பூவைத் திருகிக் கொய்தாள். தன் கூந்தலில் அதைச் சொருகிவிட்டாள். அந்தச் செயலை நளினமாக வர்ணிக்கிறார். மீண்டும் பாடலை முழுமையாகப் பாடிவிட்டு, செங்கழுநீர்ப் பூ, இளைஞனுடைய உயிர், ஆகிய இரண்டையும் ஒரே திருகாகத் திருகிக் கூந்தலுக்குள் அப்படியே சொருகிவிட்டாள் என்று கவி சொல்லும் போது, இளைஞனது உள்ளத்தில் நிகழ்ந்த காதல் நிகழ்ச்சியைப் பளிங்கினுள் வைத்துப் பார்ப்பது போலக் கண்கூடாகப் பார்க்கிறோம். இது கவிகள் செய்ய வல்ல அற்புதம் என்று கூறிப் பெருமித உணர்ச்சி அடைகிறார்.

பிறகு, முக்கியமான சொல், ஏன் அந்த அந்த இடத்தில் பெய்யப்பட்டுள்ளது என்பதை இரசிக்கிறார். பிறகு, துறை வகுக்கப்பட்டதன் காரணத்தைச் சொல்கிறார்.

இறுதியாக, தம் ஆராய்ச்சிக்கு இப்பாடல் மூலம் கிடைக்கும் செய்தியைச் சொல்லி நிறைவு செய்கிறார்.

## பாடலை ஆய்வு செய்து இரசித்தல்

பாடலை ஆய்வு செய்து இரசிக்கும் டி.கே.சி. "அழகு தூண்டிய வீரம்" என்ற கட்டுரையில் கம்பரின் மூன்று பாடல்களை எடுத்துக் கொண்டு சித்திரித்து இரசிக்கிறார்; அல்லது இரசித்துச் சித்திரிக்கிறார் என்று சொல்ல வேண்டும். அந்தக் கட்டுரையில் சீதையின் அழகுதான் இராமனுக்கு வீரத்தைத் தோற்றுவித்தது என்று சொல்கிறார். அதைச் சொல்லுவதற்கு, யுத்தகாண்டம் இலங்கை வேள்விப் படலத்தில் உள்ள மூன்று பாடல்களை எடுத்தாளுகிறார்.

கட்டுரையைத் தொடங்கும்போது சிவபெருமான் சிரித்ததால் திரிபுரம் எரிந்தது என்று கூறிச் சிறுவிளக்கம் தந்து, அது நமக்குத் தெரியவில்லை என்று புராணக்கருத்தை அணுகுகிறார்.

ஆனால் ஒரு பெண் சிரித்தால் உலகம் அதோகதியாய்ப் போகக்கூடும் என்றும், போர் நேரும் என்றும் கூறித் தொடர்கிறார். துரோபதை சிரித்தது, துரியோதனன்போர், அதனால் ஏற்பட்டது; ஹெலன் என்ற பெண்ணால் ஐரோப்பாக் கண்டமும் ஆசியாக் கண்டமும் நெடும் போரில் ஈடுபட்டன

என்றெல்லாம் கூறி, சீதா தேவியால் இராமாயணப் போர் நடந்தது என்று சொல்லுகிறார்.

பெண்களால் பெரும்போர் மூளும் என்ற விஷயத்தைக் கம்பர் எப்படி நினைப்பூட்டுகிறார் என்று பார்ப்போம் என்று கட்டுரையின் நோக்கத்திற்குள் டி.கே.சி. செல்கிறார்.

> "இராவணனுடைய செயலால் யுத்தம் எப்படியும் நடந்தே தீர வேண்டும் என்று ஏற்பட்ட சூழலில், ராமர் மாத்திரம் தன்னந்தனியாகக் கடற்கரைக்குப் போகிறார். இரவு வந்துவிடுகிறது. சந்திரனும் உதயமாகி விடுகிறான். ராமபிரான் மேனியில் நிலவு படுகிறது".

என்று ஒரு சூழ்நிலையை டி.கே.சி. வனைகிறார்.

வாலியினுடைய மார்பையே உருவிச் சென்றது ராமருடைய அம்பு. இராமருடைய அம்பின் வலிமையைக் கம்பன் பாடல்களில் கண்டதை வைத்துப் பேசுகிறார். அவ்வளவு வலிமையுடைய அம்புக்குச் சொந்தக்காரரான இராமருக்கு என்ன ஏற்பட்டது? என்று ஒரு வினாவைக் கேட்டு,

**கரத்தொடு பாழிமாக்**
**கடல்கடைந்துளான்**
**உரத்தோடு, வானினை**
**உருவ ஓங்கிய**
**மரத்தொகை தொளைத்தவன்**
**மார்பில் . . . . . . .**

என்ற பாடலைப் பாடி நிறுத்திவிட்டு, மார்புக்கு என்ன வந்தது? என்று மேலும் ஆர்வத்தைத் தூண்டும் வினாவைக் கேட்டுக் கொண்டு,

**. . . . . . . . . மன்மதன்**
**சரத்தொடு பாய்ந்தன**
**நிலவின் தாரைவாள்**

என்று பாடலைப் பாடி முடிக்கிறார்.

பிறகு, சீதையினுடைய தெய்வீக அழகும், அலங்காரமும் மனக் கண்முன் வந்து நின்றுவிட்டன.

*பணிபழுத்து, அமைந்த பூண்*
*மடியின் பண்பினால்*
*பிணிப்பழுத்(து) அமைந்ததோர்*
*பித்தின் உள்ளத்தான்*

என்று பாடிவிட்டு, மேகலையும், முந்தானையும் ஓடியம் ஆடியும் இந்தப் பாடு படுத்தினால், அழகாக அமைந்த பற்கள் சிறிதே தெரியும்படி, திறந்த இதழ்களை எப்படி மறக்க முடியும்! என்று அடுத்து வரவுள்ள கம்பனுடைய பாடல் அடிகளின் தேவையையும் பணியையும் விளக்குகிறார்.

## கேட்பவர்களை உட்படுத்திப் பேசுதல்: திரும்பத் திரும்பப் பாடுதல்

தன் முன்னால் அமர்ந்து தான் சொல்வதைக் கேட்பவர்களை உட்படுத்திப் பேசும் உத்தியில் அவருடைய திறனாய்வும், விளக்கவுரையும், இரசனை நிலையும் அமைகின்றன. பிறகு, மேற்படி பாடலினுடைய தொடர்ச்சியை,

*அணிபழுத்(து) அமைந்தமுத்(து)*
*அரும்பும் செய்யோன்*
*மணி பழுத்(து) அமைந்தவாய்*
*மறக்க வல்லனோ?*

என்று பாடி முடித்து நிறுத்தவில்லை. அடுத்த பாடலின் இரசனைக்குக் கேட்பவர்களை ஆயத்தப்படுத்து முகத்தான் மேற்படி சீதை அழகுபற்றிய இராமருடைய மனசு பற்றிப் பேச முனைகிறார். டி.கே.சி. 'ராமருடைய மனசு வேறு சில முகமாகத் தொழிற்பட ஆரம்பித்து' என்று பேச ஆரம்பிக்கிறார். அதாவது இராமருக்குச் சில கருத்துக்கள் மனதுக்குள் வந்ததாகச் சொல்கிறார்.

அப்படி வந்ததாகக் கம்பர் பாடிய பாடல் இருப்பதாகத் தம்முடைய கம்பர் தரும் ராமாயணத்தில் கூட இல்லை. இங்குக் கம்பருக்கு மேலே டி.கே.சி. சென்று, இராமருடன் ஒன்றி, இராமருடைய மனநிலையைச் சொல்கிறார் என்றே சொல்ல முடியும். 'சிறிது நேரம் கழித்துத் தெளிவு ஏற்பட்டபின் இராமர் கண் எங்கெங்கே சென்றது என்று சொல்லுகிறார் கவிஞர்' என்று கூறி,

**உடலினை நோக்கும்; வல்**
**உயிரை நோக்கும்; வெவ்**
**இடரினை நோக்கும்; மற்(று)**
**யாது நோக்குங் கொல்?**

என்று பாடிவிட்டு, ஓர் உரையாடல் விளக்கம் தருகிறார். அந்த விளக்கம் வருமாறு: "எதிரே கன்னங் கரேல் என்று கிடக்கிறதும் கடக்க வேண்டியதுமான கடலை நோக்கினார்; இலங்கைத் தீவும் (திடர்) கண்ணுக்குத் தெரிகிறது" என்கிறார். இந்தச் சிறு விளக்கத்தை அடுத்து,

**கடலினை நோக்கும்; அக்**
**கள்வன் வைகுறும்**
**திடரினை நோக்கும் தன்**
**சிலையை நோக்குமால்**

என்று அந்தப் பாடலின் இரண்டாம் பகுதியைப் பாடி முடித்துவிட்டு, தான் பாடிய பாடலின் விளக்கமாக, அந்தக் கள்ளப் பயல் இராவணன் தங்கும் இடத்தைப் பார்த்தார். உடன் பக்கத்தில் கிடந்த வில்லையும் பார்த்தார் என்று உணர்ச்சி பொங்கச் சொல்கிறார். விளக்கத்தில், பாடலின் அர்த்தத்தை மட்டும் சொல்லவில்லை. அதற்கு மேல் சென்று விடுகிறார். அவர் இரசனைத்திறனின் விஸ்தீரணம் அது என்று சொல்ல வேண்டும். அந்த விஸ்தீரணம் பாத்திரத்தோடும், பாடலோடும், படைத்தவனோடும் (கம்பனோடும்) ஒன்றுவதால் கிடைக்கிறது; பெருகுகிறது என்று புரிந்து கொள்ளமுடியும். இங்கு அந்த விஸ்தீரணத்தை, வீரதேவதை கோபாவேசத்தோடு பிரசன்னமாய் விடுகிறாள். சௌந்தர்ய லக்ஷ்மியே வீரலக்ஷ்மியை எப்படி ஆவேசத்தில் மூட்டுகிறாள் என்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம் என்ற அவருடைய கூற்றில் காணமுடியும்.

இப்படி ஒவ்வொரு பாடலையும் பாதிப் பாதி பாடிச் சுவைத்த டி.கே.சி., இறுதியாக, இந்த மூன்று பாடல்களின் அபூர்வம் என்ன என்று பொதுவாக,

"மேலாகக் குறித்த மூன்று செய்யுள்களும் தமிழ்ச் சுவை, கவிச் சுவை, காதல் சுவை, வீரச்சுவை, இதிகாசத் தத்துவத்தின் பெருமைகள் இவைகளை

யெல்லாம் அபூர்வமான முறையில் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. அவைகள் பாடப்பாடத் தெவிட்டாத முக்கனிகள் ஆகும்".

என்று நிறைவுரை தந்து மூன்று பாடல்களையும் வரிசையாகக் கீழே கொடுக்கிறார்; பாடுகிறார்; திரும்பத் திரும்பப் பாடுகிறார் என்று புரிந்து கொள்ளவேண்டும்.

## அறிஞர்கள் கருத்தை எடுத்துக்கூறித் தம் கருத்தை வலியுறுத்தல்

1935ஆம் ஆண்டு எழுதப்பட்ட கட்டுரை 'கால் மணி நேரம் தமிழுக்கு' என்பது. அப்போது சென்னை வந்த இரவீந்தரநாத் தாகூர், தாம் எத்தனையோ மொழிகள் கற்றிருந்தும் தம் தாய்மொழி ஒன்றின் மூலமாகத்தான் கவியின் இதயம் தெரிந்தது என்று சொன்னதாகச் சொல்லித் தமிழர்கள் தம் தாய் மொழியில் பற்றில்லாது இருப்பதையும் தமிழ்மீது இழிவான எண்ணம் கொண்டிருப்பதையும் டி.கே.சி. சுட்டிக்காட்டுகிறார். தமிழுக்குத் தமிழர்கள்தான் கதி; தமிழர்களுக்குத் தமிழ்தான் கதி என்று சொல்லிவிட்டு, மகாமகோபாத்தியாய சாமிநாதையர் ஐம்பது வருஷமாகத் தமிழ் மக்களைத் தமிழ் படிக்கும்படி தூண்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார். அவர்,

> "மாணவர்களுக்கும், கனவான்களுக்கும் ஒரு வார்த்தை: இங்கிலீஷ் படிக்க வேண்டாம் என்று நான் சொல்ல வில்லை. எவ்வளவு வேண்டுமானாலும் படியுங்கள்; ஆனால் தமிழுக்குத் தினம் அரைமணி நேரம் ஒதுக்கி வையுங்கள்; கால் மணி நேரம் படித்தாலும் போதும், பெரிய காரியம்".

என்று தம் ஆர்வத்தை எல்லாம் சேர்த்து ஒரு முறைப்படுத்திச் சொன்னார்கள். இன்றைக்கும் அந்த ஆர்வத்தை என்னால் மறக்க முடியவில்லை" என்று டி.கே.சி., உ.வே.சா.வின் கூற்றைக் கொண்டு தமிழ் படிப்பதன் அவசியத்தையும் பற்றுணர்வையும் வலியுறுத்துகிறார்.

செய்தி இரண்டு: ஒன்று இரவீந்தரநாத் தாகூரின் கூற்று. இன்னொன்று, மகாமகோபாத்தியாய சாமிநாத ஐயருடையது. இவ் இரண்டையும் சேர்த்துத் தம் கருத்தையும் அதன் மூலம் வலியுறுத்துவது டி.கே.சி.யின் அணுகுமுறை.

## அறிஞர் கருத்துகளோடு தம் கருத்தை ஒப்பிடுதல்

நாட்டு மக்களின் நடவடிக்கையை நேரில் பார்த்தும் கேட்டும் வருத்தத்தோடு இருந்த போது டி.கே.சி. அவர்கட்கு, தம் வருத்தத்திற்கும், எதிர்ப்பிற்கும் அடிப்படையான விசயம் சார்ந்ததைக் குறிப்பிடத்தக்க முக்கியமானவர் பேசும்போது, அதை அப்படியே எடுத்துக் கொண்டு, அதைத் தம் எதிர்பார்ப்பிற்குரிய ஒப்பீட்டு முறையில் அணுகித் தம் கருத்தை வலியுறுத்தும் பாங்கு ஒரு கட்டுரையாக அமைந்துள்ளது. அக்கட்டுரைதான் 'கால்மணி நேரம் தமிழுக்கு' என்பது.

> "தமிழரைப் பற்றிய உண்மையை-அதாவது தமிழைப் புறக்கணிப்பதையும், தமிழ்ப் பாட்டில் ஒன்றும் இல்லை, தமிழுக்கென்று தனிப்பண்பு (தமிழ் ஜீனியஸ்) கிடையாது என்றெல்லாம் சாதாரணமாகச் சொல்லிக் கொண்டும், அதை விட நம்பிக் கொண்டும், இருக்கிறதையும் தாகூர் தெரிந்திருந்தால், எப்பேர்ப்பட்ட ஆவேசமும்ஆங்காரமும் அவருக்கு வந்திருக்குமோ சொல்லமுடியாது."

என்று சொல்லும்போது தமிழருடைய போக்கு, தமக்கு மிகப் பெரிய அளவில் ஆவேசத்தையும் ஆங்காரத்தையும் தருகிறது என்று சொல்லாமல் சொல்லுவதை நாம் புரிந்து கொள்ளமுடிகிறது.

> வங்காளிகள் ஒவ்வொருவரும் ரவீந்திரநாத் தாகூரிலிருந்து ரயில்வே போர்ட்டர் வரையும் ஏகோவித்துத் தங்கள் தாய்ப் பாஷையினிடத்தில் அபார ஆர்வமும் அக்கறையும் கொண்டிருக்கிறார்கள். இதற்காகவே மேல் நாட்டார் அவர்களை மதிக்கிறார்கள்.

என்று சொல்லிச் செல்லும் வாதமும், அக்கறையும் கட்டுரையைப் படிப்பவர்களுக்கு டி.கே.சி.யின் கருத்தோடும் உணர்ச்சியோடும் ஒத்துப்போகும் அனுபவத்தை ஏற்படுத்துகின்றன.

ஒருவருக்கு மொழிப்பற்றும், கல்விப்பற்றும் கூட, அந்த மொழியை இரசிப்பதைவிட அந்த மொழியில் உள்ள கவியை இரசிப்பதில் கிடைக்கும் 'ரசனைச் சுகத்தால்' மட்டுமே

மேலோங்கி நிற்கும் என்பதை உள்உணர்ந்து சொல்லி எதிரில் இருப்பவர்கட்கும் உள்உணர்வை ஏற்படுத்தும் ஆய்வுப் போக்கு ஆய்வுத்தடம் வித்தியாசமானது; சிறப்பானது.

## தொடக்கம், தொடர்ந்து படிக்கத் தூண்டுதல்

'இதய ஒலி' என்ற கட்டுரை, தமிழின் பெருமையை உணர்ந்து, பிறருக்கு உணர்த்த எழுதப்பட்ட கட்டுரை. உணர்ச்சிப்பூர்வமான அணுகுமுறை. ஆனால் பகுத்தறிவின் அடிப்படையில் நிகழ்த்தும் ஆய்வில் அணுகுமுறை என்று சொல்லக்கூடிய, பலவகைச் சிந்தனைகளின் தர்க்க ரீதியான வெளிப்பாடு ஆகும்.

"தமிழில் அனேக விஷயங்களுக்கு வார்த்தை இல்லையே என்று நம்மவர்களுள் அநேகர் வருந்துகிறார்கள்" என்ற அணுகுமுறையில் கட்டுரையின் தொடக்கமே படைக்கப்பட்டுள்ளது. மேலும் "சயன்ஸுகள் சம்பந்தமாகப் பதங்கள் இல்லை என்ற காரணத்தால், புதிதாகப் பதங்கள் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்காக எவ்வளவோ பிரயாசை எடுத்துக் கொண்டும் வருகிறார்கள்" என்று கட்டுரை தொடர்கிறது.

ஆகவே, இந்தத் தொடக்கம் மூலம் சில வேற்று மொழிச் சொற்களுக்குத் தமிழ்ச் சொற்களை உருவாக்கித் தருகிறார் என்ற அளவில், கட்டுரையைத் தொடர்ந்து படிக்கச் செய்கிறார். அது, அவருடைய ஆய்வு அணுகுமுறை என்று சொல்லவேண்டும்.

## கதை வடிவில் கட்டுரை அமைப்பு

அடுத்து, நேரடியாகக் கட்டுரையின் நோக்கத்திற்கு வந்து, சொற்களை ஆராயவில்லை. எல்லோரும் எளிதில் கேட்டு வாங்கிக் கொள்ள, சிரமம் தராத வகையில், கதை சொல்கிற வடிவில் கட்டுரையை அமைக்கிறார். ஆய்வினை அமைக்கிறார் என்று சொல்ல வேண்டும்.

ஒரு பையன், 'ஹியர் ஹியர்' என்ற உத்ஸாகத்தோடு ஆரவாரிக்கிறோமே, ஒருவர் ஆங்கிலத்தில் பேசிக் கொண்டிருக்கும்போது! அந்த 'ஹியர் ஹியர்' என்பதற்குப் பதிலாகத் தமிழில், என்ன ஐயா சொல்லுவீர்கள்?" என்று கேட்டான். அதற்குக் 'கேண்மின் கேண்மின்' என்று

சொல்லலாமே என்று சொல்லுகிறார். அது இலக்கிய வழக்கில் உள்ள சொல் என்று தீர்மானத்துக்கு வருகிறார்.

அதை அதோடு விட்டுவிட்டு, அடுத்து ஒரு கதை சொல்லும் வகையில் 'தாங்க்யூ' என்ற நன்றி கூறும் சொல் தொடருக்குத் தமிழ் என்ன என்று ஆங்கிலேயர் ஒருவர் தமிழ் முனிஷியைப் பார்த்துக் கேட்டதாகவும், அந்த முனிஷி, "அதற்குத் தமிழ் இல்லை" என்றும் கூறியதாகவும் சொல்கிறார். அதனால் ஆங்கிலேயர், "தமிழருக்கு நன்றி பாராட்டுகிற தன்மையே கிடையாது! அவ்வளவுதான்" என்று முடிவுகட்டிவிட்டதாகச் சொன்னதாகக் குறித்துக் கதையை நடத்திச் சுவைப்படுத்துகிறார்.

அடுத்து "உத்ஸாகத்தைத் தெரிவிக்கிற தமிழ் வார்த்தைகளைக் கேட்கும் சந்தர்ப்பம் நகரவாசிகளுக்கு இருந்திராது. ஆங்கில மயக்கத்திலேயேதான் முழுகிக் கிடக்கிறார்களே!" என்று கூறி, இன்று தமிழில் இருக்கிற அழகழகான வார்த்தைகள் ஆங்கில மோகத்தால் யாருக்கும் தெரிவதில்லை, யாரும் பயன்படுத்துவதுமில்லை" என்ற தன்மையில் ஆய்வை நகர்த்துகிறார்.

கிராமப் புறத்தில் சாவடியில், திண்ணையில் பேசிக் கொள்பவர்கள் "கேளுங்கள், கேளுங்கள்!" என்று சொல்லுவதையும், "கேளுங்கள் ஐயா கேளுங்கள்!" என்று எதிரொலி வருவதையும் சுட்டிக்காட்டி "ஹியர் ஹியர்" என்ற வார்த்தைகளுக்குத் தமிழில் வார்த்தை இல்லையா என்று கேட்டுக்கொண்டு, இல்லை என்று சாதிப்பவன், "சங்கீதமும் சங்கீத உணர்ச்சியும் நமக்குக் கிடையாது" என்று தீர்ப்புச் சொல்லிவிடுவான் என்று, தமிழைக் குறைசொல்பவனைக் கேலி செய்கிறார்.

இரவீந்திரநாத் தாகூர் தமிழ்நாட்டைக் குறித்துச் சொல்லும்போது 'தமிழகம் இசையகம்' என்று குறிப்பிட்டிருக்கிறார் என்று, மேற்கோள் காட்டி, "ஆஹா! ஆஹா!' என்று, ஆனந்தத்தை அனுபவிக்கும் போது ஆர்ப்பரிப்பார்கள்; 'அடடா! அடடா' என்று அரற்றுவார்கள் என்று கூறி, பலே, பேஷ், சபாஷ் என்ற வார்த்தைகளுக்குத் தமிழில் உள்ள வார்த்தைகள் பற்றி விளக்கம் தந்து, தமிழின் வளத்தை நிறுவுகிறார். அடுத்து உத்ஸாகத்தைக் காட்டுவதற்கு

வெள்ளைக்காரர்கள் இரயிலடியில் கூச்சல் போடும்போது ஹிப் ஹிப் ஹுரே, ஹிப் ஹிப் ஹுரே!' என்பார்கள். அதே போலத் தமிழில் உண்டு என்று நிறுவுகிறார்.

நம்மவர்களும் முற்காலத்தில் தங்கள் உத்ஸாகத்தை வெளியிட ஒரு விதமாக ஆரவாரம் செய்திருக்கிறார்கள் என்று கூறி "நாவலித்தல்" என்ற சொல்லுக்கு விளக்கம் அளிக்கிறார். தொண்டரடிப்பொடியாழ்வார் கடவுள் அடியார்களின் எக்களிப்பைச் சொல்லும் போது, எமனுடைய தூதர்களையே கொன்று வீழ்த்தி, உடல் வேறு தலை வேறாக ஆக்கி, அந்தத் தலைகளைப் பெரும் குவியலாகக் குவித்து, அந்தக் குவியலின் மேலேயே நின்று கொண்டு, "நாவலோ நாவல்" என்று வெற்றி முழக்கம் செய்து, சுற்றிச் சுழன்று ஆடுவார்கள் அடியார்கள் என்று குறிக்கிறார் எனும்போது,

**நாவலிட் டுழிதர் கின்றோம்**
**நமன்தமர் தலைகள் மீதே!**

என்ற பாடல் வரிகளை ஆதாரமாக்குகிறார். அதற்கு மேலே ஒருபடி சென்ற டி.கே.சி., "இந்த நாவலிப்புக்கு முன், 'ஹிப் ஹிப் ஹுரே' எல்லாம் "அரோ", "வாழியவே" - இதய பாவ அடையாளங்கள் அரோ என்பதைத் தமிழில் இலக்கணப் புலவர்கள் வெறும் அசை என்ற அளவில் சொல்லிச் செல்வர். ஆனால் டி.கே.சி., ஒரு புலவர் பரவச நிலையில் நின்று கூறும் வாழ்த்துப் பாவின் இதய பாவத்தையும் அழகையும் புலப்படுத்தும் மகத்தான சொல்லாக, அர்த்தமுள்ள சொல்லாகப் பயன்படுவதாகக் கூறுகிறார். மேலும், டி.கே.சி. புலவரின் இதய பாவத்துக்கும் அழகுக்கும் ஓர் உதாரணத்தை விளக்குகிறார்.

"மழையோடு பசுக்களை வாழ்த்துகிறார் (புலவர்). மறை நூல்களோடு தத்துவ நூல்களை வாழ்த்துகிறார். அரசரோடு குடிகளையும் சேர்த்து வாழ்த்திவிட்டு, தன் தெய்வக் குரவரான திருவள்ளுவரிடம் வருவதையும் பாருங்கள்.

**வாழிமறை ஆன் இனங்கள் வாழிமறை ஆகமங்கள்**
**வாழிமனு நீதி மன்னர் மன்பதைகள்–வாழியரோ!**
**தெள்ளுகுறள் செந்தேன் செவிகுளிரப் பெய்ததிரு**
**வள்ளுவ னார்பாத மலர்**

இந்த வெண்பாவின் தனிச் சீர் 'வாழியரோ'. அதில் வரும் 'அரோ' என்னும் முடிவு, கவியின் ஆர்வத்தை விண்ணுக்கே தூக்கிவிட்டு விடுகிறது'' என்று வியந்து பேசுகிறார். அதற்கு, மேலும் வலுவூட்டுவதற்காகப் பாரதியாரின்,

வானம் அளந்த(து) அனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!
எங்கள் தாய்மொழி எங்கள் தாய்மொழி
என்றென்றும் வாழிய வே!

என்ற வாழ்த்துக் கவிதையைச் சொல்லி, அவர் 'தமிழர்களுடைய வாழ்த்தொலியை, ஈடுபட்டு அனுபவித்திருப்பதாகக் கூறுகிறார். 'வாழியவே' என்பது இதய பாவத்தையும் அழகையும் வெளிப்படுத்துவதாக அமைந்த சொல் என்று கூறுகிறார்.

## 'போற்றி', 'அரோகரா'– இதய ஒலிகள்

தமிழர், கடவுளிடத்துக் காட்டி வந்திருக்கிற பக்தி ஆவேசத்தைக் குறிக்கும் சொல்லும் சொற்றொடரும் தனியான நயமும் வலிவும் பெற்றவைகளாய் இருக்கின்றன. பல்லாண்டு கூறுகிறதென்றால் அதில் ஒரு மந்திர சக்தி, கால வரையறை எல்லாம் கடந்து நித்திய வஸ்துவுக்கு,

பல்லாண் டென்னும் பதம், கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுது மே

என்று அடியார் பல்லாண்டு பாடுவதை எடுத்துக்காட்டுகிறார் டி.கே.சி. "போற்றி போற்றி போற்றியோ போற்றி" என்று இறைவனைப் பிரார்த்திக்கும் போது பயன்படுத்தப்படும் சொல்லும் சொற்றொடரும் பற்றிச் சிலாகித்துப் பேசும் டி.கே.சி. அவை செய்யுள் வழக்காக இருப்பதாகச் சொல்லுகிறார்.

இத்தோடு இந்த ஆய்வை முடித்திருந்தால் எல்லோரையும் போலக் 'கற்றுச் சொல்லி'யாக இருக்கிறார் எனச் சொல்ல முடியும். ஆனால் அதற்கு மேலே ஒரு படி சென்று 'தற்காலத்திலும் உலக வழக்கிலுள்ள பதங்களைப் பார்ப்போம்' என்று,

'கோவிந்தா, கோவிந்தா', 'ஹர ஹர மகா தேவ!' என்று பஜனைக்கோஷ்டி முழங்குவதன் மேன்மையை ஆராய்ந்து, "அந்த முழக்கத்தைக் கேட்டால் யாருக்குமே ஒரு மன எழுச்சியும் பக்தி

உணர்ச்சியும் உண்டாய்விடுகின்றன" என்று கூறித் தமிழில் ஆங்கிலத்தைக் காட்டிலும் உத்ஸாகத்தைக் காட்டும் சொல்லாட்சிகளும், சொற்றொடர்களும் புழங்குவதைச் சுட்டிக்காட்டுகிறார். 'ஹர ஹரமகாதேவா' என்ற பக்தி யுணர்ச்சியின் அடையாளச் சொற்றொடரைச் சொன்ன டி.கே.சி.க்குத் திருவண்ணாமலைத் திருத்தலம் நினைவுக்கு வருகிறது. திருவண்ணாமலைத் திருக்கார்த்திகை உத்ஸவம் பற்றிச் சிறு விளக்கம் தருகிறார். அந்த உத்ஸவ நாளையே படிப்பவர் முன்னும், கேட்பவர் முன்னும் ஒவியமாகத் தீட்டுகிறார். அவர் வரையும் ஓவியம் சொல்வடிவில் வெளிச்சம் இடுகிறது: "மணி ஆய்விட்டது. அஞ்சே முக்கால் ஆய்விட்டது. எல்லோருக்கும் ஒரு பரபரப்பு. மணி ஆறு ஆகி விடுகிறது. இதயத்திலே துடிப்பு. சப்தம் என்பதே இல்லை. மலை உச்சியில் ஜோதி தெரிந்து விடுகிறது. 'அரோகரா அரோகரா அண்ணாமலைக்கு அரோகரா'. நாலாத் திக்குமிருந்து ஒரே முழக்கம். வானமே வெடித்துவிடுமோ எனும்படி, ஹர ஒலியாகிய பேரலை ஒரு திக்கிலிருந்து வேறொரு திக்குக்கு உறுமிக் கொண்டு ஓடுகிறது" என்பது அந்தச் சொல் வடிவ வெளிச்சம். அரோகரா போன்ற உத்ஸாகத்தை வெளிப்படுத்தும் சொல் ஒலிகள், 'இதயஒலிகள்' என்று, கட்டுரை மூலம் புலப்படுத்தப்படுகின்றன.

ஆகவே, சொல் ஆராய்ச்சியில் ஈடுபடும் டி.கே.சி. வெறும் வேர்ச்சொல், மூலச்சொல் என்று தமிழ் மொழியியல் தொடர்பாகத் தம் ஆய்வைச் செலுத்துகிறார் என்று மட்டும் சொல்லக் கூடாது. அதற்கும் மேலே சென்று அந்தச் சொற்கள் தரும் இன்ப உணர்ச்சியையும், உத்ஸாக உணர்ச்சியையும் வெளிப்படுத்தி, அந்தச் சொற்களின் பயன்பாட்டு வழித் தமிழ் மக்களின் பண்பாட்டு நிலையையும் எடுத்துக்கூறித் தமிழ் மக்கள், தமிழ் மொழி, தமிழ்ப்பண்பாடு என்ற மூன்று நிலையில் அதாவது மூன்றின் இணைப்பு நிலையில்' தம் ஆய்வுத்தடத்தை அமைத்துக் கொள்கிறார் என்று புரிந்து கொள்ளவேண்டும்.

### கவிதையில் 'எளிமை'– இன்றியமையாத அம்சம்

"கண்ணாரக் காண ஒரு கவிஞர்" என்ற கட்டுரையில் எட்டு ஆண்டுக்குமுன் ரசிகமணி ஒரு பத்திரிகையில் படித்த "கருணைக்கடல்" என்ற கவிதை உண்டாக்கிய வியப்பைப் பற்றி எழுதுகிறார். 'கருணைக் கடலுக்கு மூலமான எட்வின் ஆர்னால்டு

ஆங்கிலத்தில் பாடிய 'ஆசிய ஜோதி'யைப் பல தடவை வாசித்துள்ளதாகச் சொல்லுகிறார் டி.கே.சி. 'கருணைக் கடலை' வாசித்த போது உண்டான இன்பமும் அதிசயமும் அளவு கடந்தன என்றும் கூறுகிறார். காரணமும் சொல்கிறார். அவர் சொல்லும் காரணம்:

> "சோக உணர்ச்சி அக்கவிதையில் அப்படியே உண்டாகிறது. அந்தச் சோக உணர்ச்சியை உண்டாக்கும் சக்தியை மேல்நாட்டு ரசிகர்கள் 'மந்திரசக்தி' என்று சொல்வார்கள். இந்த மந்திர சக்தியை, வார்த்தைகள், அவைகளின் அமைப்பில் பிறக்கும் சீர், எதுகை, மோனை என்னும் செய்யுளுக்குரிய அம்சங்களினால் உண்டாக்க முடிகிறது".

என்கிறார் டி.கே.சி.

இவைகளோடு இன்றியமையாத அம்சம் எளிமை. எளிமை இல்லையென்றால் கவி இல்லை என்ற டி.கே.சி. கூறும் விளக்கம், அவருடைய திறனாய்வுத் தடத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. முதலில் செய்யுளை இரண்டு பகுதியாகப் பிரித்து, முதல் பகுதிக்கு விளக்கம் தருகிறார். அந்த விளக்கம்கூடச் சொற்களுக்கு அர்த்தம் சொல்வதாக அமையவில்லை. அந்தக் கவிதையில் கவிஞர் வெளிப்படுத்தும் கருத்தோட்டத்தின் பின்னணி, சூழ்நிலை விளக்கம் இருக்கும். அடுத்த பகுதிக்கு அதே போன்ற விளக்கம். அந்த விளக்கத்தோடு அந்தக் கவிதை கொடுத்த இன்பத்திற்கு அல்லது அனுபவத்திற்குக் காரணமான சொல் ஆட்சி பற்றி விளக்கிவிட்டு, மறுமுறை செய்யுளைப் பார்ப்போம் என்று முழுச் செய்யுளையும் கொடுத்துக் கவிஞர் படைத்த சொல்-கையாண்ட சொல்-எவ்வாறு 'இதய பாவத்தை' வருவிக்கிறது என்று விளக்குகிறார். மேலும் கவிதையில் சொல் 'இதய பாவத்தை' வருவிக்க வேண்டுமென்றால் வழக்கில், கிராமத்தில் (பாடுபொருளுக்குரிய) உள்ள சொற்களையே பயன்படுத்த வேண்டும். இலக்கியச் சொல்லையோ புலவர்களும் படித்தவர்களும் பயன்ப்டுத்தும் சொல்லையோ பயன்படுத்தக் கூடாது என்று டி.கே.சி., சொல்லாட்சிக்கு வரையறை செய்கிறார்.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் கவிகளை மக்கள் அவர் காலத்தில் மதிக்கவில்லை என்று சொல்லும் டி.கே.சி.,

அதற்குக் காரணம், கவிகளிலுள்ள எளிமைதான் என்று சொல்லிவிடுகிறார். நோபல் பரிசு பெறுவதற்கு முன், இரவீந்தரநாத் தாகூர், பண்டிதர்களின் கேலிக்கு உள்ளானது கண்கூடாகக் கண்டது என்று, இரவீந்தரநாத் தாகூரின் கவிதைகளும் எளிமையானவை என்பதால், மதிக்கப்படவில்லை யென்றும் கூறுகிறார்.

## கவிதை இலக்கணம் : கவிதைமனப் புரிதல்

கவிமணியின் 'நாடிப் புலங்கள் உழுவார் கரமும்' என்ற பாடலை வைத்துக் கொண்டு கவிதைக்கு இலக்கணம் வகுக்கிறார்.

> ஒரு கவிக்கு விஷயம் எதுவாயும் இருக்கலாம். ஆனால் எடுத்துக்கொண்ட விஷயத்தில் ஆழ்ந்த ஆர்வம் இருக்க வேண்டும். அதாவது ஆசையோ வெறுப்போ அழுத்தமாய் இருக்க வேண்டும். இவைகளையே ரஸங்கள் என்று நம்மவர்கள் குறிப்பிட்டுச் சொல்வார்கள். . . . இந்த உணர்ச்சிக்குத் தக்க விதமாகப் பாஷையில் அடங்கிக் கிடக்கிற பாவமான சொல், பாவமான இசை (ஆங்கிலத்தில் ரிதம்) பாவமான கட்டுக்கோப்பு (டெக்னிக்) . . . இவைகளோடு ஒத்த உருவத்தில் வெளிவந்து விட்டால் அதுவே கவி; அது அற்புத சிருஷ்டிதான்' என்பது அந்த இலக்கணம்.

கவிதையை இரசிப்பதற்கும் அனுபவிப்பதற்கும் கவிதை மனம் இருக்க வேண்டும் என்பது டிகே.சி.யின் கருத்து.

> கவிகள் என்றால் வார்த்தைகளாலும், இசை, தாளங்களாலும் அனுபவிக்கப்படுபவை. அவைகளில் காணுகிற சுதி பேதங்களும், துள்ளல்களும், நெளிவுகளும் அபூர்வமான ஆனந்தத்தை விளைவிக்கின்றன.

என்பது டிகே.சி.யின் 'கவிதை மனப் புரிதல்' என்ற கோட்பாடு; தனித் தன்மையுடையது. அதுதானே அவருடைய இரசனை முறைத்திறனாய்வுக்கு அடிப்படை எனப் புரிந்து கொள்ளமுடியும்.

பழைய கவிதை என்பதற்காக எதையும் ஏற்றுக் கொண்டாடக் கூடாது. அதில் கவிப்பண்பும் இதயப் பண்பும்

இருந்தால் தான் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறார் டி.கே.சி. கவிப்பண்பு என்பதற்குக் 'கவியும் உருவமும்' என்ற கட்டுரையில் விளக்கம் தருகிறார்:

> *அலையுருவக் கடல் உருவத்(து)*
> *ஆண்டகைதன் நீண்டுயர்ந்த*
> *நிலையுருவப் புயவலியை*
> *நீயுருவ நோக்கையா!*
> *உலையுருவக் கனல் உமிழ்கண்*
> *தாடகைதன் உரம் உருவி,*
> *மலையுருவி மரம் உருவிற்(று) ஒருவாளி!*

என்ற பாடலைக் கொடுத்து இரு பகுதியாகப் பிரித்துக் கொண்டு விளக்கம் சொல்லி முடித்துப் பிறகு பாடல் முழுமையும் பாடிக்காட்டுகிறார். அப்படிப் பாட்டைப் பாடும்போது மூன்றாம் அடியிலுள்ள 'உருவி' என்ற வார்த்தையோடு கொஞ்சம் நிற்க வேண்டும்; பிறகு 'மலையுருவி' என்று ஆரம்பித்துப் பாட்டை முடிக்க வேண்டும். அப்போது பாவ தாளத்தின் (ரிதம்) வேகம் இன்னதென்று தெரிய வரும். அம்பின் வேகமே செய்யுளின் உருவமாக உருவெடுக்கிறது. இதைத்தான் ஆங்கிலத்தில் ஃபார்ம்-உருவம்-என்று சொல்லுவார்கள். இந்த உருவம் இருந்தால் தான் கவி. உருவம் என்பது, விஷயம். உணர்ச்சி (இங்கே வியப்பும் வீரமும் கலந்த உணர்ச்சி) சொல், தாளம் எல்லாம் சேர்ந்து பிறக்கிற ஒரு அற்புதத் தத்துவம். இதெல்லாம் கவிதையில் தெளிவாகத் தெரியக் கிடக்கிறது" என்று கூறி விளக்கிவிட்டு, கவிக்கு, விஷயம் அல்ல உருவமே பிரதானம்'' என்று தீர்மானிக்கிறார்.

மேலும் கவிதையை எப்படி ஆராய்ந்து பார்ப்பது என்பதைக்

> கவிகளுக்குள் உள்ளக்கிடக்கையாகக் கிடக்கும் உணர்ச்சிவசமாய் நின்று, ஆர அமர ஒரு முறைக்கு நாலுமுறை பாடிப் பார்த்தால், பாட்டின் அபூர்வமான நயமும் பெருமையும் புலப்படும்

என்று விளக்குகிறார். இதன் மூலம் கவிதைகளில் வெளிப்படும் இரசங்களின் பாவத்தைப் புரிந்து இனம் கண்டு அனுபவிப்பதே டி.கே.சி.யின் ஆய்வுத்தடம் எனத் தீர்மானிக்கலாம். முத்தொள்ளாயிர முகவுரை "விஷயமா கவி?" என்ற தலைப்பில்

> கவி என்று சொல்லும்போது ஏதோ அதிலுள்ள விஷயம் ஒன்றைச் சொல்ல வந்தது என்று சாமானிய ஜனங்கள் எண்ணலாம். வேறு சிலர், அதிலுள்ள உணர்ச்சியைத் தெரிந்து கொண்டால் போதும் என்று எண்ணலாம். ஆனால் கவியில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது: உணர்ச்சியானது பாவ உருவத்தில் வந்து வெளிப்படுகிறதா என்பதுதான். இந்த உருவத்தின் மூலமாகவே, கவிஞருடைய உள்ளத்தில் எழும் உணர்ச்சியைப் பார்க்கிறோம். அப்படிப் பார்க்கிற போதுதான் கவிஞர் இதயத்திலுள்ள அற்புதமான சிருஷ்டித் தத்துவம் நம்முடைய இதயத்துக்கும் வந்து சேருகிறது. கவிஞருடைய சிருஷ்டித் தத்துவத்தால், கவிஞர் இதயத்தில் பெருகிய ஆனந்தம் அவ்வளவிலும், நாமும் பங்கு கொள்கிறோம்

என்று விளக்கம் தருகிறார்.

## தனி சிருஷ்டி – கவிதைப் பண்புள்ளவை

சில கவிஞர்கள் தங்களுக்குப் பிடித்திருக்கும் வேற்று மொழிகளின் 'விஷயத்தை' எடுத்துக் கொண்டு தாய்மொழியில் கவிதை எழுதுவர். அதை மொழிபெயர்ப்பு அல்லது தழுவல் என்ற வரையில் அடக்குவர். ஆனால் டி.கே.சி. அதை மறுக்கிறார். அந்த மறுப்பைப் புரிந்து கொள்ள, அவர் கூறும் காரணத்தைப் புரிந்து கொண்டால் போதும். எளிமையும் தெளிவான பாவமும் ஆகிய கவிதைப் பண்பு கவிதையில் இருந்தால் போதும். அதை மொழிபெயர்ப்புக்குள்ளோ தழுவலுக்குள்ளோ அடக்கக் கூடாது. அதை ஒரு தனி சிருஷ்டி என்று சொல்ல வேண்டும் என்கிறார். கவிமணியின் 'புலிக்கூடு' என்ற கவிதை வில்லியம் பிளேக் எழுதிய தி டைகர் என்ற கவிதையின் மொழிபெயர்ப்பு என்று சொல்லப் படுவதுண்டு. ஆனால் டிகே.சி. "இது மொழி பெயர்ப்பு அல்லவே அல்ல; தழுவி எழுதியது என்றும் சொல்லக் கூடாது. பிளேக் எழுதிய பாட்டு, பிள்ளையார்வகைக் கவி ஒன்று எழுதத் தூண்டியது என்றுதான் சொல்லலாம்" என்று கூறி இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கிறார். பிறகு மேற்கண்ட முடிவுக்கு வருகிறார். அசல்களை (ஒரிஜினல்களை) ஒப்பிட்டுப் பார்த்து ரசிக்கும் திறனாய்வுத்தடம் டிகே.சி.யினுடையது எனத் தீர்மானிக்கலாம்.

## பதிப்புப் பணியில் டி.கே.சி.யின் ஆய்வுத்தடம்

டி.கே.சி.யின் முத்தொள்ளாயிரம் என்ற நூல் பதிப்பிக்கப்பட்டதன் மூலம் அவருடைய திறனாய்வுத் தடத்தைக் காணமுடியும். திரு.சின்ன அண்ணாமலை பதிப்புரை எழுதியுள்ளார். பதிப்பாசிரியர் டி.கே.சி. தமிழ்ப் பண்ணை, தியாகராய நகர், சென்னை வெளியீடு. 14-01-1943இல் முதல் பதிப்பு வெளியாகியுள்ளது. பதிப்பித்த முத்தொள்ளாயிரத்துக்கு எழுதும் முகவுரையில் "தமிழரது கவிச் செல்வம், இதர பாஷைகளைக் கவனிக்கும்போது, மிக வளமான செல்வம்தான்; ஒருவருக்கு ஆயுள் முழுவதும் திளைத்து அனுபவிக்கத் தக்க செல்வம்தான்" என்று கூறுகிறார். ஆகவே அவரைப் பொறுத்தவரை திறனாய்வுத் தடம் என்பது 'அனுபவித்து மகிழ்தல்' தான். முத்தொள்ளாயிரத்தில் 2700 பாடல்களைப் படைப்பாளி பாடியுள்ளார். அவற்றில் 108 பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. 2592 படல்கள் ஒழிந்தே போய்விட்டன என்று கூறுகிறார் டி.கே.சி. அதற்கு முன்பாக அப்படி ஒழிந்த பாடல்கள் பற்றி ஒரு முன் ·உரை வழங்குகிறார். பொதிகை மலைச் சாரலில் இருந்த அகஸ்தியர் இசையில் மிக உயர்ந்த அனுபவங்களைக் கண்டவர் என்று கூறி, அவர் கைக்கு வந்த அளவில்லாத தமிழ்க் கவிகளைத் திரட்டி வைத்திருந்தார். . . . . .கேட்டவர் மனசையும், இறைவனது மனசையுமே உருக்கும்படியான எத்தனையோ கவிகளை அவராகவே பாடியும் வைத்திருந்தார். இதற்குச் சான்றாகக் கம்பர்,

> **என்றும் உளதென்தமிழ்**
> **இயம்பிஇசை கொண்டான்**

என்று கூறியதைக் காட்டி, "தமிழ் மக்களால் என்றுமே மறக்க முடியாதபடி இருந்தன இந்தக் கவிகள்" என்று நிறுவுகிறார். ஆனாலும், அந்த அகஸ்தியர் திரட்டி வைத்த நூலிலிருந்தோ பாடி வைத்த நூலிலிருந்தோ, ஒரு வரி கூடக் கிடைக்கவில்லை நமக்கு என்று வருத்தப்படுகிறார் டி.கே.சி. முத்தொள்ளாயிரப் பாடல்களை ஆய்ந்து பதிப்பித்த நெறிமுறையே இலக்கியமாகிய பாடல்களை ஆராய்கின்ற தடம் எனவும் புரிந்து கொள்ள வேண்டும். அவர் பாடல்களை அனுபவிப்பது என்பது பாடலின் உணர்ச்சிகளை நேர்வழியில் பார்த்து அனுபவிக்க முயல வேண்டும் என்று கூறுகிறார். அப்படி அனுபவிப்பதற்க்ாகவே,

ஒவ்வொரு பாடலுக்கு (முத்தொள்ளாயிரப் பாடலுக்கு) முன்னும் முகவுரையாக விளக்கம் கொடுத்திருக்கிறார்.

மேலும், "சாமான்யமாக யாரும் அந்த விளக்கத்தை வாசித்து, கட்டத்தையும் பாத்திரத்தையும் உணர்ச்சியையும் அறிந்து கொள்ளலாம். அவ்வளவுதான் வேண்டியது. பாட்டுக்குள் அப்படியே புகுந்துவிடலாம். இரண்டு இரண்டு சீராகச் சவுக்கமாகப் பாட முயல வேண்டும். விஷயம் நிற்கிற இடங்களில் நிறுத்துப் புள்ளிகளோடு நின்று மறுபடியும் பாடலைத் துவங்க வேண்டும். இவ்விதமாகப் பாடினால், பொருள் எளிதில் விளங்கி விடும். பாவமே தெரிந்து விடும். கவி உருவம் வந்து நம் மனசைக் கவர்ந்துவிடும். ஆயுள் முழுதும் நம் இதயத்தில் கவி ஊடாடிக் கொண்டிருக்கும்" என்று அவரே கூறுகிறார்.

மேலும் அவர் ஒவ்வொரு பாடலையும் படித்துப் புரிந்து கொள்ள, அந்தப் பாடல் உள்ள பக்கத்தின் அடியில், விளக்கம் கொடுக்கிறார். அதைப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அதே பக்கத்தில் குறிப்பு என்று ஒரு பாகம் கொடுக்கிறார். அந்தப் பகுதியைத்தான் அவசியம் கவனிக்க வேண்டும். ஏனென்றால், கவியின் உள்ளக்கிடக்கையான உணர்ச்சியையும் உருவ பாவத்தையும் எடுத்துக் காட்ட முயல்வது அது. உணர்ச்சி பாவத்தோடு பாடலைப் பாடிப் பார்த்தால், குறிப்பில் கண்ட விஷயம் விளங்கும். இந்தப் பாடலைப் பத்துத் தடவையானாலும் பாடிப் பார்க்கலாம். பாடலை வேகமாக வாசித்துவிடக்கூடாது. பாடத்தான் வேண்டும். மெள்ள மெள்ள நிறுத்தி நிறுத்திப் பாட வேண்டுமே யொழிய, ஏதோ இரயில் தவறி விடுமே என்று அவசரத்தில் பாடக் கூடாது" என்று விளக்குகிறார்.

ஆகவே பாடிப்பாடி, அதுவும் சவுக்கமாகப் பாடிப் பாடி அந்தப் பாடலுக்குள் புகுந்து அந்தப் பாடலாகவே மாறி, கரைந்து அனுபவிப்பது தான் டி.கே.சி.யின்" அனுபவ முறை ஆய்வுத்தடம்" என்றும் புரிந்து கொள்ள வேண்டும்.

### நூல் தோற்றத்தின்–பின்னணி யூகம்

தமிழுக்கு ஆக்கமும் வளமும் சேர்க்கும் வகையில் ஓரிரு அடிகள் இருந்தால் போதும். டி.கே.சி. அவற்றை வைத்துக் கொண்டு ஒரு பெரிய சித்திரமே வரைந்து தமிழ் மக்களுக்குக் கொடுப்பதில் வல்லவர்.

முத்தொள்ளாயிரம் ஆசிரியர் பெயர்கூடத் தெரியாது. ஆனால் அவர் எப்படிப் பாடினார்? இந்த முத்தொள்ளாயிரம் தமிழுக்கு எப்படிக் கிடைத்தது? என்பதற்கு ஒரு வரலாற்றுச் சித்திரமே வரைகிறார்.

> இரண்டாயிரம் வருசங்களுக்கு முன் ஒரு கவிஞர் இருந்தார். அவர் கொச்சி என்று இப்போது வழங்குகின்ற வஞ்சியில் சில வருசங்கள் இருந்தார் . . . ஒருநாள் அவருக்குக் கவி யொன்று தோன்றியது. மன்னனும் சகாக்களும் குழுமியிருக்கும் போது பாடலைப் பாடினார். கவியைக் கேட்டார்களோ இல்லையோ, எல்லாரும் அதிசயித்துப் போனார்கள். . . கவிஞரை இப்படியும் அப்படியுமாகப் புகழ்ந்தார்கள். . .கவிஞருடைய இதயமானது கரைந்து, கரை இல்லாத ஆனந்த சமுத்திரமாய் விட்டது. ஆனந்த சமுத்திரம் சும்மா இருக்குமா? எப்படி எப்படி எல்லாமோ அலைகள், சுழல்கள், கொந்தளிப்புகள்! பாற்கடலிலிருந்து அமிர்தம் என்றும், சந்திரன் என்றும் லக்ஷ்மிதேவி என்றும் கிளம்பி வந்த மாதிரி, பாடல்கள் வந்தன. ஒவ்வொரு நாளும் ஒரு பாடலாவது வரும் . . .பாடலைக் கேட்ட பிறகுதான் அன்றைக்கு அவர்களுக்கு (அரசனுக்கும் அரசனைச் சார்ந்தவர்களுக்கும்) சூரியன் உதித்ததாகத் தோன்றும். அன்றைய வாழ்க்கைக்கு அவ்வளவு தெளிவையும் இன்பத்தையும் ஊட்டியது, அந்த ஒரு பாடல். இந்த விதமாக வருஷம் ஒன்று இரண்டு மூன்று என்று கழிந்தது. பாடல்களைக் கணக்கிட்டுப் பார்த்ததில் தொள்ளாயிரம் என்று கண்டார்கள். வாய் நிறைந்த எண்ணாய் இருந்தது. 'சேரத் தொள்ளாயிரம்' என்று பெயர் கொடுத்து நூலைப் போற்றி வந்தார்கள். சேர மன்னன் பல பரிசுகளைக் கவிஞருக்கு அளித்தான்... வஞ்சியிலிருந்து உறையூருக்குப் போனார். உறையூரில்தான் அப்போது சோழ மன்னன் வசித்து வந்தான். சோழனைப் பற்றித் தினம் தினம் கவியொன்று பாட, அதுவும் ஒரு தொள்ளாயிரம் ஆயிற்று.
>
> கடைசியாக மதுரைக்குச் சென்றார் . . . . . . அற்புதமான கவிகள் பாண்டியன் மீது பாடினர். அவைகளும் தொள்ளாயிரம் ஆயிற்று. . . .

> ஆகவே சேரன் சோழன் பாண்டியன் இவர்கள் மீது பாடிய தொள்ளாயிரம் தொள்ளாயிரமான மூன்று தொள்ளாயிரங்களும் சேர்ந்து ஒரு நூலாகி, முத்தொள்ளாயிரம் என்ற பெயரோடு வழங்கி வந்தது.

(ப.6) என்பது அந்த வரலாற்றுச் சித்திரம். ஆக, இந்தப் பின்னணியை, வரலாற்றை மனத்தில் வைத்துக் கொண்டு, அதைத் தடமாக்கிக் கொண்டு முத்தொள்ளாயிரத்தை ஆய்வு செய்கிறார் டி.கே.சி. இந்த வரலாற்றுப் பின்னணியையும் முத்தொள்ளாயிர நூல் அமைப்பையும் முதல் பாகமாக 'முகவுரை' என்ற பகுதியில் புலப்படுத்தி 2 என்ற எண்ணிட்ட பாகத்தில் முத்தொள்ளாயிரம் பாடல்களின் பொதுவான அமைப்பை மனத்தில் படிய வைத்துக் கொண்டு, அதன் மூலம் தமிழர்களின் மனநிலை, தமிழ்ப் படைப்பாளிகளின் மனநிலை ஆகியவற்றைப் புரிந்து ஆய்கிறார். அதனால் 'நாடகம்' என்ற தலைப்பில்,

> தமிழர்கள் நாடகத்தில் முங்கி முழுகினவர்களாகத் தெரிகிறது. சாமான்யமாக இப்போது வழங்கி வருகிற கோவைப்பிரபந்தங்களைப் பார்த்தால் எல்லாச் செய்யுள்களும் நாடகத் துறைகளாகவே இருக்கும். . . அவ்வளவு ஆசை, நாடகத்தில் நம்மவருக்கு (ப.10)

என்ற அடிப்படையில் ஆய்வை நிகழ்த்தி, உதாரணங்கள் கொடுத்து விளக்கி, முத்தொள்ளாயிரம் முழுமையும் நாடகக் கூறுகள் நிறைந்தது என்கிறார். அவர்,

> முத்தொள்ளாயிரத்தில் வந்துள்ள வர்ணனைகள், தனித்த முறையில் பார்த்தாலே மிக அழகாய், சுவை ததும்புவனவாய் இருக்கின்றன...... காதல் துறையில் வைத்துப் பார்க்கும்போது, வர்ணனைகளுக்கு எத்தனையோ ஒளிப்படலங்களும் தெளிவும் ஏற்படுகின்றன.

என்று கூறுகிறார்.

### உரையாடல் அமைப்பு-நாடகப் பாங்கு

முத்தொள்ளாயிரத்தில் பாத்திரங்கள் பேசுவது, தனிப்பட்ட நாடக முறையாக இருக்கிறது என்று டி.கே.சி.

கூறுகிறார். அதிலும், தலைவி, பெற்ற தாய், செவிலித்தாயர்கள், தோழிகள் ஆகிய நான்கு பாத்திரங்களின் உரையாடல்கள் நாடகப் பாங்கு உடையனவாக இருக்கின்றன என்று கூறுகிறார்.

முத்தொள்ளாயிரத்தில் வர்ணனைகளையும் பாடுபொருள் தொடர்புடைய இடங்கள் வெளிப்படும் குறிப்புகளையும் கொண்டு அதன் ஆசிரியரின் அனுபவங்களையும், புலப்பாட்டு உணர்வுகளையும் நுணுக்கமாகத் தொகுத்தளிக்கும் முன்னுரையின் மூலம் டி.கே.சி.யின் ஆய்வுத் தடம் அறிவார்ந்ததாகவே உள்ளது. அவர்,

> முத்தொள்ளாயிர ஆசிரியருக்குப் பூமி சாஸ்திரம் ரொம்பத் தெரிந்தது என்று சொல்ல முடியாது. பாண்டி நாட்டைப்பற்றி அவருக்கு ரொம்ப அனுபவம். மதுரையில் வசித்திருக்கிறார். திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள கொற்கை என்ற துறைமுகப் பட்டினத்தையும், அங்குள்ள சந்தன மரத்தின் வளத்தையும் வனபோஜனம் செய்பவர்களின் உல்லாச வாழ்க்கைய்யும் ரொம்ப ரொம்ப அனுபவித்திருக்கிறார். ஈழத்துக்கும் அவர் போயிருக்கிறார் என்று சொல்ல வேண்டும்"

என்று ஆய்ந்து, யூகித்துக் கூறுகிறார்.

## கட்டுரை முடிப்பில் கருத்தைப் பளிச்செனக் காட்டும் ஆய்வுத்தடம்

இருபதாம் நூற்றாண்டில் நமக்கு விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக எத்தனையோ உலக விஷயங்கள் தெரிந்திருக்கின்றன. கம்பருக்கு நாம் தெரிந்து வைத்துள்ள விஞ்ஞான விஷயமாக ஒன்றுமே தெரியாது. தெரிய வாய்ப்பில்லாதிருந்த போதும் சில விஷயங்கள் பற்றி, அதாவது உலகக் காட்சிகள், மக்கள் இயல்பு, நாடகப் பண்பு, உடல் வனப்பு, நீதி நெறி, அவதாரத்தத்துவம் இவைகளைப் பற்றிக் கம்பர் அறிந்துள்ள உண்மைகளும், நுட்பங்களும் பிரமிக்க வைப்பதாக உள்ளன என்று டி.கே.சி. உணர்ந்து வெளிப்படுத்தும் கட்டுரைகளின் தொகுப்பாக உள்ள நூல் 'கம்பர் யார்?' என்பதாகும்.

நாடகப் பண்பு என்ற கட்டுரையில் டி.கே.சி.யின் திறனாய்வுத் தடம் பளிச்செனப் புலப்படுகிறது. கட்டுரையின்

அடிப்படை ஆய்வே, "கம்பராமாயணம் தமிழ் மக்கள் மனசையும் மலையாளிகளின் மனசையும் ஆயிரம் ஆண்டுக்காலமாய் ஒரேயடியாய்க் கவர்வதற்குக் காரணம், அதன் நாடகப்பண்பே" என்பதாகும். முதலில் நாடகப்பண்பு என்பதற்கு ஒருவிளக்கம் தருகிறார். அவர் தரும் விளக்கம்: "நாடகத்தில் அனுபவிப்பது இரண்டு விஷயங்கள். ஒரு இதய பாவம் மற்றொரு இதய பாவத்தைத் தாக்கும் போது எழுகின்ற சொல் ஒன்று. இரண்டாவது, செயல். செயலை மெய்ப்பாடு என்று தமிழாசிரியர்கள் சொல்வார்கள்". இதற்கு,

**பெய்த வத்தின் ஓர்**
**பெண்கொடி எம் உழை**
**பிறந்தநாள். . . .**

என்று தொடங்கும் பாடலை எடுத்துக் கொண்டு விளக்க முற்படுகிறார். அந்த விளக்கத்தில் முதலில் கும்பகர்ணனின் இதய பாவத்தை விளக்குகிறார். ஒரு பாவம் இதயத்தில் தோன்றுகின்ற தென்றால், அதற்குரிய பின்னணியை, மனநிலையை அடிப்படையை விளக்குகிறார். அந்தப் பின்னணியோ, மனநிலையோ, அடிப்படையோ அந்தப் பாடலின் ஒருசொல்லில் கூடத் தென்படவில்லை. ஆனால் தனி மனித அல்லது சமூக உளவியலைப் புரிந்து, பிரித்துப் பிரித்துப் பொருத்திப் பார்த்து, விளக்கம் சொல்லும் நுணுக்கம், இவருடைய ஆய்வுப் போக்கில் முதன்மையான வழியாகும்.

கும்பகர்ணனுடைய இதய பாவம், சொல்லாக வெளிவருகிறது. அந்தச் சொல்லின் அடையாளம் அல்லது அந்தச் சொல் வழங்கும் உணர்ச்சி வெளிப்பாடு அதாவது செயல் அல்லது மெய்ப்பாடு எப்படி வெளியாகிறது என்று விளக்குகிறார்.

**பெய்த வத்தின் ஓர்**
**பெண்கொடி எம்உழை பிறந்தாள்;**
**செய்த குற்றம் ஒன்(று)**
**இல்லவள்;**

என்று வெகு இயல்பாகச் செய்தி சொல்கிறான் என்று கூறிவிட்டுப் பிறகு "கொய்தாயல்லவா? உன்னுடைய வீரத்தை, அடடா, என்ன என்று சொல்லுகிறது!" என்று விளக்கம் கூறி அதற்குரிய பாடல்வரிகளான,

**செய்த குற்றம்ஒன்**
**றில்லவள் நாசிவெம் சினத்தால்**
**கொய்த கொற்றவ!**

என்பவற்றைச் சுட்டிச் செல்கிறார். "இதுவரை இகழ்ச்சி பாவம்" என்று விளக்கி விட்டு, "இனி, கோபம் திடீரென்று வருவதைப் பார்க்கப் போகிறோம்" என்று டி.கே.சி. சொல்லிவிட்டு,

**மற்றவள் கூந்தல் தொட்**
**டீர்த்த**
**கைத லத்திடை**
**வீழ்த்து வன்**

என்று கூந்தலைத் தொட்டிழுத்த செயல் ஞாபகத்துக்கு வரவும், "கோபம் அப்படியே பொங்கி விடுகிறது. பாட்டைப் பார்ப்போம்" என்று முழுப்பாடலையும் கொடுக்கிறார். அடுத்து,

**அல்லினாற் செய்த**
**நிறத்தவன் அனையது**
**பகர;**

என்ற பாடலை, மேற்படிப் பாடல் போலவே பிரித்துப் பிரித்துச் சவுக்கமாகப் பாடிச் சூழ்நிலையை, பின்னணியை விளக்குகிறார்.

ஆகவே நாடகம் சம்பந்தமாகச் சொல் எப்படிப் பிறக்கிறது என்று காட்டியதாகவும், அடுத்து, சொல் இல்லாமல் உள்ளத்தில் உண்டான உணர்ச்சி பாவம் மெய்ப்பாடுகளாக எப்படி வெளியாகிறது என்பதைச் சுட்டுவதாகச் சொல்கிறார்.

இராமன் காட்டிலிருந்து வரும் நாளை எதிர்பார்த்த பரதன், அவன் வராதது கண்டு 'அக்கினிப் பிரவேசம்' செய்யப்போவதும், அதைத் தொடர்ந்து "வந்து விட்டான் ராமன்" என்று அனுமன் சொல்லிவிட்டு அச்கினிக் குண்டத்தைத் தன் கைகளினால் அவித்துவிடுவதாகச் சொல்லிவிட்டு, பரதன் நிலையை "வேதியர் தமைத்தொழும்" என்ற பாடல் மூலம் பிரித்துப் பிரித்துச் சொல்லி, பரதனுக்கு இராமன் வருவதை யறிந்து உள்ளத்தில் உண்டான ஆனந்தம் மெய்ப்பாடுகளாய் வெளிவரப் பார்க்கிறோம் என்று கூறுகிறார். பிறகு, நாடகத்தில் இதுதான் முக்கியமான அம்சம். சொல்லும் மெய்ப்பாடும் இவையானால், கம்பராமாயணத்தைக் கம்ப நாடகம் என்று

சொன்னது ரொம்பவும் பொருத்தமான விஷயம்தானே?" என்று கட்டுரையை முடிக்கிற விதம் சிறப்பாக, ஓர் ஆய்வுத்தடமாக அமைந்து விடுகிறது.

டி.கே.சி.யின் கம்பராமாயணம் பற்றிய ஆய்வு அணுகுமுறை, மிக முக்கியமான ஒன்று. மேலே கண்ட தனிப்பாடல், முத்தொள்ளாயிரம் போன்றவற்றின் ஆய்வில் நாம் புரிந்து கொண்ட டி.கே.சி.யின் அணுகுமுறையைத்தான் கம்பராமாயணத்தில் அவர் பின்பற்றுகிறார் எனத் தெரிந்து கொள்ள வேண்டும். எளிமை, தெளிவு, நாடகப் பாங்கு போன்றவை இல்லையென்றால் அது கம்பர் பாடல் அல்ல; சொருகு கவி என்று தள்ளுகிறார். அதோடு மட்டுமல்லாமல் பாட்டைப் பாட்டாகவே வாசிக்க வேண்டும்; உரைநடையாக வாசித்தால் பெரும் பிழை; எதுகை, மோனை என்பது கவிக்கு அலங்காரம் அல்ல. அவை அங்கங்கள் என்று காட்டுகிறார்.

கம்பர் தரும் ராமாயணம் மூன்று பாகங்களாக டி.கே.சி.யால் அச்சிடப் பெற்றுள்ளது. பதிப்பாசிரியர் டி.கே.சி. ஒவ்வொரு செய்யுளுக்கும் பொழிப்புரை மட்டும் எழுதவில்லை. தாம் படித்தால் என்ன அனுபவமும் பாவ உணர்ச்சியும் பெறுகிறாரோ அதையப்படியே எழுதி விடுகிறார். இதுதான் அவருடைய தனிச்சிறப்பு என்று கூறுகிறார் இராஜாஜி.

டி.கே.சி. தம்முடைய உரையைப் படிப்பவர்களுக்கு ஒரு குறிப்புத் தருகிறார். அது மிக முக்கியமானது. அந்தக் குறிப்பிலிருந்து நாம் அறிந்துகொள்ள வேண்டிய செய்திகள் மூலம் டி.கே.சி.யின் கம்பராமாயண வாசிப்பு நிலைப் பாட்டினைப் புரிந்து கொள்ள முடியும்.

ஒவ்வொரு செய்யுளுக்கும் முன்னுரை கொடுக்கிறார். அந்த முன்னுரையில் பாவங்கள் சுட்டிக் காட்டப் பெறுகின்றன. அடிக்குறிப்புக் கொடுக்கப்படுகிறது. அந்த அடிக்குறிப்பில் பொருள் விளக்கம் தெளிவு படுத்தப்படுகிறது. அடிக்குறிப்பிலேயே செய்யுளின் பாவ இலக்ஷணங்களுக்கு விளக்கம் கொடுக்கப்படுகிறது. பொருள் கோளுக்கு இணங்க அடையாளங்கள் கொடுத்துப் பாடல்கள் அச்சிடப்பட்டுள்ளன. அதனால் பாடலைப் பாடுவதும் அர்த்தம் தெரிந்து கொள்வதும் எளிதாக்கப்பட்டுள்ளன. அவரே, "கதை நிகழுகின்ற களத்தையும்,

பாத்திரங்களையும் மனக்கண் முன் வைத்து, மெள்ளப் பாடினால், பாவமும் உருவமும் எளிதாய் விளங்கிவிடும்" என்று சொல்கிறார்.

இதன் மூலம் கம்பராமாயணத்தைப் பாடத்தான் வேண்டுமே யொழியப் படிக்கக் கூடாது. பாடினால் தான் கம்பன் இதயத்தைப் புரிந்து கொள்ளமுடியும் என்பது டி.கே.சி.யின் கருத்து. ஆகவே டி.கே.சியின் கம்பராமாயண ஆய்வுத்தடம் பாடலாகப் பாடிக் கம்பரின் இதயத்தைப் புரிந்து கொள்ளும் வழி' எனப் புரிந்துகொண்டு அதைத் தனிப் பெரும் ஆய்வாக நிகழ்த்த வேண்டும்.

## முடிவுரை

இந்தக் கட்டுரையின் மூலம் டி.கே.சியின் ஆய்வுத்தடம் பற்றிய நம் புரிதல்களும் முடிவுகளும் வருமாறு:

1. டி.கே.சி. கவிதையைப் பாடிப்பாடி அதுவும் சவுக்கமாகப் பாடிப்பாடி அந்தப் பாடலுக்குள் புகுந்து அந்தப் பாடலாகவே மாறி, அதற்குள் தான் கரைந்து போய் மற்றவர்களுக்குக் காட்டும் இரசனை முறை ஆகும். அதை இங்கு "அனுபவ முறை ஆய்வுத் தடம்" என்ற சொல்லால் குறிக்கலாம்.

2. தான் கூறும் இரசனை சம்பந்தமான வாதத்தைத் தர்க்கரீதியாக நிறுவ முற்படுகிறார். அதுவும் கற்பனையின் விகசிப்போடு நிறுவிச் சுவை கூட்டி வெற்றி பெற்று விடுகிறார்.

3. தம் கருத்தை நிலைநாட்டிடப் புகழ் பெற்ற அறிஞர்களின் கருத்தை எடுத்துக்கூறி ஒப்பிட்டு ஆய்வு செய்யும்போக்கு இவரிடம் உள்ளது.

ஒருவருக்கு மொழிப்பற்றும். கல்விப்பற்றும் கூடஅந்த மொழியை இரசிப்பதைவிட அந்த மொழியில் உள்ள கவியை இரசிப்பதில் கிடைக்கும் 'ரசனைச் சுகத்' தால் மட்டுமே மேலோங்கி நிற்கும் என்பதை உள் உணர்ந்து சொல்லி எதிரில் இருப்பவர்கட்கும் உள் உணர்வை ஏற்படுத்தும் ஆய்வுத்தடம் இவருக்கு உரியது. எல்லோரும் எளிதில் தம் ஆய்வைப் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையான முறையிலும் கதை சொல்கிற வடிவிலும் கட்டுரையை அமைத்துச் செல்கிறார். சொல்

ஆராய்ச்சியில் ஈடுபாடு காட்டும் டி.கே.சி. மொழியியல் தொடர்பாக மட்டும் ஆய்வுத்தடத்தை அமைத்துக் கொள்வதில்லை. அந்தச் சொற்கள் எந்த உணர்ச்சியைத் தருமோ அதை வெளிப்படுத்தி அச் சொற்களின் பயன்பாட்டுவழித் தமிழ் மக்களின் பண்பாட்டு நிலையையும் விளக்கும் போக்கு இவருடைய ஆய்வுத் தடம். கவிதையில் சொல் தரும் அர்த்தத்தைவிட அச்சொல் தரும் ஓசை, அந்த ஓசை உண்டாக்கும் இதய பாவம் ஆகியவற்றின் மேல்தான் டி.கே.சி.க்கு அக்கறையும் ஈடுபாடும் இருந்தன.

# டி.கே.சி. ஆய்வடங்கல்

## I. டி.கே.சி. எழுதிய நூல்கள்

1. *அற்புத ரஸம்,* முதற்பதிப்பு, ஜனவரி 1944, வெளியீடு: புதுமலர் நிலையம், கோயமுத்தூர், விலை அணா 6.

2. **இதய ஒலி,** முதற்பதிப்பு 1941, இரண்டாம் பதிப்பு 1947, மூன்றாம் பதிப்பு 1958, நான்காம் பதிப்பு 1981, பொதிகைமலைப் பதிப்பு, திருக்குற்றாலம், தென்காசி, விலை ரூ. 9.

3. **கம்பர் யார்?,** முதற்பதிப்பு 1941, புதுமைப் பதிப்பகம், இரண்டாம் பதிப்பு ஏப்ரல் 1981, பொதிகைமலைப் பதிப்பு, 'பஞ்சவடி', தென்காசி, விலை ரூ. 5.

## II. டி.கே.சி. பதிப்பித்த நூல்கள்

1. *கம்பர் தரும் ராமாயணம்,* முதற்பதிப்பு, பால-அயோத்யா காண்டாம், 1942; ஆரண்ய காண்டம் 1943; இரண்டாம் பதிப்பு - பகுதி I பால-அயோத்யா காண்டங்கள் 1953; பகுதி II, ஆரண்ய - கிஷ்கிந்தா காண்டங்கள், 1954; பகுதி III சுந்தர காண்டம், 1955, பொதிகை மலைப்பதிப்பு, திருக்குற்றாலம், தென்காசி, விலை (ஒவ்வொரு பாகமும்) ரூ.6.

2. *முத்தொள்ளாயிரம்,* முதற்பதிப்பு, 1943 ; இரண்டாம் பதிப்பு, 1946 ; மூன்றாம் பதிப்பு, 1957, பொதிகைமலைப் பதிப்பு, திருக்குற்றாலம், விலை ரூ.3.

## III. டி.கே.சி. கல்கி இதழில் 15-6-1952 முதல் 20-12-1953 வரை எழுதிய 41 தொடர் கட்டுரைகள் தமிழ்க் களஞ்சியம் எனும் தலைப்பில் அமைந்துள்ளன. அக்கட்டுரைகள்

1. "அடடா வந்திருப்பார்! முன்னேயே!" உலக இதய ஒலி, சென்னை, டிசம்பர், 1983 (மறுபதிப்பு).

2. அந்தகன் நாயகன், உலக இதய ஒலி, மறுபதிப்பு, சென்னை, 1980.

3. அப்படியெல்லாம் கொதிக்கும் பாலை, உலக இதய ஒலி, சென்னை.

4. அமுதத்தைப் படைத்தாள், உலக இதய ஒலி, சென்னை, 1979, மறுபதிப்பு.

5. அறிவு ஒன்று போதும், உலக இதய ஒலி, சென்னை.

6. ஆதி சேஷ வட்டம் (மறுபதிப்பு), உலக இதய ஒலி, சென்னை, 1981.

7. ஆம்; போய்கொண்டேயிருக்கும்! (மறுபதிப்பு), உலக இதய ஒலி, சென்னை, 1980.

8. இடம் பார்க்கிறது ஹாஸ்யம் (மறுபதிப்பு), உலக இதய ஒலி, சென்னை, 1981.

9. இருக்கவே செய்கிறார்கள் கவிஞர்கள் (மறுபதிப்பு), உலக இதய ஒலி, சென்னை, 1979.

10. இருக்கிறதாக்கும் சிங்கம் (மறுபதிப்பு), உலக இதய ஒலி, சென்னை, 1981.

11. உலகம் சிரிக்கட்டும்(மறுபதிப்பு), உலக இதய ஒலி, சென்னை, 1982.

12. ஐயோ நடந்தா போனாள் (மறுபதிப்பு), உலக இதய ஒலி, சென்னை, 1980.

13. கதையாய் முடிந்ததே, உலக இதய ஒலி (மறுபதிப்பு), சென்னை, 1980.

14. கவிக் கலையின் பண்பாடு, உலக இதய ஒலி, சென்னை, 1979.

15. கவி மண்டபம் ஒன்று, உலக இதய ஒலி, சென்னை.

16. காஞ்சியின் வளமும் உண்டு (மறுபதிப்பு), உலக இதய ஒலி, சென்னை, 1980.

17. கையை எடுக்க முடியாது, உலக இதய ஒலி, சென்னை.

18. சபையில் உயிராபத்து இல்லையே (மறுபதிப்பு), உலக இதய ஒலி, சென்னை, 1982.

19. சேடிதான் உண்டோ அங்கே? (மறுபதிப்பு), உலக இதய ஒலி, சென்னை, 1983.

20. சொல்ல மாட்டீர்களா? (மறுபதிப்பு), உலக இதய ஒலி, சென்னை, 1982.

21. தமிழ்ப் பாடலின் அற்புதம், உலக இதய ஒலி, சென்னை.

22. தெருவில் மரங்கள் சில (மறுபதிப்பு), உலக இதய ஒலி, சென்னை, 1983.

23. தொண்டை அரசு (மறு பதிப்பு), உலக இதய ஒலி, சென்னை, 1981.

24. தொழில் இல்லையா (மறு பதிப்பு), உலக இதய ஒலி, சென்னை, 1981.

25. நல்லதே செய்தால் வேண்டியவர்களுக்குப் பஞ்சமா? (மறுபதிப்பு), உலக இதய ஒலி, சென்னை, 1980.

26. நகைப்பு வேறு கேடா! (மறுபதிப்பு), உலக இதய ஒலி, சென்னை, 1981.

27. நாட்டில் சங்கீத மயம் (மறுபதிப்பு), உலக இதய ஒலி, சென்னை, 1981.

28. நாடகப் பாத்திரம் நாலு (மறுபதிப்பு), உலக இதய ஒலி, சென்னை, 1981.

29. நானாக்கும் பெற்றேன், உலக இதய ஒலி, சென்னை.

30. பயமாவது ஒன்றாவது (மறுபதிப்பு), உலக இதய ஒலி, சென்னை, 1979.

31. பராசக்தியின் சந்நிதி (மறுபதிப்பு), உலக இதய ஒலி, சென்னை, 1980.

32. பாடுங்கள்! பாடுங்கள்!, உலக இதய ஒலி, சென்னை.

33. பாண்டி நாட்டில் தமிழ்க் கவி, உலக இதய ஒலி, சென்னை.

34. பாதையில் ஒரே குழப்பம், உலக இதய ஒலி, சென்னை, 1980.

35. பிள்ளைத் தமிழ் (மறுபதிப்பு), உலக இதய ஒலி, சென்னை, 1980.

36. பேசுகிறவர்களில் பல ரகம் (மறுபதிப்பு), உலக இதய ஒலி, சென்னை, 1982.

37. பொய் சொல்வோமா நாங்கள்? (மறுபதிப்பு), உலக இதய ஒலி, சென்னை, 1980.

38. மகாராஜப் பிரபு, உலக இதய ஒலி, சென்னை.

39. வளையலைக் காணோமே! (மறுபதிப்பு), உலக இதய ஒலி, சென்னை, 1981.

40. விசித்திரமான படிப்பு (மறுபதிப்பு), உலக இதய ஒலி, சென்னை, 1983.

41. ராஜ பதவி அல்லவா கிடைத்தது (மறுபதிப்பு), உலக இதய ஒலி, சென்னை, 1981.

## டி.கே.சி. எழுதியுள்ள பிற கட்டுரைகள்

அது பெருமையா உனக்கு.

அடைக்கலப் பொருள், குமரி மலர், மலர் 31, இதழ் 2, 1974.

அவனுக்கு மட்டுமே இடம், சகுந்தலா நினைவு மலர், மகுடஞ்சாவடி, 1944.

ஆளும் தலைவன், 'கல்கி', 1950.

இடமில்லை தொல்லைக்கு, உலக இதய ஒலி, சென்னை, 1978.

இன்பமா? துன்பமா? பாரத முழக்கம், பழனி, 1962.

உத்தியோகத் தொல்லை இல்லாத் திண்டாட்டம், உலக இதய ஒலி, சென்னை, 1981.

எங்கள் தாய், இலக்கிய வட்டம் மலர், 1964.

என் சரித்திரம்.

என்னைக் கவர்ந்த புஸ்தகங்கள், ரசிகமணிமலர், உலக இதய ஒலி, சென்னை.

ஏறுங்கள் வானத்தில்.

ஒரு சிறு நாடகம்.

கம்பன், தமிழ் வட்டம் (மலர்), 1967.

கம்பன் உலக மகாகவி, பிரசண்ட விகடன், 1948.

கம்பரும் தமிழரும், கம்பன் மணிமலர், காரைக்குடி கம்பன் கழகம், 1975.

கவி அனுபவம், உலக இதய ஒலி, சென்னை, 1977.

கவி செய்கிற காரியம், 'சக்தி' (மாத வெளியீடு), மலர் 18, இதழ் 1, 1953.

கவி பற்றி ஒரு கேள்வி, உலக இதய ஒலி, சென்னை, 1980.

கவிமணி மேல் பொன்னாடை

கவியும் முத்திரையும், குமரி மலர், 1943

கலைமகளே துணை, குமரன் தமிழிசை மலர் 1942.,

கலைமகள் கடாஷம், உலக இதய ஒலி, சென்னை, 1974.

கலையும் எளிமையும், உலக இதய ஒலி, சென்னை, 1985.

கலையா? அரசியலா?, உலக இதய ஒலி, சென்னை, 1985.

கார் காலம், 'சக்தி', மலர் 6, இதழ் 1, 1942.

கேலிச் சரக்கு.

கொடிப் படலம், எத்தனை பெரியது! உலக இதய ஒலி, சென்னை, 1983.

கோழி கூவி எழாது, உலக இதய ஒலி, மறுபதிப்பு, சென்னை, 1973.

சங்கராந்தி, சக்தி, மலர் 6, இதழ் 2, 1942.

சத்ஸங்கம், கதிரேசச் செட்டியார் அவர்களுடைய அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவில் வெளியிடப்பெற்ற மணிமலர், 1941.

சம்பிரதாயம், கலைமகள், மறுபதிப்பு.

சுற்றம் தழால், தமிழ் வட்டம் மலர், இரண்டாவது ஆண்டு மலர்.

சொல்ல முடியாதல்லவா போய்விட்டது, உலக இதய ஒலி, சென்னை, 1977.

டானியாலு விஜயம், உலக இதய ஒலி, சென்னை, 1975.

தமிழின் கதியழகு, உலக இதய ஒலி, சென்னை, 1979.

தமிழுக்கு வாய்த்த அரும் புதவ்வன், வெ.ப.சு. முதலியார் எண்பதாம் ஆண்டு நிறைவு விழா நினைவு மலர், 1937.

தமிழணங்கு, குமரி மலர், மலர் 41, இதழ் 5, 1984.

தாடகை வதம், உலக இதய ஒலி, சென்னை, 1988.

தென்னாட்டு நாடக மேடை, உலக இதய ஒலி, சென்னை, 1978.
(வானொலி ஒலிபரப்பு 13-10-1949.)

தேடவே முடியவில்லை.

தேரில் வருகிறது ராம ராஜ்யம், கல்கி, 1951.

நமது இசை, உலக இதய ஒலி, 1985.

நல்ல காலம் பிறக்கப் போகிறது.

நாணிப் போய் நடந்தாள்.

நாமக்கல் கவிஞர் பாடல்கள், முதற் பதிப்பு 1960, 1968 (இரண்டாம் பதிப்பு), லிப்போ புத்தக நிலையம் வெளியீடு, சென்னை.

நாமும் வள்ளுவரும், கலைமகள் (பத்திரிக்கை), சென்னை, 1991.

நான்காவது கம்பர் மாநாட்டில் தலைமை உரை, கல்கி, சென்னை, 1948.

நேரான தமிழ், 'எழுத்து' (இதழ்), 1960.

பழமையும் புதுமையும், கல்கி, சென்னை.

பாஷையின் கும்மாளி, குமரி மலர், 1944.

பெருந்தேவனார் அவரது கவியும் லக்ஷியமும், உலக இதய ஒலி, சென்னை, 1979.

பேதைமை, திருவள்ளுவர் கழகம், தென்காசி, 1970.

மாலைப் பொழுதினிலே.

வார்த்தையும் அதன் சுவையும், உலக இதய ஒலி, சென்னை, 1976.

வாழ்க்கையும் கலையும், குமரி மலர், 1943.

The Song World in Tamil: A Glimpse, The Triveni Quarterly, Vol.XIII, No.2, Chennai, 1940.

The Song World in Tamil: A Glimpse (Reprinted from Tamil Culture, The Triveni Quarterly, Vol.II, No.2, Chennai 1953.

The Tamil Literal Scene, The Ilustrated Weekly of India, August, 1953.

## V. டி.கே.சி. எழுதியுள்ள கடிதங்கள்

நீலாவதி இராமசுப்பிமணியம் வாழ்க்கை வரலாறு (1913-1982), முதற் பதிப்பு, கும்பகோணம், 1983.

**பேசும் கடிதங்கள்** (முதற் பதிப்பு), வட்டத்தொட்டி வெளியீடு, (தொகுப்பாசிரியர்) ராஜேஸ்வரி நடராஜன், சென்னை, 1988.

**ரசனையின் ஒலி** (முதற் பதிப்பு), பீக்காக் வெளியீடு, (தொகுப்பாசிரியர்) ஜி.சி. பட்டாபிராம், சென்னை, 1984.

**ரசிகமணி கடிதங்கள்** (முதற் பதிப்பு), வட்டத்தொட்டி, (தொகுப்பாசிரியர்), எஸ். மகாராஜன், சென்னை, 1979.

**ரசிகமணி டி.கே.சி.யின் கடிதங்கள்** (முதற் பதிப்பு), (தொகுப்பாசிரியர்) தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், பொதிகைமலைப் பதிப்பு, பஞ்சவடி, தென்காசி, 1961.

## VI. டி.கே.சி. எழுதிய முகவுரை / பாராட்டுரை / தலைமை உரை

ஏட்டிக்குப் போட்டி, முதற்பதிப்பு 1930, (இரண்டாம் பதிப்பு), சின் ன அண்ணாமலை, தமிழ்ப் பண்ணை.

கணையாழியின் கனவு, முதற்பதிப்பு, 1937, (இரண்டாம் பதிப்பு), ஆனந்தவிகடன் காரியாலயம், சென்னை, 1938.

தமிழ் இசைப் பாட்டுக்கள், புதுமைப் பதிப்பகம், காரைக்குடி, 1943.

தமிழிசை மாநாடு நிகழ்ச்சி மலர், சென்னைத் தமிழ்ச் சங்கம், சென்னை, 1944.

திருக்குற்றாலக் குறவஞ்சி (மூன்றாம் பதிப்பு), திருக்குற்றால தேவஸ்தான வெளியீடு, திருக்குற்றாலம், 1937-1938.

திருவாசகம், தருமபுர மட வெளியீடு, 1949.

பாபநாசம் சிவன் பாடல்கள்.

மகுடபதி, கல்கி.

முக்கூடற் பள்ளு, முதற்பதிப்பு, 1940, (இரண்டாம் பதிப்பு), பதிப்பாசிரியர்: மு. அருணாசலம், தமிழ் நூலகம், சென்னை, 1949.

## VII. டி.கே.சி. பற்றிப் பிறர் எழுதியுள்ள (முழு அளவிலான) நூல்கள்

தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், **கம்பனும் டி.கே.சி.யும்**, கம்பன் கழகம், காரைக்குடி.

ல. சண்முக சுந்தரம், **டி.கே.சி. வரலாறு**, ஸ்டார் பிரசுரம், சென்னை, 1955.

ல. சண்முக சுந்தரம், **டி.கே.சி. யார்?**

எஸ்.வேங்கட சுப்பிரமணியம், **நான் கண்ட டி.கே.சி.** அமுத நிலையம் லிமிடெட், சென்னை, 1981.

கி. ராஜநாராயணன், **மாந்தருள் ஒரு அன்னப் பறவை**, அகரம், முதற் பதிப்பு, 1981.

திருமதி ராஜேஸ்வரி நடராஜன் (தொகுப்பாசிரியர்), **ரஸிகமணி மொழிகள்.**

தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், **ரஸிகமணி டி.கே.சி.** (முதற் பதிப்பு), ஸ்டார் பிரசுரம், திருச்சினாப்பள்ளி, 1945.

ல. சண்முக சுந்தரம், **ரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார்** (முதல் பதிப்பு), சாகித்திய அக்காதெமி, தில்லி, 1987.

ல. சண்முக சுந்தரம் (சிறப்பாசிரியர்), **ரசிகமணி டி.கே.சி.** நூற்றாண்டு விழா மலர் (முதற்பதிப்பு), உலக இதய ஒலி வெளியீடு, சென்னை, 1981.

எஸ். மகராஜன், **ரஸஞ்ஞானி டி.கே.சி.** (முதற் பதிப்பு), வானதி பதிப்பகம், சென்னை, 1990.

## VIII. டி.கே.சி. குறித்துப் பிறர் எழுதியிருக்கும் கட்டுரைகள்

ஆர்.எம்.அழகப்பச் செட்டியார், அவருக்கு இணை அவர் தான், கல்கி-மலர் 13-இதழ் 32, 1954.

கி. பாலசுப்பிரமணிய அய்யர், அவரைப்போல் காண்பதரிது, கல்கி-மலர் 13-இதழ் 32, 1954.

மு. அருணாசலம், அவலும்-தவிடும் (பாரத முழக்கம் (மலர்), பழனி, 1963.

பி.ஸ்ரீ. அருமை நண்பர் டி.கே.சி. ஒரு நினைவுச் சித்திரம்.

ல. சண்முக சுந்தரம், அருளாளர் டி.கே.சி. 'ரஸிகமணி மலர்', உலக இதய ஒலி, சென்னை.

எஸ்.வேங்கட சுப்பிரமணியம், ஆனந்தத்தின் மறு அவதாரம், தீபம், சென்னை, 1977.

விஷ்ணு சித்தன், 'இதய ஒலி', கொல்லிப் பாவை (மும்மாத இதழ்), கன்னியாகுமரி, 1988.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், தமிழ்நாடு அரசு, ஏழாம் வகுப்புத் தமிழ்ப் பாடநூல், இரசிகமணி, முதற்பதிப்பு 1989, (இரண்டாம் பதிப்பு), 1990.

இரசிகமணி டி.கே.சி. பிரிவு, செந்தமிழ்ச் செல்வி (இதழ்), சிலம்பு 28, 1954.

ச. ஈஸ்வரன், இரசிகமணி டி.கே.சி.யின் திறனாய்வுப் போக்கு, இருபத்தொன்றாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, தொகுதி-1, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், 1989.

வல்லிக் கண்ணன், இரண்டு வழிகாட்டிகள், 'எழுத்து' (இதழ்), 1961.

எஸ். வேங்கட சுப்ரமண்யம், இராமபிரானின் தோளும் தாளும், அமுத சுரபி (தீபாவளி மலர், அக்.1990), சென்னை.

கி. சந்திரசேகரன், இலக்கியம் வளர்ந்தது, இலக்கிய வட்டம் மலர், 1964.

மு. அருணாசலம், இன்றுதான் தமிழ் தெரிந்தது, 1944.

சி.சு. செல்லப்பா, இன்றைய தமிழ் இலக்கிய விமர்சன தோரணை, 'எழுத்து', 1959.

முளங்குழி பா. லாசர், இனி ஒரு மகன் இல்லையே, குமுதம் (இதழ்), மார்ச் 22, 1990.

நீலாவதி ராமசுப்ரமணியம், எங்கள் தந்தை, 'கல்கி' மலர் 13, இதழ் 32, 1954.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, எந்த நாள் காண்போம்?, 'கல்கி' மலர் 13, இதழ் 32, 1954.

சுந்தா, என்னுடன் இருப்பவர், 'கல்கி' மலர் 13-இதழ் 32, 1954.

சுந்தா, என் குருநாதர் டி.கே.சி. உலக இதய ஒலி, சென்னை. 1980.

கண்ணதாசன், என் குழந்தைப் பருவம், 'கோகுலம்' மாத இதழ், சென்னை, 1988.

சுந்தர ராமசாமி, ஒரு கலை நோக்கு, இலக்கிய வட்டம் மலர், 1964.

ரதி, ஒலியும் ஒளியும், சக்தி (இதழ்), மலர் 2 - இதழ் 6, 1942.

சுந்தர ராமசாமி, க.நா.சு. நட்பும் மதிப்பும், காலச் சுவடு (காலாண்டு இதழ்), நாகர் கோவில், 1989.

பிரகாஷ், க.நா.சு.வின் இலக்கியப் பார்வை, முன்றில் (தமிழ் இதழ்), 6, 1989.

ச. ஈஸ்வரன், கடித இலக்கியமும், இரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியாரின் கடிதங்களும், மூன்றாம் கருத்தரங்கு, தமிழ் இலக்கிய ஆய்வுக் கோவை, தொகுதி 3, அனைத்திந்தியத் தமிழ் இலக்கியக் கழகம், தஞ்சாவூர், 1989.

வி.ஆர்.எம். செட்டியார், கம்பனும் டி.கே.சியும், சக்தி (இதழ்), மலர் 6 - இதழ் 3,4,5, 1942.

துமிலன், கம்பமணி டி.கே.சி. தினமணிக் கதிர், சென்னை, 1954.

ராமசாமி ரெட்டியார் (பிரதம மந்தரி), பிரசண்ட விகடன், 1948.

நடராஜன், கவிதையும் ஆனந்தமும், கல்கி, வெள்ளி விழா மலர்.

பெ. தூரன், கவிதையின் குரல், கல்கி மலர் 13-இதழ்-32, 1954.

கு. அழகிரிசாமி, கவிதையைக் கண்டறிந்தவர், இலக்கிய வட்டம் மலர், 1964.

அ.ச. ஞானசம்பந்தன், கவிதையால் வீடு பெற்றவர், கல்கி, 1979.

வே. நாராயணன், கவியும் உருவமும், சக்தி (இதழ்), மலர்-4 இதழ்-4, 1941.

ல. சண்முக சுந்தரம், கவி என்பது தனிதான், உலக இதய ஒலி, சென்னை, 1982.

பி.எஸ். மணி, கோடியில் ஒருவர், கல்கி மலர்-13, இதழ்-32, 1954.

பகீரதன், சக்தியின் உருவம், கல்கி மலர்-13, இதழ் 32, 1954.

மி.ப. சோமசுந்தரம் ('சோமு'), சிதம்பரநாத மாலை, 'ரசிகமணி மலர்', உலக இதய ஒலி, சென்னை.

டி.டி. திருமலை, சீலம் நிறைந்த சிதம்பரநாத வள்ளல், உலக இதய ஒலி, சென்னை, 1981.

சுந்தரராஜன், சேர்க்கையும் சூழ்நிலையும், எழுத்து, 1959.

ராஜகோபாலாச்சாரியார், தங்கச் சுரங்கம், கல்கி, மலர்-13, இதழ்-32, 1954.

ராஜா ஸர் முத்தையா செட்டியார், தமிழ்ப் பொக்கிஷம், கல்கி, மலர்-13, இதழ்-32, 1954.

தாயகசாகரன், தமிழ்ப் பொதிகை, உலக இதய ஒலி, சென்னை, 1977.

சி.சு. செல்லப்பா, தமிழ் வளர்த்த கல்கி, எழுத்து, 1959.

க.நா. சுப்ரமண்யம், தமிழ் வசன வளம், இலக்கிய வட்டம் மலர், 1964.

ரா. பார்த்தசாரதி, தமிழ்க் குரல் கேட்குது, கல்கி மலர்-13, இதழ்-32, 1954.

தமிழ்க் குடிமகனின் ஆதங்கம், கல்கி (இதழ்) மலர் 48-இதழ் 8, சென்னை, 1989.

வி.எஸ். வேங்கடாச்சாரி, தமிழ்த் தாத்தாவும் ரசிகமணியும், உலக இதய ஒலி, சென்னை, 1981.

தமிழில் இலக்கியத் திறனாய்வு, தமிழ்மணி, தினமணிச் சுடர், 1989.

சி.சு. செல்லப்பா, தற்காலத் தமிழ் இலக்கியம் (தனி மனிதர்களின் சாதனைகள்), எழுத்து, 1966.

அ. சிவக்கண்ணன், திறனாய்வுக் கலை : நோக்கும் போக்கும், தமிழ்மணி, தினமணிச் சுடர், 1990.

வெ. ர. நாகராஜன், திண்ணெனக் குதிக்கும் அருவி, கல்கி, சென்னை, 1990.

எஸ். மகராஜன், தேசியக் கவி பாரதி, உலக இதய ஒலி, சென்னை, 1977.

ஸ்ரீ சுந்தானந்த பாரதி, நாத முதலியார், கல்கி மலர் -13, இதழ் - 32, 1954.

கி. ரெங்கராஜன், நான் அறிந்த ரஸிகமணி, கல்கி, மலர்-13, இதழ்-32, 1954.

க.நா. சுப்ரமண்யம், நான் என்ன படிக்கிறேன், ஏன்?, இலக்கிய வட்டம் கருத்தரங்கக் கட்டுரை, எழுத்து, 1962.

சி. கனகசபாபதி, நான் என்ன படிக்கிறேன் ஏன்? இலக்கிய வட்டம், கருத்தரங்கக் கட்டுரை-1, எழுத்து, 1962.

வல்லிக்கண்ணன், நான் என்ன படிக்கிறேன் ஏன்? இலக்கிய வட்டம், கருத்தரங்கக் கட்டுரை-2, எழுத்து, 1962.

தீப. நடராஜன், நினைவுப் படலம், கல்கி, தீபாவளி மலர், 1957.

வி.எஸ். வேங்கடாச்சாரி, தமிழ்க் தாத்தாவும் ரசிகமணியும், உலக இதய ஒலி, சென்னை, 1981.

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், டி.கே.ஸி. கல்கி, மலர்-13, இதழ்-32, 1954.

ஏ.கே.கோபால பிள்ளை, டி.கே.சி. இலக்கிய வட்டம் மலர், 1964.

மீ.ப. சோமு, டி.கே. சிதம்பரநாத முதலியார் (1882-1954), கலைக்களஞ்சியக் கட்டுரை, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, 1956.

ஆனந்தி, டி.கே.சி. மாமா, கல்கி, மலர்-13, இதழ்-32, 1954.

எஸ். மகராஜன், டி.கே.சி. என்னும் ஆனந்த தத்துவம், கல்கி, மலர்-13, இதழ்-32, 1954.

க.நா. சுப்ரமண்யம், டி.கே.சி.யின் இலக்கியப்பணி, இலக்கிய வட்டம் மலர், 1964.

க.நா. சுப்ரமண்யம், டி.கே.சி. என்ற ஒரு பண்பாடு, குங்குமம் (வார இதழ்), சென்னை, 1985.

ல. சண்முக சுந்தரம், டி.கே.சி. சில நினைவுகள், 'சாந்தி' (கலை, இலக்கிய மாத இதழ்), இதழ்-4, மலர்-1, 1955.

கி. சந்திரசேகரன், டி.கே.சி. சில நினைவுகள், 'தீபம்' இதழ், 1969.

சோமு, டி.கே.சி. சில நினைவுகள், கல்கி, மலர் 13, இதழ் 32, 1954.

ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி, டி.கே.சி.யின் சொல் ஓவியம், கல்கி, மலர் 13, இதழ் 32, 1954.

கி.ரா. திருமலையப்பன், டி.கே.சி.யும் தமிழும், இலக்கிய வட்டம் மலர், 1964.

மீ.ப. சோமு, டி.கே.சி.யின் தனிப் பண்பு, இளந்தமிழன் (இதழ்), மலர் 1, இதழ் 2-3, 1987.

மௌனி, டி.கே.சி.யின் திருத்தங்கள், பாரத முழக்கம் (மலர்), பழனி, 1983.

சி. கனகசபாபதி, டி.கே.சி.யின் விமரிசனப் பார்வை, 'தீபம்' இதழ், 1967.

அ. சுவாமிநாதன், பம்பாயில் கம்பர் (கவிதை).

சுபஸ்ரீ, பம்பாயில் ரஸிகமணி, கல்கி, மலர் 13, இதழ் 32, 1954.

பண்பாட்டுக்குப் பல்லாண்டு, கல்கி (இதழ்), சென்னை, 1981.

மு. அருணாசலம், பாட்டும் திருத்தமும், சக்தி, மலர் 11, இதழ் 4, 1945.

நீலாவதி அம்மாள், பாட்டு வளர்த்த பண்ணை, குமரி மலர் (மாத இதழ்), 1944.

க.நா. சுப்பிரமண்யம், பாரதிக்குப்பின்-1, எழுத்து, 1959.

எஸ். வேங்கட சுப்பிரமணியன், பாரதியும் டி.கே.சி.யும், அமுத சுரபி (இதழ்), 1977.

சங்கரி புத்திரன், புகை மண்டலத்தில் கம்பனா?, தினமணிக் கதிர், 1988.

ராஜாஜி, பூரண ஹரியும் பூரண ரசிகமணியும், கல்கி, சென்னை, 1967.

சுந்தா, பொன்னியும் பொருநையும், ரசிகமணி மலர், உலக இதய ஒலி, சென்னை.

எஸ்.வேங்கட சுப்பிரமணியன், மறக்க முடியுமா? கல்கி, மலர் 13, இதழ் 32, 1954.

தீப, நடராஜன், மறக்க முடியாத நினைவுகள், அமுதசுரபி, தீபாவளி மலர், 1980.

மீ.ப. சோமு, மறைந்த பணி, கலைமகள்.

எஸ். குழந்தைசாமி, மனநோய்க்கு மருந்து, உலக இதய ஒலி, சென்னை, 1988.

எம்.எல்.எஸ். மகா ரசிகரும் மலேரியாவும், கல்கி, மலர் 13, இதழ் 32, 1954.

மீ.ப. சோமு, முத்தமிழ் வளர்த்த முனிவர், கல்கி, மலர் 13, இதழ் 32, 1954.

தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், முப்பது வருஷத்தில் மூன்று அனுபவம், கல்கி, மலர் 13, இதழ் 32, 1954.

திருப்புகழ் மணி டி.எம். கிருஷ்ணசாமி ஐயர், யார் மறக்க முடியும், கல்கி, மலர் 13, இதழ் 32, 1954.

தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், யாரோ? இவர் யாரோ? சக்தி, மலர் 18, இதழ் 3, 1947.

தீப. நடராஜன், வட்டத்தொட்டி, பொருநை இலக்கிய வட்டம், திருநெல்வேலி, 1985.

சி.சு. செல்லப்பா, வ.வே.சு. அய்யரின் விமர்சன நோக்கு, எழுத்து (தலையங்கம்), 1962.

துறைவன்(கந்தசாமி), வழித்துணைக்கு ஓர் ஒளிச்சுடர், கல்கி, சென்னை, 1978.

கு. அழகிரிசாமி, (தொகுப்பு), வழி வழி வந்த வசன நடை, தமிழ் வட்டம் (ஆண்டு மலர்), 1969.

*மகரபூஷணம், வாடா மலர், இலக்கிய வட்டம் மலர், 1964.*

*வாழ்த்துப் பத்திரம், கல்கி (இதழ்), 1953.*

*க.நா. சுப்ரமணியம், விமரிசனக் கலை, தமிழ் வட்டம், 1949.*

*முருகையன், விமர்சன நோக்கு, எழுத்து, 1960.*

*ச.பா. பிச்சைக்குட்டி, வில்லிசை, தமிழ் வட்டம் (ஆண்டு மலர்), 1969.*

*க.நா. சுப்ரமண்யம், எஸ். வையாபுரிப்பிள்ளை இலக்கிய ஆராய்ச்சியும் விமர்சனமும்-சில குறிப்புகள், எழுத்து, 1957.*

*இளங்கம்பன், ரசிகமணி, ஸாதனா (மலர்), கள்ளக்குறிச்சி, 1981.*

*ல. சண்முக சுந்தரம், ரஸிகமணி டி.கே.சி. ஸாதனா மலர், கள்ளக்குறிச்சி, 1981.*

*எஸ்.வி.வேங்கட சுப்பிரமணியன், ரசிகமணி, 'ரசிகமணி மலர்', உலக இதய ஒலி, சென்னை.*

*மாயோன், 'ரசிகமணி டி.கே.சி.' இலக்கிய வட்டம், 1964.*

*எஸ். மகராஜன், 'ரசிகமணி டி.கே.சி.', 'ஓம் சக்தி' மாத இதழ், மலர் 7, இதழ் 1, 1979.*

*துறைவன் (கந்தசாமி), ரசிகமணி டி.கே.சி., உலக இதய ஒலி, சென்னை, 1985.*

*புத்தனேரி ரா. சுப்பிரமணியன், ரசிகமணி டி.கே.சி. வாழ்க, கல்கி, மலர் 13, இதழ் 32, 1954.*

*தி.ஜ.ர., (விசேஷப் பேட்டி), ரஸிகர் டி.கே.சி., சக்தி (இதழ்), மலர் 6, இதழ் 6, 1942.*

*சி.சு. செல்லப்பா, ரஸிகமணியும் ஆராய்ச்சி மணியும், எழுத்து, 1960.*

*வையவன், ரசிகமணியும் கம்பரும், கல்கி, சென்னை, 1982.*

*எம். ஆதிலட்சுமி,'ரசிகமணியின் கடித இலக்கியம்', கல்கி, சென்னை, 1982.*

*ரா. கணேஷ், ரசிகமணியின் சமய நோக்கு, கல்கி, சென்னை, 1982.*

வல்லிக்கண்ணன், ரசிகமணியின் தமிழ்ப்பணி.

பி.ஸ்ரீ.வி. ரசிகமணி டி.கே.சி. (தமிழுக்குச் செய்தது என்ன?), தினமலர், 1975.

ரசிகமணி ரசித்த தமிழ்க் கவிமாலை, (கோட்டையூர் திருவளர் செல்வி விசாலாட்சி திருமணத்தின் அன்பளிப்பு), 1983.

ரசிகமணி டி.கே.சி. நூற்றாண்டு விழா, தீப. குற்றாலலிங்கம், திருக்குற்றாலம், 1981.

சங்கமித்திரன், ரசிகமணியின் பாணி, ரசிகமணி மலர், உலக இதய ஒலி, சென்னை.

மீ.ப. சோமு, ரசிகமணி ரசித்த மணிகள், கல்கி (இதழ்), ஏப்ரல் 1981 முதல் ஜனவரி 1982 வரை, சென்னை, 1981.

கே.எஸ். சோணாசலம், ரசிகமணியும் மேலைநாட்டு ஞானிகளும், உலக இதய ஒலி (தமிழ் மாத இதழ்), சென்னை.

டி.டி. திருமலை, ரசிகமணி டி.கே.சி. வட்டத்தொட்டி, உலக இதய ஒலி (மாத இதழ்), சென்னை, 1988.

சுந்தா, ரசிகமணி ஒரு வசியமணி, கல்கி, 1981 ஏப்ரல் முதல் ஜனவரி 1982 வரை, சென்னை, 1981.

சுந்தா, ரசிப்பதற்கு ஒரு ரசிகமணி, கல்கி, 1984.

பி.சி. பலராம் ராஜா, ரஸிகமணியின் ரஸிகர், தமிழ் வட்டம் மலர், 1967.

ராஜாஜி கடிதம், குமரி மலர், மலர் 31, இதழ் 9, 1974.

தீப. நடராஜன், ராஜாஜியும் குற்றாலமும், ராஜாஜி நூற்றாண்டு விழா மலர், திருநெல்வேலி, 1978.

எஸ். மகராஜன், ராஜாஜியும் டி.கே.சியும், உலக இதய ஒலி, சென்னை, 1979.

M.S. Ramaswami, ABC of Poesy, Financial Express, Sunday, 1987.

S. Bhagya Lakshmi (17.6.1910-18.7.1988) (In Memoriam), Wisdom Light (A Divine Life Society 8-88 Publication), Sivanandha Nagar, Tehri-Garhwal (U.P.)

S. Maharajan, Emperor of Poesy, R$^{a}$r YhPm (UXo), ùNuû], 1967.

K. Swaminathan, Indian Writing To-day - X, Tamil Literature, The Illustrated Weekly of India, 1953.

P.G. Sundarăjan & S. Sivapatha Sundaram, Literary Criticism and Research in Tamil (A Brief historical survey), I Edition, 1978.

M. Arunachalam, Musical Tradition of Tamil Nadu, I Edition, Chennai, 1989.

M. Ramalingam, Tamil Literary Critcism, Comparative Indian Literature-2, Kerala Saitya Academy, I Edition, 1985.

A.V. Subramania Iyer, "Tamil Studies" (Second Series), I Edition, 1970.

Ganga Ram Garg, T.K.C. International Encyclopaedia of Indian Literature, Vol II (Tamil), Mittal Publication, Delhi, 1987.

M. Arunachalam, T.K.C. The Man and is Mission, Swarajya, 1976.

Dr. Prema Nandakumar, T.K.C.: The Critic who gave the nectarean poetry in golden tray, Indian Express, 1987.

M. Arunachalam, T.K.C.'s Interpretation of Vali-Vadhi, ( The evidence of a puppet-play and a vindication), Tamil Cutlure, Vol.2, No.2, Madras, 1953.

## IX. ஆய்வேடுகள்

*ந. பாலமுருகன், ரசிகமணி டி.கே.சியின் திறனாய்வுப் போக்கு (ஒரு செயல்முறை ஆய்வு), திருமொழிப் பதிப்பகம், கரூர், முதற்பதிப்பு, 1983.*

*ச. குமார அழகப்பன், டி.கே.சி.யின் முத்தொள்ளாயிரப் பதிப்பு, வெ.ப.சு.தமிழ்க் கலை ஆய்வு மையம், ம.தி.தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி, 1991.*

*உ. கோவிந்தராசன், பாஸ்கரத் தொண்டைமானின் 'இரசிகமணி டி.கே.சி ஓர் ஆய்வு', கரந்தைப் புலவர் கல்லூரி, 1985.*

## X. டி.கே.சி. குறித்த செய்திகளைத் தெரிவித்திருக்கும் நூல்கள்

*ஆ. முத்துசிவன், அசோகவனம், மூன்றாம் பதிப்பு, ஸ்டார் பிரசுரம், சென்னை, 1956.*

**அவள்** (1981ஆம் ஆண்டின் சிறந்த சிறுகதைகள்), முதற் பதிப்பு, இலக்கியச் சிந்தனை-9, வானதி பதிப்பகம், சென்னை, 1982.

கி. ராஜநாராயணன் (தொகுப்பு), **கு. அழகிரிசாமி கடிதங்கள்** (கி. ராஜநாராயணனுக்கு எழுதியவை), முதற் பதிப்பு, அன்னம் (பி) லிமிடெட், சிவகங்கை, 1987.

எம்.எ. தேவராசன், **அருந்தமிழ் வளர்த்த ஐம்பெரும் புலவர்கள்**, முதற் பதிப்பு, விசாலாட்சி பதிப்பகம், சென்னை, 1954.

எஸ். மகராஜன், **ஆடத் தெரியாத கடவுள்** (சமயச் சடங்குகளும் டி.கே.சி.யும்), முதற் பதிப்பு, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1972.

பி. தெட்சிணாமூர்த்தி, **ஆய்வு மாலை** (தமிழில் திறனாய்வு - ஒரு பார்வை ப. 7-32), முதற் பதிப்பு, இலஞ்ஞியார் பதிப்பகம், திருநெல்வேலி, 1982.

சுகி. சுப்பிரமணியன், ஆயிரங்கால் மண்டபம் (இதய ஒலி-டி.கே.சி. - பக்.39-48), முதற் பதிப்பு, புதுப்புனல் பதிப்பகம், திருச்சி, 1962.

ரகுநாதன், இலக்கிய விமர்சனம், (வசனம் பக்.115-130), முதற் பதிப்பு, 1948, 1950, 1964, நான்காம் பதிப்பு 1980, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1948.

க. கைலாசபதி, இலக்கியமும் திறனாய்வும் (ப.127), முதற்பதிப்பு 1972, இரண்டாம் பதிப்பு 1976, மூன்றாம் பதிப்பு 1981, சென்னை புக் ஹவுஸ், சென்னை.

க.நா. சுப்ரமண்யம், இலக்கியச் சாதனையாளர்கள் (டி.கே.சி. என்று ஒரு பண்பாடு (பக்.85-89), முதற்பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1985.

பூவை அமுதன், **இலக்கியப் பேழை** (உரைநடை இலக்கியம் பக்.165-182, 4 கட்டுரை (ப.180), இராம ஸ்ரீநிவாசன், பதிப்பு ஆசிரியர், ஸ்ரீ நிலையம், சென்னை, முதற்பதிப்பு, 1988.

பூ. சொல் விளங்கும் பெருமாள், **உ.வே.சா.வின் பதிப்புப் பணி– ஓர் ஆய்வு**, முதற் பதிப்பு, வஞ்சிக்கோ பதிப்பகம், மதுரை, 1981.

ச.வே. சுப்பிரமணியன், ந. கடிகாசலம் (ப.ஆ.), எண்பத்தொன்றில் தமிழ் (இலக்கியத் திறனாய்வு நூல்கள், பக்.121-134), முதற் பதிப்பு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1983.

அகிலன், எழுத்தும் வாழ்க்கையும் (அகிலன் டி.கே.சி.யுடனான தன் முதற் சந்திப்பு), முதல்பதிப்பு 1978, இரண்டாம் பதிப்பு 1984, பாரி புத்தகப் பண்ணை, சென்னை.

அம்ஷன் குமார், ராஜ் கௌதமன், சு. சண்முகசுந்தரம், **எழுபதுகளில் தமிழ் விமர்சனம்**, முதற் பதிப்பு, காவ்யா வெளியீடு, பெங்களூர், 1982.

கி.வா. ஜகந்நாதன், **என் ஆசிரியப்பிரான்**, ('இதயஒலி'க்கு உ.வே.சா.வின் பாராட்டு) முதற் பதிப்பு, உ.வே.சா. நூலகம், சென்னை, 1983.

எஸ்.மகராஜன், **ஒலிச் செல்வம்**, முதற் பதிப்பு, 1962, திருந்திய பதிப்பு, 1984, மனோன்மணி பதிப்பகம், சென்னை.

ச. சிவகாமி, கம்பன் ஆய்வடங்கல், **கம்பர் தரும் ராமாயணம்**, தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1978.

எஸ். வையாபுரிப் பிள்ளை, **கம்பன் காவியம்**, முதற் பதிப்பு, 1955, இரண்டாம் பதிப்பு, 1957, தமிழ்ப்புத்தகாலயம், Kamban as Edited by TKC ("Hindu' - 14.2.1954) ; The Age of Kamban- A Rejoinder ; Kamban ; டி.கே.சி.யின் கம்பராமாயணப் பதிப்பிற்கு எழுதிய மதிப்புரை பற்றிக் கவிமணி கடிதம் ; கம்பரமாயணப் பதிப்பு விபரம்.

அ.கு. ஆதித்தர், **கம்பர் கவித்திறன்**, வானதி பதிப்பகம், சென்னை.

கு. அழகிரிசாமி (பதிப்பு), **கம்பராமாயணம்** (பால-அயோத்யா காண்டம்), முதற் பதிப்பு, சக்தி காரியாலயம், சென்னை, 1958.

கு. அழகிரிசாமி, **கம்பராமாயணம்** (ஆரணிய, கிட்கிந்தா புராணம்), முதற் பதிப்பு, சக்தி காரியாலயம், சென்னை, 1959.

**கம்பராமாயணச் சிதைவின் கண்டனத் தொகுதி** (இது ஸ்ரீமாந். செரா. சோமசுந்தர மணியகாரர் அவர்கள் 'கம்பன் காவியச் சிதைவாற்றாமை திரு. டி.கே.ஸி. தீமை என்ற கண்டனமும் அதன் சார்பாக பலர் வரைந்த கண்டனப் பாக்களும்), காரைக்குடி, அமரர் த.மெ.இராமசாமிச் சேர்வை, 1942.

வி.ஆர்.எம். செட்டியார், **கட்டுரைக் கரும்பு**, (டி.கே.சி.யும் கோலரிட்ஜும்), இரண்டாம் பதிப்பு, ஸ்டார் பப்ளிகேன்ஸ், காரைக்குடி, 1953.

கே. ஸ்வாமிநாதன், **கட்டை வண்டி அல்லது பரதவரசர்** (ஆங்கிலத்தில் Sir William Gilbert இயற்றிய "Gondoliers" என்னும் கேலிக்கூத்தைத் தழுவி), இரண்டாம் பதிப்பு, ROC House & Sons, சென்னை.

**அன்புப் பழம் நீ** (தொகுப்பாளர்), **கடிதக் கலை**, முதற் பதிப்பு, பாரிநிலையம், 1987.

ந. சுப்பு ரெட்டியார், **கவிதையனுபவம்**, சைவ சித்தாந்தக் கழக வெளியீடு, 1961.

கைலாசபதி & இ.முருகையன், **கவிதை நயம்**, முதற் பதிப்பு, 1970, இரண்டாம் பதிப்பு 1986, மூன்றாம் பதிப்பு 1986, சென்னை புக்ஸ், சென்னை.

எஸ். மகராஜன், **கவிதையில் விடுமுறை**, முதற்பதிப்பு, வானதி பதிப்பகம், சென்னை, 1982.

ந. சுப்பு ரெட்டியார், **கவிதை பயிற்றும் முறை**, முதற் பதிப்பு, செல்வி அனுராதா வெளியீடு, சென்னை, 1983.

கவியோகி மகிரிஷி சுத்தானந்த பரதியார், **கவியின்பக் கனவு**, முதற்பதிப்பு, சுத்தானந்த நூலகம், சென்னை, 1978.

தே.ப. பெருமாள், **கவிமணியின் வாழ்வும் கவிதை வளமும்**, முதற் பதிப்பு, 1971, இரண்டாம் பதிப்பு 1976, வானதி பதிப்பகம், சென்னை.

ம.வே. பசுபதி, கவிஞனும் சுவைஞனும், அன்னபூர்ணா பதிப்பகம், முதற் பதிப்பு, திருப்பனந்தாள், 1976.

பு.சி. கணேசன், க.நா.சு.வும் கைலாசபதியும், முதற் பதிப்பு, காவ்யா வெளியீடு, பெங்களூர், 1988.

அபிதா, காகித ஓடம் (சமூக நாவல்), முதற் பதிப்பு, வைரவன் பதிப்பகம், மதுரை, 1985.

மு. அருணாசலம், காற்றிலே மிதந்த கவிதை, இரண்டாம் பதிப்பு, காந்தி வித்யாலயம், மயூரம்.

கல்கி, சங்கீத யோகம், முதற் பதிப்பு, தமிழ்ப் பண்ணை, சென்னை, 1947.

அசோகமித்திரன், சில ஆசிரியர்கள் சில நூல்கள், முதற் பதிப்பு, சுந்தர நிலையம், சென்னை, 1987.

வ.அய். சுப்பிரமணியம், சில கட்டுரைகள் (தொகுதி-1), (முதல் பதிப்பு 1961), ஆறாம் பதிப்பு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1988.

ஆ. சந்தியாகு, சுந்தாவின் பொன்னியின் புதல்வர்-ஓர் ஆய்வு, கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை, 1985.

சோமலெ, செட்டிநாடும் செந்தமிழும், முதற் பதிப்பு, வானதி பதிப்பகம், சென்னை, 1984.

மு.கு. ஜகந்நாதராஜா, சேஷமேந்திரனின் ஔசித்ய விசாரசர்ச்சா (தகுதிப் பாட்டாய்வியல், முதற்பதிப்பு, விசுவ சாந்தி பதிப்பகம், இராஜபாளையம், 1989 .

சௌந்தரா கைலாசம் கவிதைகள், முதற்பதிப்பு, வானதி பதிப்பகம், சென்னை, 1987.

எஸ். வையாபுரிப்பிள்ளை, தமிழ்ச்சுடர் மணிகள், மூன்றாம் பதிப்பு, பாரி நிலையம், சென்னை, 1959.

எம். ரம்போலா மாங்கரனேஸ், தமிழ்த் தொண்டர்கள், முதற் பதிப்பு, ஒற்றுமை நிலையம், தி.நகர், சென்னை, 1952.

இரா. சின்மயானந்தம், **தமிழ் இலக்கியத் திறனாய்வில் சி.சு. செல்லப்பாவின் பங்கு**, பூண்டி புஷ்பம் கல்லூரி, தஞ்சாவூர், 1984.

**தமிழ் இலக்கிய விமர்சகர்கள்**, (கட்டுரைத் தொகுப்பு), முதற்பதிப்பு, சுவடு, புதுக்கோட்டை, 1979.

மு. வரதராசன், **தமிழ் இலக்கிய வரலாறு**, முதற்பதிப்பு 1972, நான்காம் பதிப்பு, சாகித்ய அக்காதெமி, புதுதில்லி, 1980.

சி. பாலசுப்பிரமணியன், **தமிழ் இலக்கிய வரலாறு**, முதற் பதிப்பு 1959, பதினாறாம் பதிப்பு, நறுமலர்ப்பதிப்பகம், சென்னை, 1983.

மது. ச. விமலானந்தம், **தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம்**, முதற் பதிப்பு, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1987.

ச.வே. சுப்பிரமணியன், ச. சிவகாமி, (ப.ஆ), **தமிழ் இலக்கியக் கொள்கை** (9), முதற் பதிப்பு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1984.

சு. ஆவுடைநாயகம், (தொ.ஆ.) தமிழ்க் கல்வி இயக்கக் கட்டுரைகள், முதற் பதிப்பு, உலகத் தமிழ்க் கல்வி இயக்கம், 1985.

பி. யோகீசுவரன், **தமிழ்க் கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள்**, முதற் பதிப்பு, நீலா பதிப்பகம், சென்னை, 1985.

வே. சீதாலாட்சுமி, **தமிழ் நாவல்கள்** (அகர வரிசை), முதற் பதிப்பு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1985.

செயராணி ராசதுரை, **தமிழ் நாவல் திறனாய்வில் க. கைலாசபதியின் பங்களிப்பு**, பூண்டி புஷ்பம் கல்லூரி, தஞ்சாவூர், 1984.

**தமிழில் இலக்கியத் திறனாய்வு.**

ச. சிவகாமி, தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம், முதற் பதிப்பு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1985.

கார்த்திகேசு சிவத்தம்பி, தமிழில் இலக்கிய வரலாறு, முதற் பதிப்பு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1988.

கார்த்திகேசு சிவத்தம்பி, **தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்** (கட்டுரைத் தொகுதி), முதற் பதிப்பு, தமிழ்ப் புத்தகாலயம், 1967, மூன்றாம் பதிப்பு, சென்னை, 1980.

பெ.கோ. சுந்தரராஜன் (சிட்டி), சோ. சிவபாதசுந்தரம், தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும், முதற்பதிப்பு, க்ரியா, சென்னை, 1989.

க. பஞ்சாங்கம், தமிழிலக்கியத் திறனாய்வு வரலாறு (சில அறிமுகக் குறிப்புகள்), முதற் பதிப்பு, செல்வம் பதிப்பகம், புதுவை, 1990.

எஸ். வையாபுரிப் பிள்ளை, **தமிழின் மறுமலர்ச்சி** (நூற் களஞ்சியம்) (தொகுதி 2), முதற் பதிப்பு, வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றம், 1989.

**தமிழில் வசன நடை** (பக். 72–85)

**தமிழரசு**, தமிழ்நாடு அரசு, செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை, 1981.

பாரதிதாசன், **தமிழியக்கம்**, ஒன்பதாம் பதிப்பு, செந்தமிழ் நிலையம், புதுக்கோட்டை மாவட்டம், 1984.

ஏ.என். பெருமாள், **தமிழர் இசை**, முதற் பதிப்பு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1984.

சாமி சிதம்பரனார், **தமிழர் தலைவர் பெரியார்**.

ஏ.வி. சுப்பிரமணிய அய்யர், **தற்காலத் தமிழ் இலக்கியம்**, மக்கள் வெளியீடு, முதற் பதிப்பு 1933, மூன்றாம் பதிப்பு, மக்கள் வெளியீடு, சென்னை, 1985.

சு.அ. இராமசாமிப் புலவர், (ப.ஆ.), **தனிப்பாடல் திரட்டு**, சைவ சித்தாந்தக் கழக வெளியீடு, முதற் பதிப்பு, 1972.

ல. சண்முகசுந்தரம், திருமூலர் திருமந்திரம் (ஆனந்தக் கூத்து), சண்முகர் பதிப்பகம், தென்காசி, இரண்டாம் பதிப்பு, 1979.

க. கைலாசபதி, திறனாய்வுப் பிரச்சனைகள் (க.நா.சு. குழு பற்றி ஓர் ஆய்வு), முதற் பதிப்பு 1980, இரண்டாம் பதிப்பு, சென்னை புக்ஸ், சென்னை, 1986.

எஸ். மகராஜன், **தெய்வ மாக்கவி**, முதற் பதிப்பு, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1974.

தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், **தென்றல் தந்த கவிதை**, மல்லிகா வெளியீடு.

மீ.ப. சோமு, **நமது செல்வம்**, முதற் பதிப்பு, வானதி பதிப்பகம், 1980.

கு. அழகிரிசாமி, **நான் கண்ட எழுத்தாளர்கள்**, தேன் மழைப் பதிப்பகம், முதற் பதிப்பு, சென்னை, 1988.

பி.ஸ்ரீ., **நான் அறிந்த தமிழ் மணிகள்** (முதற் பகுதி), முதற் பதிப்பு, 1971, வானதி பதிப்பகம், இரண்டாம் பதிப்பு, சென்னை, 1988.

பி.ஸ்ரீ., **நான் அறிந்த தமிழ் மணிகள்** (இரண்டாம் பகுதி), முதற் பதிப்பு, வானதி பதிப்பகம், முதற் பதிப்பு, சென்னை, 1988.

சு. சக்திவேல், **நூறாண்டுத் தமிழ் உரைநடை**, முதற் பதிப்பு, சிதம்பரம், மணிவாசகர் பதிப்பகம், முதற் பதிப்பு, 1985.

படித்திருக்கிறீர்களா?, புதுத்தமிழ் இலக்கிய நூல்கள் இரண்டாவது வரிசை, அமுத நிலையம் (பி) லிமிடெட், முதற் பதிப்பு, சென்னை, 1958.

கி. சந்திரசேகரன், **பலகணிக் காட்சிகள்**, முதற் பதிப்பு, கலைமகள் காரியாலயம், சென்னை, 1954.

அசோகமித்திரன், படைப்புக்கலை, முதற் பதிப்பு, ஞானச்சேரி, மயிலை, சென்னை, 1987.

அகிலன், பாவை விளக்கு (சமூக நாவல்), முதற் பதிப்பு 1958, ஒன்பதாம் பதிப்பு, பொற்கொடி வெளியீடு, சென்னை, 1986.

கல்கி, **பாரதி பிறந்தார்**, பாரதி பதிப்பகம், இரண்டாம் பதிப்பு, சென்னை, 1954.

அ. மார்க்ஸ், கார்த்திகேசு சிவத்தம்பி, **பாரதி மறைவு முதல் மகாகவி வரை**, முதற் பதிப்பு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை, 1944.

இரா.தண்டாயுதம், **பாரதி முதல் சுஜாதா வரையில்** (முதற் பகுதி), தமிழ்ப் புத்தகாலயம், முதற் பதிப்பு, சென்னை, 1985.

வல்லிக்கண்ணன், பாரதிக்குப் பின் தமிழ் உரைநடை, முதற் பதிப்பு, மணிவாசகர் நூலகம், 1981.

மா. வளவன், பாரதியார் பாடல்களுக்குத் தடை, பாலாஜி புத்தக நிலையம், முதற் பதிப்பு, சென்னை, 1985.

எஸ். மகராஜன், பாராட்டுத்தமிழ், முதற் பதிப்பு, வானதி பதிப்பகம், சென்னை, 1983.

முல்லை முத்தையா, பாவேந்தர் பாரதிதாசன் அறுசுவை விருந்து, இரண்டாம் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1985.

மகரம், **பிரிந்தவர் கூடினால்**, முதற் பதிப்பு, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1966.

தி.ஜ.ர., **புகழ்ச் செல்வர்**, முதற் பதிப்பு, கார்த்திகேயினி பிரசுரம், புதுக்கோட்டை, 1947.

பாரதிதாசன், **புகழ் மலர்கள்**, முதற் பதிப்பு, பூம்புகார் பிரசுரம், சென்னை, 1978.

பாலா, **புதுக்கவிதை ஒரு புதுப் பார்வை**, முதற் பதிப்பு, சிவகங்கை, 1989.

ஸ்ரீ திருலோக சீதாராம் (தொகுப்பு ஆசிரியர்), **புதுத் தமிழ்க் கவி மலர்கள்**, முதற் பதிப்பு, ஹிமாலயப் பிரசுரம், சென்னை, 1957.

ரகுநாதன், **புதுமைப் பித்தன் வரலாறு**, முதற்பதிப்பு 1951, இரண்டாம் பதிப்பு 1958, மூன்றாம் பதிப்பு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1980.

மா. இராமலிங்கம், **புதிய உரைநடை** (பண்பும் பயனும்), முதற் பதிப்பு 1978, இரண்டாம் பதிப்பு 1980, மூன்றாம் பதிப்பு, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1984.

இராம வீரப்பன், புதிய சிந்தனைகள், இரண்டாம் பதிப்பு, அருணோதயம், சென்னை, 1985.

தமிழண்ணல், **புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு**, முதற் பதிப்பு, சோலை நூலகம், மதுரை, 1980.

வே.ஆனைமுத்து, பதிப்பாசிரியர், **பெரியார் ஈ.வெ.ரா.வின் சொற்பொழிவுக் கட்டுரைகள்**, (வால்யூம்-2), முதற் பதிப்பு, சிந்தனையாளர் கழகம், திருச்சி, 1974.

வே.ஆனைமுத்து, பதிப்பாசிரியர், **பெரியார் ஈ.வெ.ரா.வின் சொற்பொழிவுக் கட்டுரைகள்**, (வால்யூம்-3), முதற் பதிப்பு, சிந்தனையாளர் கழகம், திருச்சி, 1974.

சுந்தா, **பொன்னியின் புதல்வர்** (கல்கியின் வாழ்க்கை வரலாறு), முதற் பதிப்பு, வானதி பதிப்பகம், சென்னை, 1976.

தெ. கணபதியப்பன் (தொகுப்பு ஆசிரியர்), **மடல் மாலை**, முதற் பதிப்பு, திருவள்ளுவர் கழகம், சென்னை, 1987.

**மருதம்**, முதற் பதிப்பு, கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர், 1985.

கு. அருணாசலக் கவுண்டர், **மகராஜன் அவர்களும் அவர்களுடைய கலை, இலக்கிய ரசனையும்**, முதற் பதிப்பு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1986.

மறை.திருநாவுக்கரசு, **மறைமலையடிகள் வரலாறு**, முதற் பதிப்பு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1956.

மறை திருநாவுக்கரசு (தொகுப்பு), மறை தி. ஆலங்காடன், மறை தி. தாயுமானவன், **மறைமலையடிகளார் நாட்குறிப்புகள்**, முதற் பதிப்பு, மறைமலையடிகள் பதிப்பகம், சென்னை, 1988.

ல. சண்முக சுந்தரம், **மாணிக்க மாலை**, முதற் பதிப்பு, சண்முகம் பதிப்பகம், சென்னை, 1986.

கல்கி, **யார் இந்த மனிதர்கள்**, பாரதி பதிப்பகம், சென்னை, 1957

சோமலெ, **வளரும் தமிழ்**, முதற் பதிப்பு, வானதி பதிப்பகம், சென்னை, 1988.

வல்லிக்கண்ணன், **வாசகர்கள் விமர்சகர்கள்**, முதற் பதிப்பு, சோலைத் தேனீ, காட்பாடி, 1987.

துறைவன் (ச.கந்தசாமி), **வாழ்வியல் சிந்தனைகள்**, வானதி பதிப்பகம், சென்னை, 1986.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 - கி.பி. 1300 | 100.00 |
| தொல். பொருள். (அகம்-புறம்)-ஆங்கில மொழிபெயர்ப்பு | 50.00 |
| வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள் | 130.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851 - 2000 | 180.00 |
| இதழாளர் பெரியார் | 160.00 |
| மகாவித்துவான் ரா. ராகவையங்கார் | 30.00 |
| தமிழக வானவியல் சிந்தனைகள் | 35.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்-நாட்டுப்புறவியல்,கலை,பண்பாடு | 90.00 |
| தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 200.00 |
| வாழிய செந்தமிழ் | 140.00 |
| பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் | 40.00 |
| தமிழக எல்லைப் போராட்டங்கள் | 60.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III | 80.00 |
| தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும் | 200.00 |
| தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 325.00 |
| தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும் | 300.00 |
| Economic Heritage of the Tamils | 115.00 |
| மலேசியத் தமிழரும் தமிழும் | 100.00 |
| மொழி, சமய, சமுதாயத் தளங்களில் பாவாணர் பங்களிப்பு | 50.00 |
| தமிழ்ப் புனைகதைகளில் உளவியல் | 35.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல் | 100.00 |
| கவிதையியல் | 50.00 |
| பண்பாட்டு நோக்கில் திருமுறைகள் | 30.00 |
| கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள் | 95.00 |
| Bibliography on Translations | 175.00 |
| சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீயும் மேலை அறிஞரும் | 60.00 |
| அறந்தாங்கித் தொண்டைமான்கள் | 45.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 200.00 |
| தமிழில் தத்துவ நூல்கள் | 40.00 |
| வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன் | 60.00 |
| நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி | 35.00 |
| சி.வை. தாமோதரம்பிள்ளை | 40.00 |
| தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி | 45.00 |
| மொழி பெயர்ப்பியல் | 45.00 |
| புதுவைச்சிவம் கவிதைகளும் புரட்சிக்கோட்பாடுகளும் | 60.00 |

592 டி.கே.சி. 60.00